


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 14 இதழ் - 05 - ஆகஸ்ட் 2022*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**



ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர். நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.குராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா
ஜி.சரவணன்

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 45.00, ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


**1** படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்............................................04

**2** 1999 தமிழ் பயிற்று மொழி வழக்கில் கலைஞர் கருணாநிதி தோற்றாரா?
டாக்டர். சு.நரேந்திரன்.............................................08

**3** வில்லிசைக் கலைஞர் சாத்தூர் பிச்சைக்குட்டி
அ.கா.பெருமாள்....................................................16

**4** இந்திய விடுதலைக்குப் பின் சமுதாய அடுக்குகள்
சி.ஆர்.ரவீந்திரன்....................................................19

**5** 'ஓர்மை' ஒரு வரலாற்று ஆவணம்
முனைவர் சி.ஜஸ்டின் செல்வராஜ்..............................22

**6** என்றென்றும் வழிகாட்டும் தம்ம பதம்
முனைவர் சு. மாதவன்..............................................26

**7** ராம் சரண் சர்மா *((1920 - 2011)*
ரொமிலா தாப்பர்......................................................30

**8** மாற்றிலக்கண மொழியியலின் தந்தை நோம் சோம்ஸ்கி
ச. சுபாஷ் சந்திரபோஸ்.............................................35

**9** குழந்தையும் பொய் சொல்லுதலும்
மருத்துவர் ப.வைத்திலிங்கம்......................................42

**10** திராவிட முன்மாதிரி
கே.பாலச்சந்திரன்....................................................45

**11** மக்களை மேய்ப்பது மக்களாட்சியாகுமா?
க.பழனித்துரை.........................................................53

**12** குறுந்தொகையில் உள்ளுறை
அ.தமயந்தி..............................................................57

**13** அபிவிருத்தி பற்றிய சமூகவியல் கோட்பாடுகள்
கந்தையா சண்முகலிங்கம்........................................62

**14** இரட்சணிய சரிதத்தில் விவிலியக் கருத்துக்கள்
ஆ.பிரின்சி பெல்ஷீட்டா..............................................67

**15** கவி கா.மு. ஷெரீபின் இசைப் பாடல்கள்
பேராசிரியர் உ.அலிபாவா..........................................72




படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

# இந்து இராச்சியம்

**நமது இந்து ராஷ்டிரம் / ஆகார் பாட்டில் (2020)**

***OUR HINDU RASHTRA WHAT IT IS HOW WE GOT HERE / AAkAR PATEL (2020),***

*west Land publications private limited,*

*1st Floor, A Block, East Wing, plot No40, SP Infocity, Dr MGR Salai, Perungudi, kandanchavadi, 600 096*


ஓரளவுக்கு இந்தியாவின் விடுதலை இயக்க வரலாற்றையும் இந்திய அரசியலையும் சற்று ஆர்வத்துடன் வாசிப்பவர்களுக்கு 'இந்து ராஷ்டிரம்' என்ற அரசியல் வரலாற்றுக் கலைச்சொல் புதியதுமல்ல புரியாததுமல்ல. வரலாற்று அடிப்படையில் நோக்கும் போது இந்தியாவின் கடந்த கால வரலாற்றில் பல்வேறு மதங்கள் புதிதாகத் தோன்றியதும் மறைந்ததும் நிகழ்ந்துள்ளன. தொல் சமயம் (புராதன சமயம் -பிரிமிடிவ் ரிலிஜன்) தொடங்கி வேத அல்லது வைதீக சமயம், (சைவம் வைணவம்) வேத மறுப்புச் சமயங்கள் (சமணம், பௌத்தம், ஆசீவகம்,) கடவுள் என்ற கருத்து நிலையை ஏற்றுக் கொள்ளாத உலகாயுதம் அல்லது சார்வாகம் எனக் குறிப்பிட்டுச் சொல்லும் எண்ணிக்கையில் புதிய சமயங்கள் உருவாகி நிலை பெற்றுமுள்ளன, மறைந்தும் உள்ளன.

இதன் அடுத்த கட்டமாக அயல் நாடுகளில் இருந்து பார்சி மதம், இஸ்லாம், கிறித்தவம் ஆகிய சமயங்கள் பரவி நிலை பெற்றன. இவை தவிர இயற்கை வழிபாடு, ஆவியம், குலக்குறியம் சார்ந்த வழிபாடு எனப் பழங்குடிகள் தொல்சமயத்தைப் பின்பற்றி வந்தனர். இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது ஒற்றைச் சமயத்தைப் பின்பற்றும் நாடாக வரலாற்றில் இந்தியா இருந்ததில்லை என்பது புலப்படுகிறது. மன்னர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப சில

பெரும்பான்மைவாதம் மிகத் தொன்மையானது. அதற்குச் செயல் வடிவம் கொடுப்பதும் எளிது. எதிர் அணிகளாக மக்களைத் திரட்டுவது மக்களாட்சியில் ஆதாயங்களைத் தரும். ஆனால் இரண்டும் நாட்டிற்கும் தனி மனிதர்களுக்கும் பாதகமானது. இருந்தாலும் இதன் கொடூரங்களைத் தேர்தல் புனிதமாக்கும். (முன்னுரையில் ஆகர் பாட்டில்.)

குறிப்பிட்ட மதங்கள் அவ்வப்போது அரசு மதம் போன்று காட்சியளித்தாலும் அத் தகுதி பெறாத மதங்கள் முற்றிலும் அழிந்துவிடவில்லை.

இன்றைய இந்திய அரசியலில் சற்று வலுவாக ஒலிக்கப்படும் சொல்லாக 'இந்து ராஷ்டிரா' (இந்து இராச்சியம்) என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இது குறித்து இந்நூல் அறிமுகம் செய்கிறது.




**நூலாசிரியர்**

இந் நூலின் ஆசிரியரான ஆகர் பாட்டில் இதழாளர், மொழிபெயர்ப்பாளர், சிண்டிகேட் கட்டுரையாளர். பன்னாட்டுப் பொது மன்னிப்புக் கழகத்தின் (*Amnesty International*) இந்தியக் கிளையின் நிர்வாக இயக்குநராக 2019 நவம்பர் வரை பணியாற்றியுள்ளார்.

**நூலின் உள்ளடக்கம்**

பதினான்கு இயல்களைக் கொண்ட இந்நூலின் உள்ளடக்கம் குறித்து இந் நூலின் முன்னுரையிலும், பதினாறு பக்க அளவிலான அறிமுக உரையிலும் மிகத் தெளிவாக நூலாசிரியர் அறிமுகம் செய்துள்ளார். இதுவே இந்நூலின் மையக் கருத்தை நாம் சரியாகப் புரிந்துகொள்ளப் போதுமானதாக உள்ளது.

கடந்த முப்பது ஆண்டு காலமாகவே இந்தியாவில் பெரும்பான்மைவாதம் தலைதூக்கியுள்ளதாகக் கூறும் நூலாசிரியர் இப்போதைய நிலையை நாம் எப்படி வந்தடைந்தோம் என்பதை அறிந்து கொள்ளத் தம்முடைய இந்நூல் துணை நிற்கும் என்று கருதுகிறார். மேலும் இந் நூலின் நோக்கம் குறித்து,

"இந்தியாவில் கடந்த முப்பது ஆண்டுகளாக நடந்திருப்பது புதியது அல்ல. ஏற்கெனவே இங்கு இருந்த பெரும்பான்மைவாதத்தின் ஒன்றிணைப்பு தான் இது. ஆனால் இன்று செயல் படுத்தப் படுவதைப்போல இவ்வளவு வெளிப்படையாகவும், வெறியுடனும் அன்று இல்லை. ஆனாலும் இருந்தது. இன்று நிலவும் நிலைக்கு நாம் எப்படி வந்து சேர்ந்தோம் என்பதைப் புரிந்து கொள்ள இந்த நூல் முயற்சி செய்கிறது." என்று தமது முன்னுரையில் (பக்கம்:*vii*) குறிப்பிட்டுள்ளார்.

**இந்தியாவின் பெரும்பான்மை வாதம்**

தென் கிழக்கு ஆசிய நாடுகளான ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மாலத்தீவு, ஸ்ரீலங்கா, பங்களாதேஷ், பூடான், நேபாளம் ஆகிவை தத்தம் நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டப்படி ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு அல்லது ஒரு சமூகத்திற்கு முன்னுரிமை வழங்கும் நாடுகளாக உள்ளன. ஆனால் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அவ்வாறில்லை. இது எந்த ஒரு சமூகத்திற்கும் சமயத்திற்கும் முன்னுரிமை வழங்கவில்லை. இவ்வகையில் இது வேறுபட்டு நிற்கிறது.

2014இல் பாரதிய ஜனதா கட்சி இந்தியாவில் ஆட்சிக்கு வந்த பின்னர் இதுவரை இருந்த இந்நிலைக்கு எதிர்மறையான திசையில் பயணிக்கத் தொடங்கிவிட்டது. இது நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் இலட்சியத்திற்கும், நம் சமூக நடப்பியலுக்கும் எதிரானதாக அமைந்துவிட்டது. சிறுபான்மை-யினர் உளம் சார்ந்த உளைச்சலுக்குத் தொடர்ச்சியாக ஆளாகிறார்கள். மாற்றுக் கருத்துடையோர் தண்டனைக்கு ஆளாகிறார்கள். நீதித்துறை செயலற்றுப்போக அவர்களது உரிமைகள் அரசால் கட்டுப்படுத்தப் படுகின்றன. வன்முறையும், பாகுபாடுகளும் ஊடகங்களில் நாள்தோறும் இடம் பெறுகின்றன. வகுப்புவாதத்தை நோக்கி பி.ஜே.பி. மக்களைத் தள்ளுகிறது. இவ்வாறு பெரும்பான்மைவாதத்தை நோக்கி இந்தியா பயணிக்கிறது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாறுதல்கள் எவற்றையும் மேற்கொள்ளாமலேயே நடை முறையில் உள்ள சட்டங்களின் துணையுடனேயே பெரும்பான்மைவாதம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.


**வலதுசாரிக் கருத்தியல்**

இந்துத்துவா கருத்தியலும் அதன் ஆதரவாளர்களும், அதற்கு வாக்காளிப்போரும் வலதுசாரிகள் என்று அழைக்கப்படுகின்றனர். இதன் பொருத்தப்பாடு குறித்து சற்று விரிவாகவே இந் நூலாசிரியர் தன் அறிமுக உரையில் விவாதித்துள்ளார். தம் விவாதத்தின் தொடக்கத்தில் வலது அல்லது வலதுசாரி என்ற சொல்லின் உருவாக்கம் குறித்தும் அது வெளிப்படுத்தும் பொருள் குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

பிரஞ்சு பாராளுமன்றத்தில் அதன் உறுப்பினர்கள் அமரும் இருக்கை இடம்பெறும் இடத்தை அடிப்படையாகக் கொண்டே வலது என்ற சொல் உருவாகியுள்ளது. பிரான்ஸ் நாட்டின் பழமைவாதிகள் சமூக மாற்றங்களை விரும்பாது முடியாட்சியின் பிற்போக்குச் சிந்தனைகளையும் பழைய சமூக ஒழுங்கையும் பாதுகாக்க முயன்றார்கள். இவர்கள் அந்நாட்டின் சட்டமன்றத்தில் அதன் தலைவருக்கு வலது பக்கத்தில் அமருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு மாறாக பழமைக்கு எதிரான சீர்திருத்தங்களை ஆதரிக்கும் குடியரசு ஆதரவாளர்கள் அவைத் தலைவரின் இடது புறத்தில் அமர்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதன் அடிப்படையிலேயே சீர்திருத்தங்களை எதிர்ப்பவர் களாகவும், மிதவாதிகளாகவும், பழமைவாதிகளாகவும் விளங்குவோர் வலது என்றழைக்கப்படலாயினர்.

கிறித்தவத் தகவுகளையும் மரபுகளையும் அரசின் தலையீட்டில் இருந்து பாதுகாப்பவர்களாக அமெரிக்க அரசியலில் பழமைவாதிகள் உள்ளனர்.

(கருக்கலைப்பையும், ஆண் ஓரினச் சேர்க்கையையும், அனுமதித்தல் தொடர்பாக) இப் பழமை வாதிகள் அந் நாட்டின் ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி என்ற இரு கட்சிகளிலும் உள்ளனர். கடந்த சில தசாப்தங்களாக இவர்கள் பெரும்பாலும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.



இங்கிலாந்தின் பழமைவாதம் வர்க்க அமைப்பில் இருந்து உருவாகியுள்ளது. இதன் அடிப்படையிலேயே இவர்கள் பழமைவாதிகள் என்ற பொருளை வெளிப்படுத்தும் வகையில் கன்சர்வேட்டிஸ் என்ற பெயரைத் தாங்கியுள்ளனர். இவர்கள் பெரு நில உடைமையாளர்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள். முடியாட்சி ஆதரவு, கிறித்தவத் தேவாலய மேலாண்மையை ஏற்றுக் கொள்ளல் என்பன இவர்களிடம் இடம் பெற்றுள்ளது. இவர்களுக்கு எதிரான அரசியலில் வர்க்க அடிப்படையில் தொழிற்கட்சி உள்ளது. இக் கட்சி தனியார் தொழில் நிறுவனங்களுக்கு மாற்றாக அரசு நிறுவனங்கள் செயல்படுவதை ஆதரிக்கிறது.

அகராதிகளின் வரையறைப்படி ஒரு வலதுசாரி மனிதரோ குழுவோ பழமை வாதிகளாகவும் முதலாளித்துவப் பார்வை கொண்டவர்களாகவோ பிற்போக்கான சிந்தனை கொண்டவர்களாகவோ இருப்பர். மரபு வழிச் சிந்தனைகளுக்கு ஆட்பட்டவர்களாகவும் குறைந்த வரி விதிக்கப்படவேண்டும் என்றும் தொழிற்சாலைகள் தனியாரால் நிருவகிக்கப்பட வேண்டும் என்றும் குறைந்த அளவிலேயே ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்றும் விரும்புவார்கள்.

**இந்துத்துவாவின் கருத்தியல்**

இச் செய்திகளின் பின்புலத்தில் (1) இந்துத்துவா என்பது வலதுசாரிகளின் கருத்தியல் என்று கொண்டால் அது எதைப் பாதுகாக்க முனைகிறது? (2)இது ஒரு சமூக ஒழுங்கு முறையா?(3)சமூக ஒழுங்கு முறை என்றால் என்ன? சாதிய அமைப்பா வேறு ஏதேனுமா?

இம் மூன்று கேள்விகளுக்கான விடை இதன் பனுவல்களிலோ (Texts) அதன் செயல்பாடுகளிலோ காணப்படவில்லை என்று கூறும் நூலாசிரியர் இந்துத்துவா என்ற சொல் சற்று வேறுபாடான ஒரு சொல் என்கிறார். அவரது கருத்துப்படி வலதுசாரி என்ற சொல்லை இந்துத்துவா என்பதற்கு இணையாகக் குறிப்பிட முடியாது.

அவரது கருத்துப்படி வலதுசாரி என்ற அரசியல் கலைச் சொல்லை இந்துத்துவா என்ற சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்த முடியாது. அவ்வாறு பயன்படுத்துவது இந்துப் பெரும்பான்மை வாதத்தை இயல்பான ஒன்றாக ஏற்றுக்கொள்ளும் தவறுக்கு ஆளாக நேரிடும்.

நம் கால அரசியல் மொழியில் கூறினால் வலதுசாரி என்ற கலைச்சொல்லானது தனிமனித உரிமை, குறுகிய வெறித்தனமான தேசியவாதம், புலம் பெயர்ந்து வந்தோரின் குடியேற்றத்தை எதிர்த்தல், பிற துறை நிதி ஆதரங்களை மடைமாற்றம் செய்து இராணுவத்தைப் பலப்படுத்தல், பொருளாதாரத்தைத் தாராளமயமாக்கல் எனபனவற்றை உள்ளடக்கிய ஒன்றாகும். இவ் வகையில் இந்தியாவின் இரு தேசிய அரசியல் கட்சிகளின் கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் பிரித்துப் பார்ப்பது எளிதானதல்ல. மேலும் அமெரிக்காவின் குடியரசுக் கட்சியுடனோ, இங்கிலாந்தின் கன்சர்வெட்டிவ் கட்சியுடனோ பி.ஜே.பி. யை ஒப்பிட முடியாது. இவ்விரு கட்சிகளும் சிறுபான்மையினருக்கு எதிரானவை அல்ல என்பது நூலாசிரியரின் கருத்தாக உள்ளது (அயர்லாந்தில் கத்தோலிக்கர்களுக்கு எதிரான நிலைப்பாடு உள்ளது). இந்துத்துவாவின் முன்னோடிக் கருத்தியலாளரான சாவர்க்கர் இந்துயிசம் என்பது வேதங்கள், புராணங்கள் மீதான நம்பிக்கை என்கிறார். இந்துத்துவம் மூன்று அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி முஸ்லிம்களை வலியுறுத்தி வந்தது. அவை வருமாறு:

(1) அயோத்தியாவில் உள்ள பள்ளிவாசலை (இராம ஜன்ம பூமி) இந்துக்களிடம் ஒப்படைத்தல்

(2) இஸ்லாமியர்கள் தம் தனி உரிமைச் சட்டத்தைக் கைவிட்டு பொது சிவில் சட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல்

(3) அரசியல் அமைப்புச் சட்டப்படி காஷ்மீருக்கு வழங்கப் பட்டுள்ள சிறப்புரிமைச் சட்டத்தை (பிரிவு370) கைவிடல்.

இவை மூன்றும் கருத்தியல் சார்ந்ததல்ல.ஆனால் இந்து ராச்சியத்தை இந்தியாவில் நிறுவ பி.ஜே.பி. எடுக்கும் முயற்சியின் வெளிப்பாடு என்று கருதத் தூண்டுகிறது. நம்மைச் சுற்றி உள்ள நாடுகளான ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலத்தீவு, ஸ்ரீலங்கா, பூடான், நேபாளம் ஆகியன சமயப் பெரும்பான்மையினரின் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகள்.


இவற்றின் வரிசையில் இந்தியாவும் இணையுமா என்பதை இந்நூல் ஆராய்கிறது.

கட்டுரையாளர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்,
மார்க்சிய சிந்தனையாளர்


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய மருத்துவ நூல்கள்




₹110/-




₹125/-




₹110/-




₹130/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை



# 1999 - தமிழ் பயிற்று மொழி வழக்கில் கலைஞர் கருணாநிதி தோற்றாரா?

டாக்டர் சு. நரேந்திரன்

கலைஞர் கருணாநிதி முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த கால கட்டத்தில் *19-1-1999*இல் அடுத்த கல்வியாண்டு முதல் *(1999-2000)* அறிவியல் பாடங்களை தமிழில்தான் கற்பிக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் தனியார் பள்ளிகளின் நிர்வாகிகளும் பெற்றோர்களும் எதிர்த்தனர், வென்றனர். பிறகு கலைஞர் அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. அப்போது முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் தன்னை அதில் இணைத்துக்கொண்டார். இவர் தன் மேல்முறையீட்டில் வைக்கும் கருத்துகளில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஏன் அப்படி அமைந்தது அதன் காரணம் என்ன என்பதைக் கூறுவதை ஒவ்வொரு தமிழ்க்குடிமகனும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**வ.அய்.சுப்பிரமணியன் யார்?**

முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் அமெரிக்கா இண்டியானா பல்கலையில் முனைவர் பட்டம் பெற்று தஞ்சைத்

தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு முதல் (1981) துணைவேந்தரானார். இத்துடன் ஆந்திராவிலுள்ள குப்பத்தில் திராவிடப் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்த பெருமையும் இவருக்கு உண்டு. இவர் திராவிட மொழியியல் கழகத்தை உருவாக்கியதோடு பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளியையும்(1977) தொடங்கியவர். இவர் தமிழுக்குச் செய்த சிறந்த பணிக்காக இலங்கை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் மேலும் ஆறு பல்கலைக்கழகங்கள் இவருக்கு முதுமுனைவர் பட்டமளித்துப் பாராட்டியுள்ள உலகத்தமிழனாவார். இவரே மருத்துவமும், பொறியியலும் தமிழில் பயிற்று மொழியாகக் கொண்டுவர தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் வழி பல பாட நூல்களைக் கொணர காரணகர்த்தாவாக இருந்தவர். இவர் அனைத்துலக திராவிட மொழியியல் பள்ளியில் மதிப்புறு இயங்குநராகப் பணியாற்றியவர். இந்த வழக்கில் தன்னையும் இணைத்துக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்தார். திரு.கே.பி.எஸ் இராசன் என்பவர் இவரது வழக்கறிஞர் ஆவார்.

**வ.அய்.சுப்பிரமணியம் வாதம் என்ன?**

மேதகு நீதிபதிகள் மோகன் குழு, அமைப்பு என்பது தன்னிச்சையானதும், பகுத்தறிவுக்கு ஒவ்வாததும் ஆகும் என்று 16ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்கான காரணங்கள் இவைதாம்.

சாகும் வரை உண்ணாநோன்பிருந்து அரசையே மிரட்டிய தமிழண்ணல் இக்குழுவில் ஓர் உறுப்பினர். நாகுயிஸ்பந்து என்பவர் ஒரு குழுவில் இடம் பெற்றது குறித்து உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியுள்ளது. அக்குழுவினால் அரசுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டியிருந்தது. அவர் பதவி உயர்வு பெற்றால் நாகுயிஸ்பந்து அதன் பயனை அடைபவராக இருப்பார். எனவே அதுகுறித்து உச்சநீதி மன்றம் சொன்னது சரிதான்.

ஆனால், தமிழண்ணலுக்கு இதில் சொந்தப் பயன் ஏதுமில்லை. அக்குழுவில் மேலும் 4 பேர் இருக்கிறார்கள். அவர் ஒருவர் மட்டுமே முடிவெடுப்பவர் இல்லை. அவருடைய சொல்லே இறுதியானதும் ஆகாது. இலக்கிய, இலக்கணத்தில் தேர்ச்சி பெற்ற தமிழறிஞர் அவர். இப்படிப்பட்ட நிலையில், மேதகு நீதிபதிகள் இதற்காக மேற்கண்ட அடைமொழிகளைப் பயன்படுத்தியதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

அடுத்து, நீதிபதி மோகன் அவர்களையே குழுத்தலைவராகப் போட்டது பற்றியது. இதற்கு முன் உயர்நீதிமன்றத்தில் ஒருமுறை தீர்ப்பு வழங்கும்போது அவர் கூறிய கருத்துகள் குறித்துக் கணக்கில் எடுத்துக்கொண்டு இதனையும் மறுத்துள்ளார்கள். நீதிபதிகள், கருத்துக்களைப் போலவே தீர்ப்புகளும் மாறக் கூடியவை. மேலும் நீதிபதி மோகன், தீர்ப்பில் கூறப்பட்டபடி இல்லாமல் மொழியிலும் அதன் வளர்ச்சியிலும் ஈடுபாடு படைத்த வல்லுநர் அவர் என்பதை மனத்திற் கொள்ளவேண்டும்.

வலிமையான பரிந்துரைகளைச் செய்வதற்கு தெலுங்கு, கன்னட, மலையாள அறிஞர்களையும் குழுவில் சேர்த்திருக்கலாம் என நீதிபதிகள் கூறியுள்ளனர். மொழி அடிப்படையில் மொழிவாரி மாநிலங்கள் பிரித்து அமைக்கப்பட்டபோது, அண்டை மாநிலங்கள் தங்கள் மாநில மொழியினைத் தொடக்கப்பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் அதிகம் அலட்டிக் கொள்ளாமலேயே பயிற்று மொழிகள் ஆக்கிவிட்டன. தாய்மொழியாம் தமிழைப் பயிற்று மொழியாக்குவதற்கு மொழிச் சிறுபான்மையினரின் கருத்துகளைக் கேட்க வேண்டுமென்பது அவசியமற்றதாகும். நீதிபதிகளால் குறிப்பிடப்பட்ட மொழிச்சிறுபான்மையினரைக் குழுவில் சேர்க்க வேண்டுமென்றால் தெலுங்கு, மலையாள, கன்னடியர்களைவிட அதிகம் பாதுகாப்புத் தேவைப்படுகின்ற 40க்கும் மேற்பட்ட பழங்குடியினரையும் குழுவில் சேர்க்கவேண்டும். உருது பேசும் இசுலாமியரும் குழுவில் இடம்பெறவே முயல்வர். இது எங்கே கொண்டுபோய்விடும்? சட்டத்தின் அடிப்படையில் சண்டை போட்டுக் கொள்ளத்தான் நேரம் சரியாக இருக்கும். இதனால் தேவையற்ற காலதாமதம் ஆவதுடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் குழு தன் பரிந்துரைகளைச் செய்ய முடியாமலும் போய்விடும்.

நீதிபதிகள் கூறும்போது, குழந்தைகளின் உளவியல் அறிந்த மருத்துவர்களும், நரம்பியல் வல்லுநர்களும் குழுவில் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கலாம் என்கின்றனர். பயிற்றுமொழி தொடர்பாக அதிக அளவு ஆராய்ந்து வலிமையான அறிவுடன் திகழ்பவர்கள் மொழியியலாளர்கள்தாம். ஆனால் தீயூழ் காரணமாக (துரதிருஷ்ட வசமாக) தீர்ப்பில் இது குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. மேலும் நரம்பியல் வல்லுநர்களுக்கு மொழியின் பலவகையான பயன்பாடு குறித்த நேரடியான அறிவு குறைவாகவே இருக்கும். எனவே மிகக் குறைந்த தொடர்புடைய சிறப்பு மாநில வல்லுநர்களைச் சேர்க்கவும், மிகுந்த அறிவு வல்லமையுள்ள மொழியியலாளர்களை விட்டு விட்டும் மேதகு நீதிபதிகள் கூறிய பரிந்துரைகள் மிகவும் வியப்பை அளிக்கின்றன. மொத்தத்தில் குழு அமைக்கப்பட்டதில் குறை காண்பது எனும் ஒரே நோக்கத்தோடு நீதிபதிகள் இத்தகைய கருத்துக்களைக் கூறியிருப்பதாகவே கொள்ளலாம்.

இது, குழு தன் முடிவுகளை எட்டுவதற்கு எடுத்துக்கொண்ட குறுகிய காலத்தையே

குறையாக எடுத்துக்கொண்டு நீதிபதிகள் தங்கள் வினாக்களைத் தொடுத்துள்ளனர். குழு 26 நாள்கள் எடுத்துக்கொண்டது. இப்போது வழக்கிற்கு வந்துள்ள ஆணையைப் பிறப்பிப்பதற்கு அரசு ஐந்து மாத காலம் எடுத்துக் கொண்டுள்ளது. 'இந்தப்பிரச்சனை மிகவும் சிக்கலானது, என்று குழு கருத்துச் சொல்லி- யிருந்தாலும், 3 வாரங்கட்குள் தன் பணியை முடித்துள்ளது. இதற்குத் தகுதியான எல்லாச் செய்திகளும் அலசப்பட்டிருக்குமா? என்று நீதிபதி குழு ஐயத்தைக் கிளப்பியுள்ளது.

குழு அறிக்கையைக் கவனமாகப் பரிசீலித்தால் தமிழக மக்களின் எதிர்கால நலன்களை மனத்தில் கொண்டு மிகுந்த கவனத்தோடு அறிக்கையைத் தந்துள்ளமையைக் காணலாம். இந்த அறிக்கையில் கல்வியில் ஆங்கிலத்தின் அவசியம் பயிற்றுமொழிக் கொள்கையின் நலத்தீங்குகளை ஆராய்ந்துள்ளது. தமிழ் பேசும் மக்களின் கீழ்நிலையிலும் மேல்நிலையிலும் தமிழை அறிமுகப்படுத்துவதில் அறிக்கை கவனம் செலுத்தியுள்ளது. அண்டை மாநிலங்களான மேற்கு வங்கம், ஆந்திரம், கர்நாடகம் ஆகியவற்றிலிருந்து தொடர்புடைய அரசாணையைப் பெற்றுக் குழு இணைத்திருக்கிறது. சென்னை உயர்நீதிமன்றம் மேற்கோள் காட்டிய, பயிற்றுமொழி தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்பினையும் காட்டியுள்ளது. பயிற்றுமொழி பற்றிய வினாவினை விரிவாக விவாதிக்க வேண்டுமென்றால் மிகப்பெரிய கூட்டத்தினரோடு கலந்து பேசவேண்டும். தொடக்கநிலை மற்றும் உயர்நிலைக்கல்வியில் தமிழைப் பயிற்றுமொழியாக்க வேண்டும் என்பதே அதன் பரிந்துரை. இக்குழு பிற மாநில அறிக்கைகளை, அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடல் குறிப்புகளோடும் சேர்த்து வழங்கி- யிருக்கிறது. தமிழக அரசுக்கு அதிகச் செலவு வைக்காமல், மிகக் குறைந்த செலவிலேயே மூன்றரை வாரங்களுக்குள் இக்குழு பாராட்டத்தக்க பணி- யினை நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் இதனைப் பாராட்டுவதற்குப் பதிலாக உயர்நீதிமன்றம் இதனை ஓர் 'அவசர அறிக்கை' என்று வருணித்திருப்பது நமது தீயூழ் ஆகும். (துரதிருஷ்டமாகும்). ஆண்டுக்கணக்காக நீட்டிக்கப்பட்டு அதிக காலம் இயங்குவதாலேயே ஒரு முழுமையான அறிக்கையை அது தந்து விடும் என்று சொல்ல முடியாது.

1967க்கு முன் பல ஆண்டுகள் ஆட்சியிலிருந்த காங்கிரசுக் கட்சியும் சரி, அதன்பின் ஆட்சிக்கு வந்த திராவிடக் கட்சிகளும் சரி, தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. தமிழ்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய திராவிடக் கட்சிகளின் 'எல்லாத் துறைகளிலும் தமிழின் பயன்பாடு' என்பது அவற்றின் குறிக்கோள்களில் ஒன்றாகவே இருந்தது. அதாவது 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பது அவற்றின் கோட்பாடு. வாழ்க்கையின் மேம்பாட்டுக்கும், தமிழ்நாடு அரசிலும், வேறு இடங்களிலும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் ஆங்கிலப் பயிற்றுமொழி ஒன்றே தீர்ப்பு என்பது போலத் தவறான வாக்குறுதிகளை அள்ளி வழங்கியது வரை துறையில்லாமல் ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளிகள் வளர்ந்து வந்ததையும், கீழ் வகுப்புகளில் கூடத் தமிழின் பயன்பாடு குறைந்து வந்ததையும் எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடைபெறத் தொடங்கின. எனவே, தொடக்க வகுப்புகளிலும் பிற வகுப்புகளிலும் தமிழின் பயன்பாட்டை உறுதி செய்திடவும், இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணவும் வேண்டியது தமிழக அரசின் தலையாய கடமை ஆயிற்று.

தக்க துணை ஆதாரங்களோடு படைக்கப்பட்ட குழுவின் அறிக்கை அவசரத்தில் அமைந்தது என்று வருணிப்பதைவிட ஏற்றுப் பாராட்டியிருக்க வேண்டும்.

1950இல் ஆங்கிலப் பயிற்றுமொழியில் தொடங்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் பற்றியே மேதகு நீதிபதிகள் திருப்பித் திருப்பிச் சொல்லி- யிருக்கிறார்கள். 1957இல் மொழி வாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டதில் மாநில, மத்திய அரசுகளின் நோக்கமே மாநில மொழிகளை வலியுறுத்தி வளர்த்தெடுப்பதுதான். மேதகு நீதிபதிகளால் இந்த அடிப்படை உண்மை எடுத்துக்கொள்ளப்படவே இல்லை. இந்த நாட்டிலும் இங்குள்ள மாநிலங்களிலும் உயர் ஆராய்ச்சி குறித்த வளர்ச்சிக்கு ஆங்கில அறிவும், அனைத்துலக மொழிகளின் அறிவும் தேவைதான். அந்தந்த மாநில மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயில்வது எல்லாக் குடிமக்களுக்கும் உறுதுணையாகவே இருக்கும். வட்டார மொழியைப் பயிற்று மொழியாகக் கொள்வது குறித்து யுனெஸ்கோ தந்துள்ள அறிக்கையினை இங்குப் பார்வைக்கு வைக்கிறோம். தீயூழ் காரணமாக மேதகு நீதிபதிகளால் இவ்வறிக்கை கருதப்படவே இல்லை என்பதுதான் நிலை.

ஆங்கிலப் பயிற்றுமொழியானது தொடக்கத்தில் சில வகுப்பினரை உருவாக்கும். ஆனால் அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையினராகவே இருப்பர். தமிழ்த் தாய்மொழிப் பயிற்றுமொழியோ சிறந்த அறிவாற்றலைப் பெற்று நாகரிகமான வாழ்வினை நடத்திச் செல்வதற்கான முறையில் குடிமக்கள் அனைவரையுமே அந்நியம் செய்துவிடும். அத்தகைய அறிவாற்றலை ஓர் அயல் மொழியைக் காட்டிலும் தாய்மொழி வாயிலாகப் பெறுவதே எளிதாக இருக்கும்.

அரசமைப்புச் சட்டத்தின் 27ஆவது பத்தியில் வழங்கப்பட்ட மொழிச் சிறுபான்மை- யினருக்கான வகுப்புகளைத் தொடங்குவதில் உள்ள இடர்ப்பாடுகளை நீதிமன்றத் தீர்ப்பு விவாதிக்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் 40 பேருக்கு மேல் இருந்தால் தெலுங்கு, கன்னடம், மலையாளம், 40க்கும் மேற்பட்ட

மலைவாழ் மக்களின் மொழி பேசுவோர் விரும்பினால் அவர்கள் பள்ளிகளைத் தொடங்கிக் கொள்ள உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது. நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப் பட்டுள்ள நடைமுறைச் சிரமங்களால் தாய்மொழியையோ தமிழையோ பாடமொழியாகக் கொண்டுள்ள பள்ளிகட்கு ஆங்கிலப் பயிற்று மொழி என்பது தீர்வாகாது.

நீதிமன்றத் தீர்ப்பின்படிப் பார்த்தால் மொழிச் சிறுபான்மை மாணவர்களைப் பொறுத்தவரையில், வேலை வாய்ப்புக் கருதி வேறு மாநிலங்கட்குப் போக விரும்புவர்கள், ஆங்கிலப் பயிற்றுமொழிப் பள்ளிகளுக்குத்தான் போகவேண்டும். பிற மாநிலங்கட்கு இடம் பெயர்ந்து செல்லும் மாணவர்கள் எத்தனை விழுக்காட்டினர்? என்பது குறித்து நீதிமன்றம் எதுவும் குறிப்பிடவில்லை. இதுகுறித்து ஆழ்ந்து விவாதிக்கப்படவில்லை என்றாலும், தெற்கிலும், வடக்கில் உள்ள பிற மாநிலங்களிலும் உள்ள மொழிச்சிறுபான்மையினரில் 3% மட்டுமே வேலைதேடி வெளிமாநிலங்களுக்குச் செல்பவராவர். மிகப் பெரும் பான்மையினர் தமிழ்நாட்டுக்குள்ளேயே தங்கிவிடுபவர்கள்தான். ஒரு நாகரிகமான நல்வாழ்வுக்கு அவர்கள் தங்கள் தாய்மொழி வாயிலாகக் கல்வி கற்க வேண்டாமா? 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பிற மாநிலங்களில் உள்ள மொழிச் சிறுபான்மையினர் பற்றிய புள்ளி விவரங்களைத் தருகிறது. அவை புறக்கணிக்கப்படும் அளவு சிறுபான்மையாகும். எனவே ஒருசிலருக்காகத் தமிழ்ப் பயிற்றுமொழியைப் புறக்கணிப்பது என்பது அறிவார்ந்த முடிவாகாது. பள்ளிகளில் தமிழ் வழியில் பயில்வதால், அறிக்கையில் ஆங்கிலக் கல்வி பற்றிய பரிந்துரை இல்லை என்பதும் தவறானதாகும். உண்மையில் மோகன் குழு, தமிழ்நாட்டில் ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதில் உள்ள தரம் தாழ்ந்த நிலை குறித்து வருந்தியிருக்கிறது. மேலும் பள்ளிகளில் சிறப்பான பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர்களைப் பணியமர்த்தவும் வலியுறுத்துகிறது.

31ஆவது பத்தியில் 'தாய்மொழி' என்றால் என்ன வரையறை? என்பது குறித்தும் தாய்மொழியை அடையாளம் காண்பது பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

1953இல் யுனெஸ்கோவால் நடத்தப்பட்ட வல்லுநர்கள் மாநாட்டுக்குப் பிறகு 1957இல் 'கல்விக்கான பயிற்றுமொழியாக வட்டார மொழி' என்பதற்கான ஆவணத்தினை யுனெஸ்கோ வெளியிட்டுள்ளது. இதுகுறித்து, வாதிகளுக்கான வழக்கறிஞர்கள் அறிந்திருக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. ஜோகவா பிஷ்மேமினன் நூலில் இரண்டாம் இதழில் தரப்பட்ட செய்திகள் இங்கு இணைக்கப் பட்டுள்ளன. (ஒட்டுமொத்த மூலத்தின்படி முழுவதும் பின்னர் கிடைக்கப் பெற்றது. மேலே சொன்ன இயல் அதன் உண்மைப்படிதான்). அந்த இதழில் 'தாய்மொழி' என்றால் என்ன என்பது குறித்துத் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

"ஒரு மனிதன் தன் தொடக்கக் காலத்தில் எந்த மொழியில் பழக்கம் வைத்திருக்கிறானோ, எது சிந்தனைக்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் இயற்கையான கருவியாக அமைகின்றதோ அதுதான் அவனது தாய்மொழியாகும்."

மேதகு நீதிபதிகளால் சொல்லப்பட்டபடி அது தாயார் மொழியோ தந்தையின் மொழியோ அன்று. ஐ.நா. ஆவணங்கள் மேதகு நீதிபதிகளால் மிகுந்த மரியாதையுடன் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதனால், தீர்ப்பின் இதுபோன்ற பகுதிகள் மீண்டும் விவாதிக்கப்படும் பொழுது, வட்டார தாய்மொழியின் பயன்பாடு குறித்து யுனெஸ்கோ தந்த ஆவணங்களை நான் மேற்கோள் காட்டுவேன். தாய் எந்தமொழி பேசுகிறாரோ அதுதான் குழந்தையின் தாய்மொழி என்ற அடிப்படையிலேயே தமிழ்நாடு அரசு இப்பிரச்சனையை அலசியிருக்கிறது என்றே மேதகு நீதிபதிகள் கருதுகின்றனர். ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட அரசு ஆணைகளிலோ அல்லது அட்வகேட் ஜெனரலின் விவாதத்திலோ மேற்கண்ட கருத்து வாக்குமூலம் எங்கும் காணப்படவில்லை.

32ஆவது பத்தியில் முன் மழலையர் வகுப்புகள், அநேக அடுக்குகளைக் கொண்ட பல்லடுக்கு மாளிகைகளில் நடைபெறுவதாகவும், அந்த வகுப்புகளில் மாணவர்களும் ஆசிரியர்களும், ஆங்கிலத்தில்தான் பேசிக் கொள்கின்றனர் என்றும் வழக்கறிஞர் வாதிட்டுள்ளார். மேதகு நீதிபதிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த இரண்டு ஏற்புப் பதிவுகளுமே ஒரு மனப்பதிவு அடிப்படையில் அமைந்தவையே தவிர, உண்மையான புள்ளி விவரங்களின் அடிப்படையில் அமைந்தவை அல்ல. (அண்மையில் கும்பகோணம் சரசுவதி மழலையர் தொடக்கப்பள்ளியில் நேர்ந்த அவலம் குறித்தும், அந்தப் பள்ளியின் மிக மோசமான நிலை குறித்தும், அது ஒரு பள்ளியே அல்ல, ஒருவரது வீடு என்பது குறித்தும் கவனத்தில் கொள்ளவும்). அவர்கள் கூறும் பள்ளிகள் நகரங்களைச் சார்ந்திருப்பவை. (கும்பகோணம் நகரத்தில் இத்தகைய கோணல் மாணல்கள்). ஆனால் தமிழ்நாட்டில் மிக அதிகமான பள்ளிகள் கிராமப்புறத்தைச் சார்ந்தே அமைந்துள்ளன என்பது முக்கியமான குறிப்பாகும். தாய்மொழிகள் பலவாக இருப்பதாகவும், பல்வேறு மொழிச் சிறுபான்மையினருக்காகப் பல்வேறு பள்ளிகளைத் தொடங்குவதைவிட, ஒப்புக் கொள்ளப்படும் தீர்வு என்பது ஆங்கிலவழிப் பள்ளிதான் எனும் விவாதத்தை மேதகு நீதிபதிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இது, அடிப்படையில் ஒப்புக் கொள்ள முடியாத தீர்வாகும். காரணம், இந்திய மொழிகளின்

வாக்கியக் கட்டமைப்புகள், இலக்கணங்கள், ஒலிப்பு முறைகளிலிருந்து ஆங்கிலம் வெகுதூரம் விலகி நிற்கிறது. பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக்குவது, இந்திய மக்கள் தொகையை அயல் மொழிகளுக்கு அடிமைகளாக ஆக்கும் முயற்சியே தவிர வேறில்லை. இதில் மிக முக்கியமான குறிப்பு என்பது, பள்ளிகளில் தாய்மொழியை, குறிப்பாகத் தமிழைச் சிந்திப்பதற்கும், கருத்துப் பரிமாற்றத்துக்கும் வாய்ப்பான கருவியாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் இல்லாமலேயே போய்விடும். இந்தியா அரசியல் விடுதலை பெற்ற பிறகும் ஆங்கிலம் பயிற்றுமொழியாகத் தொடரும் என்றால் மொழியடிமைத்தனம் மட்டும் இங்கு தொடர்ந்து கொண்டேயிருக்கும். மோகன் குழு செய்துள்ள பரிந்துரையின் முக்கிய நோக்கமும், (மற்றும் அரசு ஆணையும்) தமிழர்களின் நல்வாழ்வு கருதியும், தமிழ் வளர்ச்சி கருதியுமே அமைந்துள்ளன.

இந்த முக்கிய நோக்கம் கவனத்திலிருந்து திசைதிருப்பப் பட்டுள்ளது. அரசு பல்வேறு துறையினரின் கருத்துக்களையும் பெற்று, பல்வேறு குழுவினரின் வேண்டுகோள்களையும் பரிசீலனை செய்துதான் முடிவெடுக்க வேண்டும். ஆனால் நடைமுறைக் குறைபாடுகள் மட்டுமே பெரிதுபடுத்தப் பட்டிருக்கின்றன.

மோகன் குழுவினால் இணைக்கப்பட்டுள்ள கர்நாடக, ஆந்திர அரசாணைகளும் தமிழக அரசின் ஆணையும், தங்கள் நோக்கத்தை ஒரே மாதிரியாகவே புலப்படுத்தியுள்ளன. அந்த மாநிலங்களில் பெரும்பாலும் சிறுபான்மை மொழியினரிடமிருந்து எந்தப் புகாரும் எழவில்லை.

மேற்கு வங்கத்திலும் இதே நிலைதான். இந்திய அரசுக்குள் அமைந்த பிறமாநில அரசாணைகளையும் கூர்ந்து பார்த்துத்தான் மோகன் குழுவும் தமிழக அரசும் செயற்பட்டுள்ளன.

35ஆவது பிரிவு, தமிழ்ப் பயிற்று மொழியைக் கடைப்பிடித்தால், வேலைவாய்ப்புச் சுருங்கிவிடும் என்பது குறித்துப் பேசுகிறது. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உலக மொழிகளைப் பயிற்று மொழிகளாகக் கொண்ட உருசியாவிலும், சீனாவிலும் ஏன் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் கூட வேலையில்லாத் திண்டாட்டம் உள்ளது. கல்வியறிவு பெற்ற ஒவ்வொரு மனிதனின் விருப்பமும் ‘வெள்ளை சட்டை வேலை’ தான் என்றால், எந்த அரசுக்கும் போதுமான வேலைவாய்ப்பினை உருவாக்குவது இயலாத காரியமே ஆகும். தச்சுவேலை, கொத்தனார் வேலை, வியாபாரம் மற்றும் வேளாண்மைத் துறை, பிற அமைப்புச் சாராத் துறைகளிலும் உலகமெங்கும் ஆள் பற்றாக்குறை உள்ளதாகவே கருதப்படுகிறது. ஆலந்திலோ) நார்வேயிலோ அங்குள்ள பல்கலைக்கழகங்களிலோ அவரவர் தாய்மொழியில் பயிலும் எவரும், வயல் வேலைகளைச் செய்வதிலோ அல்லது கட்டுமானப் பணிகளைச் செய்வதிலோ எவ்விதத் தயக்கமும் காட்டுவதில்லை. அந்த நாடுகளில் கல்வியறிவு மிகுந்தவர்களிடமிருந்து அவர்கள் பார்க்கும் வேலைகளில் உள்ள சிறப்புத் திறமையும், வேலையின் நாகரிகத் தன்மையும் மட்டுமே எதிர்பார்க்கப்படுகின்றன.

மோகன் குழு அறிக்கையை வாசிக்கும் ஒவ்வொருவர்க்கும், அக்குழு, ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகப் படிப்பதைப் பெரிதும் வலியுறுத்தியிருப்பது தெளிவாக விளங்கும். யுனெஸ்கோவின் கருத்துப்படியே தமிழ் அல்லது தாய்மொழி வாயிலாகக் கல்வி பயில்வது மட்டுமே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேதகு நீதிபதிகள் தமிழ்நாட்டில் ஜப்பான், சீனம், உருசியன் மற்றும் ஆங்கில மொழிகளைப் பகுதிநேரமாகச் சொல்லித் தரும் பள்ளிகளைத் திறப்பது குறித்து வலியுறுத்தியிருக்கலாம். ஆங்கில வழியில் படித்த எல்லாரும் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கூட வேலை வாய்ப்பைப் பெற்றுவிடவில்லை. இந்தியாவின் பிற மாநிலங்களிலும் இதுதான் நிலைமை.

இந்தப்பிரிவில் ஆங்கிலப் பயிற்றுமொழி வாயிலாகப் படித்த ஒருவன், தமிழ்வழியில் படித்த மாணவனைவிட எளிதாக ஓர் ஏவலர் (Attender) வேலையைப் பெற்றுவிடுவான் என்று காட்டப்பட்டுள்ளது.

மேதகு நீதிபதிகளால் ஒரு மொழியை ஒரு பாடமாகப் படிப்பதற்கும் (Subject), அந்த மொழி வாயிலாகப் பிற பாடங்களைப் படிப்பதற்கும் (as a medium) உள்ள வேறுபாடு காட்டப்படவில்லை. மோகன் குழு அறிக்கையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படிப்பது குறித்து அழுத்தமாகவே சொல்லப்பட்டுள்ளது. தங்கள் தாய்மொழியைப் புறக்கணித்து, ஒரு பாடத்தை மற்றொரு மொழி வாயிலாகப் படிப்பதில் மாணவர்களிடையே நிச்சயம் ஒரு பின்னடைவு இருக்கும்.

தமிழகத்திற்கு வெளியே வேலை தேடிச் செல்பவர்களின் எண்ணிக்கை 3% அளவுதான் இருக்கும். 1991 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இது ஒரு குத்துமதிப்பான எண்ணிக்கைதான். இக்கணக்கு பிற மாநிலங்களில் பேசப்படும் அவரவர் தாய்மொழி அல்லாத பிறமொழிகள் குறித்தும் விவரங்களைத் தருகிறது. தமிழ் நாட்டின் பல்வேறு கிராமங்களில்தான் மிகப்பெரும்பான்மையான மக்கள் வாழ்கிறார்கள். அவர்களது வாழ்க்கைப் போக்கினைக் கல்வியால் மட்டுமே மேலோங்கச் செய்ய முடியும். தாய்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படும்போது,

இக்கல்வி அவர்கட்குக் குறைந்த முயற்சியிலேயே கிடைத்து விடுகிறது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்பு, ஆங்கிலப் பயிற்று மொழிக்குச் சார்பாக, இடம் பெயர்ந்த சிறுபான்மைக் கூறுபாட்டைப் பெரிதும் வலியுறுத்துகிறது.

தென்னகத்தின் நான்கு மாநிலங்களிலும் இந்தோ - ஆரியமொழி எனும் வடமாநில மொழிகளைப் பேசுவோர் எண்ணிக்கை குறித்துக் கணக்கெடுக்கப்பட்டபோது வடபுல மாநிலங்களில் தென்னக மொழியைப் பேசுவோரைவிடப் பலமடங்கு அதிகமாகவே இந்தோ-ஆரிய மொழியைப் பேசுவோரே இருப்பதைக் கண்டறிய முடிந்தது.

தென்மாநிலங்கட்கு இடம்பெயர்ந்து செல்லும் அளவுக்கு வட இந்தியர் பலரும் ஆங்கிலப் பயிற்றுமொழிப் பள்ளிகளில் பயின்றதில்லை.

தீர்ப்பில் மேற்கோள் காட்டப்பட்ட ‘திரை கடலோடியும் திரவியம் தேடு’ எனும் பழமொழி அண்மைக்கால மக்களுக்காகக் கூறப் பட்டதில்லை. நிச்சயமாக, இது ஆங்கிலேயர் காலத்திற்கு முந்தியவர்களுக்காகக் கூறப்பட்டது. செல்வம் சேர்ப்பது என்பது ஆங்கிலமொழி அறிவோ அல்லது வேறு உலக மொழி அறிவோ பெற்றதனால் ஏற்படுவது அன்று. தெற்காசிய நாடுகளில் பரந்து வாழ்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் செல்வச் செழிப்பு இதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும்.

37ஆவது பிரிவு, மொழி பற்றியும், பண்பாடு பற்றியும் குறிப்பிடுகிறது. தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி, பண்பாடு என்பது ஒருவர் தமிழ்வழியாகப் படிப்பதன் மூலம் பெறும் இலக்கிய அறிவிலோ, நடவடிக்கை-யிலோ, உடையிலோ வெளிப்படுத்தப்படுவது என்று அறிக்கையின் எந்த இடத்திலும் குறிப்பிடப்பட்டதாக நான் கருதவில்லை. அறிக்கையில் உள்ள அந்தப் பகுதியின் உண்மையான மொழிபெயர்ப்பு இதுதான். தமிழ் இலக்கியத்தை ஆழ்ந்து படிப்பதன் வாயிலாக ஒருவர் தமிழ்ப் பண்பாட்டைத் தனக்குள் நிலை நிறுத்திக் கொள்ள முடியும்.

அறிக்கையில் உள்ள பண்பாடு குறித்த கருத்துக்கு எதிராக ஆக்சுபோர்டு, வெப்ஸ்டர்ஸ் அகராதிகளில் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

எந்த ஆவணத்திலும் பண்பாட்டுக்குரிய வரையறையை எளிதாக எடுத்துக் காட்டிவிட முடியாது. நிச்சயமாக, ஆக்சுபோர்டு அல்லது வெப்ஸ்டர்ஸ் பொது அகராதிகள், அனைவரையும் ஒப்புக் கொள்ளும் படியான வரையறைகளை வழங்கிட முடியாது.

மொழி சார்ந்த பண்பாடு குறித்து, கல்வியில் வட்டார மொழியின் பயன்பாடு குறித்த யுனெஸ்கோ வெளியீட்டில் அழுத்தமாகவே சொல்லப்பட்டுள்ளது. 40ஆம் பக்கத்திலிருந்து அதனைக் காட்ட விரும்புகிறேன்.

காரணம், மொழி என்பது பண்பாட்டின் ஒரு கூறுபாடு, மக்களது ஆன்மாவின் வெளிப்பாடு. எனவே, பொது அகராதிகளை மேற்கோள் காட்டி, மோகன் குழுவின் கருத்தினைத் தரக்குறைவாக மதிப்பிடுவது வருந்தத்தக்கது.

மற்றொரு கருத்தும் பார்க்கப்படவேண்டும். ஒருவர் தான் தாய்மொழி வாயிலாகப் பெறும் கல்வியில் அறிவார்ந்த வசதிகள் மிகவும் குறைவு என்று கருதமுடியுமா? அமெரிக்காவின் புதிய மெக்சிகோ பகுதியில் ஸ்பானிஷ் மொழி பேசும் இடம் பெயர்ந்தோரைப் பற்றிய ஆய்வு இங்கு நமக்குப் பொருத்தமாக இருக்கும். ஆங்கிலத்தில் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்ட ஸ்பானிஷ் குழந்தைகளின் I.Q. மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் ஸ்பானிஷ் மொழியிலும் ஆங்கிலத்திலும் கல்வி பயின்ற குழந்தைகளின் I.Q. அதிகமாகவே இருந்தது.

52ஆவது பிரிவு, பயிற்றுமொழியை மாற்றுவது குறித்து அரசாணைதான் பிறப்பிக்கப்பட்டுள்ளதே தவிர அது சட்டமாக்கப் படவில்லை என்று குறிப்பிடுகின்றது. சட்டமாக்கப் படுவதைப்போல, அரசாணை பிறப்பிப்பதும் சரியான வழிமுறையே ஆகும்.

உயர்நீதிமன்றத்தின் ஒருவர் அடங்கிய பெஞ்சு, இந்த நோக்கத்திற்கு அரசாணையே போதும் என்று ஒப்புக் கொண்டுள்ளது. கர்நாடகத்திலும் ஆந்திராவிலும் இத்தகைய கொள்கை முடிவுகள் அரசாணைகளாலேயே செயற்படுத்தப்பட்டுள்ளன. அந்த ஆணைகள் மோகன் குழு அறிக்கையுடன் இணைத்து அளிக்கப்பட்டுள்ளன. சட்டமன்றத்தின் வாயிலாக நிறைவேற்றப்படும் சட்டம் இந்த முடிவினை வலியோடு நிறைவேற்றிட உதவும் என்றாலும், இதில் அதிகப்படியான காலச் சுமைக்கும் ஏற்படும் ஒரு சிலவற்றில் மத்திய அரசின் ஒப்புதலும் தேவைப்படும். அதனால்தான் சட்டமன்றச் சட்டத்தை விட, அரசு ஆணையாகவேயே செயற்படுத்த முனைகின்றது.

56ஆவது பிரிவு அனைத்துலகச் சட்டத்தையும், பயிற்றுமொழி மாற்றத்திற்கு நகராட்சிச் சட்டம் இயற்றப்படவேண்டிய தேவையையும் அலசுகிறது.

ஐநாவின் மனித உரிமைகள் சங்கம் குழந்தைகள் கல்வி கற்பதற்கான உரிமைகளை மட்டுமே எடுத்துச் சொல்கிறது. அதே ஐ.நா. அதனுடைய படைப்புகளில் மற்றோர் சங்கமான யுனெஸ்கோவுக்குக் கல்வியில் பயிற்றுமொழியின் நிலைமை குறித்து ஆராய்வதற்காக 1953இல் ஒரு தீர்மானத்தின் வாயிலாக அதிகாரம் அளித்துள்ளது. கல்வித் துறையின் வல்லுநர்களும், மொழியியலாளர் களும், சம்பந்தப்பட்ட பிற

துறையினரும், இத்துறையில் பெரிய அளவில் களப்பணி செய்த பலரும் கூடி ஆராய்ந்து அடிப்படைக் கல்வியின் அடித்தளமாகிய 1953, கல்வியின் வட்டார மொழிகளின் பயன்பாடு, எனும் ஓர் ஆவணத்தை உருவாக்கினார். அந்த வரைவில் ஒரேயடியாக ஒரு கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அது இதுதான். தாய்மொழியில் கல்வியை வழங்கிட எல்லாவகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது மிக முக்கியமானதாகும்.

அந்தத் தெளிவான அறிவிப்போடு யுனெஸ்கோ தாய்மொழி என்பதற்கு அருமையான விளக்கமும் தந்துள்ளது.

அரசியல் சட்டத்தின் 350அ பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

மொழிச் சிறுபான்மைத் தொகுதியினரைச் சார்ந்த சிறுவர்களுக்குக் கல்வியின் தொடக்க நிலையில் தாய்மொழியில் கற்பிப்பதற்காகப் போதிய நலப்பாடுகளுக்கு வகை செய்வது மாநிலங்களில் உள்ள உள்ளூர் அதிகார அமைப்பு ஒவ்வொன்றின் பெருமுயற்சியாக இருக்க வேண்டும். குடியரசுத் தலைவர், அத்தகைய நலப்பாடுகளை உறுதியாகக் கிடைக்கச் செய்யத் தேவையானவை அல்லது முறையானவை எனத் தாம் கருதும் ஏவுரைகளை மாநிலம் எதற்கும் பிறப்பிக்கலாம்.

75ஆவது பிரிவில், உச்சநீதிமன்றத்திலும் பிற நீதிமன்றங்களின் தீர்ப்புகளிலும் மேதகு நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கல்வி பெறுவதற்கான உரிமை என்பது அடிப்படை உரிமையாக, இது பயிற்றுமொழியைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமையை உள்ளடக்கியதாகும். இந்த உரிமை தங்கள் குழந்தைகளின் சார்பில் அவர்தம் பெற்றோர்களால் செயற்படுத்தப்படுவதற்கு உரியதாகும்.

குழந்தைகள் மீது பெற்றோர்க்குரிய உரிமை என்பது இயன்றவரை அவர்கள் நல்வாழ்வு பெறுவதற்கான வகையில்தான் அமையும். ஆனால் அவர்களது விலகிச் செல்லும் வளர்ச்சி குறித்தது ஆகாது. தாய்மொழிக்கு மாறாக வேறு மொழியைப் பயிற்று மொழியாகத் தேர்ந்தெடுத்தால், அதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் காயங்களால் படிப்பைப் பாதியிலேயே விட்டு விடும் தீங்கு பற்றியும், அயல்மொழி வாயிலாகப் பயில்வதால் குழந்தைகளுக்கு ஏற்படும் நரம்பியல் முறையிலான விளைவுகள் குறித்தும், யுனெஸ்கோ ஆவணம் விரிவாக விவாதித்துப் பதிவு செய்திருக்கிறது. துரதிருஷ்டமாக வாதிட்ட வழக்கறிஞர்களும் மேதகு நீதிபதிகளும் இந்த ஆவணம் பற்றி அறியாமல் இருக்கிறார்கள். மேலும் வயது வந்தோரில் 35%னர் இந்த நாட்டில் இன்றும் கல்வி அறிவு பெறாதவர்களாகவே இருக்கும் நிலையில் தங்கள் குழந்தைகள் தேர்ந்தெடுக்கும் கல்வி மொழி எது என்பது குறித்துக் காரண காரியங்களோடு சிந்தித்துத் தேர்ந்தெடுப் பவர்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

டார்வின் கோட்பாட்டிலிருந்து தீர்ப்பு ஒரு மேற்கோள் காட்டியுள்ளது. 'மாறுதலுக்கு இடமளிக்கும் நுண்கூறுகள்தாம் காலப்போக்கில் நிலைத்து நிற்கும்' என்பது அது. இது கூட ஒரு வகையில் யுனெஸ்கோ வல்லுநர்கள் கண்டுபிடிப்புகளை மேலும் வலுவுள்ளதாக்கிறது. அவர்கள் கண்டுபிடிப்பு இதுதான். தொடக்க நிலை வகுப்புகளில் தாய்மொழிக் கல்வி என்பதும் கூட நுண்கூறுகள் தங்கள் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு மாறுதல்தான்.

77ஆவது பிரிவு ஆங்கிலப் பயிற்றுமொழி குறித்தும், அப்பயிற்று மொழியில் படிப்பதில் சில மாணவர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்தும் பேசுகிறது. ஆனால் தீர்ப்பு வலியுறுத்திப் பேசுவது நகர்ப்புற மாணவர்கள் குறித்து அதிக எண்ணிக்கையில் உள்ள கிராமப்புற மாணவர்களைப் புறக்கணித்தே இத்தீர்ப்பு அமைகின்றது. 'தினமலரி'ல் வந்துள்ள செய்தியின்படி, நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பு, பழங்குடியினர், பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் தாம் ஆங்கிலத்தில் பெருமளவு தோல்வியடைந்து தனிப்பயிற்சிக் கல்லூரிகளின் உதவியை நாடுபவர்களாக இருக்கிறார்கள். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலப் பயிற்றுமொழி எதில் போய் முடிகிறது என்றால் பெரும்பாலான முற்பட்ட வகுப்பினரை மேம்பட்ட வகுப்பினராக மாற்றவும், பெரும்பாலும் கிராமப்புறத்தில் வாழ்கின்ற பிற்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அடங்கிய ஓர் ஏழை வகுப்பினரை உருவாக்கவுமே ஆகும். உண்மையில் நகர்ப்புற மாணவர்களை விடக் கிராமப்புற மாணவர்களே அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.

மொழி வல்லுநர்கட்கு மிகவும் பழக்கமான முக்கியமான கூறுபாடு ஒன்றினை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது. தனிநபர் வருமானத்தில் உயர்ந்துள்ள வளர்ச்சிபெற்ற நாடுகள் எல்லாமே தங்கள் மாநில மொழியைத்தான் பயிற்றுமொழியாகக் கொண்டுள்ளனவே தவிர, எந்த ஒரு அயல்மொழியையும் அல்ல. அமெரிக்கா, சப்பான், சீனா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, (இசுரேல் நாடுகூட ஈப்ரு மொழியில் தான் முழுமையான கல்வியையும் வழங்குகிறது) போன்ற நமக்கு நன்கு அறிமுகமான பெரிய நாடுகள் எல்லாமே தொடக்க வகுப்புகளிலிருந்து பல்கலைக் கழகத்தின் உயர் வகுப்புகள் வரை தங்கள் தேசிய மொழிகளைத் தவிர வேறெந்த மொழிகளையும் பாடமொழியாக வைத்திருக்கவில்லை.

பயிற்றுமொழியாகத் தாய்மொழியாம் தமிழை வலியுறுத்தும் அதே நேரத்தில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலம் பயில்வதை மேலும் வலுப்படுத்தவேண்டும் என்று மோகன் குழு செய்த பரிந்துரை நீதிமன்றத்தால் கருதப்படவே இல்லை என்பதுதான் வருந்தத்தக்க உண்மையாகும்.

தீர்ப்பின் 157ஆம் பக்கத்தில் குறிப்பிட்டபடி, கருநாடக மாநிலத்தின் மொழிக்கொள்கை என்பது ஓர் அரசாணையால் தான் செயற்படுத்தப்பட்டுள்ளதே தவிர, சட்டத்தால் அல்ல.

91ஆவது பிரிவின் கடைசியில் குறிப்பிட்டபடி உச்சநீதிமன்றத்தின் முடிவு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தின் ஒரு பள்ளியில் பயிலும் ஒரு மாணவன் வட்டார மொழியை அறிந்திருக்கத் தேவையில்லை என்கிறது.

இது ஒரு தொலைநோக்கோடு கூடிய முடிவாகும், ஆனால் சென்னை உயர்நீதிமன்றத்தின் பெஞ்சு, இந்தக் கருத்து பயிற்று மொழியைக் குறித்தல்ல என்று கருதிவிட்டது. ஒரு வட்டார மொழியை ஒரு மாநிலம் மேம்படுத்துவது, அந்த மாநிலத்தின் கடமை என்பதை ஒப்புக் கொண்டபிறகு, அம்மொழி ஒரு பாடமாக மட்டுமே சொல்லித் தரும் பயிற்றுமொழியாகக் கொள்ளப்படவேண்டுமா என்பதை வல்லுநர்கள் தாம் முடிவு செய்யவேண்டும்.

வட்டார மொழியை மேம்படுத்துவது என்பது ஒவ்வொரு மாநிலத்தின் விருப்பார்ந்த கடமையாகும் என்று கூறும் போதே, பள்ளிகளில் கன்னடத்தைப் பயிற்றுமொழியாக வைத்துக் கொள்ளக்கூடாது என்று கர்நாடக மாநிலத்தின் மீது உச்சநீதிமன்றம் எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை.

கல்வி பெறுவதற்கான உரிமை ஒவ்வொருவர்க்கும் அடிப்படை உரிமை என்பதனை மேதகு நீதிபதிகள் பயிற்றுமொழியைத் தேர்ந்தெடுப்பதும் அதில் அடங்கும் என்னும் போக்கில் பொருள் கொண்டுள்ளார்கள். பிற மாநிலங்களில் இதுபற்றிய நீதிமன்றத் தீர்ப்புகள் இருக்கக்கூடும். ஆனால் அந்தத் தீர்ப்புகள் எல்லாம் தாய் மொழியானது ஒவ்வொரு தனிமனிதனின் சிந்தனைக்கும், அதனைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் திறமைக்கும் கிடைத்த இயற்கையான சாதனம் என்று யுனெஸ்கோவின் அறிக்கைகள் எவற்றையும் கருதாமல் அளிக்கப்பட்ட தீர்ப்புகளாகும். தன் தாய்மொழி எது? என்று சொல்லும் முழு உரிமை தொடர்புடைய அந்தத் தனிமனிதனுக்கு மட்டுமே உண்டே தவிர, வேறெவர்க்கும் அந்த உரிமை இல்லை. மோகன் குழு அறிக்கை ஆங்கிலத்தை ஒரு பாடமாக வல்லமையோடு சொல்லிக்கொடுக்க வற்புறுத்துகிறது. வட்டார மொழியின் வளர்ச்சி என்பது ஒரு மாநில அரசின் முழுப்பொறுப்பு என்பதால், அனைத்து அறிவுக் கூறுகளையும் விரிவாக எடுத்துச் சொல்லும் வகையில் அம்மொழி பயிற்றுமொழியாக்கப்படாவிட்டால், வட்டார மொழிகள் பெரும் வளர்ச்சியடைய வாய்ப்பே இல்லை. மற்றபடி, அந்த வட்டார மொழிப் புதினங்கள் மற்றும் சிறுகதைகளுக்கு இடந்தரும் மொழியாகத்தான் இருக்கும். அறிவியல் மற்றும் கலை சார்பான கோட்பாடுகளுக்கும், சொல்லாட்சிகளுக்கும் மிகச் சிறிய இடமே கிடைக்கும்.

தமிழ் இலக்கிய மொழியாக நிற்குமே தவிர, வாழ்வியல் மொழியாக ஆகாமல் போய்விடும்.

இந்திய நாட்டின் தந்தை மகாத்மா காந்தி, கவியரசர் தாகூர் ஆகியோரது கருத்துக்கள் அடங்கிய படிகள் இணைக்கப்பட்டுள்ளன. மோகன் குழுவினரால் தாய்மொழியைப் பயிற்றுமொழியாக்கிட வலியுறுத்தப்பட்ட உயரிய குறிக்கோளுக்கு வலுச்சேர்க்கவும், உரிய ஆதாரமாகவும் அவை இங்கு இணைக்கப்பட்டுள்ளன என்று அறிஞர் வ.அய்.சு. அவர்களின் விவாதங்கள் எடுத்து வைக்கப்பட்டுள்ளன. (தமிழ்க்குடிமகன்.2007:27)

### வழக்கு நிறுவையில் உள்ளது

உச்சநீதிமன்றத்தில் இவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதுதான் இன்றைய நிலை. இதன்பிறகு கலைஞர் ஆட்சிக்கு வந்து முதல்வரான பிறகு தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகள் தமிழில் தொடங்கப்பட்டன. அண்ணா பல்கலைக்கழகக் கல்லூரிகளில் (சென்னை, அரியலூர், பண்ருட்டி, இராமனாதபுரம், திருக்குவளை, திண்டுக்கல், பட்டுக்கோட்டை, நாகர்கோயில், திண்டிவனம், திருச்சி, தூத்துக்குடி) மட்டும் சிவில், மெக்கானிக் ஆகிய பிரிவுகளில் தமிழ்வழிப் பொறியியல் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு (2008) அதில் 900 மாணவர்களை அனுமதிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டிலேயே தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கல்லூரிகளில் தமிழ் வழி பொறியியல் 2010இல் தொடங்கப்பட்டது. இந்நிலையில் பாடப் புத்தகங்கள் முழுமையாக தயாராகவில்லை. தயாரித்த நூல்களும் கையேடுபோல் இருந்தன.

இப்படியான ஆட்சி மாற்றங்களினால் தமிழ் வளர்ச்சி காலம் காலமாக தொடர் பேரிடிகளை காணவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது, கவலை அளிப்பதாக உள்ளது.

கட்டுரையாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர்.
மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

## வில்லிசைக்கலைஞர்

# சாத்தூர் பிச்சைக்குட்டி

## (1922 - 1971)

அ.கா.பெருமாள்



ஒருமுறை சென்னையில் சாத்தூர் பிச்சைக்குட்டி வில்லிசை நிகழ்ச்சி நடத்தினார் கலைவாணர் என் எஸ் கிருஷ்ணன், டி.ஏ. மதுரம் பார்வையாளர்களாக இருந்தார்கள் நிகழ்ச்சி முடிந்ததும் கூட்டம் கலைந்தது. கலைவாணரும் அவருடைய மனைவி மதுரமும் வேறு சிலரும் மேடையிலே ஏறினார்கள்.

பிச்சைக்குட்டியின் துணைப் பாடகர்கள் இசைக்கருவிகளை அதற்குரிய உறைகளில் போட்டுக்கொண்டு இருந்தார்கள். ஒருவர் நீண்ட வில்லை இரண்டாக ஒடித்து அதற்குரிய பட்டுத்துணி உறையில் போட்டுக்கொண்டிருந்தார். டி.எ.மதுரம் ‘இது என்ன வில்லை இரண்டாக உடைத்து விட்டாரே’ என்று அச்சத்துடன் கேட்டார். கலைவாணர் ’உனக்கு அது தெரியாதா ராமன் சீதையைக் கல்யாணம் செய்யும் போது வில்லை ஒடித்தான் ஜனகன். ஒடிந்த வில் எனக்கு வேண்டாம். நீ அயோத்தி கொண்டுபோ என்றான். உடனே இராமன் பரவாயில்லை பிச்சைக்குட்டியிடம் ஒடிந்த வில்லைக் கொடுத்து விடலாம். அவர் பாதுகாப்பார் என்றானாம். ஜனகனும் அப்படியே செய்யலாம் என்றானாம். அப்படி வந்த வில் இது’ என்றாராம். சுற்றி நின்றவர்கள் ஒரேயடியாக சிரித்தார்கள். பிச்சைக்குட்டி ஒரு பேட்டியில் தன் மறக்கமுடியாத அனுபவம் இது என்று சொல்லி இருக்கிறார்.

### பிறப்பு படிப்பு

எஸ்.பி.பிச்சைக்குட்டி என்னும் சங்கரலிங்கம் பார்வதிநாதன் பிச்சைக்குட்டியின் சொந்த ஊர் கோவில்பட்டி (1922 1971). பணியின் காரணமாக சாத்தூரில் குடியேறினார். அந்தப் பெயரே அவருக்கு முன்னொட்டாக மாறிவிட்டது இவர் ஆரம்பத்தில் படித்தது கோவில்பட்டி அரசுப் பள்ளியில். பள்ளி இறுதி வகுப்பு முடிந்ததும் அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் படித்திருக்கிறார்.

பின்னர் சென்னை பல்கலைக்கழகம் வழி இண்டர்மீடியட் படித்திருக்கிறார்.

பள்ளிப்படிப்பு முடிந்த பின் தனிப்பட்ட சில தமிழ் ஆசிரியர்களிடம் கம்பன், பாரதி என படித்தார். அந்தக் காலத்தில் கோவில்பட்டியில் பெட்டிக்கடை நடத்திய கந்தசாமி செட்டியார் தமிழ் இலக்கியங்களை நுட்பமாக படித்தவராக இருந்தார். இவரைத் தேடி விளாத்திகுளம் சுவாமிகள் என்பவர் வருவார். இவர் கர்நாடக சங்கீதம் அறிந்தவர். இவர்கள் இருவரிடமும் பிச்சை குட்டி முறையாக படித்திருக்கிறார்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளி-யிட்ட திருக்குறள் பரிமேலழகர் உரைநூலுக்கு முகவுரை எழுதிய கந்தசாமி முதலியார் சாத்தூர் பிச்சைக்குட்டியுடன் தொடர்பு உடையவர். அவரிடமும் பாடம் கேட்டிருக்கிறார்.

### பணி

இவர் ஆசிரியர் பயிற்சி முடிந்ததும் சாத்தூர் அருகே உள்ள தியாகராஜபுரம் என்ற ஊர்ப் பள்ளிக்கூடத்தில் பணிக்குச் சேர்ந்தார். இங்கு இரண்டு ஆண்டுகள் வேலை பார்த்தார். பின்னர் சாத்தூர் அருகே உள்ள மேலக்கரந்தை ஊரிலுள்ள ஆயிர வைசியர் நடுநிலைப்பள்ளியில் வேலைக்குச் சேர்ந்தார். ஐந்து ஆண்டுகள் பணி செய்தார். பிச்சைக்குட்டிக்கும் பள்ளி நிர்வாகத்திற்கும் இடையில் ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக வேலையை விட்டார். மொத்தமே 5 ஆண்டுகள்தான் ஆசிரியராக இருந்திருக்கிறார்.

### டாக்டர்

பிச்சைக்குட்டி பற்றி எழுதிய இதழ்களும் பத்திரிகைகளும் அவரை டாக்டர் என்று குறிப்பிடுகின்றன. இதைப் படித்துவிட்டு ஒரு கட்டுரையாசிரியர் இவருக்கு தமிழக பல்கலைக்கழகம் ஒன்று டாக்டர் பட்டம் வழங்கியது என்று கூட எழுதியிருக்கிறார். ஆனால் அது தவறான செய்தி.

பிச்சைக்குட்டி ஹோமியோபதி மருத்துவம் முறைப்படியாக படித்து சான்றிதழ் பெற்றிருக்கிறார். அலோபதி மருத்துவம் தெரியும். இதில் கொஞ்சம் அனுபவம் உண்டு. இவர் தன் ஜீவனத்திற்காக மருத்துவத் தொழிலை நடத்தி இருக்கிறார். இதனால் சாத்தூர் வட்டாரத்தில் பொது மக்கள் இவரை டாக்டர் என்று அழைத்தனர். இந்த பட்டம் இவருக்கு நிலைத்துவிட்டது

### கலைஞராக உருவாதல்

பிச்சைக் குட்டி பிறவிக் கலைஞரோ மரபுவழிக் கலைஞரோ அல்லர். அவர் வில்லிசைக் கலைஞராக வந்ததற்கு தற்காலிகமான ஒரு நிகழ்ச்சிதான் காரணம். 1948இல் சாத்தூர் பகுதியில் காலரா நோய் பரவலாக இருந்தது. அரசு எந்திரம் தீவிரமாகச் செயல்பட்டாலும் ஊர் மக்கள் காலரா பரவியதற்கு அம்மனின் குற்றம் என்று நம்பினர். சாத்தூர் மாரியம்மன் கோவிலில் விழா நடத்தினர். அதற்கு திருநெல்வேலி வில்லிசைக் கலைஞர் ஐயன் பிள்ளை வந்திருந்தார். அந்தக் காலத்தில் நாஞ்சில்நாட்டு சுந்தரம்பிள்ளை திருநெல்வேலி ஐயம்பிள்ளை இருவரும் பிரபலமான கலைஞர்கள்.

பிச்சைக்குட்டி ஐயன் பிள்ளையின் வில்லிசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து கேட்டிருக்கிறார். வில்லிசைக் கலையில் பெரும் ஈர்ப்பு வந்ததற்கு இந்த நிகழ்ச்சி முக்கிய காரணம். ஏற்கனவே மரபுவழி கவிதைப் பயிற்சியும் இசைப் புலமையும் நல்ல சாரீரம் உடைய பிச்சைகுட்டிக்கு தானே வில்லிசை நிகழ்ச்சி நடத்தலாம் என்ற நம்பிக்கை வந்தது.

இவர் ஆரம்ப காலத்தில் தன் மாணவர்களுக்கு வில்லிசைக் கலையை பயிற்சி அளித்திருக்கிறார். அவர்களுடன் மேடையிலிருந்து பாடியிருக்கிறார். இது மூன்று ஆண்டுகள் நடந்திருக்கலாம். அவர் முறைப்படி மேடையேற ஆரம்பித்தது 1953 இல் தான். அப்போது தேர்தல் சமயம். இவர் முத்துராமலிங்கத் தேவரை ஆதரித்து நிகழ்ச்சி நடத்தியிருக்கிறார். இது கோவில்பட்டி அருகே மேலைக் கரந்தை என்ற கிராமத்தில் நடந்தது. இதன்பிறகு 1971 வரை முழுநேரக் கலைஞராக இருந்திருக்கிறார். 49 வயது வரை வாழ்ந்த இந்த கலைஞர் 17 ஆண்டுகள் 2000க்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார்.

### விருது

இவர் வில்லிசை வேந்தர் ( குன்றக்குடி அடிகள்) வில்லிசை பிரவீண (சுவாமி சிவானந்தா ) கலைமாமணி (1970 தமிழக அரசு) போன்ற பல விருதுகளைப் பெற்றிருக்கிறார். பிச்சைக்குட்டி தான் வாழ்ந்த காலத்தில் தீவிரமான படைப்பாளிகள், பிரபலமான விமர்சகர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் என எல்லோரும் பாராட்டும் படியாக வாழ்ந்திருக்கிறார்.

### டி.கே.சி

டி.கே. சிதம்பரநாத முதலியார் இல்லஸ்டட் வீக்லி இதழில் (1953) சாத்தூர் இசைக்கலைஞர் என்னும் தலைப்பில் விரிவான ஒரு கட்டுரை

எழுதி இருக்கிறார். இதில் வில்லுப்பாட்டு என்னும் நாட்டுப்புறக் கலையை சாதாரண பாமர மக்களிடம் கொண்டு சென்றவர் இவர் எனக் குறிப்பிடுகிறார்.

டி.கே.சி மட்டுமல்ல கல்கி கிருஷ்ணமூர்த்தி, பி.டி.ராஜன், என்.எஸ்.கிருஷ்ணன், குன்றக்குடி அடிகளார், சாமிநாத சர்மா, ம.பொ.சி, தி.க.சண்முகம், பி.ஸ்ரீ, கொத்தமங்கலம் சுப்பு என பலரும் இவரது ரசிகர்கள்.

இவர் தீவிர இலக்கியவதிகளிடமும் நாட்டுப்புறக் கலைகளின் பார்வையாளர்களிடமும் பிரபலமானவர். நாயகன் என இவரை எழுத்தாளர் சங்கம் பாராட்டி இருக்கிறது (ஜனசக்தி 1959 அக் 24, தினமலர் 1959 அக் 24).

**வெளிநாடு**

ஐம்பதுகளின் இறுதியில் இவரது நிகழ்ச்சியைப் பார்க்க மிகச் சிறிய கிராமங்களிலிருந்து மாட்டு வண்டியிலே மக்கள் வந்திருக்கிறார்கள். திரைப்பட நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் வில்லிசைக் கலையை பிச்சைக்குட்டியிடம் கற்று இருக்கிறார்.

தமிழகத்தில் மட்டுமல்ல; மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளிலும் பிச்சைக்குட்டி நிகழ்ச்சி நடத்தி இருக்கிறார். அங்கே மக்கள் இவருக்கு பாராட்டு கொடுத்திருக்கின்றனர். அங்குள்ள தமிழ் பத்திரிகைகள் இவரைப் பேட்டி கண்டுள்ளன.

இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, தில்லி, ரிஷிகேஷ் என பல இடங்களுக்கும் சென்று இருக்கிறார். அங்கேயும் தமிழ் மக்கள் இவரைப் பாராட்டி இருக்கின்றனர்.

**பாடிய தலைப்புகள்**

பிச்சைக்குட்டி என்றதும் இவர் நடத்திய கண்ணகி கதை, பாரதியின் பாஞ்சாலி சபதம், இந்திய சுதந்திர வரலாறு, கட்டபொம்மனின் கதை, காந்தி மகான் கதை போன்றவை முக்கியமானவை. மற்ற கலைஞரிடம் இருந்து இவர் வித்தியாசமானவர். குறிப்பாக நாட்டார் கலைஞர்களிடம் இருந்து முழுக்கவும் வேறுபட்டவர்.

இவர் புதுமைப்பித்தனின் வாசகர். அவரை முழுக்கவும் படித்தவர். மலேசிய பத்திரிக்கை ஒன்றின் பேட்டியில் எனக்குப் பிடித்த படைப்பாளி புதுமைப்பித்தன் என்கிறார். கி.ராஜநாராயணன் தாமரை இதழுக்காக பேட்டி கண்ட போதும் இதையே அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

புதுமைப்பித்தன் நினைவு நிகழ்வு திருநெல்வேலியில் நடந்தபோது (1952) புதுமைப்பித்தனின் வாழ்க்கை வரலாற்றை வில்லுப் பாட்டாக பாடியிருக்கிறார். இதில் புதுமைப்பித்தனின் சில சிறுகதைகளையும் (அகலிகை, கடவுளும் கந்தசாமி பிள்ளையும், சாபவிமோசனம்) விரிவாகச் சொல்லியிருக்கிறார். இந்த நிகழ்ச்சிக்கு திருநெல்வேலிப் பகுதியில் உள்ள தீவிர படிப்பாளிகள் வந்திருக்கின்றனர். தரையில் உட்கார்ந்து நிகழ்ச்சியைக் கேட்டிருக்கின்றனர்.

**மாற்றம் நிகழ்த்தியவர்**

பிச்சைக் குட்டி சிறுவயதில் நாட்டார் பாடல்களைச் சேகரித்திருக்கிறார். இவருக்குக் கர்நாடக இசையும் தெரியும். முறைப்படி தமிழ் இலக்கியங்களையும் கற்றவர். கவிதை எழுதவும் தெரியும். இதனால் வில்லுப்பாட்டில் சில மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார். வில்லிசை நிகழ்ச்சியில் நீண்டநேரம் பாட வேண்டும் என்ற மரபையும் தளர்த்தினார்.

மூன்று மணி நேர நிகழ்ச்சி என்பதை நடைமுறையில் கொண்டு வந்தார். முக்கிய பாடகர்கள் பாடும்போது இசைக்கருவிகள் மெல்ல ஒலிக்க வேண்டும், பாடல், விளக்கம் இரண்டையும் சொல்லும்போது தெளிவு வேண்டும், ரசிகர்களுக்கு புரிய வேண்டும். உடுக்கு, 'குடம்', டோலக்கு, ஹார்மோனியம் என்னும் இசைக்கருவிகளை இவர் பயன்படுத்தினார். ஆனால் இந்த இசைக்கருவிகளை இயக்கியவர்களுக்குச் சில நெறிமுறைகளை கற்றுத் தந்திருக்கிறார். இவருக்கு குடம் அடித்த பூவலிங்கம், உடுக்கு அடித்த மீனாட்சிசுந்தரம், ஐயப்பன் போன்ற கலைஞர்கள் இவரைப்பற்றிக் கூறும்போது வில்லுப்பாட்டுக்காரர்களுக்கு சமூகத்தில் ஒரு மதிப்பைக் கொடுத்தவர் என்று கூறியுள்ளனர்.

**பாடலாசிரியர்**

பிச்சைக்குட்டியைப் பற்றி விரிவாக செய்தி சேகரித்த பேராசிரியர் வி.கே. துரை அரசு.

"இவர். தன் நிகழ்ச்சிக்குரிய பாடல்களை இவரே எழுதுவார். பண்களை இவரை அமைப்பார். ஒரு முறை முக்கூடல் தபிச் சொக்கலால் பீடி விளம்பரத்திற்காக வீதியில் பாடிச் சென்றவர்களின் பாட்டைக் கேட்டு அதே மெட்டில் ஒரு பாட்டை உருவாக்கி இருக்கிறார். இந்தப் பண்ணுக்கு தபிச் சொக்கலால் என்ற பெயரை ஆட்டியிருக்கிறார். ஒயில் கும்மி பாடல்களை தன் நிகழ்ச்சியில் முழுதும் பயன்படுத்தி இருக்கிறார்" என்று சொல்லுகிறார் பிச்சைக் குட்டியின் நூற்றாண்டு நினைவில் ஒரு வேண்டுகோள். அவர் எழுதிய வில்லிசைப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து அச்சில் கொண்டுவரலாம்.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர், நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.

"அடுக்கம் என்பது பொதுவாக அடுக்குகள் நிறைந்த மலைப் பகுதியைக் குறிக்கும். இந்த நாவல் சாதியச் சமூகத்தின் படிநிலை அடுக்குகளையும், அதிகார வர்க்கத்தின் படிநிலை அடுக்குகளையும் எடுத்து இயம்புகிறது." சமுதாய முரண்பாடுகளை இயங்கியல் கண்ணோட்டத்துடன் மதிப்பீடு செய்து செறிவான ஒரு நாவலாக இதை வடிவப்படுத்தியிருக்கிறார் டி.செல்வராஜ். சோசலிச எதார்த்தவாதத்தை தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்திய முன்னோடிகளில் ஒருவர் இவர். உழைக்கும் மக்களின் வாழ்வியல் கூறுகளை இலக்கியத்தின் உள்ளடக்கமாகக் கையாண்டு ஒரு புதிய தடத்தை நிறுவி வழி அமைத்தவர்.


இவர், இடதுசாரி இயக்கச் சார்புடைய இளம் தமிழ்ச் சிறுகதை இலக்கியப்படைப்பாளிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். தோழர் ப.ஜீவானந்தத்திற்கு நெருக்கமாக இருந்த இவருடைய முதலாவது சிறுகதை 'ஜனசக்தி' வார இதழில் வெளியானது. அதைத் தொடர்ந்து தமிழில் வெளியான எதார்த்த இலக்கியப் பத்திரிக்கைகளில் அவ்வப்போது சிறுகதைகளை நிறையவே எழுதினார்.

செக் நாட்டுத் தமிழறிஞர் கமில் சுவலபில் தனது 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலில் இவரைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். "இடதுசாரி இயக்கச் சார்புடைய இளம் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களுள் குறிப்பிடத் தகுந்தவராகத் திகழ்ந்தார். பாட்டாளி மக்களின் குறிப்பாக, பள்ளர் சமூகத்தைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கையினைத் திறம்படத் தமது கதைகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்."

# இந்திய விடுதலைக்குப் பின் சமுதாய அடுக்குகள்

சி.ஆர்.ரவீந்திரன்






அடுக்கம் (நாவல்) | டி.செல்வராஜ்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை | விலை.ரூ.280/-

இவருடைய கதைகள் தொகுப்புக்களாக வெளிவந்து நல்ல வரவேற்பைப் பெற்றன. அன்றைய சூழலில் அரங்கேற்றம் செய்வதற்குரிய வகையில் அவ்வப்போது நாடகங்களையும் எழுதினார்.

"தமிழில் தொழிலாளர் (நெசவாளர்) வாழ்க்கையினை முதல் முதலில் படம் பிடித்துக் காட்டிய நாவல் தொ.மு.சி.ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' *(1953)* ஆகும். தமிழில் வெளிவந்த முதல் சோசலிச எதார்த்தவாத நாவல் இதுவாகும். இதனை அடியொற்றி நிலத் தொழிலாளர்களின் போராட்ட வாழ்க்கையினைச் சித்தரித்துக் காட்டிய நாவல் டி. செல்வராஜின் 'மலரும் சருகும்'*(1967)* என்பதாகும். அதைத் தொடர்ந்து 'தேநீர்' *(1976)* மற்றும் 'மூலதனம்' *(1982)* போன்ற நாவல் களை எழுதினார். வழக்கறிஞராகப் பணியாற்றிய டி.செல்வராஜின் நீதிமன்ற வாழ்க்கையை வெளிப்படுத்தும் வகையில் 'அக்னிகுண்டம்' *(1980)* நாவலையும் எழுதியுள்ளார். திண்டுக்கல் நகரத்திலுள்ள தோல் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் வாழ்க்கையைக் காட்டும் விதமாக எழுதி வெளியிட்டார்.

இவரது 'யுகசங்கமம்' நாடகமும், 'தோல்' நாவலும் தமிழக அரசின் விருதுகளைப் பெற்றவை. 'தோல்' நாவல் சாகித்ய அகாடமி விருதினைப் பெற்றது. இவரது கடைசி நாவல்தான் 'அடுக்கம்.' அவருடைய மறைவுக்குப் பிறகு வெளியானது "இது மற்ற நாவல்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது." அடுக்கம் நாவல் அரசு அதிகாரிகள் அடையும் அவமானங்களைக் காட்டுவதைவிடச் சமூக மாற்றத்திற்கான அவர்களின் போராட்ட உணர்வை உயர்த்திப் பிடிக்கிறது. அரசு இயந்திரத்தின் சிக்கலான இயக்கத்தைக் காட்டுவதோடு அதிகார வர்க்கத்திற்குள் தொழில்படும் சாதியம், பெரும் தொழிற்சாலைகளால் சுற்றுச் சூழல் மாசுபடுவது, விவசாயம் அழிந்து போவது, பழங்குடிகள் விளிம்பு நிலைப் படுத்தப்படுவது, கிரானைட் கொள்ளை ஆகிய சமகாலப் பிரச்சனைகளும் இந்த நாவலில் விரிவாக சித்திரிக்கப் பெற்றுள்ளன.

நாவலின் முதல் பகுதி, தாழையூத்தில் ஏற்படுத்தப்பட்ட சிமெண்ட் ஆலை அப்பகுதியில் விவசாயத்தைச் சீரழித்தது, நிலத் தொழிலாளர்கள் எப்படி ஆலைத் தொழிலாளர்களாக மாற்றம் பெற்றுள்ளார்கள் என்ற வரலாற்றை அடையாளப்படுத்துகிறது.

இரண்டாம் பாகத்தின் தொடக்கப்பகுதி நைனிடாலில் நாராயணன் ஆட்சியர் பணிக்கான பயிற்சியை மேற்கொண்ட நிகழ்வுகளை விளக்குகிறது.

பாகம் மூன்று நாராயணன் ஆட்சிப் பொறுப்பேற்று மேற்கொண்ட அதிரடி நடிவடிக்கைகளை விவரிக்கிறது.

மாறுபட்ட தன்மைகளும் வேறுபட்டு சாதிகளும் கொண்ட கிராமப்புற மக்களின் அறியாமை, ஏழ்மை, வறுமையின் விளைவாக நிகழும் சண்டை, சச்சரவு, தகராறு, கொலை, வழிப்பறி போன்ற நிகழ்வுகளை மனம் நெகிழும் வகையில் சித்தரிக்கிறார். மக்களின் இயல்பான உணர்ச்சிகள், உணர்வுகள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள் கற்பனை கலவாத அசலான மொழியில் அழுத்தமாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. கிராமங்களின் இயல்பான வாழ்க்கை முறைகள் அவற்றின் இயற்கையான தன்மைகளும் தாராளமான முறையில் நிகழ்கின்றன. அவற்றை ஆழமாகவும், துல்லியமாகவும் இவர் நாவல் முழுவதுமாகச் சித்தரிக்கிறார். அவர்களுடன் வாழ்வது போன்ற உணர்வை ஒவ்வொரு நிகழ்ச்சியும் அழுத்தமாக உணரச் செய்கின்றன.

"பால்குடும்பன் ஓங்குதாங்கான மனிதன். வடிவான உடல்கட்டு மழையிலே நனைஞ்ச பனைமரமாட்டம் கருமை படிஞ்ச நெறம். வயக்காட்டுலே கலப்பை புடிச்சு உழுவுற நேரம் போவ மத்த நேரம் எல்லாம் தலைப்பா கட்டி, தார்ப்பாய்ச்சி, காதுலே கொப்பும், கடுக்கனுமா ராசாவாட்டா தலைநிமிர்ந்து தான் நடப்பான்." இது ஒரு கதாபாத்திரத்தின் உள் மற்றும் வெளி பற்றிய சித்தரிப்பு, இதுபோல, நாவலில் வரும் முக்கியமான கதாபாத்திரம் உயிரோவியமாக இனம் காட்டப்படுகின்றன.

ஓர் அதிகாரியை இப்படி அறிமுகப்படுத்துகிறார்.

"இன்ஸ்பெக்டர் மணிமாறன் மிகவும் ஊழல் மிகுந்த பேர்வழி என்பதோடு துக்கையப்பனது சமூகவிரோதச் செயல்களுக்கெல்லாம் உறுதுணையாக நிற்பவன். எனவே, இரவோடு இரவாக ஏழைகளின் குடிசைக்குத் தீ வைத்து துக்கையப்பனின் கையாட்களைக் கைது செய்யவில்லை. மாறாக இவர்களைக் காவல்நிலையம் கொண்டு சேர்த்தவர்களை ஏளனமாகவும், கேலியாகவும் பேசி அனுப்பிவைத்தான். குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு மணிமாறன் தயாராக இல்லை."

முற்றிலும் மாறுபட்ட ஒரு பெண்மணியை இப்படி அடையாளப் படுத்துகிறார்.

"மைனர் பிள்ளை இயற்கை எய்திய பின்பு மீனாட்சி ஆச்சி இதர பிள்ளைமார் வீட்டுப் பெண்களைப் போல் வெள்ளைச் சேலை உடுத்தி கைம்மைக் கோலம் பூணவில்லை. விதவை என்பதற்கு அடையாளமாக நெற்றியில் திலகம் மட்டும் வைத்துக் கொள்வதில்லை. மாறாக, இதர ஆண்களுக்கு காப்பாகத் தன் பணிகளைக் கவனிப்பதோடு, அறுவடை என்றால், குடையைப் பிடித்துக் கொண்டு களத்து மேட்டுக்கு எதிரில் இருக்கும் கூத்தனாச்சி அம்மன் கோவில் எதிரில் இருக்கும் ஆலமர நிழலில் போய் உட்கார்ந்து விடுவார்.

"யானைகள் மிகவும் சாதுவான மிருகங்களில் ஒன்று. யானைகளை உபத்திரவிக்காத வரையில் மனிதர்களை இவை தாக்குவிப்பது கிடையாது. தேயிலை எஸ்டேட் தொழிலாளர்கள் அவற்றை உபத்திரவம் செய்வதில்லை. மாறாக, அவை மனிதர்களைத் தாக்குவது கிடையாது. காடுகளில் கொசுக்களின் உபத்திரவம் வேறு. எனவே, இரவு வேளைகளில் தேயிலை வயல்களில் சுற்றித் திரிந்துவிட்டு பகலில் மறைவான காட்டுப் பகுதிகளுக்குப் போய்விடுகின்றன" என்று சொன்னான் மணிவண்ணன்.

இயற்கையைக் கூர்ந்து கவனித்து அதில் நிகழும் மாற்றங்களைச் சித்தரித்துக் காட்டுகிறார்.

வழக்கமாக, தங்களுடைய குறைகளையும், சிரமங்களையும், துன்ப துயரங்களையும் சொல்லி கருப்பணசாமி என்ற நாட்டுப்புறக் கடவுளிடம் முறையிடும் பழக்கத்தை இவர் எதார்த்தமாகக் காட்சிப் படுத்துகிறார். உடம்பிலும், நெற்றியிலும் பட்டை பட்டையாகத் திருநீறும், குங்குமமும் பூசிக் கோவணாண்டியாகக் காட்சி தரும் ஒரு மனிதன் சாலையோரம் கிளைபரப்பி நிற்கும் ஆலமரத்தடியில் ஓங்கி வளர்ந்திருக்கும் கறையான் புற்றில் தலையை மோதிக் கையிலிருக்கும் சாட்டை வாலினால் தன்னை மாற்றி மாற்றி அடித்துக் கொள்வதால் உடம்பு முழுவதும் இரத்த விளார்கள்."

இதைப்போல வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் இனம்கண்டு தனது இலக்கியப்படைப்பை இவர் வடிவமைத்திருக்கிறார். மாவட்ட ஆட்சியாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட நாராயணனின் கவனத்திற்கு உள்ளாகும் காட்சிகளாகவும், நிகழ்ச்சிகளாகவும் இவர் பதிவு செய்திருக்கிறார். கற்பனைக் கதைகளைத் தவிர்த்து அசலான மக்களின் வாழ்க்கை அனுபவங்கள் மனதை நெகிழச் செய்யும் என்பன இந்த நாவலின் வாயிலாக உணர முடிகிறது.

இந்திய விடுதலைக்குப்பின், 1950 முதல் இன்றுவரை மாறிக் கொண்டும், வளர்ந்து கொண்டும், தேய்ந்து கொண்டும் இருக்கும் கிராமப்புறம் சார்ந்த உழைக்கும் மக்களின் வாழ்க்கையை அதன் பன்முகத் தன்மைகளோடு 'அடுக்கம்' நாவலை வடிவப்படுத்தியிருக்கிறார். ஒரு குறிப்பிட்ட கால மக்கள் வாழ்க்கையாகவும், வரலாறாகவும் இந்த நாவல் வடிவம் பெற்றிருக்கிறது. கோசலிச எதார்த்தவாதக் கண்ணோட்டத்தை வளர்க்கும் வகையில் புதுமையானதாக உள்ளது 'அடுக்கம்.'

கட்டுரையாளர், எழுத்தாளர்




22.07.2022 அன்று சேலம் மாவட்டம் வாழப்பாடியில் புத்தகக் கண்காட்சியை பேரூராட்சித் தலைவர் ச.கவிதா சக்ரவர்த்தி திறந்து வைத்தார். இதில் சக்ரவர்த்தி, சந்திரசேகரன், நெடுமாறன், வித்யா, வட்டார மருத்துவ அலுவலர் பொன்னம்பலம், ஆட்டோ சுரேஷ், பாண்டியன், தலைமை ஆசிரியை சத்தியக்குமாரி, ஜவகர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் கோவை மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் மற்றும் சேலம் கிளை மேலாளர் சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கட்டுரை



# 'ஓர்மை' ஒரு வரலாற்று ஆவணம்

முனைவர் சி. ஜஸ்டின் செல்வராஜ்

நாட்டுப்புற மக்களின் ஓர்மையும், வரலாற்று ஆவணங்களே எனும் இக்கட்டுரையானது நாட்டுப்புற வழக்காறுகள் எவ்வாறு வாய்மொழி வரலாற்றிற்கு ஆதாரங்களாகக் கொள்ள முடியும் என்ற முறையியல் சார்ந்த கேள்வியை முன்வைத்து, மாற்று ஆய்வு வரலாற்று முறையியல் அணுகுமுறையில் வாய்மொழி வரலாற்றின் முக்கியத்துவத்தையும் பேசுகின்றது. முறையியலில் ஏற்படுகின்ற சிக்கல்களும் அவற்றிற்கான தீர்வுகளும் கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றன. மேலும் இங்கு நாட்டுப்புற மக்கள், ஓர்மையின் வெளிப்பாடாக இருந்து வரும் வழக்காறுகள், அவர்களின் வாய்மொழி மரபு போன்றவை குறித்த தெளிவினைக் காணவும் இக்கட்டுரை முயற்சிக்கின்றது.

**வாய்மொழி வரலாற்று அணுகுமுறை**

வாய்மொழி வரலாறு மக்களை (Folk) த்தான் வரலாற்றின் மையத்துக்குக் கொண்டு வருகின்றது. மரபாக எழுதப்பட்ட வரலாற்றின் மையத்தில் இராஜா, இராணி, மந்திரிகள் போன்றவர்கள்தான் முக்கியமானவர்களாக இருக்கிறார்கள். மேலும் ஓவியர்கள், படைத்தளபதிகள், மதகுருமார்கள்தான் வரலாற்றின் மையத்தில் இருக்கிறார்கள். வாய்மொழி வரலாற்று முறையானது மக்களை வரலாற்றின் மையத்துக்குக் கொண்டு வருவதாகும். அவ்வாறு

செய்யும்போதுதான் வாய்மொழி மரபை வரலாற்று வரைவியல் மற்றும் இலக்கியமும் தனது ஆய்வு முறையியலில் அதற்கென்று உரிய இடத்தை அளிக்கிறது.

வாய்மொழி வரலாறு என்பது ஒரு மாற்று வரலாற்று முறையியல், நாட்டார் வரலாறு என்பதனை பற்றிக் கூறும்போது முதலில் நாட்டார் வழக்காறுகள் என்ன என்பதை நாம் வரையறை செய்யவேண்டும். பண்பாடு என்பதற்கும் உண்மையாகன வரையறை வேண்டும். சமூக முரண்பாடுகள், தொடர்ச்சியாக நடந்த நிகழ்வுகள் போன்றவைகளையும் எழுதுவதுதான் உண்மையான வரலாறாக இருக்க முடியும். இங்கு மாற்று வரலாறு என்று சொல்வதெல்லாம் உழைக்கும் மக்களின் வரலாறு. அடிமைப்படுத்துகிறவர்களுக்கு ஒரு வரலாறு இருந்தால் அடிமைப்பட்டவர்களுக்கு ஒரு வரலாறு இருக்கும். இவை அனைத்திலும் அரசியல், சமூக, பொருளாதார தாக்கங்களும் மக்களிடத்தும் வரலாறு எழுதுவதென்பது நிகழ்கிறது. வாய்மொழியாகப் பெறப்படும் தகவல்களால் எழுதப்பட்ட வரலாற்றின் குறைபாடுகளை வெளிக்கொணர முடியும்.

உதாரணமாக ஸ்காண்டிநேவிய நாடுகளில் ஒன்றான பின்லாந்திலும் நாட்டார் மரபுகள் ஒரு தேசிய அடையாளத்தை வெளிக்காட்டியது *(Kalevala: The National Epic of Finland)*. அதே போன்று பழம்மரபுமிக்க, சிறப்புமிக்க ஒவ்வொரு வட்டாரங்களின் (அ) குழுக்களின் வரலாற்றினை மறுகட்டமைப்பு செய்வதற்கு இந்த நாட்டார் வரலாறு அல்லது வாய்மொழி வரலாறு ஒரு மரபான வரலாற்றின் குறைபாட்டிற்கு மாற்றான ஒரு வரலாறாக அமைகின்றது.

### வாய்மொழி வரலாற்றிற்கான ஆதாரங்கள்

வாய்மொழி மரபுதான் ஆதாரம். ஆனால் அதுமட்டுமே போதுமானதாக இருப்பதில்லை. நாட்டார் அருங்காட்சியகப் பொருட்கள், மேலும் மக்கள் வரலாற்றைப் பேசும் நூல்களிலேயே பேசப்பட்ட தரவுகள் ஏராளம் உள்ளன. பல ஆவணங்களை எழுதப்பட்ட வரலாற்றில் கொண்டுவரப் படவில்லை. உதாரணமாக கிறித்தவ சபையினுடைய ஆவணங்களைக் குறிப்பிடலாம். கிறித்தவ சபை ஆவணங்களினை சமயம் சார்ந்த ஆவணங்கள் என்று பெரும்பாலும் ஒதுக்கப்படுகின்றன. அவ்வாறு அச்சமயம் சார்ந்த ஆவணங்கள் குறிப்பிடும் நபர்கள், அம்மக்கள் சமயம் மாறியதன் பின்னணி என்று பார்க்கும்பொழுது பெரும்பாலும் அவர்கள் அனைவரும் அடித்தள மக்களாகத்தான் இருப்பர். அடித்தள மக்களுக்கும், அதிகார நிலைக்கும் உள்ள உறவு இதுபோன்ற ஆவணங்களை ஆய்வு செய்யும் போது வெளிக்கொண்டு வரமுடியும்.

புழங்கு பொருட்கள் என்பதை நாம் பொருட்களாக மட்டும் பார்க்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, பொருட்கள் எப்படி உற்பத்தி செய்யப்பட்டன, விநியோகிக்கப்பட்டன, உற்பத்தியாளனுக்கும் பொருளுக்கும் உள்ள உறவு எப்படி இருந்தது, இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுதுதான் முழுமையான வரலாறாக இருக்கும். ஆடை முறைகள் என்று வரும் பொழுது சங்க காலத்திலேயும் ஆடை அணிந்தார்கள். அரசர்கள் காலத்திலும் ஆடை அணிந்தார்கள், ஆங்கில ஆட்சி வந்த பிறகும் ஆடை அணிந்தார்கள். ஆகவே, தமிழர்களின் ஆடை வரலாறு என்பது அது மட்டுமல்ல. சங்க காலத்தில் எப்படி உற்பத்தி செய்யப்பட்டது. அரசர்கள் காலத்தில் எப்படி உற்பத்தி செய்யப்பட்டது. வீட்டிலேயே தறியை வைத்து நெய்தார்கள். அதனைப் போய் சந்தைப் படுத்தினார்கள். உற்பத்தியாளனுக்கு உற்பத்தி செய்யும் அந்தக் கருவிமேல் உரிமை இருந்தது. விநியோகம் செய்யும் உரிமையும் இருந்தது. விநியோகம் செய்யும் உரிமை வரும் பட்சத்தில் விலை நிர்ணயம் செய்யும் உரிமையும் இயல்பாகவே வருகிறது. உதாரணமாக, எத்தகைய பண்டமாற்று வைத்துக்கொள்ள வேண்டும், எவ்வளவு நெல்லுக்கு இந்த ஆடைகளைத் தரணும் என்ற நிலையும் இத்தனை பானைக்கு இந்த ஆடைகளை மாற்று தரவேண்டும் என்ற முடிவெடுக்கும் அதிகாரம் என்பது உற்பத்தியாளனுக்கு இருக்கின்றது. இன்று ஆடைகள் ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. எட்டுமணி நேர வேலைதான். உழைப்புக்கு மட்டுமே ஊதியம் கிடைக்குது. சந்தைப்படுத்தும் உரிமை என்பது இல்லை. உற்பத்திக்கருவி உழைப்பவருக்குச் சொந்தம் இல்லை. உற்பத்தி செய்பவனுக்கும் அந்த பொருளுக்குமுள்ள உறவு உற்பத்திக்கருவியின் மீது இருக்கக்கூடிய உரிமை, விலை நிர்ணயம் செய்யும் உரிமை போன்றவைகளெல்லாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விசயமாக உள்ளது. ஆய்வுகளும் இவ்வாறு மேற்கொள்ளப் படவேண்டும். மேற்கூறிய காரணிகளை உள்வாங்கி வரலாற்றில் மன்னர்களுக்கிடையே நடைபெற்ற போர்களைப் பற்றிப் படிக்கிறோம். ஆனால் மக்கள் பண்பாட்டு அடையாளப் போராட்டங்கள் ஏராளம் அரங்கேறியிருக்கின்றன. அவற்றினை யாரும் அதிகாரப்பூர்வமாக எழுதவில்லை. ஆங்காங்கே வட்டார, சமுதாயப் பிரதியாக மட்டுமே எஞ்சியிருக்கின்றன.

நாட்டார் வரலாறு (அ) வாய்மொழி வரலாறு என்று சொல்லும் போது அதில் ஒரு குழுவின் பங்களிப்பு இருப்பதனைக் காணமுடியும். இன்னுமோர் உதாரணமாக, வாய்மொழி வரலாற்றில் தரவுகள் சேகரிக்கும் முறையைக் குறிப்பிட வேண்டுமென்றால், ஒரு தொழிற்சாலை தோன்றினது, அழிந்தது அல்லது ஒரு படையெடுப்பு நடந்தது என்பன இதுபோன்ற நிகழ்வுகளை மக்களின் வாய்மொழி மரபிலிருந்து சேகரிப்பது ஆகும். நன்றாகச் சொல்லுவதென்றால்

வாய்மொழி வரலாறு என்பது சமூக அறிவியல் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள அனைத்து ஆய்வாளர்களால் மாற்று வரலாற்று முறையியலில் பயன்படுத்தும் சொல்லாகவே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு குழுவின் தோற்றம் குறித்தும், சாதியின் இடப்பெயர்ச்சி குறித்தும், புராணங்களும், கதைகளும் நாட்டார் வரலாற்றுக்கு வலு சேர்க்கிறது. அதுமட்டுமில்லாது உலகில் வாழும் அனைத்து இனக்குழுக்களும் தாங்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பதற்கான கதைகளையும் வைத்துள்ளார்கள். சாதியின் இடப்பெயர்ச்சி, ஒரு சில சாதிகள் சில பொருட்களை பயன்படுத்தாமல் இருக்கிறது. இவை அனைத்தும் இன வரலாற்றிற்கான அடிப்படைத் தரவுகளாகக் கொள்ள முடியும்.

சாதிகளின் இடப் பெயர்ச்சியை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பின்புலமாகத் தெரியவருவது பாலியல் கொடுமைகள், வேலைக்காக ஓரிடம் விட்டு ஓரிடம் வந்தவர்கள், வறுமை காரணமாக பிழைப்புத் தேடி வந்தவர்கள் என்றும் காரணங்கள் அதிகமாக இருப்பதனைக் காணமுடியும். இதனை நாடார்களின் தோற்றக்கதைகளை குறிப்பிடும் வெங்கலராசன் கதையும் அது குறித்தப் பதிவுகளைக் கொண்டுள்ளது. மேலும், வாய்மொழி வரலாறு என்பது குறிப்பிட்ட சாதிகளுக்கான வரலாறு என்று மட்டும் சொல்லிவிட முடியாது. வாய்மொழியாகக் கூறியது என்பது ஒரு சில சாதிகளாக இருக்கலாமே தவிர, வாய்மொழி வரலாறு என்பது சாதி வரலாற்றினைத் தேடும் முயற்சி என்று சொல்வதாய் இருக்க முடியாது.

நாட்டுப்புற மக்களின் ஓர்மை பல்வகைப்பட்டது. உதாரணமாக ஒரு தொழிலை செய்யமாட்டோம், இன்னொரு தொழிலைத் தேர்ந்தெடுப்போம் என்பதிலும்; அரசு விதித்த வரியினால் ஓரிடத்திலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்வது என்பதும் இடம்பெயர்தல் குறித்த ஓர்மைகளைக் குழுவினரிடம் காண முடியும். இடப்பெயர்ச்சி என்பதை ஒரு குழுவினர் இன்னொரு குழுவினை ஒடுக்கியதால்தான் நடக்கிறது என்று பொதுவிதியாகக் கூறிவிட முடியாது. பகைமையை இன்னொருவர் ஏற்படுத்தி வைத்திருப்பர். இந்தப் பகைமை யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பதனை ஆய்வாளர்கள் கண்டுபிடிக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் நமது நாட்டில் ஏராளமான மதமாற்றங்கள் *(Conversion)* நடைபெற்றிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, பெருந்திரளாக மக்கள் தங்களின் சமயம் மாறிய நிகழ்வும் வரலாற்றிலும் சரி அது குறித்தப் பதிவுகள் மக்கள் மரபில் பாடலாகவும், கலை வெளிப்பாடாகவும் கிடைக்கின்றன.

**வாய்மொழி வரலாறு காட்டும் அடையாளம்**

சமூகத்தில் அடித்தட்டு, விளிம்பு நிலையில் உள்ள அனைத்து தரப்பு மக்களின் மரபுகளும் வாய்மொழி வரலாற்றிற்கான ஆதாரங்களாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. பொருளாதார நிலை – சாதி – பாலியல் நிலை போன்ற நிலைகளில் தாழ்ந்திருப்பவர்கள் அடித்தள மக்கள் என அழைக்கப்படுகிறார்கள் (ஆ. சிவசுப்பிரமணியன்: 2016). ஓரிடத்தில் ஆதிக்க சாதியாக இருக்கும் குழு இன்னொரு இடத்தில் அடிமையாக இருக்கும். உதாரணமாக நாடார் சமூகத்தில் நிலைமைக்காரர், நாடான் பட்டம் உள்ளவர்களெல்லாம் அடக்கு முறைக்கு ஆளாகாமல் இருந்துள்ளார்கள். சொத்துரிமை உடையவர்களாகவும் இருந்துள்ளார்கள் (S. ராமச்சந்திரன் & A. கணேசன்: 2010). பனை விவசாயிகள் பெரும்பாலோனோர் இவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துள்ளார்கள். தென் திருவிதாங்கூரில் நடைபெற்ற தோள்சீலைப் போராட்டத்தின் பின்னணியில் உள்ளவற்றை ஆராய்ந்தோமென்றால் மேற்கூறிய சொத்துரிமை உடைய நாடார்களைத் தவிர பனைத் தொழிலாளர்கள் வீட்டுப் பெண்களுக்கு தோள்சீலை அணியத் தடை இருந்தது. ஒரு இனக்குழு ஒரு வட்டாரத்தில் ஒரு சமூக அந்தஸ்தினையும், இன்னொரு வட்டாரத்தில் வேறு அந்தஸ்தினையும் கொண்டிருந்தது என்பதற்கு மேற்கூறப்பட்ட தரவினை உதாரணமாகக் கொள்ளலாம்.

பொதுவாக வரலாறு என்று ஆதாரங்களைத் தேடும்பொழுது மக்களின் சமூக நிலை குறித்த பதிவு மிகவும் அவசியமான ஒன்று. சமூக நிலை என்றால் கலை, பண்பாடு போன்றவைகளையும் பேசுகின்றது. ஆடை அணிகலன்கள், உணவு முறைகள், சமயம் போன்ற காரணிகள் மிக முக்கியமானதாக மாறுகின்றது. அதோடு மட்டுமல்லாமல், மக்களின் சமூக நீதிக்காக வேண்டி நடத்தியப் போராட்டங்கள் அவர்கள் மேல் திணிக்கப்பட்ட இழிவான கட்டுப்பாடுகள், இழிவான வேலைகள், ஊதியம் இல்லாமல் வேலை செய்வது (வெட்டி வேலை) வெட்டி வேலை செய்யவில்லை என்றால் தண்டனை. இதற்கு ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிடும் களப்பணித் தரவுகள் பொருத்தமானதாக இருக்கும். "கன்னியாகுமரி மாவட்டம் தாமரைக்குளம் கிராமத்திலிருந்து ஒரு குழு உப்பை விளைவித்து நாகர்கோயிலிலுள்ள நாகராசர் கோயில், சுசீந்திரம் தாணுமாலயன் கோவில், கன்னியாகுமரி பகவதியம்மன் கோவில்களுக்கு தரவேண்டும். அவ்வாறு உப்புக் கொண்டு போகவில்லை என்றால் தண்டனை உண்டு. இது அரசர் காலத்தில் இருந்த நிலைமை. ஆகவே அம்மக்கள் கிறித்தவர்களாய் மாறிவிட்டார்கள் என்றால் ஞாயிற்றுக்கிழமை ஊழிய வேலைக்குப் போக வேண்டிய தேவையில்லை. கிறித்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை மட்டும் வேலைசெய்ய விதிவிலக்கு. அதனாலேயே ஏராளமானோர் கிறித்தவர்களாக மதம் மாறிய வரலாறு உண்டு" (ஆ. சிவசுப்பிரமணியன்: 2009). ஆக வாய்மொழி வரலாறு

என்று சொல்லும்போது மக்களின் கலை, பண்பாடு சார்ந்தவைகள்தான் என்று சொல்லிக் கொடுக்கப்பட வேண்டுமென்றில்லை. ஒவ்வொன்றிற்கும் உள்ள தொடர்பின் விளக்கத்தைப் பதிவு செய்வதும் வாய்மொழி மரபினை ஆவணப்படுத்துவதாகும்.

**பொருள்சார் பண்பாடும், வரலாறும்**

பொருள்சார் பண்பாடு என்று சொல்லும்போது பொருளை படைக்கிறது மட்டுமல்ல. பயன்படுத்துபவரும் அதில் அடங்குவர். உப்பு தயாரிப்பில் எடுத்துக்காட்டாகக் கூறுவதென்றால் பழைய முறையில் பாத்திகட்டி ஏற்றம் போட்டு இறைத்ததும் பொருள் சார் பண்பாட்டிற்குள் தான் வருகின்றது. உப்பினைப் பயன்படுத்துவோரும் அதே பொருள் சார்ந்த பண்பாட்டிற்குள்தான் வருகிறார்கள் (ஆ. சிவசுப்பிரமணியன்: 2009). அதைப் போலவே வண்ணார்கள் பற்றி அறியும் போது நம்முடைய பாரம்பரிய சலவைத் தொழில் பற்றி அறிந்து கொள்ளமுடியும். அந்தக் காலத்தில் அழுக்கைப் போக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட பொருள்கள், குறிகள் இடுதல், துணிகளை அடையாளம் காணுவதற்காக பயன்படுத்திய பொருள்கள், மேலும் வெள்ளாவி போடுவது குறித்துப் பேசுவது அனைத்திலுமே இந்தப் புழங்கு பொருட்களுக்குள்ளும் அது சார்ந்த பண்பாட்டிற்குள்ளும் உள்ளன. வாய்மொழி வரலாறு எழுதும் பொழுது இவர்களுக்கும் (வண்ணார்) வெளுப்பதற்காக துணி தருகிறவர்களுக்கும் உள்ள சமூக உறவுகள் குறித்து ஆராய வேண்டியுள்ளது. இன்று கூலி தருவது போன்று அன்று ஒரு துணிக்கு இவ்வளவு தொகை என்று தருவது கிடையாது. அதற்குப் பூ-க்கு (ஒரு பருவத்திற்கு என்று பொருள்) இவ்வளவு நெல் என்றுதான் பேசப்படும். புஞ்சைகளாக இருந்தால் வருடத்திற்கு ஒரு முறை தானியம் தருவார்கள்.

ஆகவே, வாய்மொழி வரலாறு எனும் இந்த மாற்று வரலாற்று முறையியலால்தான் அதனைச் செய்ய முடியும். ஓர் இடத்திலிருந்து பல்வேறு வகையான, வியாபாரப் பரவல்கள், கலாச்சார பரவல்கள், யுத்தக்காரணத்தினால் பல்வேறு இடத்திற்கு மக்கள் பரவும்போது அவர்கள் கூடவே வழக்காறுகளும், வாய்மொழிகளும் கூடவே வருகிறது. இனக்குழு வரலாறு அல்லது நாட்டார் வரலாறு என்பதெல்லாம் மக்களின் வாழ்வாதாரம், கலாச்சார, பண்பாட்டுப் பிரதிபலிப்பினை பதிவு செய்யும் வரலாற்று முறையியலாக உள்ளது. அது பண்பாட்டை பிரதிபலிக்கும் கலாச்சார சிறப்பு மிக்க மக்களையும், ஒடுக்கப்பட்ட, நொறுக்கப்பட்ட மக்களின் வரலாறாகவும் இருக்க முடியும். அடித்தள, விளிம்பு நிலை மக்களினை நாட்டார் வரலாறு என்ற மாற்று வரலாற்று விளக்க முறையினால் விழிப்புணர்வை ஏற்படுத்திவிட முடியும். தலைமுறைகளின் வரிசைப்பாடும் (Family Lineage) வாய்மொழி வரலாற்றில் ஆதாரமாகவும் ஏற்றுக் கொள்ள முடியும்.

**பார்வை நூற்கள்**


- *அ.கா.பெருமாள், சுண்ணாம்பு கேட்ட இசக்கி, சென்னை: தமிழினி*
- *ஆ.சிவசுப்பிரமணியன் (2009), உப்பிட்டவரை, நாகர்கோயில்: காலச்சுவடு (2010),*
- *வரலாறும் வழக்காறும், நாகர்கோயில்: காலச்சுவடு (2010),*
- *தமிழகத்தில் அடிமைமுறை, நாகர்கோயில்: காலச்சுவடு (2011),*
- *கிறித்தவமும் சாதியும், நாகர்கோயில்: காலச்சுவடு (2016),*
- *பனைமரமே பனைமரமே: பனையும் தமிழ்ச் சமூகமும், நாகர்கோயில்: காலச்சுவடு (2016),*
- *அடித்தள மக்கள் வரலாறு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ச. பிலவேந்திரன் (பதி.) (2004),*
- *சனங்களும் வரலாறும்: சொல் மரபின் மடக்குகளில் உறையும் வரலாறுகள், புதுவை: வல்லினம் டி. தருமராஜ் (பதி.) (2006),*
- *சனங்களின் சாமிகள், பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் ஞா.ஸ்டீபன் (தொ.), (2009),*
- *பண்பாட்டு வேர்களைத் தேடி, பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் ஞா. ஸ்டீபன் (2009),*
- *தமிழ்ச் சமூகத்தில் வாய்மொழிக் கதைகள், பாவை பப்ளிகேஷன்ஸ் நாகேஸ்வரி அண்ணாமலை (2016),*
- *ஐந்து தலைமுறை நாடார் பெண்கள், அடையாளம் பதிப்பகம்*
- *பூமணி(2012),அஞ்ஞாடி, சென்னை: கிரியா பதிப்பகம்*
- பொன்னீலன் (2009), மறுபக்கம், சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ்
- *Anthony Good, (March 1981), "Prescription, Preference and Practice: Marriage Patterns among the Kondaiyankottai Maravars of South India", in Man New Series, Vol. 16, No.1 Mar.1981. Pp.108-129*
- *Jan Vansina (1985), Oral Tradition as History, University of Wisconsin Press Nicholas B. Dirks (1993),*
- *The Hollow Crown: Ethnohistory of an Indian Kingdom, Ann Arbor: University of Michigan Press Thomas A. Green (1997),*
- *Folklore: An Encyclopedia of Beliefs, Customs, Tales, Music and Arts, B: Santa Barbara Alan Dundes (1996),*
- *Essays in Folklore Theory and Method, Chennai: Cre-ASivasundari Bose (2006), Golden Stag, Mosaic Press*


●


கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர், தலைவர், நுண்கலைகள் மற்றும் அழகியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.




# என்றென்றும் வழிகாட்டும் தம்ம பதம்

முனைவர் சு. மாதவன்

உலகில் தோன்றியுள்ள நூல்களுள் எல்லா காலங்களுக்கும் பொருந்தும் நூல்கள் இவை இவை என வரையறுத்து விட முடியுமா என்பது ஐயமே. எனினும், சில நூல்கள் தத்தம் பெரும்பான்மையான / சிறுபான்மையான கருத்துக்களால் பெரும்பான்மை பொருத்தப்பாடு உடையனவாகத் திகழ்கின்றன. அந்த வகையில் மனித குல வாழ்வியலின் செம்மையாக்கத்திற்கான நூலாகக் காலங்காலமாக நிலைத்து நிற்கும் நூல் 'தம்ம பதம்' எனலாம். இந்நூல் பௌத்தப் பிக்குகளுக்கான அறநெறிகளை எடுத்துரைக்கும் நூலாக இருப்பினும், சில கருத்துக்களால் எல்லா மக்களுக்குமான அறநெறிகளையும் வலியுறுத்தி வழிகாட்டும் நூலாகவும் திகழ்கிறது. எனவே, காலம், நாடு, மொழி என எல்லா எல்லைகளையும் கடந்து என்றென்றும் வழிகாட்டும் நூலாகத் தம்மபதம் விளங்குகிறது என்பதை இந்த கட்டுரை ஆராய்கிறது.

**தம்மபதம்**

புத்தரின் போதனைகள் சுத்தபிடகம், வினயப்பிடகம், அபிதம்ம பிடகம் என்ற திரிபிடகங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள், சுத்த பிடகத்தில் உள்ள ஐந்து பகுதிகளில் குத்தகை நிதானம் என்ற பகுதியில் தம்மபதம் அமைந்துள்ளது. இந்நூல் 26 இயல்களையும் 423

பாடல்களையும் கொண்டுள்ளது இந்நூல், பௌத்த சமய புழக்கத்தில் பிற எல்லா நூல்களையும் விடவும் அதிகமான வாசிப்புக்கும் நேசிப்புக்கும் உரிய நூலாகத் திகழ்கிறது. பௌத்த சமய புழக்கத்தில் மட்டுமின்றி பௌத்த சமயத்தின் அறநெறிகளை அறிந்துகொள்ள விரும்பும் எவரும் தெரிவுசெய்து படிக்கும் முதன்மையான நூலாகவும் இந்நூல் விளங்குகிறது. இதிலிருந்து மனித குல வாழ்வியல் ஒழுகலாறுகளை என்றென்றும் செம்மைப்படுத்தும் நூலாகத் தம்மபதம் உள்ளது என்பதை அறிய முடிகிறது.

### இன்றைய வாழ்வியல் போக்குகளும் அறநெறிகளின் தேவையும்

காலந்தோறும் மனித குல வரலாற்றின் நெடுகிலும் அறநெறிகளின் தேவை இருந்து கொண்டு தான் இருக்கிறது. அன்றைக்கு மட்டுமல்ல இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்கும் அறநெறிகளின் தேவை இருந்துகொண்டுதான் இருக்கும். மனிதன் உணர்வுகளால் ஆனவன். சில நேரங்களில் நல்லுணர்வுகளுக்கு உட்படும் மனிதன் பல நேரங்களில் தீய உணர்வுகளுக்கு ஆட்பட்டு விடுகிறான். உணர்வு வெள்ளம் அந்தவாறு அடித்துச் சென்று விடுகிறது. எனவே, உணர்வில் சமநிலை தேவையாய் இருக்கிறது. உணர்வின் ஓட்டத்தோடு ஓடி விடாமல் நின்று நிதானித்து நன்றின்பால் உய்க்கும் அறிவின்பால் உணர்வை நிலை நிறுத்த வேண்டி இருக்கிறது. இவ்வாறு, அறிவின்பால் உய்ப்பதற்குத்தான் அறநெறிகள் தேவையாய் இருக்கின்றன. இத்தகைய அறநெறிக் கோட்பாடுகளைக் காலந்தோறும் பல்வேறு அறிஞர்கள், ஞானிகள், துறவிகள் முன்வைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

இன்றைய வாழ்வியல், பொருளியல் வேட்கை மிகுந்ததாய் உள்ளது. பொருளியல் சேர்க்கையை அதிகப்படுத்திக் கொள்வதே வாழ்வின் முதன்மை நோக்கமாகக் கொள்ளப்பட்டு வருகிறது. இதன் விளைவு, சுரண்டல், திருட்டு, கொலை எனச் சமூகக் குற்றங்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. சட்டங்களால் இவற்றைக் கட்டுப்படுத்தலாமே ஒழிய முற்றிலுமாக ஒழித்து விட முடியாது. இந்த இடத்தில்தான் அறநெறிகளின் தேவை வருகிறது. மன உணர்வுகளைப் பண்படுத்தாமல் இந்தச் சிக்கல்களைத் தீர்க்க முடியாது. எனவே, மனதைப் பண்படுத்தும் அறங்களைச் சொல்லிக் கொண்டே வலியுறுத்திக் கொண்டே இருக்க வேண்டி உள்ளது.

காலந்தோறும் அறநெறிகளைச் சொல்லிவந்த ஆட்கள் மாறி இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்லிவந்த அறநெறிகளின் அடிப்படைகள் மாறவில்லை. சான்றாக, 'திருடாமை' என்கிற அறநெறியை எடுத்துக் கொள்ளுங்கள். இதை வலியுறுத்தியதாக அறிஞர்களோ அறநூல்களோ இல்லை என்றே சொல்லிவிடலாம். ஏனென்றால், மனித குலத்தின் வரலாற்று நெடுகிலும் நேர்முக, மறைமுகத் திருட்டுக்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. எனவே, திருட்டு என்பது ஒழிகிறவரை திருடாமை என்கிற அறநெறி சொல்லப்பட்டுக் கொண்டே இருக்கும். அதேபோல், பாலியல்சார் ஒழுக்கக்கேடுகள் நடந்தவண்ணமே இருக்கின்றன. இவற்றை நெறிப்படுத்துவதற்கான அறநெறிகளும் காலங்காலமாகச் சொல்லப்பட்டுக் கொண்டே வருகின்றன.

எனவே, ஒழுக்கக் கேடுகள் இரண்டு வகைப்படுகின்றன: 1. பாலியல்சார் ஒழுக்கக் கேடுகள் 2. பொருளியல்சார் ஒழுக்கக் கேடுகள். இவை இரண்டையும் மையப்படுத்தியவையாகத்தான் அனைத்து அறநெறிக் கோட்பாடுகளும் விளங்குகின்றன. இன்றைய வாழ்வியல் போக்குகளும் இத்தகைய அறநெறிகளின் தேவையை எதிர்நோக்கி உள்ளனவாகவே இருக்கின்றன.

### இன்றைய நல்வாழ்க்கைக்கு தம்ம பதம்

இன்றைய நல்வாழ்வுக்கும் வழிகாட்டும் அறநூலாக தம்மபதம் விளங்குகிறது என்பதைப் பல்வேறு அறிஞர்கள் தங்கள் நூல்களிலும் கட்டுரைகளிலும் எடுத்துரைத்துள்ளனர். சோனாலி சக்கரவர்த்தி என்ற ஆய்வாளர் " *Understanding the relevance of dhammapada in modern mind : A conceptual study* " என்ற தனது ஆங்கிலக் கட்டுரையில் குறிப்பிடுவதாது: "இன்றைய நமது உலகம் முரண்பாடுகள், அமைதியின்மை, ஒருமைப்பாட்டின்மை ஆகியவற்றால் பீடிக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான மக்கள் மனக்குழப்பத்துடன் வாழ்கிறார்கள். சகிப்புத்தன்மையின்மை தனி மனிதனையும் சமூகத்தையும் பேரழிவுக்குக் கொண்டுபோய் விட்டுவிடுகிறது. மன அழுத்தமும் தனிமையும் இன்றைய உலகின் பிரச்சனைகளில் முதன்மையிடம் வகிக்கின்றன. இன்றைய மத வெறுப்பும் பிரச்சனைகளுக்கான மூலமாய் விளங்குகிறது. நாம் நமது மதம், நமது கருத்துக்கள், நமது பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பிறர்மீது திணிக்கிறோம். நமது மனக்கட்டமைப்பு பன்மைத்துவத்தை (வேறுபாடுகளை) ஏற்பதில்லை. இதனாலேயே நாம் சரியான முடிவுகளை எடுப்பதில்லை. இதன் விளைவால் முரண்பாடுகளும் அமைதியின்மையும் எங்கும் நிலவ காண்கிறோம். ஆகையால், இன்றைய சூழலில் உள்ளத்தின் ஒழுக்கங்களான மனித நேயம், அன்பு, தொண்டு ஆகியவற்றை வளர்த்தெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இவற்றைத் தம்மபதத்தின் பாடங்களின் வழியாக நாம் பெற முடியும்."*( மொழிபெயர்ப்பு கட்டுரையாளருடையது) (ENSEMBLE - A bi-lingual peer reviewed academic journal, ISSN 2582 -0427 (online), Vol.2, No.2, Sep.2020, P. 311)*

**மன அடக்கம்**

ஐம்புலன்களின் கொள்கலம் 'மனம்.' ஐம்புலன்களும் கட்டுப்படுத்தப்படாமல் போய்விட்டால் மனம் கட்டுப்பாடற்றுப் போய்விடுகிறது. மனம் கட்டுப்படாவிட்டால் செயல்கள் தீய செயல்களாக ஆகிவிடுகின்றன. செயல்கள், தீய செயல்கள் ஆகிவிட்டால் தனிமனிதச் சீரழிவில் தொடங்கிச் சமூக சீரழிவில் கொண்டுபோய் விட்டுவிடுகிறது. இத்தகைய வாழ்வியல் தீமைகளுக்கெல்லாம் /ஒழுக்கக்கேடுகளுக்கெல்லாம் முதன்மையான காரணமாக இருப்பது மன அடக்கமின்மையே. எனவே மன அடக்கமே வாழ்வியல் நிறைவுகளுக்கெல்லாம் முதன்மையாக விளங்குகிறது. இதனால்தான், தம்மபதம் எடுத்த எடுப்பிலேயே மன அடக்கத்தைப் பற்றி பேசுகிறது:

" எண்ணங்கள் (தர்மங்கள் அல்லது சேதஸிகங்கள்) மனதில் இருந்தே உண்டாகின்றன. அவைகளுக்கு மனதே முதன்மையானது. எண்ணங்கள் மனதினாலே உண்டாக்கப்படுகின்றன. ஆகையால், ஒருவன் தீய எண்ணங்களோடு பேசினாலும் சரி, தீய செய்கைகளைச் செய்தாலும் சரி அவற்றினால் உண்டாகும் துக்கங்கள் இழுத்துச் செல்லப்படும் எருதுகளைப் பின்தொடர்ந்து போகும் வண்டிபோல அவனுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி தொடர்கின்றன." ( த.ப.1 )

"எண்ணங்கள் மனத்திலிருந்தே தோன்றுகின்றன. எண்ணங்களே முக்கியமானவை. அவை மனத்தினாலே உண்டாக்கப்படுகின்றன. ஒருவன் தூய எண்ணங்களோடு பேசினாலும் சரி, செய்தாலும் சரி. அவற்றினால் உண்டாகும் நன்மைகள் எப்போதும் நீங்காத நிழல்போன்று அவனைப் பின்தொடர்கின்றன" (த.ப.2)

"அடக்கி ஆள்வதற்கு அருமையானதும் தன் போக்குப்படியே சஞ்சரிக்கிறதுமான மனத்தை அடக்குவது நல்லது. அடக்கி ஆளப்படுகிற மனமானது சந்தோஷத்தைத் தருகிறது."(த.ப.35)

"வைரம் கொண்டவன் தன்னால் வெறுக்கப்பட்டவனுக்குத் தீமை செய்வதைவிட அதிகமாக, அல்லது பகைவனுக்குப் பகைவன் தீமை செய்வதைவிட அதிகமாக அடக்கியாளப்படாத மனமானது பெருந்தீங்கைச் செய்கிறது."(த.ப.42)

இப்படி மனஅடக்கம் எவ்வளவு தேவையானது என்பதைத் தம்ம பதம் விரிவாக அழுத்தமாக எடுத்துரைக்கிறது. 'பகைவனுக்குப் பகைவன் செய்யும் தீங்கைவிட அதிகமான தீங்கை அடக்கப்படாத மனம் செய்கிறது' என்ற விளக்கம் ஆழ்ந்து நோக்கத்தக்கது. எனவே, ஒரு மனிதன் தனக்கான நன்மையைத் தானே அமைத்துக் கொள்வதற்கு முதலில் மனத்தை அடக்கி ஆளக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது. மன அடக்கம் வந்துவிட்டால் புத்தர் கூறியுள்ள நால்வகை வாய்மை அறிந்து பஞ்ச சீலங்களைக் கடைப்பிடித்து ஒழுகும் அட்டாங்க மார்க்க நல்வாழ்க்கையைப் பெற முடியும் என்பது திண்ணம்.

**நட்பு ஆராய்தல்**

மனதை அடக்குதல் தனக்குத்தானே செய்துகொள்ளும் நன்மை. தனக்குள்ளேயே செய்துகொள்ளும் நன்மை. அதேபோல், புறத்திலிருந்து வரும் ஒன்றை ஆராய்ந்து தேர்ந்துகொள்ளுதல்தான் 'நட்பு ஆராய்தல்.' ஒருவன் தான் மட்டும் நல்லவனாய் இருந்துகொண்டு தன்னைச் சார்ந்து இருப்பவர்களைக் கெட்டவர்களாகக் கொண்டிருக்க முடியுமா...?! அவ்வாறு இருப்பின் அது மனமுரண் அல்லவா...?! நல்லவனாக இருக்கும் யாரும் நல்ல நண்பர்களை மட்டுமே கொண்டிருக்க முடியும். ஒரு வேளை, ஆராயாமல் தீய நண்பர்களோடு நட்பு கொண்டு விட்டால் அவனுடைய வாழ்க்கையின் அழிவை யாராலும் தடுத்துநிறுத்த முடியாது. எனவே, நட்பு ஆராய்தல் என்பது மன அடக்கத்திற்கு நிகரானது; தேவையானது. மனித நல்வாழ்வியலுக்கு என்றென்றும் தேவையான இந்த நட்பு ஆராய்தல் பற்றித் தம்மபதம் எடுத்துரைத்து உள்ளது:

"மூடர், அறிஞருடன் தம் வாழ்நாள் முழுவதும் பழகினாலும் அகப்பை குழம்பின் சுவையை அறியாததுபோல அவர் தம்மத்தை அறியாமல் இருக்கிறார்." (த.ப.64)

"அறிவுள்ளவர் ஞானிகளுடன் சிறிது நேரம் பழகினாலும் நாவானது குழம்பின் சுவையை அறிவதுபோல அவர்கள் உடனே தர்மபோதனையை அறிந்துகொள்கிறார்கள்." (த.ப.65)

"குற்றங்களைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கிற ஒருவரைக் கண்டால் அவரைச் செல்வப் புதையல் இருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டுகிறவர் எனக் கருதி அவரோடு நட்பு கொண்டு பழக வேண்டும்."(த.ப.65)

"தன்னந்தனியே வாழ்வது நல்லது ; மூடர்களின் நட்பு கூடாது."(த.ப.330)

"துன்பம் அடைந்த காலத்தில் உதவி புரியும் நண்பர்களையும் பெறுவது மகிழ்ச்சிக்குரியது."(த.ப.331)

மூடர்களோடு ஒருநாளும் நட்பு கொள்ளக் கூடாது அறிவுள்ளவர்களோடு நட்பு கொள்ள வேண்டும் நம் குற்றங்களை சுட்டிக்காட்டி திருத்துபவர்களோடு நட்பு கொள்ள வேண்டும் உதவி புரியும் நண்பர்களை பெற வேண்டும் என்ற வழிகாட்டல்களைத் தம்ம பதம் தருகிறது. இத்தகைய வழிகாட்டலின்படி நட்பாராய்தல் மேற்கொண்டால் நல்வாழ்வியலை அமைத்து இன்பமான வாழ்க்கையைப் பெறலாம் என்பது தெளிவாகிறது.

**ஒழுக்கத்தின் மேன்மை**

ஒழுக்கத்தின் மேன்மையை வலியுறுத்தி அதன்படி மனித சமூகத்தை வாழ வைப்பதையே நோக்கமாகக் கொண்டது தம்மபதம். எப்படி வேண்டுமானாலும் வாழலாம்; பணம், பொருள், சொத்து சேர்த்தால் போதும் என்ற நிலையில் ஓடிக் கொண்டிருக்கிறது இன்றைய சமூகம். இப்படித் தாறுமாறாக ஓடிக் கொண்டிருக்கும் இன்றைய சமூகத்தில் ஒழுக்கத்தை நிலை நாட்டுவது என்பது பெரும் சவாலான ஒன்றாகும். ஆனாலும் காலங்காலமாக இத்தகைய சவாலான செயலை நல்லோர் சிலர்; அறிஞர் சிலர்; ஞானிகள் சிலர் செய்துகொண்டே இருப்பதால்தான் கொஞ் சமேனும் நல்லனவற்றை இன்றும் காணமுடிகிறது. இத்தகைய செயலைத் தம்பதமும் செய்கிறது:

"ஒழுக்கங்களுடன் தியானத்தைச் செய்கின்ற ஒருவருடைய ஒருநாள் வாழ்க்கையானது, ஒழுக்கங்கெட்ட, மானத்தை அடக்க மனத்தை அடக்காத ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையை விட மேலானது." *( த.ப.110 )*

"மன அடக்கம் இல்லாத அஞ்ஞானமுடைய ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையை விட ஞானமும் தியானமும் உள்ள ஒருவருடைய ஒரு நாள் வாழ்க்கை மேன்மை உடையது." *( த.ப.111)*

இவை துறவிகளை நோக்கிச் சொல்லப் பட்டிருந்தாலும் நல்ல மனிதர்களாக வாழத் தரப்படுகிற எல்லோருக்கும் பொருத்தமானவையே.

**நீயே உனக்குத் தலைவன் / வழிகாட்டி**

எந்த ஒரு தனி மனிதனும் தன்னைத் தானறிதல் மூலமாகத்தான் வாழ்க்கையின் துன்பங்களிலிருந்து விடுபட முடியும். மற்றவர்கள் சொல்லிக் கொண்டே இருக்கலாமே ஒழிய தானாக உணராமல் எந்த மாற்றமும் வராது. எனவேதான், புத்தர், ‘நீயே உனக்குத் தலைவன்’ என்கிறார்.

"நீயே உனக்குத் தலைவன். உன்னையன்றி வேறு யார்தான் உனக்கு தலைவராகக் கூடும்? ஒருவர் தம்மைத் தானே அடக்கி ஒழுகக் கற்றுக் கொண்டால் அவர் பெறுவதற்குரிய தலைவரைப் பெற்றவராவார்". *(த.ப.160)*

இங்கும் மன அடக்கமே முதன்மையானதாக வலியுறுத்தப்படுகிறது. மனதை அடக்கி நல்லொழுக்க நெறி நின்றால்தான் துன்பங்களிலிருந்து விடுபட முடியும். இதை ஒவ்வொரு தனி மனிதனும் தனக்குத் தானாகவே செய்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார் புத்தர்.

"நீயே ஊக்கத்தோடு முயற்சி செய்ய வேண்டும் புத்தர்கள் வழியை மட்டும் காட்டுவார்கள்." *(த.ப.276)* ஏனெனில்,

"ஒருவர் இன்னொருவரை சுத்தம் செய்ய முடியாது " *(த.ப.165 )* என்கிறார். எனவே,

"மனத்தை ஒருநிலைப்படுத்துவதாலே (யோகத்தினாலே) ஞானத்தைப் பெறலாம். மனத்தை ஒருநிலைப்படுத்தாவிட்டால் ஞானத்தைப் பெற முடியாது" *(த.ப.282 )* என்றும் தம்மபதம் வலியுறுத்துகிறது.

மனதை அடக்கி நற்செயல்களைப் பெருக்கித் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டு நட்பு ஆராய்தல்வழி நல்ல நட்புகளைப் பெற்றுவிட்டால் தானும் தான் சார்ந்த சமூகமும் மேம்பட்டதாக ஆகிவிடும். இவ்வாறான சமூகத்தில் ஒழுக்கத்தின் மேன்மை பின்பற்றிப் போற்றப்படும் என்பதை சொல்ல வேண்டியதில்லை. இத்தகைய நிலை உருவாகிவிட்டால் ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே வழிகாட்டியாய்....தலைவராய்த்... திகழ்வார்கள். இவைதாம், என்றென்றும் வழிகாட்டும் தம்மபதத்தின் அறநெறிகளாகத் திகழ்கின்றன. எனவே தனி மனிதர்களின் ஒழுக்க மேம்பாடுகளாலேயே ஒரு சமூகம் மேம்பட்ட சமூகமாக மாற முடியும் என்பது தம்ம பதத்தின் அறநெறி நோக்குநிலையாகும்.

**பயன்பட்ட நூல்கள்**


- *பிக்கு சோமானந்தா., ஆ.இ., தம்மபதம், மகாபோதி சொசைட்டி, 17, கென்னட் லேன்,’எழும்பூர், சென்னை -8*
- *பிக்கு போதி பாலா., ஜெயபாலன்., க. அன்பன்., இ. 2013, தமிழ்ப் பண்பாட்டில் பௌத்தம், காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட் புரம்,கோடம்பாக்கம், சென்னை- 24.*
- *மாதவன்., சு. தமிழ் அற இலக்கியங்களும் பௌத்த சமண அறங்களும், 2017, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41 பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 98.*
- *Bikkhu Bodhi., 1995,The living message of the Dhammapada, Bodhi leaves, BL 129, Buddhist literature society, Sri Lanka.*
- *Sonali Chakraborty.,September 2020 , Understanding the relevance of the Dhammapada in modern mind : A conceptual study, ENSEMBLE - a bi-lingual peer reviewed academic journal, ISSN 25820 427 (online), Vol.2 , No.2,Article reference number 2007 2600 275*



*குறிப்பு : இந்தக் கட்டுரை சென்னை, பச்சையப்பன் கல்லூரியின் தத்துவத்துறையில் 2022 ஜூலை 27,28 இல் நடைபெற்ற பௌத்தப் பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் படிக்கப்பட்டது.*


கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர் - தலைவர்,
தமிழ்த்துறை இராஜேஸ்வரி வேதாசலம்
அரசினர் கலைக் கல்லூரி, செங்கல்பட்டு.

கட்டுரை

# ராம் சரண் சர்மா

## (1920-2011)



### ரொமிலா தாப்பர்

<u>தமிழில்</u>

**கி.இரா.சங்கரன் - ந.கதிரவன்**

நான் முதன்முதலில் ராம்சரண்சர்மா அவர்களை 1950 களில் இலண்டன் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேய ஆப்பிரிக்க ஆய்வுப்பள்ளியில் (School of Oriental and African Studies) சந்தித்தேன். நான், அப்போது முனைவர் பட்ட ஆய்வினைத் தொடங்கியிருந்தேன். நான் இளங்கலையின் சிறப்புப்படிப்பில் (B.A., Honours) பண்டைய இந்தியவரலாற்றினை கற்றறிந்தேன். பேராசிரியர் (A.L.Basham) ஏ.எல்.பஷாம், ஆர்.சி.மஜூம்தார், எச்.சி.ராய்சவுத்திரி, வின்செண்ட் ஸ்மித் (R.C.Majumdar, H.C.Raychaudhuri, Vincent Smith) போன்றோரின் நூல்களைக் கற்பதற்கு பரிந்துரைத்தார். ஆனால், ஆர்.எஸ்.சர்மாவின் ஆய்வியல் அணுகுமுறை மாறுபட்டது என்றும் டி.டி.கொசாம்பி (D.D.Kosambi) இன்னும் மாறுபட்டவர் என்றும் கூறினார். இது தென்னிந்திய வரலாற்றியல் பற்றிய கருத்தரங்கில் (Conference on South Indian Historiography) உறுதிபட்டது. அதில், ஆ.சி.மஜூம்தாரைத் தொடர்ந்து ஆர்.எஸ்.சர்மா ஆய்வுரை வழங்கினார். அதன் தலைப்பு:பண்டைய இந்தியாவின் சமூக, வரலாற்று வரைவியல் (historiography of ancient Indian Social History). மற்றொரு நினைவில் நிற்கும் தருணம் யாதெனில் ஏ.எல்.பஷாம், டி.டி.கொசாம்பியை School of Oriental and African Studiesக்கு இந்துத்துவம் பற்றி சொற்பொழிவிற்காக (lectures on Hinduism) அழைத்தது. அவருடைய சொற்பொழிவு பண்டைய வரலாறு பற்றிய ஒட்டுமொத்தமான புதுப்பார்வையினை அளித்தது. அது மரபுரீதியிலான வரலாற்றை எழுதுவதில் அறிவுச்சமூகத்திற்கு சவாலாக அமைந்தது. இவ்விரு அறிஞர்களும் அச்சிந்தனைப்பள்ளியின் ஆய்வுப்புலத்தில் ஒரு புதிய தடத்தினை ஏற்படுத்தினர். அதுவரை 50 ஆண்டுகளாக ஆசியாபற்றி பழமையான ஆய்வுமுறையினை மாற்றியது.

ஆர்.எஸ். சர்மா School of Oriental and African Studies இல் நீண்டகாலம் இருந்தார். அங்கு மாணவர்களுடன் பண்டையகாலம் பற்றியும், நவீனகாலம் பற்றியும் அடிக்கடி உரையாடுவார். எளிதில் அணுகக்கூடியவராக இருந்தார். ஆய்வாளர்களுக்கு ஆய்வுத்துறையில் சிக்கலிருப்பின் சரிசெய்தார். ஆய்வுத்தளங்களைக் கண்டறிவதில் பெரிதும் உதவினார். சான்றுகளைத்தேடுவதில் உதவினார். முழுவதுமாக மாணவர்களுக்கு,குறிப்பாக ஆய்வில் ஆர்வமுள்ள மாணவர்க்ளுக்கு ஊக்கமளித்தார். அவருடைய மார்க்சியஆய்வு சமூக, பொருளியல்,

வரலாற்றுஆய்வில் பிரதிபலித்தது. இந்தியாவில் அன்று நிகழ்ந்த உழவர்இயக்கம் (*peasant movements*) பற்றியஆய்வில் பிரதிபலித்தது. அவர் மூலமாகத்தான் இராகுல் சங்கிருத்யாயனின் (*Rahul Sankrityayana*) ஆய்வினைக் கற்றேன்.

**தொடக்கநிலை வளர்ச்சி**

பண்டைய இந்தியா பற்றிய ஆர்.எஸ். சர்மாவின் ஆய்வு வரலாறு எழுதுதலில் இரு முக்கிய வளர்ச்சியினை அடுத்த அரைநூற்றாண்டு காலத்திற்கு ஏற்படுத்தியது. முதலில் ஆய்விற்கான சான்றுகளைத் தேடும் களத்தினை விரிவாக்கினார். இலக்கிய பனுவலில் (*texts*) சித்தரிக்கப்பட்ட பொருள்களை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களோடு ஒப்பிட்டு வரலாறுஅறியப்பட்டது. இம்முறையானஆய்வு பலகேள்விகளுக்கு விடையளித்தது. மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர் எவ்வகையான பொருள்களைப் பயன்படுத்தினர் என்பதனையும் எளிதில் அறியமுடிந்தது. அதன்முதல் எவ்வகையான தொழில்நுட்பத்தினை பயன்படுத்தினர் என்பதனை அளவிட முடிந்தது (*technology as gauge*). பொருளியல் நிலையினையும் அளவிட முடிந்தது. நூல்வழி பெற்ற விவரணை பலவற்றையும் கூறியது. ஆனால், அவை சரியானவையன்று.

ஆர்.எஸ்.சர்மாவின் அடுத்தமுக்கியமான பங்களிப்பு சான்றுகளைப் பகுப்பாய்வு செய்யும்முறை. அதாவது, சான்றுகளின் நம்பகத்தன்மையினை சோதிக்கும் முறையாகும். எம்மாதிரியான சூழல்களில் அச்சான்றுகள் உருவாயின. அவற்றிலிருந்து எப்படி கருத்துகளைப் பெறலாம் என்பதாகும். அவ்வாறு பெறப்பட்டவற்றை மார்க்சிய வரலாற்று பொருள்வாதக்கொள்கையோடு பொருத்துவதாகும் (*Marxist historical materialism*). இவ்வணுகுமுறை நிலவுகிற ஆய்வுமுறையினை மாற்றியது. வரலாற்றில் சரியான/பொருத்தமான கேள்விகள் கேட்கப்பட்டு விடைகளும் பெறப்பட்டன. வரலாற்றில் மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது அது எவ்வாறு உருபெற்று வளர்ந்து மாறியது என்றும் அறியப்பட்டது. முன்பும் இதுபோன்ற கேள்விகள் முன்னோடி வரலாற்றறிஞர்களால் கேட்கப்பட்டன. ஆனால் காத்திரமான கேள்விகளை டி.டி.கொசாம்பி எழுப்பினார்; ஆர்.எஸ்.சர்மா தொடர்ந்தார். இருவருமே மார்க்சிய ஆய்வுமுறையில் கேள்வியெழுப்பினர். எனவே, இருவர் கேள்விமுறையும் ஒரேமாதிரியாக அமைந்தது. ஆனால், வேறுமாதிரி கேள்வி கேட்டவர்களும் உண்டு.

**மார்க்சிய ஆய்வுமுறை**

தற்போது வேண்டுமானால் இவ்வாய்வுமுறை பொதுவாக மாறியிருக்கலாம். ஆனால், 50 ஆண்டுகளுக்கு முன்பு இது ஒருபுதிய ஆய்வுமுறையாகும். அப்போதும் கூட, அறியாமை மார்க்சிய சிந்தனையை தவறாகப் புரிந்துகொள்ள வைத்தது. அதாவது மார்க்சிய ஆய்வுமுறை பொருளியல் நிர்ணயம் பற்றிய ஆய்வு (*application of economic determinism*) என்று தவறாகக் கருதினர். ஓர் ஆய்வியல்முறையாக மார்க்சியசிந்தனை மனித சமூகத்தின் ஒட்டுமொத்த நடவடிக்கையினையும் கணக்கில் கொண்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட கருத்தில் மையம் கொண்டிருந்தது. சான்றுகளை சில சிந்தனைப்புள்ளிக்குள் (*selectively upto a point*) இழுத்தது. இது மார்க்சியமுறையினைப் பயன்படுத்துவோரின் மனநிலையினை பொறுத்து அமைந்தது. இம்முறை சிலவேளைகளில் பிறபகுப்பாய்வு முறையுடன் சேர்த்து பயன்படுத்தப்பட்டது. இதுபோன்ற முறையினை டி.டி.கொசாம்பி செய்தார். அவர், நாணயங்களை இம்மாதிரியான முறையில் பகுப்பாய்வு (*statistical method*) செய்தார். பண்டையகாலத்தில் ஒரு நிகழ்ச்சி நடப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களை விளக்கலாம். ஆனால், வரலாற்றாசிரியர்கள் எதற்கு முக்கியத்துவம் தருகிறார்களோ அக்கருத்திற்கு பக்கபலமாக சான்றுகளைப் பயன்படுத்துவர். காத்திரமான வரலாற்றாசிரியர்கள் இம்முறையினைப் பெரிதும் பின்பற்றினர்.

வரலாற்றாய்வு தொடக்கத்தில், அரசியல், அரசகுடும்பங்களின் மேல் மையம் கொண்டிருந்தது. ஆனால், அது ஓரளவிற்கே பயன்பட்டது. 20 ஆம் நூற்றாண்டின் நடுகூற்றில் இப்போக்கு மாறியது. இந்நிலையில் சமூக, பொருளாதார, வரலாற்று ஆய்வு மறுகட்டமைப்பு செய்யப்பட்டது. ஆர்.எஸ்.சர்மா, டி.டி.கொசாம்பி ஆய்வுகள் ஒரு திருப்புமுனையினை ஏற்படுத்தியது. இருவரும் சான்றுகளின் வகையினை விரிவாக்கினர் (*enlarge the categories of sources*). இலக்கியப் பனுவல்களில் பதியப்பட்ட சான்றுகள் தொல்லியல் சான்றுகளோடு பொருத்திப்பார்க்கப்பட்டன (*texts were juxtaposed with archaeological data*). சமூகத்தின் உண்மைநிலையினை அறிவதற்கு இவ்வாய்வுமுறை பயன்பட்டது,பொருத்தமாகவும் அமைந்தது.

**இலக்கியப் பனுவல்களின் பயனும் தொல்லியல் சான்றுகளின் பயனும்**

ஆர்.எஸ்.சர்மா இலக்கியச் சான்றுகளை தொல் பொருளியல் சான்றுகளோடு பொருத்திப்பார்ப்பதன் மூலம் சான்றுகளின் வலுத்தன்மையினை விரிவாக்கினார். இங்கு இரு எடுத்துக்காட்டுகளைச் சொல்லலாம். அதில் ஒன்று கங்கைச்சமவெளியில் தொடக்கத்தில் தோன்றிய நகர்மயமாதல் பற்றியது. அது எவ்வாறு கி.மு 5-6 ஆம் நூற்றாண்டுகளில் நகர்மயமானது பற்றியதாகும். அது தொடர்பான கேள்வி நகர்மயமான குடியிருப்புகளைக் கண்டறிவதற்கான சான்றுகளைக் கண்டறிவது தேவையான ஒன்று. இலக்கியச் சான்றுகள் நகர்மயமாதல் பற்றி போதிய அளவிற்கு விவரிக்கவில்லை. ஆனால், தொல்லியல்சான்றுகள் நகர்மயமாதலில் ஏற்பட்ட தொழில்நுட்ப மாற்றங்களை விளக்குகின்றன. முக்கியமாக இரும்புத்தொழில் நுட்பம். மற்றொன்று,

வெண்கலம், செம்புத் தொழில்நுட்பம் எவ்வாறு மெள்ள மெள்ள இரும்புத் தொழில்நுட்பத்திற்கு மாறியது என்பதாகும். இரும்பு, காடுகளை அழிப்பதற்கு பேருதவி புரிந்தது. உழவுத்தொழிலிற்கு நிலத்தினை ஆழ உழுவதற்கு இரும்பினாலான கலப்பை *(iron-tipped plough)* பெரிதும் ஏற்றதாக அமைந்தது. முக்கியமாக நெல்விளைச்சலுக்கு *(rice cultivation)* இத்தொழில்நுட்பம் பெரிதும் பயன்பட்டது. இது நகர்மயமாதலுக்கும் விரைவாக இட்டுச்சென்றது என்பார் ஆ.எஸ்.சர்மா. இக்கருத்து பெரிதும் வாதிக்கப்பட்டது, அடுத்தகட்ட ஆய்விற்கு இட்டுச்சென்றது.

அவருடைய இன்னொருவாதம் குப்தர்காலம் பொற்காலம் *(golden age)* பற்றியது. இந்தியாவின் வடக்கில் அகழாய்வில் கிடைத்த சான்றுகளைத் தொகுத்தார். ஆனால், குப்தர்காலத்தில் பொருளியல் பண்பாடு நகர்மயமான குடியிருக்கைகளில் சரிந்தது எனபதைக் கண்டார். இக்கருத்தினை தம் *Urban Decay in India (C 300-C1000)* என்றநூலில் வாதித்துள்ளார். பொற்காலம் என்ற கருத்தினைத் தவிர்த்தால் இக்காலத்தில் வாழ்க்கைத்தரமும் சரிந்தது. இச்சரி-வினைப் பொதுமைப்படுத்துவதை வாதிக்கலாம். ஆனால், இது தொடர்பான காத்திரமான கேள்விகளை எழுப்பலாம். குறிப்பாக, பொற்காலம் என்ற கருத்தினை எவ்வாறு விளக்கவேண்டும், அது ஒரு கருத்தியலாக *(concept)* இருந்தால். மேலும், இக்காலகட்டம் பொருளியல் சரிவானகாலமாக இருந்ததால் அரசகுடும்பத்தினர், கோயில்கள், மடாலயங்கள் போன்றவற்றை எவ்வாறு போற்றினர் என்பதனை அறியவேண்டும். கலைப்பண்பாட்டு வளர்ச்சிக்கு பெருமளவில் பொருளியல் தேவைப்படும். இப்பொருளியல் வளர்ச்சிக்கு எம்மாதிரியான மூலவளங்கள் அமைந்தன. இதுபோன்ற இலக்கியம், தத்துவம் போன்றவற்றின் வளர்ச்சிக்கு ஓரளவு பொருளியல் போதுமானது; பெருமளவில் தேவைப்படாது. எதிர்மாறாக, குப்தர்காலத்தினைவிட அடுத்துவந்த காலத்தில் கலைவெளிப்பாடு, கட்டிடம் போன்றவை சிறப்பானவை. அப்படியானால், குப்தர்காலத்தின் கலைவெளிப்பாடு அதற்கு முந்தைய காலகட்டத்தின் கலைவெளிப்பாட்டின் தொடர்ச்சி எனலாமா? காட்டாக, இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் புத்ததூபிகள் எழுப்பப்பட்டன. இவற்றை உருவாக்கியவர்கள் அரசகுடும்பத்தினர் மட்டுமன்று, வணிகர்களின் கூட்டமைப்புமாகும். வணிகர்கள், கைவினைஞர்கள், சிறுநிலக்கிழார்கள், துறவிகள், பெண்துறவிகள் என பலதரப்பினரும் இதுபோன்ற கட்டிடங்களை எழுப்புவதற்கு உதவினர் *(merchants, artisans, small landhilders, monks and nuns)*. அவர்கள் செய்த உதவிகள், நன்கொடைகள் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

## பிறிதொரு உலகம்

கல்வெட்டுகள் சமூக, பொருளியல், வரலாறு பற்றிப் பேசுகையில் அவை வரலாற்றில் இன்னொரு உலகினைத் திறக்கிறது. குறிப்பாக, பெண்கொடையாளர்கள். அவர்களின் சமூகநிலை, பண்டைய இந்தியவரலாற்றில் எவ்வாறு இருந்தன எனபதனை அறியலாம். வரலாற்றில் இவ்வாறு அறியப்பட்ட பெண்களின் உயர்ந்தநிலைக்கு நேர்மாறான கருத்தினை தர்மசாஸ்திர நூல்கள் கொண்டுள்ளன. செல்வம், சாதி, அலுவல்நிலை போன்றவற்றைப் பொறுத்து பெண்களின் மதிப்புநிலை அமைந்ததனை கல்வெட்டுகள் விளக்குகின்றன.

இன்றைக்கு பால்பற்றி பல ஆய்வுகள் *(gender studies)* காத்திரம் பெற்றுள்ளன. பண்டைக்காலத்தின் பால்பற்றிய ஆய்விற்கு போதுமான சான்றுகள் கிடைத்துள்ளன. அவை, இந்தியச்சமூகம் பற்றிய முழுப்பார்வையினைத் தரும். இது சாதியச்சமூகம் பற்றிய பலகோணங்களையும் விளக்குகிறது. இப்பார்வை முந்தைய ஆய்வுகளில் இடம்பெறவில்லை. சாதிய இயக்கம் உயர்நிலையில் இருப்பவருக்கு மட்டும் இருக்கவேண்டும் என்பதற்காக பிற சமூக அமைப்புகள் நசுக்கப்பட்டன. பெண்கள்நிலை பொதுவாக அமைந்தது. பெண்களை அடக்குதல் சாதிய இயக்கத்தினை உறுதிப்படுத்தியது. இருந்தாலும், சில மாற்றுஉண்டு. அடிசாதி மக்களைக் கட்டுப்படுத்துவதன்மூலம் கூலிவேலையாட்கள் தடை-யில்லாமல் கிடைத்தனர். இவர்களின் நிலை இன்றைய தலித்துகளின் நிலைபோல இருந்தது. சாதியடையாளம் பிறப்பிலிருந்து தோன்றுவதால் சாதிநிலையினை மாற்றுவது மிகக்கடினமானது. எனவே, அடித்தட்டு மக்கள் உழைப்பதற்கே பிறந்தவர் எனப்பட்டனர். எனவே, தலைமுறை தலைமுறையாக அவர்களின் உழைக்கும்நிலை தொடர்ந்தது. இதுபோன்ற கருத்து ஆர்.எஸ்.சர்மாவின் *Sudras in Ancient India, 1958* நூலில் விளக்கப்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்தும்படியாக *Aspects of Political Ideas and Institutions in Ancient India, (1968,2nd revised edition)* என்ற நூல் பல கருத்துகளை விளக்குகின்றது. இதுமாதிரியான ஆய்வு பெருமளவில் வரலாற்றாசிரியர்களை ஈர்த்தது, ஆய்வுகளை விரிவாக்கியது.

## கல்வெட்டுச்சான்றுகள்

ஆர்.எஸ்.சர்மா கல்வெட்டுகளை சான்றுகளாக வரலாறு எழுதுவதற்காக பெரிதும் பயன்படுத்தினார். அவற்றிலிருந்து புதியவகைச் சான்றுகளைத் திரட்டினார். 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே கல்வெட்டுகள் ஆராயப்பட்டன. ஆனால், அவை பெரும்பாலும் வரலாற்றின் காலநிரல்களை சரிசெய்யவே பயன்பட்டன. அக்காலகட்டத்தில் காலநிரல்களின்படி அரசியல் நிகழ்வுகளை சேகரிப்பதற்கே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. குப்தர்காலத்திற்குப் பிந்தியகாலத்தில் சமூக, பொருளியல், வரலாற்று ஆய்வுகளுக்கு வரலாற்றாசிரியர்கள் தொடக்கத்தில் இலக்கியத்தினையே பெரிதும் நம்பினர். அக்காலத்திற்கான அகழாய்வுகள் பொதுவானதாக இல்லை. ஆனால், வரலாற்றாசிரியர்கள் மீண்டும் கல்வெட்டுகளை

ஆயும்போது குப்தர்காலத்தினை தொடர்ந்து வந்த பல அரசுகளின் சமூக, பொருளியல் வரலாற்றினை மீளாய்வு செய்தனர். தொடக்கத்தில் வரலாற்றாசிரியர்கள் சமூக மாற்றத்தினை சற்றே தொட்டுக்காட்டினர். தொடர்ந்து இந்தியச் சமூகத்தினை மேற்கு ஐரோப்பாவின் இடைக்காலத்திய நிலமானியமுறையுடன் (European Model of Feudal Society) ஒப்பிட்டுப் பார்த்தனர். நிலமானியசமூகம் ஒரு பிரமிட் (pyramid) அடுக்குநிலையில் காட்டப்பட்டது. அனைத்து அதிகாரமும் பெற்ற அரசர் அதன் உச்சியில் இருப்பார். அடுத்தநிலையில் இருக்கும் தலைவர்கள், இடைநிலையில் இருப்பவர்கள், எல்லைகளை ஆளும்தலைவர்கள் (vassals, feudatories, intermediaries) அரசகட்டளையின்படி இயங்குவர். அடுத்தநிலையில் குடிகள் உழைப்பவர்களாக இயங்குவர். இவர்கள் உழைக்கும்குடிகள். ஆனால், சில வரலாற்றாசிரியர்கள் இந்தியாவின் நிலமானியமுறை அமைவதற்கு வாய்ப்பில்லை என்று வாதிட்டனர்.

வரலாற்றில் உற்பத்திமுறை (Mode of Production) 5 கட்டங்களாக நிகழ்ந்தது என்று மார்க்ஸ் பரிந்துரைத்தார். ஐரோப்பிய வரலாற்றில் ஒவ்வொரு கட்டத்திலும் சமூக, பொருளியல், வரலாற்று மாற்றம் மெள்ள மெள்ள ஒருநிலையிலிருந்து அடுத்தநிலைக்கு மாறியது. இதில் முக்கியம் என்னவென்றால் ஒவ்வொரு கட்டத்தின் மாற்றமும் ஒன்றிலிருந்து ஒன்றாக எழுந்தது. ஆனால், அம்மாற்றம் இன்றைய முறையிலிருந்து வேறுபட்டது என்றார்.

வேறுமாதிரியான உற்பத்திமுறை ஆசியாவில் நிலவியது என்று மார்க்ஸ் கூறினார். அதனை (Asiatic Mode of Production)ஆசிய உற்பத்திமுறை என்றார். அது ஆசிய சமூகம் மாறாநிலைகொண்டது கொடுங்கோலர்களால் ஆளப்பட்டது என்று புரிந்துகொள்ளப்பட்டது. இக்கருத்து ஆசியாவின் மார்க்சிய அறிஞர்களால் (Asian Marxist Historians) பெரிதும் ஆராயப்பட்டது, தற்போது கைவிடப்பட்டுள்ளது. ஆனால், ஆசியாவின் பெரும்பாலான மார்க்சிய அறிஞர்கள், மார்க்ஸ் ஐரோப்பா பற்றி கூறியவற்றை கூர்ந்து கவனிக்கவில்லை. இது நிலமாணியமுறைபற்றி ஆய்வுமேற்கொள்வதற்கு பெரிதும் ஆர்வத்தினைத் தூண்டியது. அது, ஓரளவிற்கு சமூக மாற்றத்தினை விளக்குவதுபோல் இருந்தது. ஆனால், ஓர் எச்சரிக்கை. இந்திய நிலமானிய முறை ஐரோப்பிய நிலமானியமுறையுடன் ஒத்திருப்பதுபோல் தோன்றவில்லை. கி.பி.8ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கும் கல்வெட்டுச்சான்றுகள் அரசியல், வேளாண்பொருளியல் நிலைமையுடன் ஒத்துப்போவதைக் காட்டும்.

டி.டி.கோசாம்பி இம்முறையின் அடிப்படையில் குப்தர்காலத்தினைத் தொடர்ந்துவந்த காலத்தினை ஆய்ந்தார். பகுப்பாய்வின்மூலம் அரசு, பொருளியல், சாதி, சமயம் போன்ற கூறுகளை ஆய்ந்தார். ஆனால், சில மாறுபாடான கருத்துகளை முன்வைத்தார். அவர், நிலமானியமுறையினை சமூகத்தின் மேல்நிலை-யிலிருந்து தோன்றியது (feudalism from the above) என்பார். அதாவது அரசர் மேலிருந்து வட்டாரத் தலைவர்களைக் கட்டுப்படுத்துவார் என்றார். மற்றொரு கருத்தினையும் முன்வைத்தார். நிலமானியமுறை சமூகத்தின் கீழ்நிலை-யிலிருந்தும் தோன்றியது (feudalism from the below) என்றார். அதாவது, இம்முறையில் வேளாண்குடிகளுக்கும் வட்டாரத் தலைவர்க்ளுக்கும் இடையிலான உறவுகள் மையமாக செயற்படும் (relation between the feudatory and the peasant) என்றார்.

### இந்திய நிலமானியமுறை

ஆர்.எஸ்.சர்மா கருத்துரு (notion) செய்த இந்திய நிலமானியமுறை (Indian Feudalism) மார்க்சிய சிந்தனைக்கு மாதிரியாக அமைந்தது. ஆனால், ஒரு தனித்துவமான கருத்தாக அமையவில்லை. ஒரு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரம் (decentralisation) பரவலாக வட்டாரத்தலைவர்களின் கைகளில் இருந்தது என்றார். இம்முறையில் அரசர் பிராமணர்களுக்கும், உயர்நிலை அலுவலர்களுக்கும், அவர்களுடைய அரசு அலுவலுக்காக நிலக்கொடைகளை வழங்கினார் என்றார். ஆனால், உண்மையில் அவர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்டது நிலத்திலிருந்து விளைந்த வருமானமே; நிலமன்று. ஆனால், அவர்கள் அடுத்து நிலத்தின்மீதான உரிமையினைக் கோரினர். நிலவுடைமையாளர்கள் என்ற அமைப்பு பெரிய சமூகசக்தியாக நிலைபெற்றது. இது போன்று பெரும் நிலப்பரப்பினைப் பெற்றவர்கள் அதனை ஒரு மூலதனமாக வைத்து மெள்ள மெள்ள ஒரு சிற்றரசினையே (principalities and small kingdoms) உருவாக்கினர்.

பண்டைக்காலத்திலிருந்து வேறுபட்ட புதிய கூறுகளைக் கொண்ட புதிய சமூகங்கள் எழுந்தன. ஆட்சிக்குடும்பங்கள், சத்திரியர் நிலையினைப் பெறுவதற்காக கீர்த்திகளை (pedigrees) எழுதினர். புதியதொழில்முறைகள் புதிய சாதிகளை உருவாக்கின. இடைநிலை சாதிகளில் பெருத்த மாற்றம் நிகழ்ந்தது. காட்டாக, கயஸ்தர் சமூகத்தினர் அதிகாரமிக்க நிர்வாகத்தினராயினர். சமூகத்தில் உயர்நிலையில் இருந்த பிராமணர்கள் அடிநிலையில் இருந்த தலித்துகள் எவ்வித மாற்றமும் பெறவில்லை. அவ்வப்போது சில புதியகுழுக்கள் சமூகத்திற்குள் வந்தன. இன்றுவரைக்கும் தலித்துகளும், சமூகத்தின் அடித்தட்டில் இருப்பவர்களும் உடல் உழைப்பினைக் கொடுக்கின்றனர். குடியானவர்பற்றி (serfdom)பெரிதும் வாதிக்கப்பட்டுள்ளது. குப்தர்காலத்திற்கு அடுத்த காலத்திலிருந்து கிடைக்கின்ற கல்வெட்டுகளின் அடிப்படையில் ஆர்.எஸ்.சர்மா நகரங்களும், வணிகமும் சரிந்தன என்று வாதிட்டார். இது சில சிக்கல்களையும் உருவாக்கியது. வணிகத்தில் சிலதொய்வுகள் ஏற்பட்டாலும் பிறகு மெள்ள சூடு பிடித்தது. இந்திய வணிகர்கள், புத்ததுறவிகள், பிராமணர்கள் ஆசியா, மத்திய ஆசியா, தென்கிழக்கு ஆசியா, சீனம் வரைக்கும் தொலைதூரப் பயணத்தினை மேற்கொண்டனர்.

### பண்பாட்டு மாற்றம்

பண்பாடும் மாறியது. சம்ஸ்க்ருதம் முழுமையாக அரசவை மொழியானது (court language). அரசின் உதவியால்


கல்வெட்டுகளும், ஓலைச்சுவடிகளும், பனுவல்களும் பொதுவாயின. ஆனால், கி.பி.1000 க்குப் பிறகு வட்டாரமொழிகளின் எழுச்சியால் சம்ஸ்க்ருதம் ஒதுக்கப்பட்டது. ஆட்சிமொழிநிலையில் இருந்தும் அரசவை நிறுவனத்திலிருந்தும் விலக்கப்பட்டது. அரசர்கள், இடைநிலையில் உள்ளவர்கள், செல்வமிக்க வணிகர்கள் போஷகராயினர். புதியசமயங்கள் பக்தியினைப் போற்றின. விஷ்ணு, சிவன் போன்ற கடவுளர்கள் பெரிதும் போற்றப்பட்டனர். அதேசமயத்தில் வட்டார சமயநிறுவனத்தின் வழிபாட்டு நெறிமுறைகள், கடவுளர்கள், மையநீரோட்டத்துடன் இணைக்கப் பட்டன. இது நிலமானியமுறையில் ஏற்பட்ட முக்கியமாற்றம். இம்மாற்றம், அரசியலிலும் பொருளியலிலும் நிகழ்ந்தது. ஆனால், இவற்றுடன் மட்டும் இம்மாற்றம் நிற்கவில்லை. புதிய சமயபண்பாட்டு இயக்கங்கள், *(religious-cultural movements)* புதியசாதிகள், தோன்றியதற்கான சான்றுகளும் உண்டு. இக்கூறுகளை நிலமானியமுறை பற்றி ஆய்ந்தவர்கள் பெரிதும் வாதிட்டனர். ஆனால், சிலர் இம்மாற்றத்தினை கண்ணுற்றனர். அரசுருவாக்கம் பற்றிப்பேசினர். புராண இந்துத்துவம் *(puranic Hinduism)* பற்றிப் பேசினர். இனக்குழு அடையாளங்கள சாதிய அடையாளங்களாக மாறியது பற்றியும் பேசினர். இம்மாற்றங்கள் பெரிதும் இந்தியாவின் வடக்கில் நிகழ்ந்தன.


ஆர்.எஸ்.சர்மாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட *feudal mode of production* என்ற கருத்து இக்காலகட்டம் பற்றி வரலாறு காத்திரமான வாதத்திற்கு மடைதிறந்தது. இவருடைய ஆய்விற்கு ஆதரவும் உண்டு; விமர்சனமும் உண்டு. விமர்சனங்களுக்கு *Early Medieval Indian Society, 2001* என்ற நூலில் விடையளித்தார். இவ்வாய்வுப்புலத்தில் இவருடைய சிறப்பான பங்களிப்புவகை வகையான புதிய கேள்விகளை எழுப்பி வாதத்தினை தொடர்ந்து அதற்கான விடைகாண்பதற்கு புதிய சான்றுகளை தேடவைத்தார். இவருடைய ஆய்வின் அணுகுமுறை பொருளியல் பண்பாட்டினை பனுவல் இலக்கியத்தோடு பொருத்திப்பார்ப்பது, அதனைக் கேள்விகேட்டு பகுப்பாய்வு செய்வது, அவரை ஆய்வுலகில் நிலைநிறுத்தியது. அவருடைய அனைத்து ஆய்வுகளிலும் எழுத்திலும் முதன்மை பெறுவது பண்டைய இந்தியாவின் சமயசார்பற்ற நிலையினைப் புரிந்துகொள்வதாகும் *(essentially secular understanding of the Indian past)*. இத்தனைக் காத்திரமான ஆய்வாளராக இருந்தும் இந்து வலதுசாரிகளின் *(Hindu right)* காத்திரமான விமர்சனங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. பண்டைய இந்தியாவில் மாட்டிறைச்சி உண்ணுதல் வழக்கில் இருந்தது என்பதனை தக்க சான்றுகளுடன் நிரூபித்தார். இதுபற்றி தாம்எழுதிய நூலில் பதிவிட்டார் *(A book written for NCERT)*. பாபர்மசூதி *(Babri Masjid)* பற்றி எழுதினார். இவ்விரு விடயத்திலும் இவருக்கு சார்பாக பல வரலாற்று ஆசிரியர்களும் இருந்தனர். ஆர்.எஸ். சர்மா விமர்சனங்களை பொறுத்தார்; போரிடவும் செய்தார். சமயசார்பற்ற வரலாற்றாய்வு செய்பவருக்கு ஊக்கமளித்தார். அவருடைய இறுதி பத்தாண்டுகளில், அவருடைய கருத்துகள் பலரையும் ஊக்கப்படுத்தியது. அவர் தொடங்கிவைத்த வாதம் வரலாறு எழுதுவதை தொடர்ந்து ஊக்கப்படுத்தும் என்று நம்புகிறேன்.

*Sep,17, 2011 Vol.XLVI NO.38 Economic and Political Weekly*

கட்டுரை மொழிபெயர்ப்பாளர்கள், பேராசிரியர்கள்


## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!





**ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 490 | 4336 | 519 | 489 | 3492 | 5981 |
| 882 | 5562 | 520 | 2768 | 881 | 4393 |
| 2767 | 177 | 521 | 4338 | 1405 | |
| 4335 | 181 | 8788 | 2413 | 3491 | |

**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

தனி இதழ் ₹ 45.00
ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00.
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00
சந்தாத் தொகையை
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.



# மாற்றிலக்கண மொழியியலின் தந்தை
# நோம் சோம்ஸ்கி

ச. சுபாஷ் சந்திரபோஸ்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**நோம் சோம்ஸ்கி**

ஆய்வுலகில் நோம் சோம்ஸ்கியின் ஆக்கமுறை இலக்கணம் ஏற்படுத்தி உள்ள தாக்கத்தை மொழியியல் அறிஞர் முத்துச் சண்முகன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். மொழிகளுக்குப் பொருத்தமான, பொதுவான இலக்கண அமைப்பைக் காணும் முயற்சியில் இந்த நூற்றாண்டில் மொழியியல் துறையில் முன்னணியில் நிற்பவர் சோம்ஸ்கி அவருடைய மாற்றிலக்கணக் கோட்பாடு. இக்கோட்பாட்டின் செயற்பாடு மொழியியலோடு மட்டும் நின்றுவிடவில்லை. மொழியாசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் இவர்களிடையே முடக்கிக்கிடந்த மொழியியல். உளவியல், சமூகவியல், தத்துவவியல் ஆகிய துறைகளை எல்லாம் பாதிக்கத் தொடங்கியது (மாற்றிலக்.ப.1).

மாற்றிலக்கண அறிஞர் நோம் சோம்ஸ்கிக்கு முன்னர் எழுத்தியல், சொல்லியலை விளக்கிய அளவிற்குத் தொடரியல் விளக்கப்படவில்லை. மேலும் அவர் எழுத்தியல், சொல்லியல், தொடரியல் என்னும் முறையைத் தொடரியல், சொல்லியல், எழுத்தியல் என முறை மாற்றி விளக்குகின்றார். மொழியைப் பேசினாலும் எழுதினாலும்

அது தொடரில் இருந்துதானே தொடங்குகின்றது. அது புறநிலை அல்லது புதைநிலைத் தொடராக இருக்கலாம். மேலும் தொடரை விளக்குவதற்கு முன்னர் அது பொருண்மை (Semantics) உள்ளதா என்பதை அறிய வேண்டும் என்கின்றார்.

ஒரு வாக்கியம் எழுவாய் - பயனிலை மயக்கம் காலமயக்கம் போன்றவை இல்லாமல் இலக்கண அமைதியோடு இருந்தாலும் அது பொருள் உயர்த்துவதாக இருக்க வேண்டும். இல்லை என்றால் அவ்வாக்கியத்தை ஆய்வுக்கு உட்படுத்தாமல் தவிர்த்து விடவேண்டும்.

அமைப்பு மொழியியலில் தொடரை விளக்கும் அண்மை உறுப்புப் பகுப்புநிலை (IC.Analysis) வாக்கியங்களை விளக்கப் போதுமானதாக இல்லை என்பதாலேயே சோம்ஸ்கி ஆக்க முறையிலான மாற்றிலக்கணக் கோட்பாட்டை முன்மொழிந்தார். பேராசிரியர் கி.அரங்கன் அவ்விதிகளைப் பின்வருமாறு விளக்குகின்றார்

**தொடரமைப்பு விதிகள்**

**அக அமைப்பு**

மாற்றுவிதிகள்
புற அமைப்பு (ப.41)

மொழியியல் அறிஞர் நோம் சோம்ஸ்கியின் மொழி விளக்கத்தின்படி அக அமைப்பு, புறஅமைப்பில் காணப்படும் வாக்கியம், தொடர்களை மாற்றுவி-திகள் (Transformational Rules) வழியாகத் தெளிவாக விளக்கிவிடலாம். இவற்றை எல்லாம் பேராசிரியர் கி.அரங்கன் நிறைய சான்றுகளுடன் நோம் சோம்ஸ்கி நவீன மொழியியலுக்கு ஓர் அறிமுகம் என்னும் தம் நூலில் விளக்கியுள்ளார்.

**இலக்கணமும் மொழியியலும்**

தமிழில் தொல்காப்பியமும் வடமொழியில் பாணினியின் அஷ்டாத்தியாயியும் இருமரபு சார்ந்த இலக்கண நூல்கள். நாட்டை ஆண்ட அந்நியருக்கு அணுக்கமாக இருந்தவர்கள் வடமொழி அறிந்த பார்ப்பனர்களே. அதனால் வடமொழியை அறிய அந்நியருக்கு அதிகமான வாய்ப்பு இருந்தது. அதன் பெருமையை வெளிப்படுத்தினாலும் அது இந்தியாவுக்கு அந்நியமொழி - அதாவது இந்தோ - ஐரோப்பியாவில் இருந்து கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்தது என்றும் அவர்களே கூறினார்கள்.

சமக்கிருத மொழியை அந்நிய நாட்டினர் ஆராய்ந்தார்கள், மொழியியல் வளர்ச்சிக்கு அதன் பங்கு முக்கியமானது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. வடமொழியைக் கற்று அந்நியர் யாராவது வடமொழியில் இலக்கியம், இலக்கணங்களைப் படைத்துள்ளார்களா என்பது தெரியவில்லை. அந்நியர் மட்டுமில்லை, சமக்கிருதத்தின் பெருமிதம் பேசுவோருக்கும் அம்மொழி வழக்கொழிந்த மொழியாதலால் பேசவோ, எழுதவோ தெரியாது. பேச்சு மொழியாக இருந்தால்தானே இலக்கியங்கள் எழுத முடியும். ஆனால் தமிழில் காலந்தோறும் இலக்கியங்களும் இலக்கணங்களும் தோன்றுகின்றன.

தமிழைக் கற்கவும் கற்பிக்கவும் மேலைநாட்டு அறிஞர்கள் அடிப்படையான சில தமிழ் இலக்கண நூல்களை எழுதி உள்ளார்கள். மரபிலக்கணங்களில் விளக்கப்படாத பல இலக்கணக் கூறுகள் அவற்றில் விளக்கப்பட்டுள்ளன.

மேலும் திராவிடர் நன்றியுடன் போற்றி நினைக்கத்தக்கவர் திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட் கால்டுவெல். இவரைப் போன்றே வீரமாமுனிவரின் தமிழ்ப்பணியும் தமிழ் உள்ளளவும் நிலைத்திருக்கும்.

தொன்னூல் விளக்கம் என்னும் ஐந்திலக்கண நூலை இயற்றியவர் வீரமாமுனிவர் எனப்படும் கான்ஸ்டன் டைன் ஜோசப்பெஸ்கி (1680 - 1747). கொடுந்தமிழ், செந்தமிழ் இலக்கணம் என்னும் அடிப்படை இலக்கண நூல்களையும் இயற்றி உள்ளார். தேம்பாவணி என்னும் காப்பியமும் அன்னை அழுங்கல் அந்தாதி, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் கலம்பகம், அடைக்கலமாலை, கலிவெண்பா போன்ற சிற்றிலக்கியங்களும் சதுரகராதி போன்ற அகராதி நூல்களும் பரமார்த்த குருவின் கதை போன்ற உரைநடைகளும் வீரமாமுனிவருக்கு இறவாப் புகழைக் கொடுக்கும்.

மொழிகளை ஒப்பிட்டு ஆராய, இலக்கணம் எழுத வழி உள்ளதை மரபிலக்கண நூலார் அறிந்திருந்தனர். வீரசோழியம், பிரயோகவிவேகம், இலக்கணக் கொத்து என்னும் இலக்கண நூல்கள் வடமொழியையும் தமிழையும் ஒப்பிட்டு ஒற்றுமை, வேற்றுமை அடிப்படையில் எழுதப்பட்டுள்ளன. உலக மொழிகளுக்கு ஒரே பொது இலக்கணம் இல்லை; எழுதமுடியாது என மரபிலக்கண நூலார் நம்பினர். மொழிகளில் ஒலிப்பு, வரிவடிவம், சொற்கள் புறநிலையில் வேறுபட்டிருப்பதால் இவ்வகையான முடிவுக்கு அவர்களால் வர முடிந்தது. தொல்காப்பிய உரையாசிரியர் தெய்வச்சிலையார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். உலகத்துப் பொருள்

எல்லாவற்றையும் பாடைதோறும் தாம் அறிகுறி இட்டு ஆண்ட துணை அல்லது இவ்வெழுத்தினான் இயன்ற சொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்தோர் இலக்கணம் இன்மையான் என்க (தொ.சொ.151).

மொழியின் புறத்தோற்றமாகிய ஒலி, ஒலியன் மற்றொலி, உருபு, உருபன், மாற்றுருபு, தொடர் என்பவை மொழிக்கு மொழி மாறுபட்டிருந்தாலும் அவற்றுக்கென்று உலகலாவிய பொதுப் பண்புகள் உள்ளன. அவற்றை இனங்கண்டு மொழியியல் உலக மொழிகளுக்குப் பொது இலக்கணம் காண முற்பட்டது. பேராசிரியர் முத்துச் சண்முகன் கருத்து இவண் குறிப்பிடத்தக்கது. எல்லா மொழிகளிலும் பெயர், வினை என்ற பாகுபாடு இருப்பது பொருட் பொதுமை மனிதனுடைய ஒலியுறுப்புக்கள் ஒன்று போல் இருப்பதால் ஒலிக் கூறுகளில் பொதுமை இருப்பதில் வியப்பில்லை. சோம்ஸ்கி உருவாக்கிய பொதுமைக் கூறுகளே மொழியியலில் பெரும்புரட்சியை உண்டு பண்ணியது (மாற்றிலக்கணம். ப.2).

வடமொழி இலக்கண அமைப்பு மொழியியல் என்னும் கோட்பாடு வளர உதவியுள்ளது. தமிழ் இலக்கணங்கள் தொன்மையானவையாக இருந்தாலும் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் தான் அச்சேறத் தொடங்குகின்றன. மொழியியல் பார்க்கும் பொதுப்பார்வை தமிழ் இலக்கணங்களில் தேடிப்பார்த்தால் நிறையக் காணப்படுகின்றன.

### மொழிப் பொருள்

நோம் சோம்ஸ்கியின் சான்று ஒன்று பெரும்பான்மையான மொழியியல் அறிஞர்களால் எடுத்தாளப்படும். Colourless green ideas sleep furiously (நிறமற்ற பசிய எண்ணங்கள் சீற்றத்துடன் உறங்குகின்றன) வாக்கியம் பிழையின்றி அமைந்தாலும் பொருளற்றதாக இருப்பின் அதனைத் தவிர்த்து விடவேண்டும். இக்கோட்பாடு தொல்காப்பிய உரையிலேயே காணப்படுகின்றது.

தொல்காப்பியர், எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (தொ.சொ.152) என்பார். பொருள் குறிப்பதை மெய்ப்பொருள் குறிப்பவை (முயல்,கோடு;யாமை, மயிர், கம்பலம்) எனவும் பொய்ப்பொருள் குறிப்பவை (முயற்கோடு, யாமை மயிர்க் கம்பலம்) எனவும் குறிப்பர். முயற்கோடு உண்டு என்னும் வாக்கியம் எழுவாய் - பயனிலை இயைபுடன் தவறின்றி இருந்தாலும் இல்லாத பொருளை உண்டு எனக் கூறுவதால் தவறுடைய வாக்கியம். முயற்கோடு இன்று என்றே வாக்கியம் அமைய வேண்டும் எனத் தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் (தொ.சொ.157) குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு வருவதை வழூஉ என மரபிலக்கணம் குறிப்பிடும். திணைவழூஉ: அது வந்தான்; பால்வழு: அவள் வந்தான்; இடவழூஉ: உண்டேன்நீ; காலவழூஉ: செத்தானைச் சாம் என்றல்; மரபு வழூஉ; யானை மேய்ப்பானை இடையன் என்றல் (தொ.சொ.11).

### அண்மை உறுப்புப் பகுப்பு நிலை

சொற்களைவிட வாக்கியம் நெகிழ்வுத் தன்மை உடையது. அவன் வந்தான் - வந்தான் அவன் என மாற்றியும் வழங்கலாம். நோம் சோம்ஸ்கியின் மாற்றுவிதி இதற்குப் பயன்படும். ஆனால் பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர் போன்றவற்றை இவ்வாறு மாற்ற முடியாது; எழுவாய் - பயனிலை இயைந்தே வரும். வாக்கியத்தில் தொடரும் சொற்களுக்கு இடையே இயைபு இருக்கும். இவற்றை விளக்க மொழியியல் அண்மை உறுப்புப் பகுப்பு நிலை (IC.Analysis) எனக் குறிப்பிடும். தொல்காப்பிய உரையாசிரியர் சேனாவரையர் வாக்கியங்களில் சொற்கள் அண்மை உறுப்பாக வரும் முறையை, தொடர் மொழியாவது அவாய் நிலையானும் தகுதியானும் அண்மை நிலையானும் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழி ஈட்டம் (தொ.சொ.1) எனக் குறிப்பிடுகின்றார்.

அவாய் நிலை (செங்கால்நாரை), தகுதி (தீச்சுடும்; நீர்குளிரும்), அண்மை நிலை (உணவை உண்டான்).


### பேச்சு உறுப்புகள்

இக்கால மொழியியலார் ஒலிகள் உருவாகப் பயன்படும் உறுப்புகளைக் காற்றறை ((Air cavity) பேச்சுறுப்பு (Speech organ) என இருவகையாகப் பகுப்பர்; பேச்சு உறுப்புகளை இயங்கு உறுப்பு (Active Articulator), இயங்கா உறுப்பு (Passive Articulator) எனப் பகுப்பர் (David Abercrombie, 1966).

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வகையான பாகுபாடு தொல்காப்பியத்தில் பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது (தொ.எ.83). மொழியியலார் மூக்கை ஒரு காற்றறை என்பர்; தொல்காப்பியர் மூக்கை ஒரு பேச்சு உறுப்பு என்கின்றார். இந்த ஒன்றைத் தவிர மொழியியல் விளக்குவதற்கும் மரபிலக்கணம் விளக்குவதற்கும் பெரிய அளவில் வேறுபாடு இல்லை.

### எச்சம் என்பது ஒன்று இல்லை

17ஆம் நூற்றாண்டில் இலக்கணக் கொத்து என்னும் சொல்லிலக்கண நூலை எழுதிய




சாமிநாததேசிகர் தமிழில் ஐந்து எழுத்துகள் மட்டுமே உள்ளன;வடமொழியே தமிழுக்குத் தாய்மொழி, வடமொழி இன்றித் தமிழால் இயங்க முடியாது என்னும் உண்மைக்குப் புறம்பான கருத்துகளைப் பேசினாலும் மொழியியல் கூறும் புதைநிலை அமைப்பு (Deep Sbuctisve) புறநிலை அமைப்பு (Surface Structure) என்னும் தொடரியல் கோட்பாட்டை முன்பே கூறியுள்ளார். எச்சம் என்று ஒன்று இல்லைஞ். விகாரமுற்று (இல.கொ.84).

படித்த பெண் என்னும் பெயரெச்சத் தொடர் ஒரு புறநிலைத் தொடர். இதன் புதைநிலை வடிவம் பெண் படித்தாள். இந்த அளவோடு அமைப்பு மொழியியல் நின்றுவிடும். புதைநிலையில் இருந்து புறநிலை வடிவத்தைக் கொண்டுவரும் மாற்று விதிக் கோட்பாட்டால் நோம் சோம்ஸ்கி மொழியியலில் புரட்சி செய்தார்; உச்சம் தொட்டார் என்று பாராட்டப் படுகின்றார்.

புறநிலை வடிவம் படித்த பெண், புதைநிலை வடிவம்: பெண் படித்தாள் மாற்றுவிதிகள் 1. நீக்கல்விதி - பால் காட்டும் விகுதி ஆள்: பெண் படித்த-2 சேர்த்தல் விதி - பெயரெச்சவிகுதி - அ: பெண்படித்த 3.முறைமாற்றவிகுதி - 1,2 - 2,1 பெண் படித்த - படித்த பெண்.

### எதிர்மறை வடிவங்கள்

தமிழில் உடன்பாட்டு வினைமுற்று, எச்சங்களுக்கு இணையாக எதிர்மறை வடிவங்களும் நிறையக் காணப்படுகின்றன. தொல்காப்பிய உரையாசிரியர்கள் சான்றுகள் கொடுக்கின்றார்களே தவிர, தொல்காப்பியர் எதிர்மறை வினையெச்ச, பெயரெச்ச வாய்பாடுகளைக் குறிப்பிடவில்லை. உடன்பாட்டுப் புதைநிலை வடிவில் இருந்து எதிர்மறைப் புறவடிவங்களைப் பெறலாம் என்பதே இதன் அடிப்படையாகும்.

மரத்தைக் குறைத்தான் - மரத்தைக் குறையான் என்னும் வாங்கியங்கள் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வருகின்றவே தவிர, வேற்றுமை உருபு ஏற்று வருவதில் எந்த வேறுபாடும் இல்லை (தொ.சொ.107). இதே போன்று பெயரெச்சமும் வினையெச்சமும் உடன்பாடு - எதிர்மறையில் வந்தாலும் பொருள் வேறுபடுமே தவிர, அமைப்பு ஒன்றாக இருக்கும் (தொ.சொ.236). அதாவது புறநிலையில் வரும் எதிர்மறை எச்சங்களுக்குப் புதைநிலையில் வரும் எச்சங்களே அடிப்படை வடிவங்கள் உண்டசோறு - உண்ணாச்சோறு; உண்டு வந்தான் - உண்ணாது வந்தான். நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கண விதிகள் வழிப் பெறலாம்.

மேலே விளக்கப்பட்டுள்ள பொருண்மை-யியல், எழுத்தியல், சொல்லியல், தொடரியல் தமிழ் இலக்கணக் கூறுகள் அனைத்தும் ஒருமொழிக்கு உரியதாயினும் பொதுமைப் பண்பு நிறைந்தவை பேராசிரியர் கி.அரங்கன் மொழியியல் வளர்ச்சிக்கு வட மொழி இலக்கண மரபு உதவியதைச் சுட்டிக் காட்டுகின்றார். புளூம்பீல்டு (1933) ஜான் லைன்ஸ் (1968), நோம் சோம்ஸ்கி (2001) குறிப்பிட்டவற்றைச் சுட்டுகின்றார். தமிழ் இலக்கண மரபு தொடக்க கால மொழியியல் அறிஞர்களுக்கு அதிகம் தெரியவாய்ப்பில்லாமல் இருந்துள்ளது.

### சோம்ஸ்கியும் அரசியலும்

உலகம் முழுவதிலும் ஆன்றவிந்து அடங்கியோர் கணக்கற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் படைப்புகளின் வழி வாழ்ந்து கொண்டும் இருக்கின்றார்கள். அனைவரையும் சான்றோர் எனக் குறிப்பிட முடியாது. தம்மின மக்கள் வாழ வேண்டும் என நீதி நூல்களை எழுதியவர்களும் இருக்கின்றார்கள். அவர்களைப் பார்த்து 'நீங்கள் வாழப் பிறரைக் கெடுக்காதீர்கள்' என்றுதான் சொல்ல வேண்டும்.

உலகப்பொதுமறையை அருளிய திருவள்ளுவப் பெருந்தகை அனைவரும் இசைபட (திருக்.231)

வாழ வேண்டும் என்கின்றார். அடுத்தவரைச் சுரண்டி வாழ வேண்டும் என நினைப்பவர் கொடூர மனம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆளும் வர்க்கத்தின் இடத்தை மதவாதிகள் பிடித்துக் கொண்டார்கள்; பண்ணையார்கள், முதலாளிகள், உலகப்பெரு முதலாளிகள் என ஆள் மாறுகின்றார்களே தவிர, சுரண்டலும் ஏமாற்றும் மாறவில்லை.

பல முற்போக்குச் சிந்தனையாளர்கள் விடுதலை, சமத்துவம், சகோதரத்துவத்திற்காக வாழ் நாளைத் தியாகம் செய்துள்ளார்கள். கார்ல் மார்க்ஸ், உலக அளவிலும் அம்பேத்கர் இந்திய அளவிலும் பெரியார் தமிழக அளவிலும் குறிப்பிடத்தக்கவர்கள்.

உலகம் போற்றும் மொழியியல் சிந்தனையாளர் மாமேதை நோம் சோம்ஸ்கி அதிகார வர்க்கத்தின் மேலாண்மைப் போக்குக்கு எதிராகவும் குரல் கொடுக்கின்றார். ‘படித்தவன் சூது செய்தால் ஐயோ ஐயோ என்று போவான்’ என்கிறார் மகாகவி. அவர்கள் போகிறார்களே இல்லையோ? மக்கள் உலகம் முழுவதிலும் ஐயோ ஐயோ என்று வறுமை, போர், நோய் போன்றவற்றால் மடிகிறார்கள்.

சர்க்கரை, இதய நோய், சிறுநீரகக் கோளாறு, புற்றுநோய் எனப் பல்வேறு தொற்றா நோய்களால் மடிகின்றார்கள். வெடி குண்டு தயாரிக்கப் பயன்படும் இரசாயனப் பொருள்களை வேளாண் உற்பத்திக்குப் பயன்படுத்தினால் இவ்வாறு தான் நடக்கும். அதிகாரவர்க்கத்துக்குத்தான் இல்லை; அறிவாளிகளுக்கு - வேளாண் விஞ்ஞானிகளுக்கு அடிப்படை அறிவு வேண்டாமா?

உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விட்டதாகப் பெருமிதம் பேசுகின்றார்கள். புதுப்புது நோய்கள் உற்பத்தி ஆகி இருப்பதை மறந்துவிடுகின்றார்கள். அறுபது-எழுபது ஆண்டுகளுக்கு முன்னர்த் தொற்று நோய்கள் இருந்தன. பசுமைப்புரட்சி வந்த பிறகு ஒவ்வொரு மனிதரின் உடம்பிலும் புற்றுக்குள் பலவகைப் பாம்புகள் குடி இருப்பது போலப் பலவகை நோய்கள் இடம் பிடித்துக் கொண்டுள்ளன. மருந்து கண்டு பிடிக்கின்றார்களே தவிர, நோயின் மூலத்தை அறிவதில்லை. நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் / வாய் நாடி வாய்ப்பச் செலல் (திருக். 948). ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். உடல் நலத்திற்கும் உலகச் சுற்றுச் சூழலுக்கும் மரபு சார்ந்த வேளாண்மையே சிறந்தது. நம்மாழ்வார் போல இந்திய அளவிலும் பலர் குரல் கொடுக்கின்றார்கள். ஆளும் வர்க்கத்தின் பிடியில் வேளாண்மை சிக்கித் தவிக்கும்போது ஏழை சொல் அம்பலம் ஏறுமா? பசுமைப் புரட்சி உடும்பைப் போல வேளாண்மையைக் கௌவிக் கொண்டிருக்கின்றது; நாம் உதற நினைத்தாலும் அது விடாது. சூழல் அப்படி அடைந்து விட்டது.

பேராசிரியர் கி.அரங்கன் நோம் சோம்ஸ்கியின் அரசியல் செயற்பாட்டை விளக்குவதோடு தம்முடைய கருத்தையும் தெளிவாகப் பதிவு செய்கின்றார். சோம்ஸ்கியின் அரசியல் சிந்தனையைப் படிக்கும்போது தற்போது பொருளாதார மேதாவிகள் பேசியதும் நினைவுக்கு வருகின்றது. இலவசங்கள் கொடுப்பதால் தான் நாட்டின் முன்னேற்றமே நலிவடைகின்றதாம். குளிர்சாதன அறையில் இருந்து கொண்டு எப்படி எல்லாம் சிந்திக்கின்றார்கள்!

தம்முடைய உழைப்புக்கு ஏற்ற கூலி கிடைக்கவில்லை; வேலை வாய்ப்பும் நிலையாகக் கிடைக்கவில்லை. உற்பத்திப் பொள்ருகளுக்கு உரிய விலையும் கிடைக்கவில்லை. வேளாண் மக்களின் நிலையைச் சொல்ல வேண்டியதில்லை; ஊருக்குச் சோறு போட விவசாயியின் தாலி அறுபடுகின்றது. அவர்களுக்குக் கொடுக்கப்படும் இலவச மின்சாரம், சில மானியங்களை மேதாவிகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கருப்புப் பணம் பல்லாயிரங் கோடிகளாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பதுக்கப்படுகின்றது. வங்கி மோசடி செய்து பல்லாயிரம் கோடிகளைச் சுருட்டிக் கொண்டு ஆளும் வர்க்கத்தின் ஆசிபெற்று நாட்டைவிட்டு ஓடி விடுகின்றார்கள். ஒன்றிய அரசு பெரும்பான்மை மக்களுக்குச் கொஞ்சம் கிள்ளிக் கொடுக்கிறது. அது இந்தப் பொருளாதார நிபுணர்களின் கண்ணை உறுத்துகின்றது. பெரும் பெரும் நிறுவனங்களுக்குப் பல லெட்சம் கோடிகளை ஒன்றிய அரசு மானியமாகக் கொடுக்கின்றது. கடனைத் தள்ளுபடி செய்கின்றது. இவை எல்லாம் அந்த மேதாவிகளுக்குத் தெரியவில்லை.

வேளாண் சட்டங்களை ஒன்றிய அரசு திரும்பப் பெற்றதால் வேளாண் மக்கள் இரு மடங்காகக் கிடைக்கக் கூடிய வருவாயை இழந்து விட்டார்களாம். அவை மட்டும் திரும்பப் பெறாமல் இருந்தால் விவசாயிகளின் கூரையைப் பிய்த்துக் கொண்டு வருமானம் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அதிகமாகக் கொட்டி இருக்குமாம். நிபுணர்கள் என்னமாயக் கதை விடுகின்றார்கள். அவை கார்பரேட் நிறுவனங்களுக்காகக் கொண்டு வரப்பட்டவை என்பது கோமணம் கட்டாததுகளுக்குக் கூடத் தெரியும்.

கார்பரேட் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் வேளாண் எந்திரங்கள், உரங்கள், பூச்சி, களைக்

கொல்லிகள், விதைகள் எரிபொருள்கள் விலை ஏறுவதுபோல ஏறுகின்றன ஆனால் வேளாண் உற்பத்திப் பொருள்களின் விலை சேற்றில் மாட்டிய யானை போல இறங்கு முகமாகவே உள்ளது. இந்த அதிகாரவர்க்க மேதாவிகளுக்குத் தெரியாதவை இல்லை.

ஆட்டுக்குத் தாடி போலத்தான் மாநிலத்திற்கு ஆளுநர் என அண்ணா கூறியது தமிழகத்தில் ஒரு சொலவச் சொல் போல ஆகிவிட்டது. தமிழக ஆளுநர் ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் இணைப்புப் பாலம் போலச் செயல்படலாம். உளவுத்துறை, காவல் துறையில் பணியாற்றியவர்களுக்குக் கைப் புண்ணைப் பார்க்கக் கூடக் கண்ணாடி தேவைப்படும். மாநில உணர்வுகளை மதிக்காதவர் பந்தி வைத்தால் கடை விரித்தோம் கொள்வாரில்லை என்னும் நிலைதான் ஏற்படும். அதிகாரம் என வந்துவிட்டால் மெத்தப்படித்தவர்கள், படிக்காதவர்கள் என எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டையாகத் தான் இருப்பார்கள் போலும்!

அரசியலை மதம், உளவுத்துறை, காவல்துறை கைப்பற்றிக் கொண்டால் எரியும் நெருப்புக்குக் காற்று துணை நிற்பது போலத்தான். சிறுபான்மை மதத்தினரும் பெரும்மதத்தின் அடித்தட்டு மக்களும் படாதபாடுபடுவார்கள். எனவே தான் நோம் சோம்ஸ்கி அறம் சார்ந்த அறிவாளிகள் ஆளும் வர்க்கத்திற்குத் தேவை என்கின்றார்.

நாகலாந்தில் இருந்து மாற்றப்பட்ட தற்போதைய தமிழக ஆளுநரை நினைக்கும்போது இராபர்ட் கிளைவ் தான் நினைவுக்கு வருகிறார். இங்கிலாந்தில் அடங்காப்பிடாரி, வில்லங்கம் பிடித்தவர்களைக் காலனி நாடுகளுக்கு ஆட்சி செய்ய அனுப்புவார்களாம்! காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தேர்தலில் வென்றால் அமைச்சர், தோற்றால் ஆளுநர் என்பார்கள். எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களைக் குறை கூறவும் எதையாவது குண்டக்க மண்டக்கப் பேசவும் தகுதி பெற்றால் ஒன்றிய அரசு ஆளுநர் பதவி கொடுக்க வாய்ப்புள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு முட்டுக்கட்டை போடும் ஆளுநரே தேவையில்லை எனப் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

பல்கலைக் கழகத் துணை வேந்தரை மாநில ஆளும் கட்சி தெரிவு செய்தால் அரசியல் கலந்து விடுமாம். ஆளுநர்களும் அரசியல்வாதிகள் தான்; பொறுப்பேற்றவுடன் புனிதர்களாகவா மாறி விடுகின்றார்கள்? அண்மைக் காலத்தில் பொறுப்பேற்ற பல துணை வேந்தர்கள் ஒன்றிய அரசுக்குத் துணை போகின்றவர்களே!

நீட் தேர்வு, பேரறிவாளன் விடுதலை போன்றவற்றில் தற்போதைய ஆளுநர் எவ்வளவு அழிச்சாட்டியம் செய்கின்றார்? மாநில அரசின் உரிமைகளை அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராகப் பறித்து வைத்துக்கொண்டு ஒன்றிய அரசு தேவை இல்லாமல் குடைச்சல் கொடுக்கின்றது. பாபர் மசூதி போன்ற வழக்குகளில் மக்கள் உச்சநீதி மன்றத்தின் மீது கொண்டிருந்த ஒவ்வாமையை பேரறிவாளன் விடுதலை வழி மாற்றி விட்டது. ஆளும் வர்க்கத்திற்கு அதிகார வர்க்கத்தில் உள்ளவர்கள் தவறான தகவல்களைக் கொடுப்பதால் ஏற்பட்ட பிழை. முப்பத்தோர் ஆண்டுகள் பேரளிவாளனின் வாழ்க்கை-இளமை வீணே கழிந்துள்ளது.

உலகில் ஏதாவது சிக்கல் வரும்; உணவுப் பஞ்சம் வரும்; விலை உயரும்; இப்படி வரும்போதுஅதிகார வர்க்கம் திசைதிருப்ப ஏதாவது ஒரு நரித் தந்திரம் செய்யும். அப்படிப்பட்ட ஒன்றைப் பேராசிரியர் கி.அரங்கன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளப் போர் ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. போர் ஏற்படுகின்ற சூழலில் நாட்டு மக்களின் முழுக் கவனமும் போரை நோக்கித் திருப்பி விடப்படுகின்றது. கருத்து மோதல்கள் மறக்கப்பட்டு நாட்டுப்பற்று முன்னிறுத்தப்படுகின்றது. சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் தங்கள் முழு ஆற்றலையும் தங்கள் நாட்டின் வெற்றி என்ற திக்கை நோக்கிச் செலுத்துகின்றார்கள்.(ப.177).

மொழியியல் அறிஞர் நோம் சோம்ஸ்கி வியட்நாம் போர், இலங்கைப் போர் போன்றவற்றுக்கு எல்லாம் கடுமையாகக் குரல் கொடுக்கின்றார். வியட்நாமில் அமெரிக்கா போர் செய்தபோது பல்லாயிரக்கணக்கான வீரர்கள் மாண்டு போனார்கள். குடி மக்களின் வரிப்பணம் வீணாகச் செலவு செய்யப்பட்டது. வியட்நாமில் நடைபெறும் போருக்காக அமெரிக்கா தன் குடிமக்களின் வரிப் பணத்தைச் செலவிடுவதால், அக்குற்றத்தைத் தடுக்கும் வழியில் தாம் அமெரிக்கக் குடிமகன் என்ற முறையில் வரி செலுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அதற்காக அமெரிக்க அரசு அவரைச் சிறையிலும் அடைத்தது (பக்.121 - 122).

பேராசிரியர் கி.அரங்கன் நோம் சோம்ஸ்கியின் அரசியற் பார்வை அறம் சார்ந்தும் மானுட நேயம் சார்ந்தும் இருப்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ஒரு அரசு பெரும்பாலான உழைக்கும் மக்களுக்கு எதிரானதாகவும் சிறுபான்மையான் முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் சாதகமானதாகவும்

அமையும்போது அடக்குமுறை ஏவி விடப்படும். உழைக்கும் மக்களின் போராட்டங்கள் நசுக்கப்படும். அங்கு மனித இயல்பான படைப்பாற்றல் வெளிப்பட முடியாது. உழைப்பு சுகமானது என்ற நிலையிலிருந்து அது எந்திர கதியானது என்ற நிலைக்கு அந்த நிலை நம்மை இழுத்தும் செல்லும். மனித மனம் ஒன்றாத உழைப்பு அவனுக்கு அந்நியமாகிறது. கொடுக்கப்படும் கூலிக்காக உழைப்பு அங்கு விற்கப்படுகின்றது. முதலாளித்துவம் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்தச் சூழல் ஒரு வணிக மையமான சூழல் மனித உறவுகளுக்கு எந்தவித இடமும் அங்குக் கிடையாது (ப.129).

தங்கள் சுகபோக வாழ்க்கைக்கும் முறையற்ற பதவி உயர்வுகளுக்கும் ஆளும் வர்க்கத்திற்குத் துணையாகப் பணியமர்த்தப்படும் அறிவாளிகள், அதிகாரிகள் சோரம் போகக் கூடாது என்பது நோம் சோம்ஸ்கின் கருத்தாகும்.

ஆளுகின்றவர்கள் அறிவாளியாக இருக்க வேண்டும் என்பதில்லை. முடியாட்சி, மக்களாட்சி காலங்களின் வரலாற்றில் பார்க்கின்றோமே! நல்ல அறிவாளிகள் சுயநலம் இல்லாத அறம் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது உலகின் தலைசிறந்த ஒரு மார்க்சியச் சிந்தனையாளர் நோம் சோம்ஸ்கியின் வேண்டுகோள்.

உலக மொழிகள் அனைத்திற்கும் பொதுமை இலக்கணம் கூறிய மொழியியல் அறிஞர் நோம் சோம்ஸ்கி ஒட்டுமொத்த மானுட இனம் நாடு, மதம் உயர்வு - தாழ்வு என்னும் வேறுபாடின்றி வாழ விரும்புகின்றார். அதிகார வர்க்கமும் அறிவாளி வர்க்கமும் அறம் சார்ந்து சிந்திக்க வேண்டும், செயல்பட வேண்டும் என விரும்புகின்றார். முற்போக்காளர்களான கார்ல் மார்க்ஸ், எங்கல்ஸ், பெரியார் அம்பேத்கர் போன்ற இடது சாரிச் சிந்தனையாளர்களால் தான் இப்படிச் சிந்திக்க முடியும்.

போர் என்பது பூமியின் உயிரினங்களுக்கு மரணத்தின் முன்னறிவிப்பாகும். அங்கு வெற்றியாளர்களே இல்லை. மனித வரலாற்றில் நாம் ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கிறோம். அதை மறுக்கவோ அல்லது புறக்கணிக்கவோ முடியாது (இந்து-தமிழ், ப. 6, 22-5-2022). உலக மொழிகளுக்கு எல்லாம் பொதுமை இலக்கணம் கூறிய பேரறிஞர் நோம் சோம்ஸ்கி அண்மைப் பேட்டியில் உலக ஏதேச்சிகாரச் செயல்பாட்டாளர்களின் ஒட்டு மொத்த மனநோய் குறித்துச் சிந்தித்துள்ளார். போர் வெறியைத் தூண்டுகின்றவர்கள், மத வெறி, மொழி வெறியைத் தூண்டுகின்றவர்களால் மனித குலம் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உயிரினங்களும் அழியப்போவதைக் குறிப்பிடுகின்றார்.

ஏற்கனவே தொழிற்புரட்சியாலும் பசுமைப் புரட்சியாலும் பல உயிரினங்கள் இயற்கை வளங்களும் ஆண்டுக்கு ஒரு நாள் நினைவு தினம் கொண்டாடும் நிலையை அடைந்து விட்டன. முதல், இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து ஆங்காங்கே நடந்த போர்களாலும் தற்போதும் நடக்கும் போர்களாலும் இந்த உலகம் குட்டிச் சுவர் ஆகப் போவதை உலகின் ஆகச் சிறந்த மாமேதை நோம் சோம்ஸ்கி முன்னெச்சரிக்கையாகக் குறிப்பிடுகின்றார். இப்படி உலகளாவிய வளர்ச்சி சார்ந்து சிந்திப்பவர்கள் தாம் வரலாற்றில் மாமேதைகள் மற்றவர்கள், அவரவர் விருப்பப்படி நிரப்பிக் கொள்ளலாம்.

பேராசிரியர் கி.அரங்கன் தமக்கு மொழியியலின் ஆகச் சிறந்த கோட்பாட்டைக் கற்றுத் தந்த மொழியியல் மேதை நோம் சோம்ஸ்கியைத் தமிழில் தெளிவாக அறிமுகப்படுத்துகின்றார். பல்லாண்டுகள் வாழ வாழ்த்தி வணங்குவோம்.

கட்டுரையாளர், ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்,
இலக்கணவியல் ஆய்வாளர், எழுத்தாளர்.

**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**
**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**
தொடர்பு கொள்ள
**98412 93503**

கட்டுரை

# குழந்தையும் பொய் சொல்லுதலும்



மருத்துவர். ப. வைத்திலிங்கம்

குழந்தைகள் வாழ்வில் சிறக்க வழி சொல்லும் பாரதி ‘பொய் சொல்லக் கூடாது பாப்பா’ என்றும் சொல்லுகிறான். நற்பண்புகளும் பழக்கங்களும் அமையப்பெற்று வாழும் மனிதன் இந்த சமூகத்திற்குக் கிடைத்த வரம் எனலாம். நற்பண்புகளில் எல்லாம் தலையானது உண்மை பேசுதல் அல்லது பொய் சொல்லாமை என்பதுதான். திருவள்ளுவரும் யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற என்று சொல்லுகிறார். அதாவது வாய்மையைப் போல் சிறந்த பண்பு வேறு ஒன்றும் இல்லை என்கிறார்.

ஆனால் மனித வாழ்வில் யாரும் பிறந்ததிலிருந்து உண்மை மட்டுமே பேசுவதில்லை. மாறாகப் பொய் பேசும் பழக்கமும் நமக்கு சிறுவயதில் இருந்தே வந்து விடுகிறது. எப்போது குழந்தைகள் பொய் பேசக் கற்றுக் கொள்கிறார்கள் என்பதையும், பெற்றோர்களான நாம் அவர்களுக்கு எப்படி உண்மையைப் பேசச் சொல்லி நேர்மையைச் சொல்லிக் கொடுக்கலாம் என்பதையும் இக்கட்டுரையில் பார்ப்போம்.

பெற்றோர்களுக்கு முதல் இரண்டு மூன்று வருடங்கள் குழந்தை வளர்ப்பது சற்று எளிதாகவே

இருக்கிறது என்றே கூறலாம். குழந்தையும் பேசவும் நடக்கவும் கற்றுக்கொண்டு, மூறு வயது ஆனவுடன் இந்த உலகத்தை ஆராய ஆரம்பித்து விடுகிறது. ஒவ்வொரு விஷயத்துக்கும் ஏன், எதற்கு, எப்படி என்று பெற்றோரைக் கேள்வி மேல் கேள்வி கேட்கத் தொடங்கி விடுகிறது. ஒவ்வொரு கேள்விக்கும் நம்மால் தொடர்ந்து பதில் சொல்ல முடிவதில்லை. கொஞ்சம் வாயை மூடுகிறாயா? என்று குழந்தையிடம் நாம் கோபமாய் பேசும்போது, குழந்தை பயத்தில் மௌனமாகிறதே ஒழிய, நம்மை சற்று அதிகமாகவே கண்காணிக்க ஆரம்பித்து விடுகிறது.

குழந்தை ஒரு பொம்மைக்கு அடம் பிடிக்கும் போது நாளைக்கு ஆபீஸ் விட்டு வரும்போது கட்டாயம் பொம்மையோடு வருகிறேன் என்று அப்பா குழந்தையிடம் உறுதிமொழி கொடுத்து விட்டு மறுநாள் வெறுங்கையோடு வரும்போது குழந்தை முதலில் ஏமாற்றம் அடைகிறது. அப்பாவின் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள முரண்பாட்டை புரிந்து கொள்ள முயல்கிறது. அப்பா சொன்னது பொய் என்று மெல்ல மெல்லத் தெரிந்து கொள்கிறது. ஆனால் புரிவதற்குத்தான் சற்றுத் தாமதமாகிறது. வீட்டிற்கு வெளியே நிற்கும் பக்கத்து வீட்டு அங்கிளிடம் அப்பா வீட்டில் இல்லை என்று சொல்லுடா' (வீட்டில் இருந்து கொண்டே) என்று அப்பா பையனிடம் அதிகாரமாகச் சொல்லும்போது குழந்தை மெல்ல மெல்ல அப்பாவின் பொய் சொல்லும் திறமையைக் கண்டு கொள்கிறது.

**பொய் சொல்வது ஒரு பரிணாம வளர்ச்சியா?**

எதிராளி கேட்கும் கேள்விக்கு பதில் அளிக்கும் போது, நடந்த நிகழ்வைச் சொல்லாமல் மனமறிந்து அவரை ஏமாற்றும் விதமாக உண்மையை மறைத்து சொல்வதுதான் பொய் எனப்படுகிறது. விலங்கியல் ஆராய்ச்சியாளர்களும் மனித இனத்தின் தோற்றத்தைப் பற்றி ஆராயும் மானுடவியல் நிபுணர்களும், ஆராய்ந்ததில் விலங்குகளில் நமக்கு முன்னோடியான சிம்பன்சி வகைக் குரங்குகளுக்கு பொய்யான சிக்னல்கள் கொடுத்து மற்ற குரங்குகளை ஏமாற்றும் திறமை இருப்பதைக் கண்டனர். அங்கே இருந்து வந்தவர்கள் தானே நாமும். நமக்கும் அந்த DNA இருக்கத்தானே செய்யும். எனவே பொய் சொல்லும் திறமை நமக்கும் தானாகவே வந்து விடும். பரிணாம வளர்ச்சி பற்றி ஆராய்ந்த டார்வின் இயற்கையிலேயே எல்லா உயிரினங்களுக்கும் எப்படியாவது இந்த உலகில் உயிர் பிழைத்து வாழ்ந்து விட வேண்டும் என்ற உள்ளுணர்வு (SURVIVAL OF THE FITTEST) இருப்பதாகக் கூறுகிறார். மனிதனும் இந்த உணர்வால் உந்தப்பட்டு வாழ முயலும் போது பொய் சொல்லும் திறனையும் ஒரு ஆயுதமாக்கிக் கொள்கிறான்.

குழந்தைகளை வைத்து மனவியலாளர்கள் ஒரு வினோதமான ஆராய்ச்சியை மேற்கொண்டார்கள். 1989ல் லூயிஸ்ஸும் மற்றவர்களும் சேர்ந்து குழந்தைகளின் ஆசையைத் தூண்டும் விதமாக ஒரு பரிசோதனையைச் செய்தார்கள். 3 லிருந்து 5 வயது வரை உள்ள குழந்தைகளைத் தேர்வு செய்து ஒவ்வொருவரிடமும் ஒரு பொம்மையை அட்டைப் பெட்டிக்குள் வைத்து மூடிக் கொடுத்தார்கள். உள்ளே இருக்கும் பொம்மையை யாரும் பார்க்கக் கூடாது என்று சொல்லி விட்டு அந்த அறையை விட்டு வெளியில் வந்து விட்டார்கள். சற்று நேரம் கழித்து மீண்டும் உள்ளே போய் யார் யார் பெட்டியைத் திறந்து பொம்மையைப் பார்த்தீர்கள் என்று கேட்ட போது, நிறைய குழந்தைகள் பொம்மையைப் பார்த்திருந்தாலும் பார்க்கவில்லை என்றே பொய் சொன்னார்கள். இவர்களுக்குத் தாங்கள் சொல்வது உண்மையில்லை என்று தெரிந்தும் பொம்மை மீது உள்ள ஆசையால் பெட்டியைத் திறக்க வில்லை என்று கூறினார்கள். வயதைக் கவனியுங்கள், மூன்று. பொய் பேச ஆரம்பிக்கும் வயது. ஆனாலும் அடுத்தவரிடம் உண்மையை மறைத்துத் திறமையாகப் பொய் பேசக் கற்றுக் கொள்வது எல்லாம் பத்து வயதுக்குப் பிறகுதான்.

குழந்தைகள் பொய் சொல்லக் கற்றுக் கொள்வது அவர்கள் சமூகத்தோடு பழக முயற்சிக்கும் மன வளர்ச்சியின் ஒரு படியாகவே மனவியலாளர்கள் கருதுகிறார்கள். 2-3 வயதில் குழந்தை உண்மை பேச வேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. ஆனாலும் ஒரு நான்கு வயது குழந்தையால் பொய் சொல்லுவது நல்ல பழக்கம் இல்லை என்று தெளிவாகக் கூற முடியும். ஐந்து வயதிலிருந்து 7-8 வயது வரையிலும் குழந்தைகள் மீடியாக்களில் வரும் கற்பனைக் காட்சிகளையும் உண்மை என நம்பி அதுபோல தாங்களும் செய்ததாகப் பொய் சொல்வது உண்டு. அதேபோல் கேட்கும் பெற்றோர்கள் ஆச்சரியப்படுவார்கள், நம்மைப் பாராட்டுவார்கள் என்று எண்ணி உண்மை நிகழ்வுகளைக் கூட, மிகைப்படுத்தி பொய்களையும் சேர்த்துச் சொல்வார்கள். கேட்பவர்கள் தான் இவைகளில் எது உண்மை, எது பொய் என தீர்மானிக்க வேண்டும். நம் அன்றாட வாழ்வில் நடக்கும் கிண்டல், கேலி, யூகித்தல் போன்றவைகளிலும் நிறைய பொய்கள் இருக்கும். இம்மாதிரியான பொய்களால் யாருக்கும் எந்தத் தீமையும் இல்லை. இவையெல்லாம் குழந்தை இந்த சமூகத்தோடு பழகக் கற்றுக் கொள்ளும் வழிகளாகவே எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

**பொய் எப்போது குற்றமாகிறது?**

பத்து வயது ஆன பிறகும் ஒரு குழந்தை தொடர்ந்து பொய் சொல்லும்போது நாம் அதைப்

பற்றிக் கவலைப் படாமல் இருக்க முடிவதில்லை. ஒரு டீன் ஏஜ் பையனோ, பெண்ணோ பொய்யை மிக நேர்த்தியாகச் சொல்லக் கற்றுக் கொள்கிறார்கள். இந்த வயதினர்கள் பிறருக்கோ சமூகத்திற்கோ நன்மை பயக்கும் படியாகச் சொல்லும் பொய்கள் எல்லாம் பொய் என்ற வட்டத்திற்குள்ளே வருவதில்லை. சமூகமும் மற்றவர்களுக்குத் தீங்கு இல்லாத வரையில் இதைக் கண்டு கொள்வதில்லை. ஆனால் இந்த வயது உடையவர்கள் பெற்றோரையோ, சமூகத்தையோ எதிர்த்து நிற்கும் போது, அல்லது தண்டனையில் இருந்து தப்புவதற்கு, அல்லது ஏதாவது ஆதாயம் அடைவதற்கு அல்லது பிறருக்குத் தீங்கு உண்டாக்குவதற்கோ கூட மனதாரப் பொய் சொல்லி அதை உண்மை என்றே கடைசி வரை வாதாடுவார்கள்.

ஆக பொய் சொல்வதையே இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. பிறருக்குத் தீங்கு விளைவிக்காத பொய்கள் *(PROSOCIAL LIES)*. 2. தீங்கு விளைவிக்கும் பொய்கள் *QUWAGT (ANTISOCIAL LIES)*.

இவ்வுலகில் எப்படியாகிலும் பிழைத்து வாழ வேண்டும் என்று போராடி வளரும் குழந்தை 3 வயது ஆகும்போது, அதன் ஒவ்வொரு திறனும் வளரும் போது இந்த பொய் சொல்லும் திறமையும் வந்து விடுகிறது. சொல்லக்கூடிய பொய் மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்காமல், நன்மை மட்டுமே பயக்கும் போது சமுதாயமும் அதை அங்கீகரித்து விடுகிறது. இடம் பொருள் ஏவல் பார்த்து சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் பொய் சொல்லுவது ஒரு குற்றமாகப் பார்க்கப்படுவது இல்லை. இதைத்தான் திருவள்ளுவரும் 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்று அன்றே சொல்லி விட்டார். ஆனால் அந்த பொய்யினால் மற்றவர்களுக்கு தீங்கு வரும் போது மாறாக சமுதாயம் தண்டிக்க முயல்கிறது.

**என்ன காரணம்?**

குழந்தைகள் பொய் சொல்வதைக் கற்றுக் கொண்டு அதையே பழக்கமாக்கிக் கொள்ளும் போது பின்னாளில் சமூகத்தால் நிராகரிக்கப்படுகிறார்கள். இதற்கான காரணங்களை ஆராயும் போது முதலில் இருப்பது, அமைதியில்லாத பாதுகாப்பற்ற குடும்ப சூழ்நிலைதான். அடுத்து, அங்கே ரோல் மாடல் பெற்றோர்கள் இல்லாதது. எந்த நேரத்திலும் உண்மைதான் சொல்ல வேண்டும், பொய் சொல்லத் தேவையில்லை என்று வாழ்ந்து காட்டும் பெற்றோர்கள் இல்லை. குழந்தைகள் பொய் சொல்லும் போதெல்லாம் கண்டிக்காமல் 'எவ்வளவு புத்திசாலி என் பிள்ளை' என்று பாராட்டும் பெற்றவர்களாக இருக்கலாம். இம்மாதிரி குழந்தைகள் விடலைப் பருவத்தை அடையும் போது, வெளி உலகத்தின் தாக்கமும் வேண்டாத நண்பர்களின் பழக்கமும் சேர்ந்து தவறான பாதைக்கு திசை திருப்பி விடுகின்றன.

**எப்படித் திருத்துவது?**

எட்டு வயது வரையிலும் பொய் சொல்வதை பெரிய குற்றமாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. அதனால் எட்டு வயது வரையிலும் எதுவும் செய்யாமல் இருந்து விட்டு திடீரென்று எட்டு வயதில் சொல்லிக் கொடுத்து விடலாம் என்றாலும் முடியாது. ஐந்தில் வளைக்க முடியாததை ஐம்பதிலா வளைக்கப் போகிறோம்? எனவே 3 வயதிலிருந்தே குழந்தைக்கு உண்மையைச் சொல்லும்படி பழக்கப்படுத்த வேண்டும். பொய் சொல்லி விட்டது என்பதற்காக பெரிய தண்டனை எல்லாம் கொடுத்து பயமுறுத்தி வளர்க்கக் கூடாது. குழந்தையின் நிலைக்கு பெற்றோர்கள் இறங்கி வந்து அவர்களுக்கு புரியும்படி சொன்னாலே போதும். முக்கியமாக குழந்தைகளின் சொல்லுக்கும் செயலுக்கும் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு பழக்க வேண்டும். நாளடைவில் அவர்களும் எந்த நிலையிலும் உண்மையைச் சொல்ல பயப்பட மாட்டார்கள். அதை விடுத்து பொய் சொல்லும் போதெல்லாம் குழந்தையைக் கண்டிக்காமலும், புரிய வைக்காமலும் எல்லாம் போகப் போக சரியாகி விடும் என்று இருப்பது சரியல்ல. முதலில் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு முன்னுதாரணமாக இருந்தால்தான் உண்மை, நேர்மை போன்ற குணங்களோடு குழந்தையும் வளரும். நினைவு இருக்கட்டும். குழந்தைகள் உங்களைக் கவனித்துதான் வளர்கிறார்களே ஒழிய உங்கள் பேச்சைக் கேட்டு அல்ல.

ஒரு டீன் ஏஜ் பையனோ பெண்ணோ பொய் சொல்லுவதையே பழக்கமாக்கிக் கொள்ளும்போது *(HABITUAL LIARS)* சமூகம் அவர்களை திருத்தப் பார்க்கிறது, முடியாத போது தண்டித்து விடுகிறது. ஒரு இளம் குற்றவாளி உருவாவதற்கான சூழலும் வந்து விடுகிறது. அப்போது எங்கே தவறு நடந்தது என்று கண்டு பிடிக்க அனைவரும் முயல்கின்றனர். கவனித்து வளர்ந்த குடும்ப சூழல் சரியில்லையா அல்லது படித்த பள்ளிக்கூடத்தில் உண்மையைப் பேச வேண்டும் என்று சொல்லித் தரவில்லையா அல்லது வாழும் சமூகம் தான் சொல்லிக் கொடுக்கவில்லையா? என்று ஒருத்தரை ஒருத்தர் குற்றம் சொல்லிக்கொள்ளும் நிலைமைதான் கடைசியில்.

கட்டுரையாளர், குழந்தைகள் நல மருத்துவர்.

நூல் அறிமுகம்

# திராவிட முன்மாதிரி

கே.பாலச்சந்திரன்



*“சமூகநிலை மாறாமல் பொருளாதார நிலையில் மாற்றம் குறித்து எனக்கு நம்பிக்கையில்லை”*
**- தந்தை பெரியார்.**

பேராசிரியர்கள் A.கலையரசன் மற்றும் M.விஜயபாஸ்கர் இருவரும் எழுதி வெளியாகியுள்ள “திராவிட மாதிரி - தமிழ்நாட்டின் அரசியல் பொருளாதாரம் குறித்து விளக்கமளித்தல்” *(The Dravidian Model - Interpreting the Political Economy of Tamil Nadu)* நூல், திராவிட இயக்கத்தின் சமூக நோக்கு மற்றும் அரசியல் பொருளாதாரம் குறித்து ஒரு விரிவான விளக்கத்தை முன்வைத்துள்ளது. இது இதற்கு முன்பு இந்தியாவில் பொருளாதார நூல் எதுவும் பெறாத அளவிற்கு கவனத்தைப் பெற்றுள்ளது. இந்திய, வெளிநாட்டு அரசியல் பொருளாதார நிபுணர்களைத் தாண்டி அரசியல்வாதிகள், அமைச்சர்கள் ஏன் தமிழக முதல்வர் அவர்களையும்கூட அது குறித்துப் பேச வைத்துள்ளது. ‘திராவிட மாடல்’ எனும் பதம் பரவலான பேசு பொருளாய் மாறியுள்ளது. பெரும்பாலும் விதந்தோதப்பட்டாலும் சிலருக்கு அது ஒவ்வாமையை ஏற்படுத்தியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

திராவிட இயக்கத்தின் அரசியல் மற்றும் தத்துவம் குறித்து பல ஆய்வுகள் மற்றும் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ள போதிலும் பொருளாதார வளர்ச்சியிலும் அத்துடன் இணைந்த சமூக மேம்பாட்டிலும் திராவிட இயக்கம் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்து பொருட்படுத்தக் கூடிய நூல்கள், அனைவரும் வாசிக்கும் வண்ணம் எழுதப்படவில்லை. அந்த இடைவெளியை இட்டு நிரப்பும் விதமாக இந்நூல் வந்துள்ளது. திராவிட இயக்கம் எவ்வாறு அடித்தட்டு சாதிப் பிரிவினரை கல்வி மற்றும் வேலைவாய்ப்புடன் தொழில் முனைவோர் தளத்திற்கும் கொண்டு வந்துள்ளது; அதன் மூலம் எவ்வாறு தமிழ்நாட்டின் சமூகம் மற்றும் பொருளாதாரத்தை உயர்த்தியது என்பதை ஆதாரங்களுடன் இந்நூல்

விளக்குகிறது. திராவிட இயக்கம், நீதிக்கட்சி தொடங்கி நூற்றாண்டு கால வரலாறு மற்றும் 50 ஆண்டுகள் ஆட்சி நடத்தியதாக உள்ளது. சாதிய அடிப்படையிலான சமத்துவமற்ற நிலைமைகளில் மேலே சொன்ன வளர்ச்சியை சாத்தியமாக்கியுள்ளது. அதற்கான அரசியல் அணி திரட்டல் குறித்தான மிகவும் கட்டாயமாகத் தேவைப்படும் ஆய்வை நூல் நடத்தியுள்ளது. தமிழ் நாட்டின் வளர்ச்சிப் பாதைக்கு பங்களிப்பு செய்த அரசியல் மற்றும் சமூக-பொருளாதார நோக்குகள் பற்றிய கோட்பாட்டை வரையறை செய்துள்ளது. அதன் மூலம் உலகின் தெற்குபகுதிகளில் வளர்ந்து வரும் உபதேசியங்களின் இலக்கியங்களுக்கு மேலும் வலுச் சேர்க்கிறது.

"படிநிலை அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் நிலவும் நாடுகளில், உதாரணமாக சாதி-மாறாத நிலையாக இருப்பதுடன் அந்த நாடுகள் தங்களை நவீனப்படுத்தும் போது புதிய இன்னும் அதிகமாகும் ஏற்றத்தாழ்வுகளுக்கான முக்கிய ஆதாரமாகவும் விளங்குகின்றது. இந்தப் பிரதேசங்களில் மூலதன குவியல், அரசின் செயல்கள், அடையாளங்கள் அடிப்படையில் அரசியல் அணிதிரட்டல் மற்றும் வளர்ச்சிக்கான பாதை இவைகளுக்கிடையிலான தொடர்புகளை வரைவது மிகவும் முக்கியம்". பிக்கட்டி (2020).

பிக்கட்டி கூறுவது போல பொருளாதாரம் விரைவாக வளர்ந்து வரும் இந்தியாவில் தேசிய இனங்களின் மத்தியில் பொருளாதாரத்திலும் மற்றும் சமூகநிலைகளிலும் உள்ள வேறுபாடுகள் பெரும் சவாலாக தொடர்கிறது. பொருளாதார வளர்ச்சி அதிகமுள்ள மாநிலங்கள் மனிதவள மேம்பாட்டில் பின்தங்கியுள்ளன. மனிதவள மேம்பாட்டில் முன்னேறிய சில மாநிலங்கள் வளர்ச்சியில் பின்தங்கியுள்ளன. இந்த இரண்டு நிலைகளுக்கும் மாறாக தமிழ்நாடு உயர்ந்த அளவில் வளர்ச்சியையும் மற்றும் மனிதவள மேம்பாட்டினையும் சாத்தியமாக்கியுள்ளது. அத்தோடு இந்தியாவிலுள்ள பெரிய மாநிலங்களில் இருப்பதிலேயே தமிழ்நாட்டில்தான் ஏற்றத்தாழ்வுகள் குறைவு. ஏற்றத்தாழ்வை அளவிடும் கிணிக் குணகம் (Gini Coefficient) தமிழ்நாட்டில்தான் குறைவு.

இந்தியஅரசு அரை கூட்டாட்சி முறையிலானது. விவசாயம், சுகாதாரம் மற்றும் கல்வியை உள்ளடக்கிய மனிதவள மேம்பாடு ஆகிய முக்கிய துறைகள் உபதேசிய மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ளன. மாநில அரசுகளின் பொறுப்பின் ஊடாகவே வளர்ச்சியில் பிரதேச ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு கல்வி மற்றும் சுகாதாரத் தளங்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டது. தமிழ் நாட்டின் சிறப்புத்தன்மைக்கான காரணம் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடைய மூன்று வளர்ச்சிப் போக்குகள் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ஒன்று பொருளாதர வளர்ச்சிப் போக்கு மற்றும் துரிதமான மூலதனக் குவியல். இரண்டாவது வளர்ச்சியை நிர்வகிக்க வேண்டிய அரசியல் கட்டாயம். மூன்றாவது மாநில அளவிலான அரசியல் அணி திரட்டல். இவை எப்படி நடந்தன என்பதை நூல் விளக்குகின்றது.

**வறுமை ஒழிப்பு**

1960களில் மிகவும் ஏழ்மையான மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருந்தது. குறிப்பாக கிராமப்புறத்தில் வறுமை நிலை இந்திய சராசரி 38.2% என்ற நிலையில் மாநிலத்தின் வறுமை நிலை 51.7% ஆக இருந்தது. கடந்த 50 ஆண்டுகளில் வறுமைநிலையில் பெரும் மாற்றம் அடைந்துள்ளது.தமிழ்நாட்டில் 2011-12ல் கிராமப்புற வறுமை நிலை 15.8% ஆகவும், தலித் மக்கள் மத்தியில் வறுமை நிலை 23.3% ஆகவும் குறைந்துள்ளது. நகர்ப்புற வறுமைநிலை 6.5% ஆகவும், தலித் மக்கள் மத்தியில் 9.3% ஆகவும் குறைந்துள்ளது. ஆனால் ஒப்பீட்டளவில் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களைவிட குறைவாக உள்ளது. கூலி உயர்வுமற்றும் வாழ்வாதார வகையினங்களின் வருமான உயர்வும் கிராமப்புறங்களில் வறுமைக் குறைப்புக்கு காரணம். நகர் புறத்தில் வேலைவாய்ப்புகள், வருமான உயர்வு வறுமை குறைப்புக்கு காரணமானது.

**கல்வியை ஜனநாயகப்படுத்துதல்**

சாதிய அடிப்படையில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 69% இடஒதுக்கீடை பாதுகாக்க அரசியலமைப்புச் சட்டம் 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது தமிழ்நாட்டின் சமூக நீதிக்கான வரலாற்றின் அடையாளம். அடித்தட்டு சாதி இளைஞர்கள் மத்தியில் உயர்கல்வி பெற விருப்பங்கள் ஒரு நடைமுறையாக எழுவதன் காரணம் என்ன? மற்ற மாநிலங்களில் நீட் தேர்வுக்கு எதிரான போராட்டங்கள் எழாத நிலையில் தமிழகத்தில் மட்டும் ஏன் மிகப்பெரிய அளவில் வெடிக்கின்றது? சமூக நீதிக்கும் மற்றும் ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கும் கல்வி கற்பதுதான் சிறந்தவழி என்ற எண்ணம் திராவிட தமிழர் பொது உணர்வில் வேர் கொண்டிருப்பது தான் பிரதான காரணம்.

அனைவருக்கும் கல்வியை கொண்டு சேர்ப்பது என்ற கொள்கை பூர்வமான தமிழ்நாடு அரசின் செயல் நடவடிக்கைகள் பலனை அளித்துள்ளது. வரலாற்று ரீதியாக கல்வி மறுக்கப்பட்ட அல்லது தடுக்கப்பட்ட சமூக குழுக்கள் இந்த காலகட்டத்தில் கல்வியில் சிறப்பான முன்னேற்றத்தை அடைந்துள்ளன. நவீன பள்ளிக் கல்வி தனது சமூக நிலை குறித்தும் மற்றும் பரந்த உலகைப் பற்றியும் புரிதலுக்கான விழிப்புணர்வை அடித்தள மக்களுக்கு வழங்கியது என்றால் உயர்கல்வி நவீன பொருளாதாரத்தில் பங்கு பெறுவதற்கான அதிகாரமாக பார்க்கப்பட்டது.

அரசு மற்றும் தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் உயர் கல்வி பெறுவதற்கு ஒரு முக்கியப் பங்காற்றுகின்றன. தமிழ்நாடு, பல்கலைக்கழக எண்ணிக்கையில் மற்றும் தொழில் நுட்பக் கல்வியில் முதல் மாநிலமாகத் திகழ்கிறது. கல்லூரிகளில் மாணவர்

சேர்க்கை விகிதம் இந்தியாவிலேயே மிக அதிக அளவில் உள்ளது உயர்கல்வி குறித்த 2017-18 ஆண்டின் அகில இந்திய அறிக்கை தமிழ் நாட்டில் 18-23 வயதினர் மத்தியில் 48.6% பேரும், 23 வயது தலித் இளைஞர்கள் மத்தியில் 42.1% பேர் உயர்கல்வி பெறுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் உயர்கல்வி பெறுபவர்களின் இந்திய சராசரி 21.8% மட்டுமே உள்ளது.

பயனடையாத விளிம்பு நிலை சமூகக்குழுக்கள் உயர் கல்வியில் பிரதிநிதித்துவம் பெற இடஒதுக்கீடுகள் மாற்றி அமைக்கப்பட்டன.மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20% ஒதுக்கியதன் பயனாக பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வியில் 5 முதல் 6 மடங்கு முன்னேற்றம் பெற்றனர். மிகவும் பின்தங்கிய அருந்ததியினருக்கு 3% உள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மதம் காரணமாக இடஒதுக்கீடு மறுக்கப்பட்டிருந்த சமூக நிலையில் பின் தங்கிய முஸ்லீம்களுக்கு 3.5% உள்ஒதுக்கீடு செய்தது. இதன் பலனாக தமிழகத்தில் முஸ்லீம் பட்டதாரிகள் 36% ஆக உயர்ந்தனர். ஆனால் குஜராத்தில் 13% மகராஷ்டிராவில் 16% இந்திய சராசரி 14% மட்டுமே முஸ்லீம் பட்டதாரிகள் உள்ளனர்.


இதன் ஒட்டுமொத்த விளைவாக 2013-14ல் மொத்தமுள்ள பொறியியல் மற்றும் தொழிற்நுட்ப உயர்கல்வி மாணவர்கள் 182255 பேரில் பிற்படுத்தப்பட்டோர் 45%, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 22%, பட்டியலினத்தோர் 22%, முஸ்லீம் 4% ,அருந்ததியர் 2%. கல்வியில் தேர்ச்சி பெற்றதின் விளைவாக ஒடுக்கப்பட்ட சமூகங்கள் இடஒதுக்கீட்டிற்கும் மேலாக இடங்களைப் பெற்றனர். ஆக மொத்தம் 93% இடங்கள் மறுபகிர்வு செய்ததில் இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு மட்டுமே தனித்துவமானது. தனியார் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கிடு அமல்படுத்தப்பட்டது.

**சுகாதாரத்தை ஜனநாயகமாக்கல்**

இந்தியாவின் சுகாதார திட்டம் அடிப்படையில் மேட்டுக்குடி நலம் சார்ந்தது. நோய் விஷயத்திலும் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையில் அரசு வேறுபாடு காட்டியது. இந்த வேறுபாடுகளுக்கு எதிராக ஒரு வலுவான மருத்துவக் கட்டமைப்பை உருவாக்கி அனைவருக்கும் சுகாதாரம் எனபதை உறுதி செய்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

தமிழ்நாட்டில் முதன்முதலில் மால்கம் ஆதிசேஷைய்யா தலைமையில் குறிப்பாக சுகாதார சேவையின் பிரச்சினைகள், மருத்துவ கல்வி ,குடும்ப கட்டுப்பாடு, ஊட்டச்சத்து, பொது சுகாதாரம் மற்றும் ஹோமியோபதி குறித்து ஆழமாக ஆராய்ந்து அன்றைய முதல்வர் திரு.கருணாநிதியிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. அதனடிப்படையில் அனைவருக்கும் சுகாதாரம் என்பதை அரசு திட்டமிட்டு அணுகியது.

தமிழ் நாட்டில் 27215 மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற வரையறையில் அமைக்கப்பட்டது. குடும்ப கட்டுப்பாடு நடவடிக்கைகள் மூலம் பிறப்பு விகிதம் 2013ல் 1.7 புள்ளியாகவும், குழந்தை இறப்பு




விகிதம் (1000க்கு) 2015ல் 19 ஆகவும், தலித் குழந்தை இறப்பு 2015ல் 23.6 ஆகவும், பேறுகால தாய் இறப்பு 90 ஆகவும் குறைந்துள்ளது. ஒப்பிட்டளவில் இந்திய சராசரி மற்றும் குஜராத், மகராஷ்டிரா மாநிலங்களைவிட மிகவும் குறைவு. இதற்கு முக்கிய காரணம் 99% பிரசவங்கள் மருத்துமனைகளில் நடைபெறுவது. குழந்தைகளுக்கு மதியஉணவுத் திட்டம் மற்றும் தாய்சேய் நலம் சார்ந்த நடவடிக்கைகள் ஊட்டச்சத்து குறைபாட்டை வெகுவாக குறைத்துள்ளது. வட மாநிலங்களில் உயர் சாதிகள் மத்தியில் காணப்படும் சுகாதார குறியீடுகளை காட்டிலும் தமிழ் நாட்டில் தலித் மக்களின் சுகாதாரம் உயரிய நிலையில் உள்ளது. பிறப்பு விகிதம் குறைவதற்கு பெண்களின் கல்வியறிவு மற்றும் திருமண வயதில் ஏற்பட்ட மாற்றமும் ஒரு காரணம்.

மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி அடிப்படையில் சமூக குழுக்கள் மத்தியில் இருந்து தேவைப்படும் மருத்துவர்களை உருவாக்குதல் மற்றும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு சமூக குழுக்களில் இருந்து மருத்துவர்கள் இருப்பதை உறுதி செய்தது. உதாரணமாக தமிழ் நாட்டில் மருத்துவர் நோயாளி விகிதம் 1:9554 இந்திய சராசரி 11082 உபியில் 19962. வரும் காலங்களில் நீட் தேர்வு முறை மருத்துவ கட்டமைப்பிற்கு பெருத்த சேதாரத்தை விளைவிக்கும். தமிழ்நாடு வறுமைஒழிப்பு, கல்வி, சுகாதாரம் தளங்களில் சிறப்பாக செயல்பட்டதற்கான காரணம் கடந்த நூற்றாண்டு தமிழ்நாடு கண்ட சமூக இயக்கங்களில் உள்ளது.

**வளர்ச்சியை பரவலாக்குவதும் மூலதனத்தை ஜனநாயகப்படுத்தலும்**

1990கள் முதல் முதலீடுகளை திரட்டுவது மாநில அரசின் பொறுப்பிற்கு வந்தது. மாநில அரசுகள் அந்நிய முதலீடுகளை திரட்டுவதற்கும் மற்றும் வர்த்தகத்திற்கும்



பேரா.கலையரசன்.A



பேரா.விஜயபாஸ்கர்.M

அயல்நாடுகளுடன் உறவுக்கான சுயேச்சையான முடிவுகள் எடுத்தன.

குஜராத், மகாராஷ்டிரா போல் தமிழ்நாடும் பெரிய அளவில் தொழில் அடித்தளத்தை கொண்ட மாநிலம். கல்வி மற்றும் சுகாதாரத்தின் முதலீடுகள் மூலம் அனைவருக்கும் வளர்ச்சி என்ற பாதையை கொண்டிருப்பதனால் இவ்விரு மாநிலங்களில் இருந்து தமிழ்நாடு தனித்துவமாக விளங்குகிறது.

இந்தியாவில் உள்ள பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் 15.4% தமிழ்நாட்டில் உள்ளன. குஜாராத்தில் தொழில் வளர்ச்சி தமிழ்நாடு போல் பரந்துபட்டதல்ல. குஜராத் மூலதனத்தின் அடிப்படையில் விரைவான பொருளாதார வளர்ச்சி அடைந்தது. ஆனால் போதுமான வேலை வாய்ப்புக்கள் உருவாக்குவதில்லை.

தமிழக தொழிற் வளர்ச்சி நான்கு கட்டங்களில் நடந்தது என நூல் விளக்குகின்றது. முதல் கட்டம் காலனிய ஆட்சிக் காலத்தில் வளர்ச்சியை பரவலாக்கவும் மற்றும் பிரதேசரீதியாக பொருளாதாரத்தை வளர்க்கவும் நவீன தொழிற்சாலைகள் அமைக்க அரசு முன்வர வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்த கட்டம்.

இரண்டாவது கட்டம் 1947 முதல் 1967 வரையிலான சுதந்திரத்திற்கு பிந்தைய காலக்கட்டம். அப்போது காங்கிரஸ் கட்சி மாநிலத்தில் ஆட்சி செய்தது. தொழில் வளர்ச்சியில் மாநில புறக்கணிப்புக்கு எதிராக வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்ற பிரச்சாரத்தின் மூலம் தொழில் வளர்ச்சிக்கான கோரிக்கையை திமுகவும் திராவிடர் கழகமும் தொடர்ந்து முன்னெடுத்தன. அரசியல் நிர்பந்தத்தின் விளைவாக 'ஒன்றிய அரசு' சில பொதுத்துறைகளை கொண்டு வந்ததுடன் மற்றும் சில தனியார் தொழிற்சாலைகளுக்கும் அனுமதி அளித்தது. இது பரந்த தொழிற்வளர்ச்சிக்கு அடிப்படையை அமைத்தது. பிற மாநிலங்களில் இந்த கோரிக்கைகள் பலவீனமாக இருந்தது பின்தங்கிய நிலைக்குக் காரணமானது.

மூன்றாவது கட்டத்தில் மாநில அளவிலான கொள்கைகள் தொழிற் வளர்ச்சிக்கு உத்வேகமளித்தன. திமுக பதவியில் இருந்த 1967-76 ஆண்டுகளில் TIDCO மற்றும் SIDCO ஆகிய இரண்டு தொழில்வளர்ச்சி நிறுவனங்களை நிறுவியது. முதல் கட்டமாக தனியாருடன் இணைந்து 1971ல் SPIC உரத்தொழிற்சாலை தூத்துக்குடியில் நிறுவப்பட்டது. பல மாவட்டங்களில் பெரிய தொழிற்சாலைகளையும் அதனைச் சுற்றி சிறு தொழில்களையும் நிறுவியது. நலிவடைந்த நூற்பு தொழிற்சாலைகளை ஏற்று நடத்திட தமிழ்நாடு ஜவுளிக் கழகம் உருவாக்கியது. அதனைத் தொடர்ந்து பெரிய அளவிலும் மற்றும் சிறு அளவிலும் விசைத்தறி தொழில் மிகப்பெரிய வளர்ச்சி கண்டது. பால் உற்பத்தியாளர் நலனுக்காக தமிழ்நாடு பால் உற்பத்திக் கழகம் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் 1981ல் அமைந்தது. விவசாயம் சாரா தொழிற்வளர்ச்சியில் புரட்சிகர மாற்றத்தை கொண்டு வந்தது. 1960களில் 2.1% (ஜிடிபி) ஆக இருந்த பொருளாதார வளர்ச்சி விகிதம் 1980களில் 4.9% ஆக உயர்ந்தது.

நான்காவது கட்டம் பொருளாதார சீர்திருத்த காலக்கட்டம். மாநில அரசுகள் நேரடியாக முதலீடுகளை திரட்டுவதற்கு வழி வகுத்ததினால் வளர்ச்சியில் வேகப்பாய்ச்சலை கண்டது. பொருளாதார சீர்திருத்தத்திற்கு பிறகு ஜிடிபி வளர்ச்சி விகிதம் 2000 - 2014 ல் 8.4% ஆக அதிகபட்ச உயர்வினை கண்டது. 1980களில் தமிழகத்தினுடைய வளர்ச்சி விகிதம் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தது. ஆனால் 1990 களில் பொருளாதார சீர்திருத்தத்திற்கு பிறகு மகாராஷ்டிராவின் வளர்ச்சியோடு ஒப்பிடும் அளவிற்கு 8.4%ஆக ஜிடிபி வளர்ச்சி அடைந்தது. இந்த வளர்ச்சி பெரிய நிறுவனங்கள் மற்றும் சிறு நிறுவனங்கள் அத்துடன் பிரதேசங்களையும், வேலைவாய்ப்பையும், தனிநபர் வருமான உயர்வையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சியாகும்.

கடந்த 15 ஆண்டுகளில் ஹார்டுவேர்ஸ் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனங்கள் தங்களுடைய உற்பத்தி தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் நிறுவியுள்ளனர். இந்தியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படும் சென்னையைச் சுற்றி அமைந்துள்ள மோட்டார் வாகனங்கள் தயாரிக்கும் உலகின் பெரும் நிறுவனங்களின் மொத்த பங்களிப்பு இந்தியளவில் 35%. பொதுவான வளர்ச்சியுடன் மென்பொருள், மருத்துவம் மற்றும் கல்வி சேவை நிறுவனங்கள் வளர்ச்சி அடைந்தன. தமிழ்நாடு அரசினுடைய ஊக்கமான செயல்பாடுகளே இவர்களுடைய முதலீடுகளுக்கு காரணம்.

தமிழ்நாட்டில் மூலதனம் திரட்டலில் சமூக ரீதியாக அனைவரும் உள்ளடக்கிய ஜனநாயக போக்கு வெளிப்படுகிறது. மாநிலத்தில் உள்ள மொத்தமுள்ள 45,83,191 தனியார் நிறுவன உடமையாளர்கள் சாதிவாரியாக தலித் மற்றும் பழங்குடியினர்

*14.1%, பிற்படுத்தப்பட்டோர் 68.2%, உயர்சாதி பிரிவினர் அல்லது மேட்டுக்குடியினர் 17.7%. தமிழ்நாட்டில் பெரிய நிறுவனங்களில் தலித் உடைமையாளர்கள் 5.8% பிற்படுத்தப்பட்டோர் 67.4%.பொதுவாக இந்தியாவில் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா உட்பட வர்த்தக நிறுவனங்கள் உயர்சாதியினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் போது தமிழ்நாட்டில் தலித் உடமையாளர் பங்கு சற்று குறைவாக இருந்தபோதிலும் அடித்தட்டு சாதிகள் வகிக்கும் பங்கு என்பது அதிகரித்துள்ளது என்பதை நூல் கோடிட்டுக் காட்டுகிறது. பொருளாதார வளர்ச்சியையும் மற்றும் தொழில் முனைவோர் வளர்ச்சியையும் ஒரு சேர இணைக்கும் சக்தி தமிழகத்தில் உள்ள மனிதவள முதலீட்டில் உள்ளது.* **வளர்ச்சி மேம்பாடு ஆகியவை அனைவருக்குமானதாக இருக்கும் தன்மை மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் அதிகம் என்பதைக் கூறும் நூல் இதுதான் திராவிட மாடலின் இதயம் என்பதைச் சரியாகவே நிறுவுகின்றது.**

*மொத்த உற்பத்தியில் விவசாயம் 8%க்கும் கீழாக பங்களிக்கிறது. தேசிய சராசரியில் பாதிக்கும் கீழாக உள்ளது.1960-2011வரையிலான 50 ஆண்டு காலங்களில் மக்கள் தொகை 7.2 கோடியாக உயர்ந்துள்ள நிலையில் விவசாய உற்பத்தியும் 2.21 மடங்கு அதிகரித்து உணவுப்பாதுகாப்பை உத்தரவாதம் செய்து உள்ளது.* **மொத்தத்தில் இந்த வளர்ச்சியும் அதன் தன்மையும் திராவிட மாடலின் சாதனை என நூல் கூறுவதை நாம் ஏற்காமல் இருக்க முடியவில்லை.**

### கிராமப்புற உறவுகளில் அடிப்படை மாற்றங்கள்

*அனைத்து கிராமங்களின் ஆய்வுகள் பெரும் பரப்பளவிலான நிலங்களைக் கொண்ட நிலக்குவியல் தகர்ந்துள்ளது என்பதை காட்டுகிறது. தலித் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 93-94ம் ஆண்டில் 6.5% ஆக இருந்தது 2017-18ம் ஆண்டில் 13% ஆக உயர்ந்துள்ளது. அதேவேளை தலித் அல்லாதவர்கள் விவசாய குடும்பங்கள் 25% லிருந்து 17% ஆக குறைந்துள்ளது. தமிழ்நாடு அரசு கொண்டு வந்த விவசாய நில (குத்தகை பதிவேடு) சட்டம் 1969, பாரம்பரியமான கிராம கணக்குப்பிள்ளை முறையை ஒழித்தது ஆகியவையெல்லாம் கிராமப்புறங்களில் சமூக மாற்றத்திற்கான காரணமாக நூல் எடுத்துக்காட்டுகின்றது.*

*கிராமங்களில் வேலைவாய்ப்புகளில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு கிராமங்களில்1993-94 - 2017-18 இடையிலான 25 ஆண்டுகளில் விவசாயத்தில் இருந்து 62 லட்சம் பேர் வெளியேறியுள்ளனர். கிராமப்புறங்களில் மொத்த தொழிலாளர்களில் 1993-94ல் 70% மாக இருந்த விவசாயதொழிலாளர்கள் 2017-18ல் 42%மாக குறைந்துள்ளனர்.கிராமங்களில் விவசாய குடும்பங்கள் 13% மட்டுமே உள்ளனர் என நபார்டுவங்கி 2016-17 ஆண்டு அறிக்கை குறிப்பிடுகிறது. விவசாயம் சார்ந்த, கிராமப்புற வருமானத்தில் விவசாயம் 42.5%பங்களிக்கின்றது. விவசாய பொருளாதாரம் தேக்க நிலையில் இருந்த போதிலும் விவசாய கூலி உயர்ந்து உள்ளது. 2017ன் கூலிக்கான புள்ளிவிவரங்கள் கேரளாவுக்கு அடுத்தபடியாக தமிழகம் இருப்பதைக்காட்டுகின்றது. மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது கிராமப்புற உழைப்பு சந்தை நகர்ப்புற உழைப்பு சந்தையுடன் குறிப்பிடத்தக்க வகையில் இணைக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றங்கள் சாதி ரீதியாகவும் அனைவரையும் உள்ளடக்கியது. இதன் பலனாகத் தமிழ்நாட்டில் விவசாயத்தில் ஈடுபடும் தலித் குடும்பங்கள் 37% மாக குறைந்தது. ஆனால் இன்றும் குஜராத்தில் 68% மற்றும் மகாராஷ்டிராவில் 57% தலித் பிரிவினர் விவசாயம் சார்ந்தே உள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. 1993-94ல் 71% இருந்த தலித் விவசாய தொழிலாளர்கள் 2017-18ல் 24%மாக குறைந்துள்ளனர். தலித் அல்லாத விவசாயத் தொழிலாளர்கள் எண்ணிக்கையும் 32% சதவீதத்திலிருந்து 16%மாக குறைந்துள்ளது. தலித்துகள் விவசாயத்தை விட்டு வெளியேறி விவசாயம்சாரா வேலைவாய்ப்புகளை பெறுகின்றனர் என்பது வெளிப்படுகிறது.*

*பொது விநியோக முறையையும் கிராமப்புற 100 நாள் வேலைத் திட்டத்தையும் செயல்படுத்துவதில் மாநிலம் திறன் வாய்ந்தது. தமிழகத்தில் அதிக அளவில் பெண்களுடைய பங்கேற்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.* **சாதிய அடிப்படையில் வேலைகளில் கட்டப்பட்டிருந்த அடித்தள மக்களை விடுவிப்பது என்ற திராவிட இயக்கத்தின் நோக்கத்தை இந்த மாற்றங்கள் வெளிப்படுத்துகிறது.**

*50 ஆண்டு கால புள்ளி விவரங்களின் அடிப்படையில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில் மாநிலத்தின் செயல்திறனை மற்ற பொருளாதார ரீதியில் துரித வளர்ச்சி அடையும் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஒப்பிட்டு தமிழ் நாடு வளர்ச்சி, வருமானம், வறுமை ஒழிப்பு மற்றும் அடிப்படை மாற்றங்களில் சிறப்பான சாதனை செய்துள்ளது என்பது நிறுவப்படுகிறது.*

### அரசியல் அணி திரட்டல்

*இந்த வளர்ச்சிக்கான காரணங்கள் மாநிலத்தில் கல்வியைப் பரவலாக்க வேண்டும் என்று கோருகிற கூட்டு நடவடிக்கைகளிலும் உயர்கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் சாதி அடிப்படையிலான சமூகநீதியை இடஒதுக்கீடுக் கொள்கையாக மாற்றுகின்ற ஒரு வகையான வெகுஜனமக்கள் இயக்கத்திற்குள் உள்ளது.*

*திராவிட பொதுஉணர்வு என்பது சாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு, உற்பத்தி முறைகளில் கொண்ட நம்பிக்கை மற்றும் பெரிய அளவிற்கான மாநில சுயாட்சி மூலம் சமூகநீதியை பெறுவதும் மற்றும் அனைவருக்குமான நவீன வளர்ச்சியை உத்தரவாதப்படுத்துவதும் என்பதை உள்ளடக்கியது. இது எவ்வாறு நடந்தது என்பதை நூல் ஏராளமான*

தரவுகளோடு விவரிக்கின்றது. **எதுவும் எளிதாக நடந்துவிடவில்லை; தானாகவும் நடந்துவிடவில்லை. ஒரு அரசியல் இயக்கம் தனது காத்திரமான கருத்தியல் மற்றும் செயல்பாட்டில் கொண்டு வந்தது என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிறுவுகின்றது.**

அரசியல் அதிகாரம் பெறுவதற்கான அணிதிரட்டல் அடிப்படையில் ஆட்சியாளர்களை வித்தியாசப்படுத்தி பார்க்க வேண்டியுள்ளது. அதன்படி தமிழ்நாடு, கேரளா மற்றும் மே.வங்காளம் ஆகிய மூன்று மாநிலங்களும் தங்களுடைய அரசியல் அதிகாரத்தை அடித்தட்டுச்சாதிகள் மற்றும் வர்க்கங்களை அணிதிரட்டுவதின் மூலமாக பெற்றார்கள். அடித்தள மக்களின் ஆதரவைப் பெற்ற போதிலும் அது ஒன்று மட்டும் அடைந்த பலன்களை போதுமான வகையில் விளக்கவில்லை. உதாரணமாக மே.வங்காளம் அடித்தட்டு வர்க்கங்களை திரட்டி அதிகாரத்தை பெற்றிடினும் மனிதவள மேம்பாடு தாழ்ந்த நிலையில் உள்ளன. மேலும் ஒரு உதாரணம் பீகார்; ஆனால் அடித்தட்டு சாதிகளை திரட்டி அதிகாரத்தை பெற்றபோதிலும் மனிதவளம் பின்தங்கிய நிலையில் உள்ளது.கேரளாவின் உயர்ந்த மனிதவள குறியீடுகள் ஆனால் உற்பத்தி துறையின் வளர்ச்சியில் இல்லை. மறுபுறத்தில் சமூக ஜனநாயகமற்ற ஆட்சியாளர்கள் உள்ள குஜராத் மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் வளர்ச்சியில் முன்னேறிய போதிலும் மனிதவள வளர்ச்சி குறியீடுகளில் பின்தங்கியே உள்ளன.

வெகுமக்களின் திராவிட அணிதிரட்டல் அரசியல் அதிகாரத்தையும் சமூக நீதியையும் ஒன்றிணைத்து உருவான கருத்தியல் தனித்துவமான மாநிலத்தின் வளர்ச்சி பாதையை விளக்குகிறது. **வர்த்தக நலனுக்கு ஆதரவான மற்றும் சந்தை சார்ந்த பொருளாதார சீர்திருத்த காலத்தில் அடைந்த சாதனை என்பது முக்கியத்துவம் பெறுகிறது.**

### திராவிட மாடல் குறித்த ஆசிரியர்களின் விமர்சனங்கள்

"தமிழ்நாடு குறித்த எங்களது ஆய்வு நோக்கம் அடைந்த பலன்கள் மற்றும் வளர்ச்சிப் பாதை குறித்து விவரிப்பது மட்டுமல்ல .சாதிய படிநிலைக்கு எதிராக அரசியல் அணி திரட்டல் மற்றும் அனைவருக்கும் வளர்ச்சி என்ற வரையறைக்குள் நிறுவனம் ஆக்கப்பட்ட அதன் வரம்புகள் குறித்து ஒரு விவாதத்தை துவங்க வேண்டும் என்ற நோக்கமும் உள்ளடங்கியது" என்ற ஆசிரியர்களின் கூற்றை பாராட்டாது இருக்க முடியவில்லை. அப்படி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டும் சில அம்சங்களைப் பார்க்கலாம்.

### வெடிப்புகள், சிதறல்கள் மற்றும் எதிர்காலம்

சில விளைவுகளின் தரம் குறித்து மட்டுமல்லாமல் கட்டமைப்பின் அடிப்படை மாற்றத்தின் பயனை உறுதி செய்வது அல்லது மேம்பட்ட அளவிலான அனைவரின் உள்ளடக்கிய வளர்ச்சி பற்றியும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

### கல்வி

இரண்டு கவலைக்குரிய அம்சங்கள் உள்ளன. ஒப்பிட்டளவில் அரசுப்பள்ளிகளில் சிறந்த முறையில் கல்வி கற்பித்தாலும் ஏழை எளிய மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் தனியார் பள்ளிகளை தேர்வு செய்யும் சூழல். இரண்டாவது உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை அதிகமானாலும் கல்வித்தரம் வேறுபடுகின்றது. கல்லூரிகளுக்கு இடையில் உள்ள தரவேறுபாடுகள் கூலியில் சமமற்ற நிலையையும் மற்றும் வருமானத்தில் ஏற்றத்தாழ்வுகளையும் விதைக்கிறது.

### சுகாதாரம்

தமிழ்நாடு வலுவான பொதுச் சுகாதாரக் கட்டமைப்பினைக் கொண்டிருந்தபோதிலும் தனியார் மருத்துவச் சேவை வளர்ச்சியிலும், கார்ப்போரேட் மயமாக்கியதிலும் ஒரு முன்னோடியான மாநிலம். சிகிச்சைக்குத் தனியார் மருத்துவமனைகளை சில பிரிவினர் சார்ந்துள்ளனர். இது பொதுசுகாதார சேவையின் தரத்தில் வித்தியாசத்தை உணர்த்துகின்றது. இனி அதிக செலவு செய்து நீட் தேர்வில் வெற்றி பெறும் மருத்துவர்கள் தனியார் மருத்துவமனைகளை நோக்கியே செல்வார்கள்.

### தொழிலாளர் நிலைமை

விவசாயத்திலிருந்து வெளியேறுபவர்களுக்கு வெளியில் வாழ்வாதாரம் கௌரவமிக்கதாக இல்லை. விவசாயத்திலிருந்து வெளியேறும் தொழிலாளர்களுக்கு தினக்கூலிவேலைதான் முக்கியமான ஆதாரமாக விளங்குகிறது. கூலியில் பாலின வித்தியாசமும் நீடிக்கின்றது. கிராமப்புறங்களில் சாதி அடிப்படையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் நகர்புறத்தில் சாதிய ஏற்றத்தாழ்வுகள் மறுஉற்பத்தி செய்யப்படுகிறது. சாதிய வலைபின்னல் மூலம் உயர்சாதிகள் வேலைவாய்ப்புகளை மூடி மறைக்கின்றனர். கல்வி பெற்றவர்கள் வேலையின்மை அதிகமாக உள்ளது. துடிப்புடன் செயல்படும் உற்பத்தி மற்றும் சேவை துறைகள் உயர்கல்வித் தகுதியுடன் உழைப்புச் சந்தையில் நுழைந்தவர்களை உள்வாங்குவதில் தோல்வி அடைந்துள்ளது. கல்வி கற்றவர்கள் மத்தியில் நிலவும் இத்தகைய சமனற்ற போக்கு திராவிட சமூகக்குழுவில் ஒரு பிளவினை உண்டாக்கியுள்ளது.

### சாதிக்குள்ளும் சாதிகளுக்கு இடையிலும் உருவாகும் ஏற்றத்தாழ்வுகள்

திராவிட இயக்கத்தின் முக்கியமான குணாம்சம் ஒரு குறிப்பிட்ட சாதியின் நலன்களைப் முன்னிலைப்படுத்துவதை மறுத்ததுதான். பொதுவான வளர்ச்சி மற்றும் மனிதவள மேம்பாடு அனைத்து சமூகக்குழுக்களுக்கும் ஏதேனும் அளித்திருந்தாலும் சமமான பலனைக் கொடுக்கவில்லை. அதேபோல பிரதேச ரீதியான வளர்ச்சியிலும், அந்த பிரதேசங்களில் உள்ள சமூகக்குழுக்கள் மத்தியிலும் ஏற்றத்தாழ்வுகள்

இருக்கின்றன. நில உடமையில் தலித் மக்கள் மத்தியில் மறுபகிர்வு இல்லாத நிலையில் நகர்ப்புற வளர்ச்சியில் நிலம் மூலம் கிடைக்கும் மூலதனம் நிராகரிக்கப்பட்டுள்ளது. மூலதனத் திரட்டல் தலித் மக்கள் நுழைவுக்கு போதுமான வழி ஏற்படுத்தவில்லை. நூற்றாண்டு கால அணி திரட்டலும் மற்றும் 50 ஆண்டு கால ஆட்சி அதிகாரமும் இதர சமூகக் குழுக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிய அளவிற்கு தலித் மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றவில்லை என்று கருதும் போக்கு திராவிட வெகுஜன செல்வாக்கில் உள்ள வெடிப்பினை வெளிப்படுத்துகிறது.

கல்வியில் அரசின் தொடர்ச்சியான தலையீடுகள் காரணமாக பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் இருந்து உருவான செல்வந்தர்கள் திராவிட தமிழர் என்ற அடையாளத்துடன் தங்களை இணைத்துக் கொள்வதில்லை. மேலும் அவர்கள் தமிழ் அடையாளத்தை இந்து அடையாளத்துடன் இணைக்க முயற்சி செய்கிறார்கள். இதன் மூலம் கிருத்துவர்கள் மற்றும் முஸ்லிம்கள் மத்தியில் உள்ள அடித்தட்டு மக்கள் தனிமைப்படக் கூடிய வாய்ப்பு உள்ளது.

**அரசியல் வளர்ச்சிப்போக்கு**

ஒரு பொறுப்புள்ள அரசியல் வளர்ச்சிப் போக்குடன் பல்வேறு அடித்தட்டு சமூகக் குழுக்களில் இருந்து உருவான அதிகார வர்க்கம் திராவிட இயக்கத்தின் நோக்கங்களை செயல்படுத்துவதினை சாத்தியமாக்கியது. ஆனால் அரசு எந்திரம் ஊழலுக்கும் முறையற்ற வழியில் செல்வங்களை பெருக்குவதற்கும் (RENT-SEEKING) பிரச்சித்தி பெற்றதாக உள்ளது. மணல் குவாரிகள் மற்றும் கனிம வளங்கள் இவைகளில் தங்களுக்கான செல்வங்களை (RENT-SEEKING) பெறுவதில் ஒரு மையப்படுத்த அதிகாரத்தை உருவாக்கி வைத்துள்ளனர். அரசியல் கட்சிகளின் தேவைகளுக்கும் தேர்தல் செலவுகளுக்கும் இயற்கை வளங்களைச் சுரண்டுவது வழக்கமாகிவிட்டது. அரசியலில் முதலீடுகள் செய்யும் அளவிற்கு அரசியல் தொழிலாக மாறி விட்டது. கார்ப்போரேட்கள் நிதி அளிப்பதுடன் ரியல் எஸ்டேட் அரசியல் கட்சிகளின் நிதி ஆதாரமாக உள்ளது. இந்த நிலையில் மணல் குவாரி மற்றும் கனிமச் சுரங்கத் தொழிலை சார்ந்திருப்பது விரைவில் மறையாது. சுற்றுச் சூழலுக்கு பெரும் கேடு விளைவிக்கும்.

**வெகுஜனஇயக்கம்: சமத்துவத்திலிருந்து சமனற்ற போக்கில்**

2006க்கு பின்னர் நீதிமன்ற தலையீடுகள் மற்றும் வளர்ந்து வரும் தனியார்மய வேலை வாய்ப்புகள் அரசின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்வதை சாத்தியமற்றதாக்கியது. விவசாயத்திலிருந்து வெளியேறிய உபரி உழைப்பு மூலதனத் திரட்டலின் கூலி உழைப்பாக மாறியது என்றாலும் அனைவரும் பணிப்பாதுகாப்பு உள்ள கூலி உழைப்பாளிகளாக மாறவில்லை. உற்பத்தியில் வேலைவாய்ப்பை அதிகரிக்கவோ மற்றும் தரமான வேலை என்ற பிரச்சினையும் தீர்க்கவோ முடியவில்லை. ஆகவே அனைவருக்குமான நவீன வளர்ச்சி மூலம் சமூக உறவுகளிலும் மற்றும் சாதிய படிநிலையிலும் மாற்றங்கள் செய்வது என்பது பிரதானமாக நவீனத்தின் வரம்புகளில் மீது உள்ளது.

தேசியஅளவில் பொருளாதாரக் கொள்கைகள் ஒன்றிய அரசு தீர்மானிக்கும் போது அதில் மாநில அரசுகளுக்கு எல்லைகளை மீறிச் செயல்படுவதற்கான வாய்ப்பில்லை. ஜிஎஸ்டி வரி விதிப்பும் மாநிலங்களுடன் பகிராத செஸ் வரிகளும் மாநிலங்களின் வரி வருவாய் ஆதாரங்களைச் சுருக்கிவிட்டது. மாநிலத்தில் பொறுப்பில் உள்ள திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நேரடியாகத் திட்டங்களை அறிவிப்பதும் அதற்கான செலவில் ஒரு பங்கினை மாநிலங்களில் சுமத்துவதும் நிதிநிர்வாகத்தில் ஒன்றிய அரசு மையப்படுத்திய அதிகாரத்தை நோக்கிச் செல்கிறது என்பதைக் காட்டுகிறது. உலகின் தெற்குப் பகுதியில் தேசியஅரசும் மற்றும் உபதேச அரசுகளும் முதலீட்டிற்கான ஆதாரங்களைப் பெறுவதில் அந்நிய முதலீடுகளைத்தான் சார்ந்துள்ளது. உலக மூலதனத்தை சார்ந்துள்ள நிலையில் பல கட்டுப்பாடுகளையும் கொண்டு வருகிறது. இந்தச் சூழலில் தமிழ்நாடு மனிதவள மேம்பாட்டில் சாதித்தவைகளை மேலும் விரிவாக்கவும் மற்றும் நிரந்தரமாகச் செயல்படுவதற்கான சாத்தியத்தைப் பார்க்க வேண்டும்

**நூலைத் தாண்டி...**

சாதிய ஏற்றத்தாழ்வுகளை மாற்றுவதற்கு நவீன கல்வியும் தொழிற் வளர்ச்சியும் முக்கியமானது என்ற கருத்தியலில் நவீன வளர்ச்சிக்குத் தடையான நிலப்பிரபுத்துவ சமூகத்தின் சாதிய அடிப்படைகளையும் மற்றும் சாதிய நிறுவனங்களையும் திராவிட இயக்கம் எதிர்த்துப் போராடியது. சாஸ்திரம், மதம் மற்றும் கடவுளின் பெயரால் சாதிய முறையை நியாயப்படுத்தியதை திராவிட இயக்கம் கேள்விக்குள்ளாக்கியது.

திராவிட இயக்கம் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை உணர்ந்த போதிலும் சமூக நிலை மாற்றத்தை மட்டும்தான் பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. திராவிட இயக்கம் பொருளாதாரம் குறித்து மேம்போக்கானதும் உடனடி செயல்பாடுகள் குறித்ததுமான கருத்துகளையுமே கொண்டிருந்தது. எல்லாப் பிரச்சினைகளையும் மாநில அளவில் தீர்த்துவிட முடியாது என்ற உணர்வு தெளிவாக இருந்ததாகத் தெரியவில்லை. நூலாசிரியர்களும் அதனை குறிப்பிடவில்லை.

மாநில அரசியல் தேவைகளுக்காகத் திராவிட இயக்கத்தின் கொள்கைகளுக்கு விரோதமான சமூகப் பொருளாதார கொள்கைகள் கொண்ட கட்சிகளுடன் விமர்சனமின்றி சேர்வது சமத்துவத்திற்கும் சமூக நீதிக்கும் எதிரான சக்திகள் குறித்து மக்களுக்கு இருக்கும் எதிர்ப்பை மழுங்கடிக்கும் என்பதை திராவிட இயக்கக்

கட்சிகள் உணரவில்லை; அதனை நூலாசிரியர்களும் உணர்த்தவில்லை.

பருவ கால மாற்றங்கள் ஏற்படுத்தும் சீரழிவுகள் மற்றும் அதிகரிக்கும் கடன் சுமை சூழலில் விவசாய விளை பொருளுக்குக் கட்டுபடியாகும் விலை கிடைக்காதது விவசாய நெருக்கடியை ஆழமாக்கி வருகிறது. இது திராவிட இயக்கங்களின் ரேடாரில் இருப்பதாகத் தெரியவில்லை. நூலாசிரியர்களின் ரேடாரிலும் இல்லையோ எனச் சந்தேகம் வருகின்றது.

தாராளமய காலக் கட்டத்தில் பொருளாதாரம் வளர்ச்சியை அடைந்தாலும் அது பெரும் வேலை வாய்ப்புகளை உருவாக்காத வளர்ச்சியாகவே உள்ளது. மூலதனங்கள் வருவதும் போவதுமான நிலையில் தொழிற்சாலைகள் மூடப்படுவதும் புதிய முதலீடுகளைத் தேட வேண்டிய நிலைக்கு மாநில அரசுகள் தள்ளப்படுவதும் நடக்கின்றது. சலுகைகள் முடிந்ததும் மூடப்பட்ட நோக்கியா நிறுவனமும் மற்றும் தற்போது மூடப்பட்ட ஃபோர்டு கார் நிறுவனமும் சிறந்த உதாரணங்கள். உலகச் சந்தையின் நிச்சயமற்ற தன்மையால் திருப்பூரின் ஆடை ஏற்றுமதி நிறுவனங்கள் தொடர்ச்சியாக சரிவைச் சந்திக்கின்றன. சிறுதொழில் அரங்கம் பொருளாதார நெருக்கடியில் சிக்கி ஏராளமான நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. உலகச் சந்தையில் ஏற்படும் அதிர்வுகள் இந்தியப் பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்துகின்றன. தென்கிழக்கு ஆசிய நாடுகள், புலிப் பொருளாதாரங்கள் அடைந்த பாதிப்புகளை திராவிட மாடல் அரசுகளும் சரி நூலும் சரி கணக்கில் கொண்டதாகத் தெரியவில்லை

பொதுத் துறைகளை தனியாருக்கு விற்பதனால் இட ஒதுக்கீட்டின் மூலம் வேலை வாய்ப்புக்கள் இனி சாத்தியமற்றது. இந்த நிலைமைகள் மாற்று அரசியல் கோரிக்கைகளை முன் வைக்காமல் மாற்றம் பெற முடியாது. இந்திய அளவில் சமூக நீதிக்கான அரசியல் அணி திரட்டல் இல்லாமல் எதிர்வரும் சமூக பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க முடியாது. இந்த நெருக்கடியின் பாரதூர விளைவுகள் அடித்தட்டு சாதி மக்கள் மற்றும் அடித்தட்டு வர்க்கங்கள் தோளில்தான் சுமத்தப்படும். இது போதுமான அழுத்தத்தில் கூறப்பட வேண்டும்.


**நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தல் பொருட்டு**

இந்தியாவில் சாதியப் பாகுபாட்டிற்கு எதிரான அணி திரட்டலின் மூலம் அனைவருக்குமான வளர்ச்சியையும் மனிதவள மேம்பாட்டையும் ஒருங்கிணைத்த திராவிட இயக்கத்தின் சித்தாந்தம் மற்றும் அரசியல் பொருளாதார வளர்ச்சிப் போக்கினை ஆக்கப்பூர்வமான வகையில் விமர்சனபூர்வமாக ஆய்வு செய்து அதனை இந்தியா முழுமைக்கும் பொதுவானதாக மாற்றுவதிலும் அதனைத் தாண்டிச் செல்வதிலும் இந்திய இடதுசாரிகளுக்கு மிகப் பெரிய கடமை உள்ளது. அந்தக் கடமையில் பேராசிரியர்கள் கலையரசன், விஜயபாஸ்கர் போன்றோருக்கும் ஒரு பங்கிருக்கிறது.

கட்டுரையாளர், மார்க்சிய அரசியல் சமூகச் செயல்பாட்டாளர்.



11.08.2022 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் புத்தகக் கண்காட்சியை துணைவேந்தர் முனைவர் எம். செல்வம் திறந்து வைத்தார். இதில் பதிவாளர் முனைவர் எல்.கணேசன், நூலகர் முனைவர் எஸ்.சீனிவாச ராகவன், மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் திருச்சி மண்டல மேலாளர் எஸ்.குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மக்களை மேய்ப்பது மக்களாட்சியாகுமா?

க. பழனித்துரை

மறைந்த என் அன்பு நண்பர் மக்கள் மருத்துவர் ஜீவானந்தம் ஒரு நாள் காலை தொலைபேசியில் அழைத்தார். பெரும்பாலும் அவர் இரவு நேரத்தில்தான் என்னை அழைத்து நீண்ட உரையாடல் நடத்துவார். ஆனால் அன்று காலை அழைத்தவுடன் ஏதோ அவசரம் போலிருக்கிறது என என் அலைபேசியை எடுத்து வினவினேன். “உடன் ஒரு கட்டளை” என்றார். என்ன என்றேன். “நான் ஒரு சிறிய நூல் ஒன்றை தமிழாக்கம் செய்துள்ளேன். அதனைப் படித்துவிட்டு, அதன் மொழிபெயர்ப்பு சரியாக உள்ளதா என பார்த்துவிட்டு, அதற்கு அறிமுக உரை ஒன்றை நீங்களே எழுதித் தந்திடவேண்டும்” என்றார். என்ன நூல் என்றேன். தாமஸ் பெயின் எழுதிய “காமன் சென்ஸ்” என்றார். உடனே “அது பழைய புத்தகம், அமெரிக்க விடுதலைப் போராட்ட காலத்தில் எழுதியது அதை எதற்கு தற்போது மொழி பெயர்த்தீர்கள்” என்றேன். “நீங்கள் படியுங்கள், படித்து விட்டு ஒரு வாரத்தில் அறிமுக உரை சற்று நீண்டதாகவும் விளக்கமாகவும் இருக்க வேண்டும், அது மட்டுமல்ல அது பயன்படும் வகையில் இருக்க வேண்டும்” என்றார்.

மறுநாள் காலை அவர் மொழி பெயர்த்த புத்தகத்தின் நகல் ஒன்று வந்து சேர்ந்தது. அவரின் அன்புக் கட்டளையை மீற முடியாமல் படிக்க ஆரம்பித்தேன். அதே நூலை நான் முதுகலை படித்தபோது தேர்வுக்காக படித்தது என் ஞாபகத்திற்கு வந்தது. அப்பொழுது தேர்வுதான் பிரதானம். எனவே அந்த நோக்கில் படித்தது, அமெரிக்க சுதந்திரப் போருக்காக எழுதியது என்பது மட்டும் ஞாபகத்திற்கு வந்தது. மருத்துவர் ஜீவானந்தம் கூறியபோது மொழிபெயர்ப்பையும் சேர்த்துப் பார்க்க வேண்டும் என்றார். உடனே மீண்டும் ஆங்கிலத்தில் உள்ள அந்தப் புத்தகத்தை கூகுளிலிருந்து பதிவிறக்கம் செய்து அதையும் படித்தேன். அது ஒரு விதத்தில் என் மாணவப் பருவத்திற்கு அழைத்துச் சென்றது. அந்தப் புத்தகத்தை ஆங்கிலத்திலும் படித்தேன், மருத்துவர் ஜீவானந்தத்தின் மொழி பெயர்ப்பில் வந்த தமிழ் பிரதியையும் படித்தேன். அதை வைக்க முடியவில்லை. அந்த அளவுக்கு இன்றைய சூழலுக்கும் பொருந்துவதாக இருந்தது. படிக்கும்போதே மருத்துவர் ஜீவானந்தத்தை அழைத்து நன்றி கூறினேன். சிரித்தார். சிரித்துவிட்டு "உங்களால் மட்டும் ரசிக்க முடியும் அதன் தேவையை உணர முடியும் என்றுதான் உங்களிடம் அனுப்பியுள்ளேன்" என்றார்.

தாமஸ் பெயின் பெரும் புத்தகம் எழுதும் பழக்கமுடையவர் அல்ல. அவரின் சிறப்பு எளிய மக்களுக்காக எழுதுவது. எளிய மக்கள் மொழியில் எழுதுவது. மக்களுக்கு மிக எளிதில் புரியும்படியும், அவர்களின் உள்ளத்தைத் தொடும் வகையில் எழுதுவதிலும் அவரை எவரும் மிஞ்ச முடியாது. அவருடைய நடையில் மக்களின் உணர்வுக்குள் புகும் சக்தி இருக்கும். அத்துடன் மகிழ்ச்சிமிக்க துள்ளல் நடை இருக்கும். அதே நேரத்தில் எந்த அலங்காரமும் இன்றி எளிய மக்கள் மொழியில் எழுதும் வல்லமை வாய்ந்தவர். ஆகையால்தான் இவரை அமெரிக்க விடுதலைக்கும், அமெரிக்க நாட்டு உருவாக்கத்திற்கும் அடித்தளமிட்டவர்களின் ஒருவரான பெஞ்சமின் பிராங்கிளின் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்கு வரவழைத்தார். வரவழைத்து அமெரிக்காவில் வாழும் குவாக்கர்கள் எனப்படும் ஒரு இனக் குழுவினர் அமெரிக்க விடுதலைப்போரை ஆதரிக்க மறுத்த நிலையில், அவர்களை விடுதலைப்போருக்கு தயார் செய்ய இவர் கட்டுரை எழுதி அதன் மூலம் அந்த மக்களின் ஆதரவைப் பெற முனைந்தார் பெஞ்சமின் பிராங்கிளின்.

இந்த குவாக்கர்கள் இங்கிலாந்து அரச குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தெய்வத்தின் தூதுவர்கள், இறைவன் மக்களைக் காக்க அனுப்பப்பட்டவர்கள், அவர்களை எதிர்ப்பது பாவச்செயல், அதை ஒரு போதும் செய்யக்கூடாது. அகிம்சையில் பற்றுக் கொண்டவர்கள், இறையியலில் நாட்டம் கொண்டவர்கள். இங்கிலாந்து நாட்டு அரச குடும்பத்தை எதிர்ப்பது இறைவனை எதிர்ப்பது என்ற சிந்தனை கொண்டவர்கள். அப்படி இருந்த மக்களை மாற்ற எழுதப்பட்ட நூல். அந்த குவாக்கர் இன மக்களுக்கு ஒரு உண்மையை புரிய வைக்க வேண்டும் என்று முடிவு செய்து அந்த சிறிய புத்தகத்தை எழுதினார். இங்கிலாந்து அரச குடும்பம் தாங்கள் நினைக்கின்ற இறைப் பணி எதையும் செய்யவில்லை அதற்கு நேர் எதிர்த் திசையில் பயணித்து எப்படி உல்லாச வாழ்க்கையில் தோய்ந்து, மக்கள் மீது நம்பிக்கையற்ற சுயநலம் பேணும், சுகபோகம் அனுபவிக்கும் குடும்பமாகத் திகழ்கிறது என்பதை குவாக்கர்கள் புரிந்து உணர்ந்து, தெளிந்து விடுதலைப் போருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்து எழுதினார்.

அதுமட்டுமல்ல, அமெரிக்க விடுதலை என்பது, அமெரிக்க காலனிகளில் வசிக்கும் மக்களுக்கானது மட்டுமல்ல, அது மிகப்பெரிய கொள்கைப் பிரகடனத்தை தாங்கி உலக மக்களின் உன்னத மேம்பாட்டுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதையும் எழுதி அமெரிக்க மக்களின் ஆற்றல் முழுவதும் மானுடத்திற்கு எப்படி உன்னத நிலையில் பேராற்றலாக உயர்ந்து செயல்படப் போகிறது என்பதை படம் பிடித்து அமெரிக்க வலிமை எங்கிருக்கிறது என்பதையும் சாதாரண மனிதர் உணரும் வகையில் எழுதியதுதான் அந்தப் புத்தகம். எந்த நோக்கத்திற்காக அமெரிக்கா சுதந்திரம் பெற்றதோ அவற்றிற்காக இன்று அந்த நாடு செயல்படவில்லை என்பது உலகறிந்த செய்தி. இந்தப் புத்தகத்திற்கும் இந்தியாவிற்கும் என்ன தொடர்பு என்பதுதான் நம் கேள்வி. ஒரு தொடர்பு இருக்கிறது. இந்தப் புத்தகத்தை நிதானமாகப் படித்தால் அந்தத் தொடர்பை புரிந்து கொள்ள முடியும். எவ்வளவு மகத்தான லட்சியங்களுக்காக அந்த விடுதலைப்போர் அங்கே நடத்தப்பட்டது. அந்த லட்சியங்கள் இன்று எங்கே? என்று கேட்கத் தூண்டுகிறது. அது மட்டுமல்ல அந்த லட்சியக் கனவுகளுக்கு நேர் எதிர் திசையில் அமெரிக்கா செல்வதை நம்மால் உணர முடியும். இது என்ன அமெரிக்காவைத்தானே பாதித்தது நமக்கு என்ன என்று கேட்கத் தோன்றும். அதற்கும் இந்தப் புத்தகத்தில் விடை இருக்கின்றது.

நாம் எதற்காக இந்தியாவிற்குச் சுதந்திரம் வாங்கினோம்? எப்படிப்பட்ட துயரங்களை நம் முன்னோர்கள் அனுபவித்து தியாகம் செய்து வாங்கினார்கள். சாதாரண மக்களிடம் என்னவெல்லாம் சுதந்திர நாட்டில் ஏழைகளின் வாழ்வில் மாற்றங்கள் நிகழப்போகிறது? என்ற கற்பனையை முன் வைத்துத்தானே மக்களைப் போராட வைத்தனர் நம் தலைவர்கள். இந்தியா ஓர் ஒப்பற்ற சுதந்திரப் போராட்ட வழிமுறையை உலகுக்கு தெரிவிக்க என்றுதானே நம் தலைவர்கள், மகான்கள் அனைவரும் கூறினர். நம் சுதந்திரப் போராட்ட வழிமுறையை 42 நாடுகள் பின்பற்றி இந்தியாவிற்குப் பிறகு சுதந்திரம் அடைந்தன. நம் அகிம்சை வழிதானே

தென்னாப்பிரிக்க விடுதலைக்கு வழிகாட்டியது. நெல்சன் மண்டேலா அதைத்தானே உலகுக்கு அறிவித்தார். நம் அகிம்சை வழியில் தானே அமெரிக்க நிறவெறிக்கு எதிரான போராட்டங்களை நடத்த உறுதுணையாக இருந்தது என்று மார்டின் லூதர் கிங் ஜூனியர் பிரகடனப்படுத்தினார். அவர் அதை மட்டுமா பிரகடனப்படுத்தினார், காந்தியும், காந்தியமும் சுதந்திரப் போராட்டத்திற்கு தேவை என இந்தியர்கள் கருதுகின்றார்கள். அது முற்றிலும் தவறானது, காந்தி இந்தியாவிற்கும் உலகிற்கும் எதிர்காலத்திற்கும் எப்போதும் தேவைப்படுவார் என்று பிரகடனப்படுத்தினார். அத்துடன் காந்திய வழிமுறை என்பது உலகுக்கு வழிகாட்டும் உன்னத நெறி என்பதையும் கோடிட்டுக் காட்டினார். தன் இளைமையான வயதில் இந்திய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு அமெரிக்கா திரும்புகையில் கூறிய கருத்துக்கள் இன்னும் நம் காதுகளில் ரீங்காரமாக ஒலிக்கின்றதல்லவா?

அடுத்து இந்தியா சுதந்திரம் அடைந்து, இந்திய மக்கள் தங்களின் வேர்களைக் கண்டு பிடித்து, இந்திய வாழ்வுமுறையின் மகத்துவத்தை தாங்கள் வாழ்ந்து காட்டி உலகுக்குப் பிரகடனப்படுத்த வேண்டும் என்பதைத்தானே இந்த நாட்டின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என காந்தி கனவு கண்டார். இவ்வளவு உன்னதக் குறிக்கோளோடு உருவான நம் நாடு இன்று மக்களாட்சி என்ற பெயரில், நம் அரசியல்வாதிகள் வாழும் முறையும், அவர்கள் நடத்துகின்ற அரசியலும், அவர்கள் பங்கேற்று செயல்படுகின்ற தேர்தல் முறைகளும், அவர்கள் நடத்துகின்ற ஆளுகையும், நிர்வாகமும் எவ்வளவு தாழ்நிலையை எட்டியுள்ளது என்பதைப் புரிந்து கொள்வதற்கு தாமஸ் பெயின் எழுதிய இந்த நூல் உதவிகரமாக இருக்கும், எப்படி இங்கிலாந்து மன்னர் பரம்பரை உல்லாச வாழ்க்கையை மக்களின் அறியாமையால் அவர்கள்மேல் வைத்த நம்பிக்கையைப் பயன்படுத்தி வாழ்ந்தார்களோ, அதேபோல்தான் நம் நாட்டிலும் மக்களின் அறியாமையை பயன்படுத்தி ஓர் உல்லாச வாழ்க்கையை பெரும்பாலான அரசியல் கட்சிகள் நடத்துகின்றன. இதற்கு விதிவிலக்காக இடதுசாரிகள் போல் ஒரு சில கட்சிகளும் இருக்கின்றன. அது மட்டுமல்ல மக்களாட்சி என்றால் தேர்தல்தான் என்ற சிந்தனையை மக்கள் மத்தியில் உருவாக்கி மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகள் பற்றி எந்தப் புரிதலையும் ஏற்படா வண்ணம் அரசியல் நடத்தப்பட்டு வருகிறது நம் அரசியல் கட்சிகளால் நம் நாட்டில். தேர்தல் முடிந்துவிட்டால் வெற்றி பெற்றவர்கள்தான் அதிகாரம் பெற்றவர்கள். அவர்கள் உருவாக்குவதுதான் முடிவு, அவர்கள் வைப்பதுதான் சட்டம் அதை அனைவரும் ஏற்க வேண்டும், அவை எவ்வளவுக்கு மக்களுக்கு விரோதமாக இருந்தாலும் என்றுதான் நடந்து கொள்கின்றன நம்மை ஆளும் அரசியல் கட்சிகள்.




மக்களாட்சி உலகத்தில் விரிந்து பரந்து பொருள் கொண்டு பல்வேறு உயரிய நெறிகளைக் கொண்டு செயல்பட வேண்டும் என்ற விவாதம் வருகின்றபோது, மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகளான, சமத்துவம், சகோதரத்துவம், உரிமைகள், நேர்மை, நியாயம், நியதி, நீதி, ஒருவரை ஒருவர் மதித்தல், எதிர்கருத்தை மதித்து வாங்குதல், மக்களின் குரலை மரியாதையுடன் கேட்டல், என்பதையெல்லாம் புறம் தள்ளி தேர்தல், வெற்றி, ஆட்சி, ஆளுகை, பொருளாதார வளர்ச்சி என்று அடிப்படை மக்களாட்சிப் பண்புகளிலிருந்து விலகி வாழ்ந்து பெரும்பான்மை மக்களைச் சுரண்டி வாழும் ஒரு சில சமூகங்களுக்கு பணி செய்வதாக மாற்றிவிட்டார்கள் நம் அரசியல்வாதிகள். இது மக்களாட்சியில் ஒரு சோக வரலாறு.

இந்தியா வளர்கிறது பொருளாதாரத்தில், உலகை வியக்க வைக்கிறது வளர்ச்சியில், என்று கூறும்போது, அடைந்த வளர்ச்சியால், மக்களின் வாழ்வு மேம்பட்டதா? இதோ புள்ளி விபரம் அரசாங்கமே தந்துள்ளது. இந்தியாவில் 68% மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். இந்திய கிராமங்களில் வகிக்கும் குடும்பங்களில் 90% எந்தவித நிலைத்த வருமானம் அற்ற வாழ்க்கையை வாழ்கின்றனர். அந்தக் குடும்பங்களில் 5.37 மில்லியன் குடும்பங்கள் நிலமற்ற ஏழைகளாய் வாழ்கின்றனர். 6.89 மில்லியன்

கிராமக் குடும்பங்கள் ஆண் துணையின்றி பெண்கள் தலைவராக இருந்து குடும்பத்தை ஏழ்மையில் இருந்து நடத்துகின்றனர். 49% மக்கள் கிராமங்களில் பல்முனை வறுமைத் தாக்குதலுக்கு உட்பட்டு வாழ்கின்றனர். 51.4% கிராம மக்கள் உடல் உழைப்பை வைத்து கூலி பெற்று வாழ்க்கையை நடத்துகின்றார்கள். 23,73% மக்கள் கிராமங்களில் ஒரே ஒரு அறை கொண்ட குடிசைகளில்தான் வாழ்கின்றார்கள்.

இந்தச் சூழலை மக்களாட்சி சாதாரணமாக கடந்துவிட முடியாது. ஆட்சியாளர்கள் 3 ட்ரில்லியன் ரூபாய் ஆண்டு தோறும் கிராமங்களின் மேம்பாட்டுக்காக செலவழிப்பதாகக் கூறுகின்றார்கள். கிராமங்கள் எப்படி இருக்கின்றது என்பதற்கும் அரசாங்கமே புள்ளி விபரம் ஒன்றைத் தருகின்றது. இந்தியாவில் அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்ததில் கிராமங்களில் குறைந்தபட்ச மானுட வாழ்வுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்த மாநிலங்கள் இரண்டே இரண்டுதான். ஒன்று குஜராத், மற்றொன்று கேரளா. பெரும்பாலான மாநிலங்கள் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளைக் கூட செய்ய இயலாத நிலையில் இருக்கின்றன என்பதை அரசு கூறிய போதும், நம் அறிவு ஜீவிகளோ, ஊடகங்களோ விவாதிக்கத் தயாராக இல்லை என்பது தான் நாம் பார்க்கும் ஒரு எதார்த்தமான உண்மை.

வளர்ந்தோம், சாதித்தோம், மூன்றாவது பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாடு, அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும் முதல் நான்கு இடங்களுக்குள் இருக்கும் நாடு என்று கூறும் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். 80 கோடி மக்களின் உணவுப் பாதுகாப்பு என்பது நம் அரசாங்கத்தின் பொது வினியோக முறையில் தரும் விலை இல்லாத உணவுப் பொருள்கள் மூலமாக என்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. இந்த புள்ளி விபரத்தைத் தெரிவித்தவர் நம் பாரதப் பிரதமர். இந்தச் செய்தி கூறும் உண்மை என்ன? நாம் உலகம் வியக்கும் வண்ணம் பொருளாதாரத்தில் வளர்ந்தும், மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செயது, அவர்கள் மதிக்கத்தகுந்த மரியாதையுடைய மானுட வாழ்வை முறையாக வாழ வழிவகை செய்ய முடியவில்லை என்பதுதான் நாம் இன்று காணும் உண்மை. இந்தச் சூழலில் தான் ஆண்டு வருமானம் 10,000 கோடி டாலரை மிஞ்சி அம்பானியின் ரிலயன்ஸ் கம்பெனி சாதனை படைத்திருக்கிறது. இந்த அபரிமித லாபம் ஈட்டும் வணிகத்தையும் நாம் புரிந்து கொள்ள தவறக் கூடாது.

இந்த இடத்தில் உண்மையை உரசிப்பாருங்கள். நாம் எங்கு இருக்கிறோம் என்று. நம் ஆட்சியாளர்கள் உள்ளபடியே மக்களுக்காக செயல்படுகின்றார்களா? அப்படிச் செயல்பட்டிருந்தால் இன்று இவ்வளவு பெரிய அளவில் பொருளாதாரம் வளர்ந்தபோது எல்லாத்தரப்பு மக்களுக்கும் எல்லா அடிப்படை வசதிகளும் கிடைத்திருக்கும் அல்லவா? சாதாரண மக்களின் வாழ்வு மேம்பட்டிருக்கும் அல்லவா? இது ஏன் நடைபெறவில்லை? உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை ஓர் உண்மையைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தியாவில் செல்வம் ஒரு சிலர் கையில் குவிக்கப்பட்டுள்ளது, 60% செல்வம் ஒரு பதிமூன்று தனி நபரிடம் சென்று சேர்ந்து விட்டது. கீழ் மட்டத்தில் உள்ள 40% மக்கள் கையில் வெறும் 13% சொத்து மட்டுமே இருக்கின்றது. மேற்கூறிய புள்ளி விபரம் என்ன செய்தியைத் தருகிறது நமக்கு? நம் அரசு யாருக்காக உழைக்கிறது? உண்மையிலேயே ஏழைகளைப் பற்றி நம் ஆட்சியாளர்கள் சிந்திக்கின்றார்களா? இப்படிக் கேள்வி கேட்டால் அதற்கும் ஒரு பதில் வரும். நிறைய திட்டங்களை அரசு தீட்டி செயல்படுத்தி வருகிறது என்பார்கள். அவைகள் அனைத்தும் பிச்சை போடுவது. தேர்தலின்போது வாக்குகளை ஏழைகளிடம் விலை கொடுத்து வாங்கிக் கொள்வது. ஏழைகளை அரசியலுக்குள் நுழைய விடாமல் பார்த்துக் கொள்வது. இன்றைய சந்தைப் பொருளாதாரம் அரசியலை அடியோடு துவம்சம் செய்து சிதிலமடைய வைத்துவிட்டது. அரசியல் என்பதும், ஆட்சியைப் பிடிப்பது என்பதும் பணம் பார்க்க என்ற சூழலைக் கொண்டு வந்துவிட்டது. மக்களின் மேம்பாட்டுக்கு செயல்பட வேண்டிய மக்களாட்சி, சந்தைக்கும் ஒரு சில முதலாளிகளுக்கும் செயல்பட்டுக் கொண்டுள்ளது என்பதுதான் நாம் இன்று பார்க்கும் எதார்த்தமான உண்மை. இந்தச் சூழலிலிருந்து விடுபட மந்திரமோ, வித்தையோ, மாயா ஜாலமோ செய்து கொண்டுவர இயலாது. இதற்கு இருப்பது ஒரே வழிதான், அது மக்களை குறிப்பாக மக்களாட்சிக்குப் போராட ஏழைகளைத் தயார் செய்வதுதான், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதுதான், மக்களை அதிகாரப்படுத்துவதுதான். இதைவிட மிக முக்கியமாக மக்களிடம் தாழ்ந்து கிடக்கும் சிந்தனைச் சூழலை மாற்றியமைத்திட வேண்டும். மக்களின் சிந்தனைப் போக்கு மாறாமல் எந்த மாற்றத்தையும் நாம் அரசியலில் எதிர்பார்க்க முடியாது. இந்தச் சிந்தனைச் சூழலை மாற்றுவதுதான் இன்றைய மிக முக்கியமான பணி. அந்தப் பணிக்கு மிகவும் உதவிகரமாக தாமஸ் பெயினின் 'பொது அறிவு' என்ற நூல் இருக்கும் என்பதை யாரும் மறுக்க இயலாது. இதைத்தான் மக்கள் மருத்துவர் மனதில் வைத்து இந்த நூலை மொழி பெயர்த்துள்ளார், இந்த நூல் அனைவரும் படிக்க வேண்டிய ஒன்று. அதன் அடிப்படையில் ஒரு பெரும் விவாதத்தை முன்னெடுக்க வேண்டும். அதுதான் இன்றைய தேவை மற்றும் தலையாயப் பணி.

கட்டுரையாளர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்துராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)

கட்டுரை

# குறுந்தொகையில் உள்ளுறை



அ.தமயந்தி

இலக்கணச் செம்மையும் வளமும் கொண்ட தமிழ்மொழியின் தனிப்பெரும் சொத்துக்களாக திகழ்வது சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியப் பாடல்களில் பல்வேறு இலக்கிய உத்திகள் கையாளப்பட்டுள்ளன. ஒவ்வொரு சங்கக் கவிதையும் ஏதாவதொரு பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பெற்றுள்ளன. கருப்பொருள் காட்சிகள் இடம்பெறுகின்றன. இலக்கியத்திற்கு அழகு செய்யும் அணிகள் நிறைந்து காணப்படுகின்றன. அகப்பாடல்களில் அழகு உள்ளுறை போன்றவற்றால் சிறப்புறுவதை அறிய முடிகிறது. அவ்வகையில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் இடம்பெறும் உள்ளுறை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**உள்ளுறை விளக்கம்**

சங்க இலக்கியங்களில் காணப்படும் நுட்பமான உத்திகளுள் ஒன்று உள்ளுறை. உள்ளுறை குறித்துக் காணப்படும் அறிஞர்களின் விளக்கங்களும் உரையாசிரியர்களின் கருத்துகளும் உள்ளுறைக்கான விளக்கத்தை முழுமையாக வரையறை செய்யவில்லை. உள்ளுறை குறித்த சிந்தனைகள் முழுமையும் தெளிவுபடுத்தப்படாமலேயே உள்ளன. இதுகுறித்து, தமிழண்ணல் கூறும் கருத்து சித்திக்கத்தக்கது.

> தொல்காப்பியர் உள்ளுறை என ஒரு பொருளை எடுத்தோதுகின்றார். அதன் உட்பிரிவுகளுள் ஒன்றே உள்ளுறை உவமை ஆகும். இவ்வுள்ளுறை உவமை பற்றி ஓரளவு அறிந்திருக்கும் நாம் உள்ளுறை என்ற பொதுக்கோட்பாடு பற்றி யாண்டும் எப்பொழுதும் சிந்திப்பதில்லை. இக்கோட்பாடு பற்றிச் சங்கநூல்களுள் நிறைய மேற்கோள்கள் இருக்கின்றன. ஆயினும் அவை அனைத்தும் உய்த்துணரப்படாமல் உள்ளன. இதனால் உரையாசிரியர்கள் தாமும் இக்கோட்பாட்டினைத் தெளிவு பெற விளக்கிச் சென்றிலர்.
>
> (தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு ப.60)

தொல்காப்பிய இலக்கண நூல் கூறும் உள்ளுறை, உள்ளுறை உவமம் குறித்த வரையறைகள் உள்ளுறையைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

> உள்ளுறை என்பது வெளிப்படையாகத் தோன்றும் ஒரு பொருள் இருக்கவும் உட்பொருளாகப் பிறிதொன்று தோன்றும். (தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு ப.66)

என்னும் சிந்தனையால் சொல்லப்படும் செய்தியின் மூலம் வேறு ஒன்றை உணர்த்துவது உள்ளுறை என்பது தெளிவாகும்.

தொல்காப்பியர் திணையை உணரும் முறைகளை இரண்டாகக் கூறும் இடத்து உள்ளுறை உவமத்தை முன்வைக்கின்றார்.

> உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
> தள்ளா தாகும் திணையுணர் வகையே.
>
> *(தொல்.பொருள்.நூ.992)*

கருப்பொருள்களில் தெய்வம் தவிரப் பிறபொருள்களில் உள்ளுறை பயின்று வரும் என்று தொல்காப்பியர் கூறும் கருத்து கருப்பொருள்களின் வழி உள்ளுறை விளக்கம் பெறும் என்பதைத் தெளிவாக்குகிறது.

> உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்
> கொள்ளும் என்ப குறியறிந் தோரே.
>
> (தொல்.பொருள்.நூ.993)

உள்ளுறை உவமம் ஐந்தாகப் பாகுபடுத்தப்பட்டு ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு வகையில் சிறப்புறும் என்பதையும் உள்ளுறையின் பயன் முடிவற்ற இன்பம் என்பதையும் தொல்காப்பியர் விளக்குகிறார். இதனை,

> உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு எனக்
> கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே.
> (தொல்.பொருள்.நூ.1188)
> அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்
> தன்வயின் வருதலும் வகுத்த பண்பே.
>
> (தொல்.பொருள்.நூ.1189)

என்று தொல்காப்பியம் கூறும் உள்ளுறையின் வகைகளான உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்னும் ஐந்தும் பாடுபொருள் சிறக்க உதவும் கூறுகளாக அமைந்திருக்கின்றன. இவற்றுக்குத் தரப்படும் விளக்கம் இலக்கியக் கட்டமைப்பிற்கு இவற்றின் பங்களிப்பை விவரிக்கும்.

உடனுறை - உடனுறைவதொன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள்விளங்குவது. உவமம் - என்பது ஏனை உவமம் என்பதன் வேறுபட்டு உள்ளுறைப் பொருளைத் தருவதாகும். சுட்டு என்பது ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதொரு பொருள் தோன்றச் செய்தல். நகை - நகையினால் பிறிதொரு பொருள் உணர நிற்றல். சிறப்பு - இதற்குச் சிறந்தது இஃது எனக் கூறுவதனால் பிறிதொரு பொருள் கொள்ளக்கிடப்பது. (தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு பக்.60-61)

இத்துடன் மங்கல மொழி, வைஇய மொழி, மாறில் ஆண்மையில் கூறிய மொழி என்பவற்றிலும் உள்ளுறை பயின்று வரும் என்கிறார் தொல்காப்பியர்.

மங்கல மொழியும் வைஇய மொழியும்
மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியும்
கூறியல் மருங்கின் கொள்ளும் என்ப
(தொல்.பொருள்.நூ.1190)

உள்ளுறையின் வகைகளுள் ஒன்றாக அமையும் உவமத்தைக் குறிப்பிடும் தொல்காப்பியர் உவமப் போலி என்னும் ஒன்றைக் குறிப்பிட்டு அதன் வகைகளை ஐந்தாகப் பாகுபாடு செய்கிறார். இதனை,

உவமப் போலி ஐந்தென மொழிப.
(தொல்.பொருள்.நூ.1244)
தவலரும் சிறப்பின் அத்தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉம் திறத்தியல் என்ப
(தொல்.பொருள்.நூ.1245)

என்னும் நூற்பாக்களின் வழி அறியலாம். உள்ளுறை உவமம், ஏனை உவமம் என்னும் இரண்டைக் குறிப்பிட்டு, உள்ளுறை உவமம் உய்த்துணர்ந்து பொருள் கொள்வது, ஏனை உவமம் இயல்பாகப் பொருள் உணரும் தன்மையது என்பதைத் தொல்காப்பியர் தெளிவுபடுத்துகிறார்.

உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள்முடி கென
உள்ளுறுத்து இறுவதே உள்ளறை உவமம்
(தொல்.பொருள்.நூ.994)
ஏனை உவமம் தான் உணர் வகைத்தே
(தொல்.பொருள்.நூ.995)

மேற்குறித்த செய்திகளால் உள்ளுறை என்பது புலவன் தான் படைக்கும் பாடலுக்குள் மறைபொருளாய் ஒன்றைக் கூறி விளங்கச்செய்தல் என்பது விளங்கும்.

**குறுந்தொகையில் உள்ளுறை**

குறுந்தொகையில் இடம்பெறும் உள்ளுறை குறித்த சிந்தனைகள் கருப்பொருள்களின் வழியாக உணர்த்தும் முறையில் அமைகின்றன. திணை அடிப்படையில் உள்ளுறையை நோக்கும்போது அதன் நுட்பம் புலப்படும்.

**முல்லைத்திணை**

தலைவன் பொருள் தேடச் சென்று மீண்டு வருவேன் என்று கூறிய காலம் வந்த போது, தலைவி வருத்தம் கொள்வாளே என்று தோழி வருந்திய நிலையில் தலைவி, தலைவன் பொய் கூறமாட்டான். இது கார்காலம் என்று இயற்கை கூறினும் நான் நம்பமாட்டேன். தலைவன் பொய் கூறமாட்டான் என்னும் பொருள்பட அமையும் உள்ளுறை தலைவியின் நம்பிக்கையையும், காதலின் ஆழத்தையும் வெளிக்காட்டும் பாங்கில் அமைகிறது.

வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடையிடுபு
பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்
கதுப்பின் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம் கார்எனக் கூறினும்
யானோ தேறேன்அவர் பொய்வழங் கலரே
(குறுந்.21)

என்னும் குறுந்தொகைப்பாடலில் கொன்றைக்குப் பெண்ணும், தழைக்குக் கூந்தலும் பூங்கொத்துகளுக்குப் பொன் அணிகலன்களும் உவமையாகக் கூறப்பட்டன. தலைவி கொன்றை மரத்தோடு கானகமும் சேர்த்து இது கார்காலம் எனக் கூறினும் தன்னால் ஏற்க இயலாது என்று கூறுகிறாள். கொன்றை மரங்கள் அறியாமை உடையன ஆதலால் அவை புதுப் பூக்களை மலரச் செய்து கார்காலம் எனக் கூறுமாறு பெண்களின் கூந்தலைப்போலத் தோன்றின. இவ்வாறு மரம் புதுப் பூ அணியினும் பெண்ணாக இயலாததுபோலக் கானகமும் கொன்றை மலர்ந்து கார்காலம் எனக்கூறினும் கார்காலம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறாள். கொன்றை கார்ப்பருவத்தில் மலர்வது இயற்கை. கொன்றை மலர் மூலமாகத் தலைவி, தலைவன் மேல்கொண்ட நம்பிக்கை உள்ளுறையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**குறிஞ்சித்திணை**

தலைவன் திருமணத்தை இடை வைத்துப் பொருளுக்காகப் பிரியும் சூழலில் தலைவியின் துன்பம் கண்டு தோழி வருந்திய நிலையில் தலைவி தோழியைத் தேற்றுகிறாள். இதனை,

துறுக லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவருங் குன்ற நாடன்
நெஞ்சுகள னாக நீயலென் யானென்
நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்
தாவா வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே (குறுந்.36)

என்னும் பரணர் பாடலில் களவுக்காலத்தில் தலைவன் கூறிய வாய்மொழிகள் எல்லாம் பொய்த்தபோது தலைவி தோழியிடம் பின்வருமாறு கூறுகிறாள். துறுகல்லின் அருகில் வளர்ந்துள்ள மாணைக் கொடி கல்லின் மீது படராமல் கல்லின் அருகில் உறங்கும் யானை மேல் படர்ந்து வளரும். களவில் தலைவி யானைக் கன்றுபோன்ற தலைவனை மாணைக் கொடிபோலத் தழுவி இருந்தபோது, அவன் தலைவியை விட்டு நீங்கினான். யானை எழுந்த போது எவ்வாறு மாணைக் கொடி படர இடம் இன்றித் தவித்ததோ அவ்வாறே தலைவன் நீங்கிய வழித் தலைவி துன்புற்றாள். பிரியமாட்டேன் என்று கூறிய தலைவனின் சூளுரை பொய்யானது என்னும் உள்ளுறை கருப்பொருள்களின் வழித்தெளிவாக்கப்பட்டுள்ளது.

காமம் ஒழிவது ஆயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென, அருவி
விடரகத்து இயம்பும் நாட! -எம்
தொடர்பும் தேயுமோ நின்வயினானே (குறுந்.42)

என்னும் கபிலர் பாடலில் மலைப்பகுதியில் மேகம் மழை பொழிந்ததை அறிவிக்கும் வகையில் மலையில் இருந்து மழை பெய்கிறது. மழை பெய்த மறு நாளும் அருவிகள் பெருக்கெடுக்கும். அத்தகைய மலை நாடனே என்று தோழி தலைவனை விளித்து, இரவுக்குறி மறுக்கப்பட்ட போதும் கூட உன்மேல் கொண்ட அன்பு மாறாது என்று குறிப்பிடுகிறாள். இங்கு

அருவிக் காட்சியின் மீது தலைவன் தலைவியின் காதல் உள்ளுறையாகப் பதிவு பெற்றுள்ளது. இரவுக்காலத்தில் பெய்த மழை பலரும் மழை பெய்ததை அறியுமாறு அருவியாய் வெளிப்பட்டுத் தோன்றுகிறது. அதுபோல தலைவனின் களவுக்காதல் அவன் மீது கொண்ட அன்பால் தலைவிக்கு உடல் வேறுபாடு நிகழ்ந்தது. அலர் பரவுதற்கு வழி வகுத்தது. முதல் நாள் பெய்த மழை மறுநாளும் அருவியாய்த் தொடர்ந்து பெருக்கெடுப்பது போல இரவுக்குறி தடைப்பட்டாலும் நீங்காமல் தொடரும் என்று தோழி குறிப்பிடுகிறாள். பாடலில் அருவிக் காட்சியின் மூலம் களவு - அலர் - இரவுக்குறி மறுப்பு - தொடர்ந்த அன்பு என்பன உள்ளுறையாக அமைந்து சிறக்கின்றன.

இரவில் நிலவுக்காட்சியை முன்வைத்து முன்னிலைப் புறமொழியாகத் தோழி கூறும் சிந்தனை உள்ளுரையாக அமைகிறது.

**கருங்கால் வேங்கை வீஉகு துறுகல்**
**இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை**
**எல்லி வருநர் களவிற்கு**
**நல்லை அல்லை நெடுவெண் நிலவே (குறுந்.47)**

என்னும் குறுந்தொகைப்;பாடலில் இரவில் வெளிப்படும் நிலவு தலைவனுக்கு நன்மை செய்யவில்லை. தீமையே செய்கிறது என்று தோழி குறிப்பிடுகிறாள். இரவுக்காலத்தில் தலைவன் கொடும் குணம் உடைய விலங்குகளைக் கடந்து தலைவியைச் சந்திக்க வருவதால் அவன் மேல் கொண்ட அன்பினால் இரவுக்குறி மறுப்பு நிகழ்கிறது. தலைவன் இரவில் வருவதால் விலங்குகள் மட்டுமன்றித் தலைவியின் தாயும் தந்தையும் உறவுகளும் உண்டு என்பதையும் தோழி உணர்த்துகிறாள். தலைவனின் இரவு வருகை களவுக்கு உகந்தது இல்லை என்பதைக் கூறிக் கற்பே நன்மை பயப்பது என்பதை உணர்த்துகிறாள்.

தோழி தலைவனுக்குக் கூறும் இரவுக்குறி மறுப்புச் செய்தி அவனுக்குத் தீங்கு நிகழும் என்று தலைவியும் தோழியும் வருந்தும் வருத்தத்தைப் பொருளாகக் கொண்டு அமைகிறது. இதை,

**கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்**
**கைம்மை உய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி**
**ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்**
**சாரல் நாட நடுநாள்**
**வாரல் வாழியோ வருந்துதும் யாமே(குறுந்.69)**

என்னும் கடுந்தோட்கரவீரனார் பாடலின் மூலம் அறியலாம். மேலும் தலைவனின் எண்ணத்தை மறுக்கும் வண்ணம் தோழியின் இரவுக் குறி மறுப்பு நிகழ்கிறது. தலைவனின் மலைநாட்டுச் சாரலில் ஆண் துணையை இழந்த பெண்குரங்கு தனித்து வாழ மனம் இன்றித் தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் தன்மையை உடையது. தலைவியும் அவ்வாறே தலைவனை இழந்து வாழும் மனநிலை இல்லாதவள் என்பதையும் கூறி, இரவு வருகையால் துன்பம் நிகழும் என்று கூறி இரவுக்குறியை மறுக்கிறாள்.

தோழி தலைவனிடம் தலைவியை அழைத்துக்கொண்டு உடன்போக்குச் செல்வதற்கு முன்பு நீயே தலைவியைக் காத்தற்கு உரியவன் என்று குறிப்பிடுகிறாள்.

**பெருநன்று ஆற்றின் பேணாரும் உளரே**
**ஒருநன்று உடையள் ஆயினும் புரிமாண்டு**
**புலவி தீர அளிமதி இலைகவர்பு**
**ஆடுஅமை ஒழுகிய தண்ணறுஞ் சாரல்**
**மென்னடை மரையா துஞ்சும்**
**நன்மலை நாட நின்அலது இலளே (குறுந்.115)**

என்னும் குறுந்தொகைப்பாடலில் தோழி, தலைவனிடம் மூங்கில்கள் வளர்ந்துள்ள மலைச்சாரலில் மெலிந்த நடையினை உடைய ஆண்மான் முதுமை காரணமாக உதிர்த்த இலைகளை உண்டு மலைப்பக்கத்தில் குளிர்ச்சியும் மணமும் உடைய இடத்தில் தங்கி வாழும் என்று குறிப்பிடுகிறாள். மானுக்கு எவ்வாறு மலைச்சாரல் முதுமையிலும் கைவிடாது காக்கிறதோ அதுபோல தலைவியும் உன் அருளால் உன்னிடம் தங்குதற்கு உரியவள் என்று குறிப்பிடுகிறாள்.எந்த நிலையிலும் மானுக்கு அடைக்கலம் அளிக்கும் மலைச்சாரல்போல் இவளுக்கு எப்போதும் நீயே எல்லாமும் என்று மான் என்னும் கருப்பொருள் கொண்டு உள்ளுறை கூறப்பட்டுள்ளது.

வரைவின் இடையே எவ்வாறு ஆற்றி இருப்பாய் என்று தோழி வினவும்போது தலைவி, தோழிக்கு உரைக்கும் பாடல் ஒன்று உள்ளுறைப்பொருளைக் கொண்டு சிறக்கிறது.

**இனமயில் அகவும் மரம்பயில் கானத்து**
**நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்ப**
**படுமழை பொழிந்த சாரல் அவர்நாட்டுக்**
**குன்றம் நோக்கினென் தோழி**
**பண்டை யற்றோ கண்டிசின் நுதலே (குறுந்.249)**

என்னும் கபிலர் பாடலில் மயில் தன் துணையுடன் மகிழ்ந்து நடனம் ஆடுவதற்குக் காரணமான மழை குட்டியுடன் இருக்கும் குரங்கினைக் குளிரால் துன்புறச் செய்யும். தலைவன் தலைவியின் களவுக்கால வாழ்க்கை இன்பத்தைத் தரும் என்றாலும் அதை விடப் பாதுகாப்பு நிறைந்தது கற்பு வாழ்க்கை என்பதால் குரங்கு தன் குட்டியுடன் வாழ்கின்ற குடும்ப வாழ்க்கை சுட்டிக் கூறப்பட்டது.

**மருதத்திணை**

தலைவன் பரத்தையின் பொருட்டுப் பிரிந்து இல்லம் வர வாயிலை அனுப்பிய சூழலில் தோழி வாயில் மறுக்கிறாள். இதனை,

**யாரினும் இனியன் பேர்அன் பினனே**
**உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்**
**சூல்முதிர் பேடைக்கு ஈனில் இழையஇயர்**
**தேம்பொதிக் கொண்ட தீம்கழைக் கரும்பின்**
**நாறா வெண்பூக் கொழுதும்**
**யாணர் ஊரன் பாணன் வாயே(குறுந்.85)**

என்னும் குறுந்தொகைப்பாடலில் தலைவன் உறவுகள் அனைவரிடத்திலும் அன்புடையவன் என்று பாணன் கூறியதை ஏற்க விரும்பாமல் வாயில் மறுக்கிறாள். தலைவன் உண்மையான அன்புடையவன் என்று பாணன் கூறினும் தோழி அதனை மறுத்து உரைப்பதற்கான காரணம் உண்டு. பாடலில் குறிப்பிடப்படும் ஊர்க்குருவிகள் ஆணும் பெண்ணுமாக இணைந்து வாழ்பவை. ஆண் பறவை தன் பெண் துணைக்கு மெத்தென்ற கூட்டினை அமைக்கும். குருவிக்கு இருக்கின்ற அன்பும் பொறுப்புணர்வும்

தலைவனுக்கு இல்லையே என்று தலைவி வருத்தம் கொள்கிறாள்.

**பாலைத்திணை**

பொருள் தேட எண்ணம் கொண்ட தலைவன் முன்பு பாலைவழியில் பொருள்தேடச் சென்ற நினைவினையும் தான் அடைந்த துயரத்தையும் மனத்தில் கொண்டு தலைவியையும் அவளது அழகு நலத்தையும் நினைவில்கொண்டு செலவழுங்குகிறதை,

மல்குசுனை புலர்ந்த நல்கூர் சுரமுதல்
குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியின் தோன்றும்
கான நீள்இடைத் தானும் நம்மொடு
ஒன்றுமணம் செய்தனள் இவள்எனின்
நன்றே நெஞ்சம் நயந்தநின் துணிவே (குறுந்.347)

என்னும் குறுந்தொகைப்பாடலின் மூலம் அறியலாம். மேலும், தலைவன் முன்பு பொருள்தேடச் சென்ற வழி நீரற்ற சுனைகளை உடையதாக இருந்தது. அவ்வழியில் மீண்டும் செல்ல நினைத்த தலைவன், தலைவி உடன் வந்தால் மனத்தின் துணிவு இனிதாகும் என்று கருதுவது அவனது செலவழுங்கலை உள்ளுறையாக உணர்த்துகிறது.

குறுந்தொகைப் பாடல்களில் இடம்பெற்றிருக்கும் உள்ளுறைகள் தலைவன் தலைவியின் காதல் வாழ்வில் நிகழும் ஒழுக்கங்களை உட்பொருளாகக் கொண்டு சிறக்கின்றன. கருப்பொருள்களின் வழியாகப் புலவர்களின் உணர்த்தல் திறன் உத்தி வெளிப்படுகின்றது. பாடல்களில் இடம்பெறும் குறிஞ்சி நில உள்ளுறைகள் தலைவனின் இரவுக்குறி வருகை, காவல், வழியின் துன்பம், வரைவு கடாதல், உடன்போக்குதலான பொருண்மைகளில் அமைந்து பாடல்களின் உட்பொருளை உய்த்தறிய உதவுகின்றன. முல்லைத்திணையின் உள்ளுறைகள் தலைவன் பிரிவு அதனால் தலைவிக்கு ஏற்பட்ட துயர் ஆகியவற்றை விளக்குகின்றன.தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தின் இயல்பினை மருதத்திணையும் பிரிவுத் துன்பத்தின் வலியை நெய்தல் திணையும் தலைவன் பொருள் தேடும் ஆர்வம் அதனால் தலைவிக்கு ஏற்படும் துன்பம் ஆகியவற்றைப் பாலைத் திணைப் பாடல்களும் விளக்குகின்றன.

**துணைநூல்கள்**


1. இளம்பூரணர் (உ.ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம் கழகவெளியீடு 1966
2. சண்முகப்பிள்ளை. மு(பதி) - குறுந்தொகை தமிழ்ப் பல்கலைகழக வெளியீடு, தஞ்சாவூர் முதற்பதிப்பு 1985
3. சாமிநாதையர் உ.வே (பதி) - குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.ச நூல் நிலையம், பெசன்ட் நகர், சென்னை 7 ம் பதிப்பு, 2017
4. நாகராசன்.வி (உ.ஆ) - சங்க இலக்கியம் குறுந்தொகை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை, 2005



கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர், கணேசர் கலை அறிவியல் கல்லூரி மேலைச்சிவபுரி.





18.08.2022 அன்று உசிலம்பட்டியில் புத்தகக் கண்காட்சியை நகர்மன்றத் தலைவர் சகுந்தலா தொடங்கி வைத்தார். இதில் லெனின் சிவா, முபாரக் அலி, மாரீஸ்வரன், பேராசிரியர் கருப்பத்தேவர், எழுத்தாளர் சுந்தர வந்தியத் தேவன், அறிவழகன், நீதி ராஜன் மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.


## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகள்



28.07.2022 அன்று மார்த்தாண்டத்தில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக 36 ஆவது தேசிய புத்தக கண்காட்சியை குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் **J.G.** பிரின்ஸ் அவர்கள் திறந்து வைத்தார். இதில் வரலாற்றறிஞர் அ.கா.பெருமாள், எழுத்தாளர் குறும்பனை சி.பெர்லின், தோழர் S.K கங்கா, எழுத்தாளர் கோட்டூர் மனோஜ், சமூச செயல்பாட்டாளர் பிறிஸ்டோ, *CPI* குமரி மாவட்ட துணைச் செயலாளர் தோழர் சுரேஷ் மேஸ்திரிதாஸ் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

14.07.2022 அன்று சித்திரங்கோடில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளை மற்றும் *TRINITY CENTRAL SCHOOL (CBSE)* சார்பாக புத்தக கண்காட்சியை பள்ளியின் தாளாளர் அருட்தந்தை பால் ரிச்சர்டு அவர்கள் திறந்து வைத்தார். இதில் பள்ளியின் முதல்வர் திரு. அமலி, நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.





10.07.2022 அன்று நாகர்கோவிலில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் நாகர்கோவில் கிளை மற்றும் இலக்கியப் பட்டறை தக்கலை இணைந்து நடத்திய சாகித்ய அகாதமி விருதுபெற்ற மூத்த எழுத்தாளர் பொன்னீலன் அவர்களின் சமூகங்களும் சமயங்களும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் ஸ்காட் கிறித்தவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் ஜேம்ஸ் ஆர் டேனியல், பேராசிரியர் மு.அப்துல் சமது மற்றும் எழுத்தாளர் குமரி ஆதவன், எழுத்தாளர் மலர்வதி, வரலாற்றாய்வாளர் பென்னி, திணை இதழ் ஆசிரியர் தோழர் பிரேம்குமார், தோழர் S.K.கங்கா, ஆசிரியை ஆன்றனி லீமா றோஸ், நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

08.07.2022 அன்று நாகர்கோவில் அமலா கான்வென்ட் பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் அமலா கான்வென்ட் பள்ளிக் குழுமம் மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் நாகர்கோவில் கிளை இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை அமலா கான்வென்ட் பெண்கள் மேல் நிலைப்பள்ளியின் தாளாளர் அவர்கள் திறந்து வைத்தார். இதில் அமலா கான்வென்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் முதல்வர், அமலா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.





கட்டுரை

# அபிவிருத்தி பற்றிய சமூகவியல் கோட்பாடுகள்

கந்தையா சண்முகலிங்கம்

அபிவிருத்திச் சிந்தனை சமூகவியல், பொருளியல், அரசியல், புவியியல் ஆகிய சமூக விஞ்ஞானத் துறைகளுடன் நெருங்கிய தொடர்புடையது. இக்கட்டுரை அபிவிருத்தி பற்றிய சமூகவியல் கோட்பாடுகளை அறிமுகம் செய்வதாக அமைகிறது. ஹெர்பட் ஸ்பென்சர், மக்ஸ்வெபர், எமில் தர்க்கிம், ரல்கொட் பார்சன்ஸ் ஆகிய சமூகவியலாளர்களின் அபிவிருத்தி தொடர்பான சிந்தனைகள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

**அபிவிருத்தி பற்றி முக்கியமான சமூகவியல் கோட்பாடுகள்:**

**1. சமூக டார்வினிசம் அல்லது பரிணாமவாதம்**

டார்வின் உயிர்களின் பரிணாமக் கோட்பாட்டினை எடுத்துக் கூறினார். அவருடைய கோட்பாடு சமூக சிந்தனையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உயிர்களின் பரிணாம வளர்ச்சியைப் போன்றதே சமூகம் என்ற உயிரியின் வளர்ச்சியும் என்ற சிந்தனை தோன்றியது. இதனைச் சமூக டார்வினிசம் (Social Darvinism) என்று கூறுவர்.

**2. வெபரின் சமூகவியல் அல்லது அறிவு வாதம்**

யேர்மனியரான மக்ஸ் வெபர் *(1864 -1920)* மனிதர்களின் செயல்கள்தாம் சமூக மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் காரணம் என்று கூறினார். மனிதரின் செயல்களினை இயக்கும் அகநிலைக்கு அவர் முதன்மையளித்தார். அவரிற்கு முன்னர் பிரித்தானியாவில் நீண்டகாலம் வாழ்ந்தவரும் யேர்மன் தேசத்தைச் சேர்ந்தவருமான கார்ல் மார்க்ஸ் *(1818-1883)* மனிதர்களின் உணர்வு, சித்தம், அறிவு என்பவையல்லாது மனிதரின் வாழ்நிலைதான் சமூகத்தின் இயக்கு சக்தி என்று கூறினார். மார்க்ஸின் நோக்குமுறை வரலாறு பற்றிய பொருள் முதல்வாத நோக்கு ஆகும். மனிதச் செயல்களுக்கு முதன்மை கொடுத்த மக்ஸ் வெபர் கோட்பாடு செயல்வாதம் (Action theory) என்றும் அறிவுவாதம் (Rationalism) என்றும் அழைக்கப்படும். சமூகவியல் மூலவர்களுள் மக்ஸ் வெபர் ஒருவர் ஆதலால் இக்கட்டுரையில் அவரது அறிவுவாதம் பற்றிய விளக்கம் இடம் பெறுகின்றது.

**3. அமைப்பியல் செயல்வாதம்**

(Structural Functionalism) அமெரிக்க சமூகவியலாளரான ரல்கொட் பார்சன்ஸ் (Talcott Parsons) அமைப்பியல் செயல்வாதம் என்னும் கோட்பாட்டை முன்வைத்தார். அவர் அமைப்பு (Structure) செயல் (Action) என்ற இரண்டிற்கும் சமத்துவமான முக்கியத்துவத்தை வழங்கும் வளர்ச்சிக் கருத்தை முன்வைத்தார். இவர் *1920 - 1979* காலப்பகுதியில் வாழ்ந்தவர். முன்னைய சமூகவியல் கோட்பாடுகள் யாவற்றையும் ஒன்றிணைத்த வளர்ச்சிக்கோட்பாடாக இவரின் கோட்பாடு அமைந்தது.

#### 4. மார்க்சிசம்

மார்க்சிசம், செவ்வியல் மார்க்சியம், நவமார்க்சியம் என இரு பிரிவாகப் பிரித்து நோக்கப்பட வேண்டியது. மார்க்சிய சமூகவியலின் அடிப்படைகளை அபிவிருத்தியை முதன்மைப்படுத்தி இங்கு சில கருத்துக்களைக் கூறியுள்ளோம்.

#### சமூக டார்வினிசம்

சமூக டார்வினிசம் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துக்களைப் பின்வரும் தலைப்புக்களில் தொகுத்துக் கூறலாம்.

அ) நேர்க்காட்சி வாதம்
ஆ) இயற்கையும் மனிதனும்
இ) சமூக உயிரி
ஈ) பரிணாமம்

#### அ) நேர்க்காட்சி வாதம்

இயற்கை விஞ்ஞானங்களைப் போன்று விஞ்ஞான முறையின்படி சமூகத்தைப் பற்றியும் ஆராயலாம் என்ற கருத்தை அகஸ்ட் கொமட் (Auguste Comte) *(1798 -1857)* என்ற பிரான்ஸ் தேசத்து அறிஞர் கூறினார். சமூகவியலின் தந்தை எனக் கூறப்படும் கொம்ட் தோற்றுவித்த கொள்கை நேர்க்காட்சி வாதம் (Positivism) எனப்படும். அவரது சமூகவியல் நேர்க்காட்சிச் சமூகவியல் என்றும் கூறப்படும். விஞ்ஞான முறையில் சமூகத்தை ஆராயலாம் என்ற கருத்தினை உள்வாங்கிக் கொண்ட சமூக டார்வினிசம் நேர்க்காட்சிவாத முறையியலை சமூகவியல் ஆய்வில் புகுத்தியது.

#### ஆ) இயற்கையும் மனிதனும்

மனித சமூகத்தின் வளர்ச்சி இயற்கை உலகின் வளர்ச்சியைப் போன்றே சில பொதுவிதிகளால் விளக்கப்படக்கூடியது என இக்கோட்பாட்டினர் கருதினர். கம்ட் உயிரிக் கொள்கை (Organicism) என்ற கருத்தைச் சமூகவியலுக்குப் பிரயோகித்தார். அவர் இயற்கையில் உள்ள உயிர்கள் போன்றே சமூக உயிரியும் செயற்படுகிறது. அதன் செயற்பாட்டு விதிகளைக் கண்டறியலாம் எனக்கருதினார். இயற்கைத் தாவரம், தரைத் தோற்றவமைப்பு, மண்வளம், நீர்வளம் ஆகிய இயற்கைக் காரணிகள் சமூக வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றன என்று கருதும் புவியியலாளர்கள் சூழலாதிக்கவாதம் என்ற கருத்திற்கு அழுத்தம் கொடுத்தனர். சமூகத்தின் பரிணாமம் இயற்கையுடனான இடைவினை மூலம் வளர்ச்சி பெறுகிறது என சமூக டார்வினிசம் கூறியது.

#### இ) சமூக உயிரி

சமூகத்தை உயிரியாக உருவகப்படுத்திய சமூக டார்வினிசம் உயிரியல் கொள்கையான உயிர்களின் பரிணாமம் (Organismic evolution) என்ற கருத்தை சமூகம் பற்றிய ஆய்வில் புகுத்திச் சமூகப் பரிணாமம் என்ற வாதத்தை முன்வைத்தது. ஹெர்பட்ஸ்பென்சர் *(1820-1903)* என்ற பிரித்தானிய சமூகவியலாளர் இதற்கு முழுமையான வடிவத்தைக் கொடுத்தார். உயிர்கள் எவ்வாறு கலங்கள், இழையங்கள், அங்கங்கள் அல்லது உறுப்புக்கள் என்பனவற்றால் கட்டமைக்கப் பட்டிருக்கின்றனவோ அவ்விதமே மனித சமூகமும் பல பகுதிகளின் கூட்டாக அமைவது என்று கூறினார். இனப்பெருக்கம், போசணை, இடப்பெயர்வு போன்ற பல்வேறு செயல்கள் உயிரி ஒன்றின் இயக்கத்தில் காணப்படுகின்றன. இவ்வாறே சமூகம் என்ற உயிரியும் பல செயல்களைச் செய்கின்றது. அச்செயல்களைச் செய்யும் சிறப்பு அங்கங் களால் ஆன அங்கியே சமூகம் என்ற உயிரி.

#### ஈ) பரிணாமம்

உயிர்கள் இயற்கைக்கு எதிரான போராட்டத்தை நடத்துகின்றன. அவற்றிடையே உயிர் வாழ்வதற்கான போராட்டம் நடை பெறுகின்றது. பரிணாமவாதம் இதனை வாழ்வதற்கான போராட்டம் என்று கூறும். இவ்வாழ்க்கைப் போராட்டத்தில் தக்கன வாழும். பிற அழியும். இவ்வாறே மனித சமூகமும் வாழ்வதற்கான போராட்டத்தில் ஈடுபடுகின்றது. இயற்கையோடு தக அமைத்தல் மூலம் சமூக உயிரி நிலைத்திருப்பதற்கான உபாயங்களைக் கண்டுபிடிக்கின்றது. தக்கன வாழும் என்ற உயிரியல் பரிணாம விதியை சமூக டார்வினிசம் சமூகத்திற்கும் பொருத்தி விளக்கம் கூறியது.

*19*ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் *20*ஆம் நூற்றாண்டிலும் சமூகப்பரிணாமவாதம் மிகுந்த செல்வாக்குடைய கொள்கையாக விளங்கியது. தக்கன வாழும் என்ற டார்வினிய கருத்தைச் சமூகத்திற்குப் பிரயோகிக்கும் பொழுது தலையிடாக் கொள்கை, சந்தைப் பொருளாதாரம், உற்பத்திச் சாதனங்களினதும் சொத்துக்களினதும் தனியுடமை ஆகிய முதலாளித்துவப் பொருளாதார அம்சங்கள் நியாயப்படுத்தப்பட்டன. குறிப்பாக சமூக சமத்துவமின்மை, வறுமை, நோய் முதலியன இயல்பானவை என்றும் வாழ்க்கைப் போராட்டத்தில் தம்மை தக அமைத்துக்கொள்ள முடியாதவர்கள் வாழ்க்கையில் துன்பத்தை அனுபவிக்கிறார்கள் என்றும் கூறப்பட்டது. முயற்சி, ஊக்கம், அறிவு ஆகிய பண்புகள் மனித வாழ்க்கையை மேம்படுத்தும் என்ற விவாதம் முன்வைக்கப்பட்டது. சுருங்கக் கூறின் பரிணாமவாதம் முதலாளித்துவ அமைப்பை நியாயப்படுத்தும் கருத்தியல் ஆகும் எனலாம்.

#### வெபரின் சமூகவியல் அல்லது அறிவுவாதம்

மனிதரின் செயல்கள் தாம் சமூக மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாக அமைகின்றன என மக்ஸ்வெபர் கூறினார், என்பதை மேலே குறிப்பிட்டோம். செயல்களை முக்கியத்துவப்படுத்தும் வெபர் செயல்களை செய்யும் மனிதர்களை ஊக்குவிக்கும் எண்ணங்கள் எவை என்ற கேள்வியைத் தொடுப்பதன் மூலம் மனிதரின் அகநிலை உணர்வுகளை முதன்மைப்படுத்துகிறார். இதனால் வெபரின்

கோட்பாடுகள் கருத்து முதல்வாதம் என்ற வகையில் சேர்க்கப்பட வேண்டியதாக உள்ளது. புறநிலைக்கும் பொருண்மிய நிலைக்கும் (Material Conditions) முதன்மை கொடுக்கும் பொருள் முதல்வாத நோக்கு முறைக்கு வெபரின் கருத்துக்கள் நேர் எதிரானவை எனக் கருதலாம்.

இக்கட்டுரையின் முற்பகுதியில் நாம் ஆராய்ந்த சமூக டார்வினிசம் பொருள் முதல்வாத அடிப்படையைக் கொண்டது. இயற்கைச் சக்திகளோடு மனிதன் கொள்ளும் உறவுகளினாலும், இடைவினை களாலும் வளர்ச்சி ஏற்படுகின்றது என்று அக்கோட்பாடு கூறுகின்றது. மக்ஸ் வெபர் 'புரட்டஸ்தாந்திய அறமும் முதலாளித்துவத்தின் ஆன்மாவும்' (Protestant Ethic and The Sprit of Capitalism) என்ற நூலை எழுதினார். இந்நூலில் அவர் ஐரோப்பாவில் முதலாளித்துவம் தோன்றுவதற்கு 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய கல்வினிய சமய ஒழுக்கமும் அறக் கருத்துக்களும் காரணமாக அமைந்தன என்று கூறினார். இது அபிவிருத்தி சிந்தனை வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நூலாகும். வெபர் கோட்பாட்டின் தாக்கத்திற்கு 20ஆம் நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்ற நவீனமாதல் (Modern Station) கோட்பாடு சிறந்த ஒரு உதாரணமாகும்.

'நவீனமாதல் கோட்பாடு ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பின்னடைவிற்குப் பின்னோக்கிப் பார்க்கும் மரபுவாதம் (Backward looking traditionalism) தான் காரணம் என்று கூறியது. சமூக பொருளியல் மாற்றங்களை கருத்துக்கள் விழுமியங்கள் (Ideas and Values) மூலம் விளக்கும் இந்தப் போக்கினை வெபரிய சிந்தனையின் தொடர்ச்சியாகவே கொள்ளவேண்டும்.

**கல்வினியம்**

முதலாளித்துவத்தின் தோற்றத்திற்கு உந்து விசையாக இருந்த கல்வினிசத்தின் அடிப்படைத் தத்துவங்கள் இரண்டு உள்ளன.

i) கடவுள் உலகுக்கு வெளியே

மனிதருக்கு அப்பால் கடவுள் இருக்கிறார், தொலைவில் உள்ளார் என்று கல்வினியம் கூறியது.

கல்வினியத்தின் இக்கருத்தை ஆங்கிலத்தில் 'Transcendence of God' என்பர். 'ட்றான்சென்டன்ஸ்' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'எல்லை கடந்துசெல்', 'எல்லை கடந்து மேம்படு', 'அனுபவ வரம்புமீறு, அறிவின் பிடிக்கு அப்பாற் செல்' போன்ற அர்த்தங்கள் உள்ளன. உலகையும் மனிதரையும் படைத்தவர் கடவுளே ஆயினும் அவர் அதனைக் கைவிட்டு வெளியே நிற்கிறார். அதன் விருத்தியில் அல்லது முன்னேற்றத்தில் கடவுள் கரிசனை கொண்டவரல்லர் என்று இத்தத்துவத்தை வியாக்கியானம் செய்யலாம்.

ii) **முன்வகுத்தமைவு** (Predestination)

தனிநபர்கள் மோட்சம் அடைவார்களா இல்லையா, அவர்களின் விதி யாது, நற்கதி பெற்றுச் சுவர்க்கம் அடைவார்களா இல்லையா என்பதைக் கடவுள் முன்னமே முடிவு செய்து விட்டார் என்று முன்வகுத்தமைவு என்ற தத்துவம் கூறுகின்றது. தனிநபர்கள் இறக்கும் வரை அவர்களுக்கு இறைவன் வகுத்தமைந்த விதி என்ன என்பது தெரியாது என்றும் கல்வினியம் கூறும். இக்காரணத்தால் விசுவாசிகள் மனதில் மோட்சம் பற்றிய கலக்கம் (Salvation Panic) உண்டாகும். கடவுளின் கடாட்சம் தனக்கு உள்ளதா என்பதற்கான சான்றுகளை தனி நபர்கள் தேடுகின்றனர். கடவுளின் கடாட்சம் உள்ளவன் பலவீனம் உடையவனாக உலக இன்பங்களில் மூழ்கிச் சோம்பேறியாக வாழ்வதில்லை. நெறி பிறழாத ஒழுக்கம் மூலம் வாழ்க்கையில் முன்னேறுதல் இவ்வுலக வாழ்க்கையில் வெற்றியடைதலின் அடையாளம். கல்வினிய ஒழுக்கநெறி, இவ்வுலகத்தில் வாழ்ந்து கொண்டே, தன்னுடைய தொழிலைச் சிறப்புறச் செய்து துறவி போன்று எளிமையாக வாழ்தலை இலட்சியமான வாழ்வு எனப் போற்றியது.

கடவுள் உலகுக்கு அப்பால் உள்ளார். தனிநபர்களின் விதியை அவர் முன்வகுத்தமைத்துவிட்டார் என்ற இரு தத்துவங்களும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவை. சடங்கு முறையான வழிபாடுகள் மூலம் அப்பால் உள்ள கடவுளின் கருணையைப் பெறுதல் என்ற கருத்து மூடத்தனமானது. அது மட்டுமல்லாமல் மனிதனோடு கடவுள் நெருக்கமாக உறவு கொண்டிருக்கிறார் என்று சிந்திப்பது தெய்வநிந்தனையும் ஆகும் என்று கல்வினியம் கருதுகிறது. இவ்வுலகில் ஒழுக்க நெறியுடன் வாழ்வது என்பதன் பொருள் கடவுளின் சித்தப்படி அவரின் கருவியாக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றுடன் வாழ்தல் ஆகும்.

கல்வினியச் சிந்தனை புரட்டஸ்தாந்திய நாடுகளில் பரவியபோது அந்நாடுகளில் முதலாளித்துவத்தின் தோற்றத்திற்கு அவசியமான முயற்சியாளர் வகுப்பு பெற்றது. இவர்கள்

- கடின உழைப்பு
- தம்மையே வருத்திக்கொள்ளும் சிக்கனமும் சேமிப்பும்
- ஆராய்ந்து கணக்குப் பார்த்து கவனத்தோடு முதலீடு செய்தல்

ஆகிய குணஇயல்புகளைக் கொண்டவர்களாக இருந்தனர். இப்பண்புகளின் அடிநாதமாக இருப்பது அறிவு (Ration ality) ஆகும். முதலாளித்துவ உற்பத்தி முறை, பகுத்தறிவு செயற்பாடுகளின் உச்சநிலை.

சமூக டார்வினிசம் சூழல் தீர்மானவாதக் கருத்தையுடையது. இயற்கை மனித சமூகத்தின் வளர்ச்சியில் ஆதிக்கம் செலுத்துகிறது என்று

கூறுவது. வெபரின் சமூகவியல் அறிவு மூலம் மனிதர் இயற்கையை வெல்வதைக் கூறுகிறது. அறிவு என்பதை மூன்றாகப் பகுத்து நோக்கலாம்.

1) சிந்தனை, தர்க்கம், துல்லியமான அளவும் கணிப்பீடும் என்பனவற்றின் மூலம் மனிதர் பெற்றுக்கொள்ளும் விஞ்ஞானத் தொழில் நுட்ப அறிவு.

2) உலகு, மனிதர் சமூக வாழ்க்கை என்பன குறித்து மனிதர் வகுத்துக்கொள்ளும் ஒன்றித்த உலகநோக்கு. இதனை பௌதீக உலகு கடந்த அறம் சார்ந்த அறிவுவாதம் எனலாம். (MetaPhysical and Ethical Rationalism).

3) வாழ்க்கையை அனுபவ அறிவு மூலம் திட்டமிட்டு வகுத்துக் கொள்ளும் நடைமுறை அறிவு (Practical Reason). நவீன சமூகத்தின் சாதனைகள் யாவும் அறிவின் சாதனைகளேயாகும் என்பதே வெபரின் வாதத்தின் சாராம்சம். முதலாளித்துவ உற்பத்தி ஒழுங்கமைப்பு அலுவலர் ஆட்சிமுறை மூலம் அறிவுசார் அமைப்பாக இயங்குகிறது. விஞ்ஞான தொழில்நுட்ப அறிவின் அடிப்படையில் அமைந்த உற்பத்தி நிறுவனங்களின் முகாமைத்துவம் மனித அறிவின் உச்ச அளவான பிரயோகமாகும்.

வெபரின் நோக்குமுறை எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகிறது. அலுவலர் ஆட்சிமுறை மனிதரைச் சிறை வைக்கும் இரும்புக் கூண்டு (Iron Cage) என்று அவர் குறிப்பிட்டார். மனிதர் சமய உணர்வும், விழுமியங்களும் அற்றவர் களாய், அரசினாலும் தாம் பணிபுரியும் நிறுவனங்களினாலும் கண்காணிக்கப் படும் நிலையினையே வெபரது இரும்புக் கூண்டு என்னும் உருவகம் குறித்து நிற்கிறது. முதலாளித்துவம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த புரட்டத்தாந்திய அறம் வாழ்க்கையில் முன்னேற்றத்திற்காக ஊக்கத்தோடு உழைக்கும் தனிநபர்களை உருவாக்கியது.

### 4. அமைப்பியல் செயல்வாதம்

அமைப்பு (Structure) செயல் (Function) என்னும் இரு கருத்துக்கள் அமைப்பியல் செயல் வாதத்தின் அடிப்படையாக அமைகின்றன.

### அமைப்பு

சமூகத்தில் வாழும் தனிமனிதர்களுக்கு அப்பால் தனிமனித அனுபவத்திற்கு வெளியே உள்ள அமைப்பு சமூகம் எனப்படும். தனிநபர்கள் பிறக்கும் முன்னரே சமூகம் தோன்றியது. மனிதர், சமூகம் என்ற கட்டமைப்புக்குள்ளேயே பிறக்கிறார்கள். தனிநபர் மறைவுக்குப் பின்னரும் சமூகம் தொடர்ந்து இருக்கும். மனிதரின் நடத்தைப் பாங்குகள் அமைப்பாக, மனிதர்க்குப் புறத்தே உள்ள யதார்த்தமாக உள்ளது. இவற்றை சமூகத் தரவுகள் (Social facts) என்பர். பண்பாடு, நியமங்கள், மதிப்பீடுகள், சமய நம்பிக்கைகள் என்பன மனிதருக்குப் புறத்தேயுள்ள சமூகத் தரவுகள் ஆகும்.

மனிதரால் உருவாக்கப்படும் சமூகம் மனிதருக்குப் புறத்தே நின்று அவர்களைக் கட்டுப்படுத்தும் அமைப்பாக இயங்குகிறது.

சமூகத்தை ஒரு உயிரியாக உருவகிக்கும் சமூக டார்வினிசம் பற்றி முன்னர் குறிப்பிட்டோம். உயிரியின் நிலைபேறிற்குப் பல செயல்கள் அவசியம். இரத்தச் சுற்றோட்டம் என்பது ஒரு செயல். இச்செயலைச் செய்வதற்கான உயிரியின் சிறப்பு அங்கங்கள் உள்ளன. அவற்றை ஒன்றாகச் சேர்த்துச் சுற்றோட்டத் தொகுதி என்கிறோம். அது போன்றே சமூக உயிரியின் நிலைபேறுக்குத் தேவையான செயல்கள் வெவ்வேறு அங்கங்கள் மூலம் ஆற்றப்படுகின்றன.

உயிரியின் உடல் எலும்புகளால் ஆன வன்கூடு, தசைநார்கள், உள்ளே அமைந்திருக்கும் உடற்கூறுகள் ஆகிய பகுதிகளைக் கொண்டது. இதுபோன்றே சமூகமும் பல பகுதிகளால் ஆனது. பகுதிகள் ஒன்றோ டொன்று தொடர்புபட்டவை, ஒன்றில் ஒன்று தங்கி-யிருப்பவை. உயிரின் பகுதிகள் ஒவ்வொன்றும் உயிரியின் நிலைபேறுக்கு `உதவு வது போன்று சமூக உயிரியின் பகுதிகள் ஒவ்வொன்றும் சமூகத்தின் நிலைபேற்றுக்கு வேண்டிய சமூகச் செயல்களைச் செய்கின்றன.

### அமைப்பியல் செயல்வாதம் வரலாறு

அமைப்பியல் செயல்வாதத்தை முழுமையான ஒரு கோட்பாடாக வடிவமைத்தவர் ரல்கொட்பார்சன்ஸ் (Talcott Parsons) *(1902-1979)* என்னும் சமூகவியலாளராவர். அவர் தமக்கு முன்னைய சமூகவியலாளர்களின் கருத்துக்களை ஒன்றிணைத்த கோட்பாடாக அமைப்பியல் செயல்வாதம் கோட்பாட்டைக் கட்டமைத்துள்ளார்.

அகஸ்ட்கம்ட் இக் கோட்பாட்டின் தொடக்கத்தை குறித்து நிற்கிறார். அவர் கொந்தளிப்பான சமூகச் சூழ்நிலையில் வாழ்ந்தவர். கம்ட் சமூக ஒருங்கிணைப்பு (Social Integration) சமூக நிலைபேறுக்கு அவசியம் எனக் கருதினார். சமூக ஒருங்கிணைவு என்ற கருத்து செயல்வாதத்தின் அடிப்படைகளில் ஒன்று. கம்ட் பிரான்ஸ் தேசத்தவர், ஆங்கிலேயரான ஹெர்பர்ட் ஸ்பென்சர் *(1820 1903)* சமூகத்தை உயிரிக்கு ஒப்பிட்டார். மனித உடல், சமூகம் இரண்டிற்குமிடையே பல ஒற்றுமைகளையும் கண்டார். உயிரியல் உயிரின் இயக்கத்தை விளக்குவது போன்று சமூகத்தை விஞ் ஞான முறையில் விளக்கலாம் எனக் கருதினார். சமூகத்தை முழுமையாகப் பார்க்க வேண்டும். பகுதிகளின் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மூலம் சமூக இயக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் ஸ்பென்சர் கருதினார். ஸ்பென்சரின் கருத்துக்கள் பல அமைப்பியல் செயல்வாதத்தில் உள்வாங்கப்பட்டன.

ஸ்பென்சருக்கு அடுத்ததாக எமில் டர்க்கீம் என்பவர் *(1858 - 1917)* கருத்துக்கள் அமைப்பியல் செயல்வாதத்தின் அடிப்படைகளை நிறுவின.

இப்பகுதியின் தொடக்கத்தில் கூறிய அமைப்பு, செயல் ஆகிய கருத்துக்களை எடுத்துக் கூறியவர் டர்க்கீம் ஆவர். பின்னர் ரல்கொட் பார்சன்ஸ் செயல்வாதத்தை முழுமையான கோட்பாடாக வளர்த்தார். பார்சன்ஸின் சமகாலத்தவரான றொபர்ட்.கே.மேர்டன் *(1910 -2003)* சமூகச் செயல் (Social Function) என்னும் கருத்தை மேலும் மெருகுபடுத்தும் முறையில் பல எண்ணக் கருக்களை முன்வைத்தார். சமூக மானிடவியலாளர் கருத்துக்களும் செயல் வாதத்தின் வளர்ச்சிக்கு உதவின.

செயல்வாதம் சமூக இயக்கத்தின் போது சமூகம் சமநிலை (Stability) அல்லது இறுதிநிலை அடைவதை முதன்மைப்படுத்தும் நோக்கு முறையாகும். இதனால் முரண்பாடு மாற்றம் ஆகியன இக்கோட்பாட்டில் அழுத்தம் பெறுவதில்லை. பொருளாதார அபிவிருத்தி மாற்றம் பற்றியது. மாற்றம் முரண்பட்ட சக்திகளின் மோதலால் விளைவது எனக் கூறும் முரண்பாட்டு நோக்குமுறை (Conflict Perspective), செயல்வாத நோக்குமுறைக்கு நேர்எதிரான நோக்குடையது.

### 5. மார்க்சியம்

நவீனமாதல் என்ற கோட்பாடு 1960 காலத்தில் தோன்றியது. இவ்வாறு தோன்றிய நவீனமாதல் கோட்பாடுகள் செயல்வாதம் (Functionalism) என்னும் நோக்குமுறையில் அமைந்தன. நாம் மேலே விபரித்தவாறு அகஸ்ட்கம்ட், ஸ்பென்சர் டர்க்கீம், வெபர் முதலிய சமூகவியலாளர்களின் சிந்தனை மரபில் இருந்து முகிழ்த்ததே செயல்வாதம் என்னும் நோக்குமுறையாகும். மூன்றாம் உலக நாடுகள் மேற்கு நாடுகள் போன்று கைத்தொழில் வளர்ச்ப் பாதையில் விரைந்து முன்னேறினால் அபிவிருத்தி அந்நாடுகளில் ஏற்படும் என இந்நோக்கு முறையினர் வாதிட்டனர்.

மூன்றாம் உலகம் முதலாளித்துவப் பாதையூடாக கைத்தொழில் வளர்ச்சியை அடைய முடியாது, அப்பாதையில் முன்னேற்றத்திற்கான தடைக்கற்கள் உள்ளன என்ற கருத்தை 1970 களில் மார்க்சிய ஆய்வுகள் எடுத்துக் காட்டின. மார்க்சியமும், செயல் வாதமும் ஒன்றையொன்று எதிர்க்கும் நோக்கு முறைகளாக இருந்தன. இந்நிலையில் மூன்றாம் உலகின் அபிவிருத்தியின் சமூகவியல் சாராம்சத்தில்

i. **செயல்வாத நோக்குமுறை**

i.i. **மார்க்சீய நோக்குமுறை**

என்னும் இரு கிளைகளாகப் பிரிந்துள்ளதைக் காணலாம்.

மார்க்சிய நோக்குமுறை உற்பத்திமுறைமை (Mode of Production) என்ற கருத்தைச் சமூகம் பற்றிய ஆய்வில் முன்வைத்துள்ளது. அ) உற்பத்தி உறவுகள் ஆ) உற்பத்திச்சக்திகள் என்ற இருவகைமைகளின் சேர்க்கையாக அமைவதே ஒரு உற்பத்தி முறைமையாகும். நிலமானிய உற்பத்தி முறைமை, முதலாளித்துவ உற்பத்தி முறைமை, ஆசிய உற்பத்தி முறைமை, சோஷலிச உற்பத்தி முறைமை அடிமை உற்பத்தி முறைமை உற்பத்தி எனப் பல முறைமைகள் பற்றி மார்க்சிய ஆய்வுகளில் பேசப்பட்டுள்ளன.

நிலமானிய உற்பத்தை முறையில் நிலம், விவசாயக்கருவிகள், உற்பத்தியில் கையாளப்படும் தொழில்நுட்பம் ஆகிய உற்பத்திச் சக்திகளின் உடமையும், அவற்றின் மீதான கட்டுப்பாடும் உழைப்பாளர்களான விவசாயக் குடியான்கள் கையிலேயே இருந்தன. ஆயினும் உற்பத்தியின் விளைவான உற்பத்திப் பொருட்கள் நிலமானியப் பிரபுக்களின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. முதலாளித்துவ உற்பத்தி முறையில் உற்பத்திச் சக்திகள், உற்பத்தியின் விளைவான உற்பத்திப் பொருட்கள் என்ற இரண்டும் முதலாளியின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப உற்பத்தி உறவுகள் அமைகின்றன. நிலமானியம் குறிப்பிட்ட வகை உறவுகளை உருவாக்கும். முதலாளித்துவம் வளரும்போது நிலமானிய உற்பத்தி உறவுகள் அழிந்து முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் வளர்ச்சியடையும்.

உற்பத்தி முறைமைகள் பற்றிய ஆய்வுகளின் பயனாக முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி முறைமைகள் (Pre-Capitalist Modes of Production) என்ற கருத்து மேற்கிளம்பியது. பொருளாதாரத் துறையில் மாற்றங்கள் ஏற்படும் பொழுது ஒரு சமூகத்தில் பல உற்பத்தி முறைமைகள் முதலாளித்துவ முறைமையுடன் ஒருங்கே அருகருகே இருப்பதைக் காணமுடியும் என ஆய்வாளர்கள் கூறினர்.

1970களில் மார்க்சீயர்களிடையே மூன்றாம் உலகின் கிராமப் புறங்களில் காணப்படும் உற்பத்தி முறைமை யாது? நிலப்பிரபுத்துவமா அல்லது முதலாளித்துவமா மேலாண்மை பெற்றுள்ள முறைமை? வேறு எவ்வகையான முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி முறைமைகள் ஒருங்கே நிலைத்து நிற்கின்றன? அவை முன்னைய அமைப்பின் எச்சங்களா? அல்லது முதலாளித்துவம் பழைய உற்பத்தி முறைமைகளை மீள் உயிர்ப்பித்துத் தன்னோடு இணைத்துக் கொள்கிறதா? போன்ற கேள்விகள் ஆய்வுப் பிரச்சினைகளாக மேலெழுந்தன.

உற்பத்தி முறைமைகள் என்னும் கருத்து அருவமான எண்ணக்கரு. பொதுப்பட்ட நிலையில் அல்லாமல் ஒரு நாட்டின் ஸ்தூலமான நிலையில் வைத்து இது ஆராயப் படுதல் வேண்டும். நியுடன் குணசிங்க, எஸ்.பி.டி. சில்வா, குமார் ரூபசிங்க, குமாரி ஜயவர்த்தன, ரியுடர் சில்வா ஆகியோரின் நூல்களிலும், ஆய்வுக் கட்டுரைகளிலும் இலங்கையின் உற்பத்தி முறைமைகள் பற்றிய விடயம் விரிவாக அலசப்பட்டுள்ளது.

**கட்டுரையாளர், இலங்கைத் தமிழ் எழுத்தாளர்**

# இரட்சணிய சரிதத்தில் விவிலியக் கருத்துக்கள்



ஆ.பிரின்சி பெல்ஷீட்டா

கிறித்துவ இலக்கியங்கள் பல இருப்பினும் அவற்றுள் விவிலியக் கருத்துக்களை மிகுதியாக கையாண்டுள்ள இரட்சணிய சரிதத்தில் அன்பு, தாழ்மை, பணிவு, சமாதானம், பொறுமை போன்ற நற்குணங்களைப் பற்றிய பல சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பல்வேறு காலக் கட்டங்களில் பல சமயங்கள் தோன்றின. அச்சமயக் கருத்துக்களை அறிஞர்கள் நூல்கள் வாயிலாகவும், இலக்கியங்கள் வாயிலாகவும் வெளிப்படுத்தினர். தமிழகத்தில் பக்தி இயக்கம் தனி இயக்கமாக வளர்ந்து வந்தது. அறிஞர்கள் புற சமயக் கருத்துக்களின் ஈர்ப்பால் சைவம், வைணவம் சமயம் தவிர்த்து புற சமயங்களில் ஈடுபாடு கொண்டனர். அவ்வகையில் கிருஷ்ணப்பிள்ளை வைணவத்திலிருந்து கிறித்தவத்திற்கு மாறினார்.

விவிலியக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு எ.ஆ.கிருஷ்ணப்பிள்ளை விவிலியக் கருத்துக்களை மற்ற மதத்தினரிடையே கொண்டு செல்லும் நோக்கில் இரட்சணிய சரிதத்தை உருவாக்கினார். தன்னைப் போல் பிறரும் இயேசு பெருமானின் திவ்ய செயல்களை உணர்ந்து அறிந்து கொள்ளும் வகையில் வெளிப்படுத்தியதை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

**கிறித்துவ மதம் போதிக்கும் கருத்துக்கள்**

கிறித்துவ மதக்கருத்துக்கள் மக்களின் வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டியாகவும் சமுதாயத்திற்கு ஏற்ற நல் கருவியாகவும் அமைந்துள்ளது. ஒவ்வொரு மதமும் ஒரே செய்தியை தெரிவிக்கின்றன. அது மக்களின் வாழ்வை செம்மைப்படுத்தும் வழியாகவே அமைகின்றன.

எந்த ஒரு நிலமும் பண்படுத்தப்படாவிடில் நல்ல விளைச்சலை நம்மால் எதிர்பார்க்க முடியாது. அதே போல் ஒரு மனிதனை பண்படையச் செய்து, அவன் சமுதாயத்தில் சிறந்த சமூக அமைப்பை உருவாக்கவும் நற்சிந்தனை, நல்ல எண்ணங்கள், நோக்கம் போன்றவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

மதத்தின் பெயரால் மனிதன் சாயலையும், மனிதத்துவத்தையும் இழந்துவிடக் கூடாது. அனைத்து மதமும் பல நல்ல அறிய கருத்து, உண்மை, சிந்தனைகளை கூறுகிறது. அனைத்து மதத்திலும் முதன்மையான, உண்மையாக கருத்தான 'அன்பு' என்னும் நற்பண்பை பற்றி கூறுகின்றன. அன்பு என்னும் ஒரு பானைக்குள் பரிவு, பாசம், இரக்கம், பணிவு போன்ற பல நல்லுணர்வு அமைந்துள்ளது.

அவற்றின் அடிப்படையில் கிறித்துவ மதம் மக்களுக்காவும் அவர்களின் வாழ்க்கைக்காகவும் பல அறிய கருத்துக்கள், சிந்தனைகள், வழிக்காட்டுதல்களை கூறியுள்ளன. விவிலியத்தில் பல நற்சிந்தனை, போதிக்கப்பட்டுள்ளதை நம்மால் காணமுடிகிறது. அவற்றின் சில.

அன்பு, கருணை, இரக்கம், விசுவாசம், நம்பிக்கை, சமாதானம், ஒற்றுமை, நல்லொழுக்கம், நன்னடத்தை, தியாகம், சகோரத்துவம், சகிப்புத் தன்மை, மன்னிப்பு, கடவுள் பக்தி, மக்களின் கடமைகள், நேர்மை, உண்மை, பரிவு, பணிவு, கீழ்ப்படிதல், பொறுமை, பகைவரை மன்னித்தல், தீமை செய்தோருக்கு நன்மை செய்தல், வறியோருக்கு உதவுதல், பெரியோரை மதித்தல், பிறருக்கு தீங்கு செய்யாதிருத்தல், பாவம் செய்யாதிருத்தல், நீதி, பிறருக்குத் தீர்ப்பிடாமை, பிறருக்கு உதவுதல், பொய் சாட்சி சொல்லாமை.

இவை மட்டுமல்லாது பத்து கட்டளை செய்திகளும் சேர்த்து மக்களுக்காக தரப்பட்ட வேதக் கருத்துக்களாகும்.

**பத்துக் கட்டளை**

கடவுள் மோயிசன் வழியாக மக்களுக்கு கொடுத்த பத்து கட்டளைகளும் இவற்றின் கீழ் அடங்கும்.

*1. கொலை செய்யாதிருப்பாயாக, 2. களவு செய்யாதிருப்பாயாக, 3. விபச்சாரம் செய்யாதே, 4. பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே 5. பிறர் வீட்டை கவர்ந்திட விரும்பாதே, 6. பிறர் மனைவி, மாடு, கழுதை போன்ற பிறர்க்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே, 7. தாய் தகப்பனை மதித்து நடப்பாயாக, 8. வேற்று தெய்வங்களை, வழிப்படாதீர்கள், 9. கடவுளின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே, 10. ஆண்டவனின் நாளைத் தூயதாக கடைப்பிடிப்பதில் கருத்தாய் இரு.*

என்று பத்துக் கட்டளைகளிலிருந்து ஏழு கட்டளைக் கருத்துக்கள் மற்றும் செய்திகள் இரட்சணிய சரித நூலில் இடம் பெற்றுள்ளது. அவற்றிற்கான ஆதாரங்கள் விவிலிய நூலிலிருந்து எடுத்து காண்பிக்கப்பட்டுள்ளது. இக்கட்டளைகள் ஒரு மனிதன் செய்யக் கூடாததையும் வலியுறுத்துகிறது.

கிறித்தவ சமய கருத்துக்கள் மனிதன் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக் கூடாது என்றும், வாழ்க்கைக்கான நல்வழி, சிந்தனை கருத்துக்களை நமக்கு தெளிவாக எடுத்துரைக்கிறது.

**எ.ஆ.கிருஷ்ணப்பிள்ளையின் மதக்கருத்துக்கள்**

கிருஷ்ணபிள்ளை இரட்சணிய சரிதம் மற்றும் பிற கிறித்தவ நூல்கள் படைப்பதற்கு முக்கிய காரணம் கிறித்தவ மதக் கொள்கையும் நல்ல கருத்துக்களுயும், சிந்தனைகளுமே ஆகும்.

விவிலிய கருத்தால் ஈர்க்கப்பட்டு அவர் இந்நூலைப் படைத்துள்ளார். அவர் படைத்த பல நூல்களிலும் இக்கருத்துக்கள் அமையப் பெறுவதை காணமுடிகிறது. கிருஷ்ணபிள்ளை விவிலிய கருத்துக்களாலும், சிந்தனைகளாலும் ஆட்கொள்ளப்பட்டு அவற்றிற்கு செய்யுள் வடிவம் கொடுத்து வர்ணனை என்றும் அழகுபடுத்தி உருவாக்கியுள்ளவைதான் இரட்சணிய சரிதம் படைப்பாகும்.

தனது படைப்பாகிய இரட்சணிய சரிதத்தை ஆசிரியர் பல விவிலிய நற்சிந்தனைகளின் அடிப்படைகளை ஆதாரமாக வைத்தே உருவாக்கியுள்ளார்.

**இரட்சணிய சரிதத்தில் விவிலியக் கருத்துக்கள்**

விவிலிய நூல் பல அறிய நற்கருத்துக்களை கொண்டுள்ள போதும் ஆசிரிய மனதில் ஆளப்பதிந்த சில கருத்துக்களை எடுத்து அவற்றை இப்படைப்பில் கையாண்டுள்ளார். அவை யாவன, அன்பு, கருணை, இரக்கம், தியாகம், மன்னிப்பு, நேர்மை, உண்மை, பணிவு, கீழ்ப்படிதல், பொறுமை, பகைவரை மன்னிக்கும் தன்மை ஆகும்.

**'அன்பு' விளக்கம்**

ஒவ்வொரு உயிரிகளிடமும் காணப்படும் பண்பு, அன்பு, அன்பில்லா மனிதன் மரத்திற்கு ஒப்பானவன். அன்பு' - எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி பிறருக்காக வாழ்வது.

**சிறந்த அன்பு**

சிறந்த அன்பு என்பது சுயநலம் இன்றி பொதுநலத்துடன், பிறர் நலத்துக்காக தன் உயிரையே கொடுப்பது உண்மையான சிறந்த அன்பு ஆகும்.

**விவிலியம் கூறும் கடவுளின் அன்பு**

- *உண்மையான அன்பு என்பது நல்லோர், தீயோர் மீது காட்டும் அன்பு - மத்தேயு 5:45*
- *நீதியுள்ளோர் மீதும், நீதியற்றோர் மேலும் காட்டும் அன்பு - மத்தேயு 5:45*
- *பகைவரையும் அன்பு செய்யும் அன்பு - மத்தேயு 5:44*
- *சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னிக்கும் அன்பு - லூக்கா 23:34*
- *மனிதனுடைய பாவ நிலைக்கு தாழ்ந்து வந்து அவனை மீட்கும் அன்பு - பிலிப்பு 23:6-8*
- *மனிதனை மீட்கும் பொருட்டு அவன் மீது விழவேண்டிய தண்டனைகளை தன் மீது ஏற்றுக்கொண்ட அன்பு - ஏசாயா 53:5*

**அன்பு பற்றி யோவான் 4 : 16-21 வரை வசனங்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறது.**

*கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை அறிந்துள்ளோம். அதை நம்புகிறோம். கடவுள் அன்பாய் இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவர் கடவுளோடு இணைந்திருக்கிறார். கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார். அன்பில் அச்சத்திற்கு இடமில்லை. மாறாக நிறை அன்பு அச்சத்தை அகற்றிவிடும். ஏனெனில் அச்சத்திலே தண்டனை உணர்வு அடங்கியுள்ளது. அச்சம் கொண்டுள்ளவரிடம் அன்பு முழுநிறைவு அடையாது. அவரே முதலில் நம்மிடம் அன்பு செலுத்தியதால் நாமும் அன்பு செலுத்துகிறோம். கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செய்யாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தனது சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்த வேண்டும். இதுவே அவரிடமிருந்து நாம் பெற்ற கட்டளை (யோவான் 4: 16-21).*

திருக்குறளில் 'அன்புடைமை' என்னும் அதிகாரம் 71 முதல் 80 வரையிலான குறள் அன்பு பற்றிக் கூறுகிறது. அதிகாரம் 8 அன்புடைமையில்

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கண்ணீர் பூசல் தரும்**

அன்புக்கு அடைத்து வைக்கும் தாழ் உண்டோ ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பை) பலரும் அறிய வெளிப்படுத்தும் என்று மு. வரதராசனார் விளக்கம் தருகிறார்.

**அன்பிற்கு பின்வருமாறு விளக்கம் தருகிறார் மணக்குடவர்**

**அன்பினையடைக்கம் தாழுமுளதோ?**
**அன்புடையார் மாட்டு உளதாகிப் புல்லிய**
**கண்ணின் நீர்தானே ஆரவாரத்தைத் தரும் - உரை**

கிரேக்க பதம் - agyann (Agape) அகாப்பே அன்பு எனும் சொல்லுக்கு குறிப்பிட்டளவு பொருத்தமாகவுள்ளது. கடவுளுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையிலான அன்பை ஒத்தது எனவும் கருதப்படுகின்றது.

**இரட்சணிய சரிதத்தில் அன்பு**

திருவிருந்துப் படலத்தில் தனது உடலையும், இரத்தத்தையும் உங்களுக்காகவும், எல்லோருக்காகவும் தருகிறேன் எனக் கூறிய அன்பு.

கெத்செமெனே படலத்தில் தான் படப்போகும் பாடுகளை உணர்ந்தவர் தன் தந்தை கடவுளிடம் கொண்ட அன்பால் அவர் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு தன் உயிரைத் தரத் துணிந்த அன்பு.

தீர்ப்புப் படலம் மற்றும் மரணப் படலத்தில் "தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது செய்கிறார்" என்று தனக்கு தண்டனை கொடுக்கும் யூதர்களுக்காக தன் தந்தையிடம் வேண்டும் அன்பு.

இறுதியாக தன் மக்களுக்காக தனது உயிரையே கொடுத்து அவர்கள் பாவங்களைப் போக்கிய அன்பு.

தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு வேறெதுவுமில்லை என பல்வேறு இடங்களில் 'அன்பு' என்னும் நற்குணம் வெளிப்படக் காணலாம். அதிலும் மரணப்படலத்தில் செய்யுள் 439 அன்பிற்கு ஓர் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

'இயேசு உயிர் விடுத்தது யாருக்காக? என்ற கேள்வி தம் மனதில் எழும். கடவுள் கொடுத்த கட்டளைகளை மீறிச் சாத்தானுக்கு பாதக பணிவிடை செய்து வருகின்ற பொல்லாத மக்களுக்காகவே உயிர் விடுத்ததை எண்ணி மனிதனுக்காக மனித உரு எடுத்து உயிர்விடுத்த விந்தையைப் போல் வேறு விந்தையுண்டோ? என்று தனக்குள்ளே பல கேள்விக் கணைகளை கேட்டுக் கொண்டவராய் கீழ்க்காணும் செய்யுளை படைத்துள்ளார்.

**சந்ததம் கற்பனை மீறிச் சண்டாள ராகி நின்றிதனை எண்ணாமல்**

**...................................................(இ.ச. செய்யுள் 439)**

'பொல்லாருக்காய் மனுவாகி உயிர் விடுத்த விந்தை,

பொல்லாதவர்களுக்காக, அவர் பொருட்டு, மனிதனாகி உயிர்விடுத்த விந்தை என ஆசிரியர் விளித்துக் கூறியுள்ளார்.

நல்லவன் ஒருவனுக்காக யாராவது தன் உயிரைத் தர முன்வரக்கூடும். ஆனால் நாம் பாவிகளாய் இருந்த போதே கிறித்து நமக்காகத் தம் உயிரை நல்கினார். கடவுள் நம்மிடம் அன்பு கொண்டுள்ளார் என்பதற்கு சான்றாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

**இரக்கம்**

"இரக்கம் என்ற வார்த்தையின் பொருள் 'நமக்கு வரவேண்டிய தண்டனையை தவிப்பதற்காக தேவன் நம்மீது காட்டும் பிரிவு' ஆகும்". பிறரின் நிலை கண்டு தானும் வருந்துதல், துன்பப்படுதல் என்றும் பொருள்படும். (இ.ச) நூலில் செய்யுள் 445 இரக்கம் பற்றி கூறியுள்ளது.

**விவிலியம் புதிய ஏற்பாடு திருப்பாடலில் 145:89 கூறியுள்ளதாவது**

**ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர், எளிதில்**
**சினம் கொள்ளாதவர், பேரன்பு கொண்டவர்.**
**ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்வார், தாம்**
**உண்டாக்கிய அனைத்தின் மீதும் இரக்கம் காட்டுவர்**

என்று கூறியுள்ளது.

"இயேசு தொழுநோயாளர் மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டார்" - மாற்கு 1:41

"ஆண்டவர் தாம் செய்யும் அனைத்திலும் நீதியுடையவர் அவர்தம் செயல்கள் யாவும் இரக்கச் செயல்களே" - திருப்பாடல் - 145:17

"இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்'' - மத்தேயு 5:7

**குறள் காட்டும் இரக்கம்**

குறள் 571 முதல் 580 வரையிலான குறள் இரக்கம் பற்றிக் கூறுகிறது.

கண்ணோட்டம் என்னும் கழிபெருங்க காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு - (குறள் 571)

இரக்கம் என்று சொல்லப்படும் மிகப் பெரிய அழகு அரசனிடம் இருப்பதனால் தான், இந்த உலகம் அழியாமல் நிலைத்திருக்கிறது.

**இரட்சணிய சரிதம் காட்டும் இரக்கம்**

கண்ணியமான அன்பினால் கட்டப்பட்டு ஓங்கிய கருணைக் கடலில் மூழ்கித் தாழ்வுற்று, உள்ளத்தில் நிகழும் பொறுமை காரணமாக மூச்சொடுங்கிய இயேசுவை நினைத்தவராய்,

**கண்ணிய அன்பினாற் கட்டுண்டோங்கிய**
**.................................. (இ.ச.) - (ச.ப.) - 445**

என்ற செய்யுள் இரக்கத்தை விளக்குகிறது.

**மன்னிப்பு**

"மன்னிக்கும் குணம் மனிதர்களுக்கு மட்டும் உரியது. மன்னிப்பு பற்றிய பல கருத்துக்கள் இருப்பினும் ஒருசில இங்குச் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளன.''

"பலவீனமாக உள்ளவர்கள், பிறரை மன்னிக்க மாட்டார்கள் : மன்னிப்பது என்பது மனவலிமை உடையோரின் குணம்" - மகாத்மா காந்தி

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல் - குறள் 314

"உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள்'' - மத்தேயு 6:44, 45

மன்னிப்பு கிறித்தவ வாழ்வின் அடிப்படை மதிப்பீடுகளுள் ஒன்று. மன்னிப்பின் அருமையை, அவசியத்தைப் புதிய ஏற்பாடு பலவழிகளில் எடுத்துரைக்கிறது.

1. மன்னிப்பு ஒரு நிபந்தனை, இறைவனிடமிருந்து மன்னிப்பைப் பெறுவதற்கான நிபந்தனையாக நாம் பிறரை மன்னிக்க வேண்டும் - மத் 6:14-15
2. மன்னிப்பு ஓர் இறைச்செயல் - கொலோ 3:13
3. மன்னித்தல் ஓர் அழைப்பு - லூக் 6:37
4. மன்னித்தல் ஓர் அன்புச் செயல் - லூக் 17:3
5. மன்னிப்பு செப்பத்தை எளிதாக்குகிறது- மாற் 11:25
6. மன்னிப்பு ஒரு பழக்கம் - மத் 18:22

"மனிதருடைய தவறுகளை நீங்கள் மன்னித்தால் உங்கள் பரமபிதா உங்களையும் மன்னிப்பார். நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் பரமபிதா உங்களையும் மன்னிக்க மாட்டார்.'' - மத்தேயு 6:14-15

இரட்சணிய சரிதத்தில் மன்னிப்பு பற்றி கூறியுள்ளதாவது, எட்டுத்திக்குகளிலும் படுபாவி என்று இகழப்பட்ட கள்ளன் (தீயோன்) தன்னுயிர் போகும் நேரத்தில் நற்கதி பெற விரும்பி பெருமானது அருளுக்கு இலக்காகி மெய்ப்பேறு பெற்ற நிலையை எண்ணியவராய்

எம்மாதிர மும்படு பாவி என்று எள்ளு கள்ளன்
...............................................(இ.ச) செ.417

**தன்னை இகழ்ந்தவர்களின் நிலையையும் பொறுத்துக் கொள்ளும் பொறுமை**

தனது நிலையிலிருந்து கீழிறங்க நேர்ந்தாலும் தன்னிலை மாறாது பொறுத்துக் கொண்டு இருத்தல் சிறந்த பொறுமை ஆகும்.

பொல்லாங்கு பொறுத்த நம்மீசன்

'பொல்லாத யூதர்களும் ரோமப் போர்ச் சேவகர், கூட்டமும், எல்லாம் வல்ல ஈசனை எள்ளி நகையாடி, புறக்கணித்து, சொல்லத்தகாத நிந்தனை மொழிகளைச் சொல்லி தணிந்து செய்த பொல்லாங்கை எல்லாம் பொறுத்துக் கொண்ட ஈசனை எண்ணி,

பொல்லாத யூதர்களும் போர்ச்சேவ கர்குழுவும்
............................................................
பொல்லாங்கை யெல்லாம் நம்மீசன் பொறுத்திருந்தார்
– (இ.ச) செ. 367

கூறியுள்ளார்.

விவிலியத்தில் தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்களுடனும், மூப்பர்களுடனும் சேர்ந்து இயேசுவை ஏளனம் செய்தனர். அவ்வாறே, அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வர்களும் அவரை இகழ்ந்தார்கள் (பு.ஏ) மத்-27:41/44.

**உண்மை பேசுதல் நேர்மையாளனாய் நடந்து கொள்ளும் பண்பு**

குறள் கூறும் உண்மை : 'வாய்மை' அதிகாரம் குறள் 291 முதல் 300 வரை உள்ள குறள் உண்மை பற்றி கூறுகிறது. உதாரணமாக,

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை
இலாத சொல்லல் – குறள் 291

வாய்மை என்று கூறப்படுவது எது என்றால் அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும் என விளக்குகிறது. "உண்மை என்று சொல்லப்படுவது எது என்றால் எவர்க்கும் எத்தகைய தீங்கையும் தராத சொற்களைச் சொல்வதே ஆகும்."

வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய்ம்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாது என்று வினவின் தீமை யாதொன்றும் இலாத சொலல் - அது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களை சொல்லுதல் - பரிமேலழகர் உரை

பொய் சொல்லாத மெய்யென்று சொல்லப்படுவது யாதென்று வினவின் பிறர்க்கு யாதொன்றாலும் தீமை பயவாத சொற்களைச் சொல்லுதல் வாய்மை என்றாகும். - மணக்குடவர் உரை

உண்மை பற்றி பல கருத்துக்கள் இருப்பினும் விவிலிய நூலில் உண்மை பற்றிய கருத்துக்கள்.

பிலாத்துவிடம் இயேசு கூறியதாக அமைந்துள்ள பகுதி உண்மையை எடுத்துரைப்பதே என் பணி இதற்காகவே நான் பிறந்தேன். இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர். - (பு.ஏ.யோவான் 18:37)

இரட்சணிய சரிதப் பகுதியிலும் உண்மைக்கு சான்றாக பல செய்யுள்கள் அமைந்துள்ளன. எந்த சூழ்நிலையிலும் தன் நிலைமாறாது, பிறருக்கு உண்மையுள்ளவனாய் இருப்பது.

சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்க வந்தேன் சத்தியத்தை விளக்க
சாட்சியாய் இப்பூமிக்கு வந்த இயேசுவின் உண்மைகளை
மனத்தூய்மை உள்ளவர்கள் கடைப்பிடித்து வாழ்வர்
என்பதை,

இத்தரலாத்து இறுத்தனன் என்றென்றும் உலவாச்
சத்தியம் தனைக் கடைப்பிடித்து உய்குவன் சாதம்
- (இ.ச. செ. 282)

என்று கூறியுள்ளார்.

விசாரணைப் படலம் செய்யுள் 234 இந்த ஆலயத்தை இடித்து மூன்று நாளையிற் கட்டுவேன் என இயேசு நாதர் கூறிய உண்மையும் இங்கு காட்டப்பட்டுள்ளது.

இயேசு பாடுகள் பட்டு மரணம் அடைந்து விண்ணகம் புகும் அனைத்து நிகழ்வுகளையும் உண்மையாக தனது சீடர்களுக்கு கூறினார் என்று சுட்டப்பட்டுள்ளது. இதிலிருந்து இயேசு உண்மையுள்ள சான்றாய் சாட்சியால் விளங்கியுள்ள பான்மை தெளிவாகிறது.

**விசுவாசம்**

கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போம், உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று மெய்யாகவே உங்களுக்கும் சொல்கிறேன் -மத்தேயு *17:20*

விசுவாசம் என்பது ஒருவர் மற்றவர்கள் மீது நம்பிக்கை கொள்வதாகும்.

விசுவாசம் என்பது எதிர்பார்க்கிற காரியங்கள் நிச்சயமாக நடக்கும் என்று உறுதியாக நம்புவதாகும். பார்க்க முடியாத காரியங்கள் நிஜமானவை என்பதற்குத் தெளிவான அத்தாட்சியைக் காண்பதாகும். - எபிரேயர் ப.1

இரட்சணிய சரிதத்தில் காணப்படும் விசுவாசம் குறித்த பகுதிகள், தந்தை மகன் இருவரும் வேறுபாடியின்றி ஒன்றாக இருப்பதைப் போன்று நீர் கொடுத்த வாய்மொழியால் இவ்வுலகில் உள்ளோர் என்னில் விசுவாசம் வைத்து மன்றாடுவதை தந்திட வேண்டும் என இயேசு நினைத்ததை சிந்தித்து நேரில் கண்டு விசுவாசிக்கின்றவர்களை விட என்னை காணாமல் விசுவாசிக்கின்றவர்கள் பேறுபெற்றோர் எனக் கூறுகிறார். விவிலியத்தில் பேதமற்று ஒன்றாய் நாம் இருந்தலைப் போல் ............ தமியன் மன்றாடுகின்றேனே.
- இ.ச. (தீ.ப.செ. 122)

இயேசு உயிர்த்தப் பின் தனது சீடர்களுக்கு காட்சியளித்த நிகழ்வு இரட்சணிய சரித நூலில் உயரிதெழுந்த படலத்தில் கூறப்பட்டுள்ளது. - செய்யுள் *533*

என் பாதம் முதல் தலை மட்டும் என் உடலைத் தொட்டுப் பாருங்கள். வேத நூல்களில் முன்னே சொல்லப்பட்டது.

இயேசுவை அன்றி யாரையும் இல்லை என்று உணர்ந்து தனது ஐயங்கள் தீர தனது சீடர்களை தொட்டு உண்மையை உணர்ந்து நிகழ்வை எண்ணி பாருமின் பரிசித்து என பதாதியை ஒரு முன்னுரையால் அன்றி உண்மைவேறு ......... (இ.ச.பா. 533) என்றார்.

தனது சீடர் தோமையாரின் ஐயத்தை போக்கில் இயேசு கூறியதாவது நேரில் கண்டு விசுவாசிக்கின்றவர்களைவிட என்னை காணாமல் விசுவாசிக்கின்றவர்கள் பேறு பெற்றோர் எனக் கூறுகிறார்.

**விவிலியத்தில்**

மேலும் தீய ஆவிபிடித்தோர், கண் பார்வை அற்றோர், உடல் ஊனமுற்றவர்களுக்கு அவர்களின் விசுவாசத்தில் பேரில் விடுதலை அளித்த நிகழ்வும் சிலவற்றை இந்நூலில் காணமுடிகிறது.

**சமாதானம்**

ஒருவர் மற்றவருடன் எவ்வித வெறுப்புடனும், கோபத்துடனும் இருப்பினும் அவற்றை மறந்து அவர்களுடன் ஒற்றுமையாய் இணைந்து வாழ்வது ஆகும்.

இயேசு உயிர்த்து தனது சீடர்களுக்கு காட்சி கொடுக்கும் போதெல்லாம், உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக எனக் கூறினார். இவை இரட்சணிய சரித பலத்தில் செய்யுள் *320* மட்டும் கூறப்பட்டுள்ளது. எல்லாரும் திரும்பினபின் ஜனங்கள் சமாதானத்தோடு இருப்பவர்கள் என்றார் - சாமுவேல் *17:3*

நதியைச் சுற்றி இருபுறமும் எங்கும் சமாதானமாயிருந்து - இராஜாக்கள் *4:24* ஏழைகளைக் காக்கும் இயேசு பெருமான் அடியார்கள் நடுவில் தூய நலத்திகழ் மேனியோடு தோன்றி தெய்வத் தன்மையோடு பொருந்திய மெய்ச் சமாதானம் கூறிய நல்லாசியை நினைத்து ஆன போழ்தத்து அடியவர் நாப்பணே ......... தான மல்கித் தழைக்க வென்றார் - அரோ - இதே கருத்து விவிலியத்தில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.
- இ.ச.செ.*529*

அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன், என் அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன் என்றார் இயேசு. - யோவான் *15:267*

**தாழ்மை, பணிவு**

தாழ்ச்சி, பணிவு என்பது மனிதனிடம் காணப்படும் அறிய நற்குணங்களின் ஒன்றாகும். ஒருவன் எவ்வளவு உயர்நிலையில் இருப்பினும் தாழ்ச்சி, பணிவு உள்ளவனாய் இருப்பின் அனைத்தும் வெற்றிப்பெறும்.

தாழ்ச்சி, பணிவு பற்றி இரட்சணிய சரிதம் கூறுவன.

இயேசு தாழ்மையின் அவசியத்தைச் சொல்லாலும், செயலாலும் உணர்த்திய பான்மையைக் காண முடிகிறது.

இயேசு சீடரின் கால்களைக் கழுவி நிலையின் தாழ்மையும் மேன்மையும் உடைய செயல்களை நினைத்து அடிமைகளை ஆண்டவர் மாறாக, ஆண்டவன் அடிமையான நிகழ்வை தியானித்து...........

"அழகிய மேனிபோர்த்த அங்கியைக் களைந்தோர் ஆடை

..........................................................................................

செழுமலர்த் திருக்கரத்தால் சீடர்கள் கழுவச் சென்றான்

..........................................................................................

– இ.ச. தி.வி.பசெய்யுள். 49

தாழ்ச்சியின் அவசியம், முக்கியத்துவம் விவிலியத்தில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் நான் செய்தது போல் நீங்களும் செய்யுமாறு உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன் - யோவான் *13:14-15*

இவ்வாறு ஆண்டவரே, அடியவர்களின் பாதங்களை கழுவும் அளவிற்கு தாழ்ச்சி பணிவுள்ளவராக இருப்பதையும், இதே கருத்தை இரட்சணியை சரித செய்யுள் பகுதி மீண்டும் நினைவுப்படுத்துவதை காணமுடிகிறது.

இவ்வாறு விவிலிய நற்கருத்துக்கள் பலவற்றை அடிப்படையாகக் கொண்டு அவற்றிற்கு செய்யுள் வடிவம் கொடுத்ததும் தக்க ஆதாரங்களைக் கொடுத்தும் இரட்சணிய சரிதத்தில் மதக்கருத்துக்கள் மக்களுக்கு புரியும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்கள் மக்களின் மனதை செம்மைப் படுத்தி நல்வழிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர், திருவையாறு
அரசர் கல்லூரி, தஞ்சாவூர்

கட்டுரை



# கவி கா.மு. ஷெரீபின் இசைப் பாடல்கள்

பேராசிரியர் உ. அலிபாவா

கவி கா.மு. ஷெரீப் இசைப்பாடல்களையும் யாத்தளித்துள்ளார். அவை இஸ்லாமிய இசைப் பாடல்களாகவும் திரைவானில், இனிமையாக ஒலிக்கும் தீங்கானங்களாகவும் தமிழக எல்லை மீட்புப் போராட்டங்களில் ஆங்காங்கே உடனுக்குடன் எழுதிப் பாடப்பட்ட உணர்ச்சிமிகு பாடல்களாகவும் திகழ்கின்றன.

**நீங்களும் பாடலாம் இஸ்லாமிய இசைப்பாடல்கள்**

கவி கா.மு. ஷெரீப் 'நீங்களும் பாடலாம் இஸ்லாமிய இசைப்பாடல்கள்' எனும் நூலினை 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிட்டார். இந்நூலில் 46 இஸ்லாமிய இசைப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஆ.கா.அ. அப்துஸ்ஸமது இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளார். இசைப்பாடல்களின் தனித்தன்மை குறித்து அதில் அவர் மனம்கொளத் தக்க வகையில் குறிப்பிடுகிறார்.

"கவிதையில் என்னதான் கருத்து இருந்தாலும் அதை இசையோடு குழைத்து வழங்கும் போது கேட்பவர் இதயங்களில் கவிதையின் கருத்துக்கள் ஆழமாகப் பதிந்துவிடுவதோடு இசைமுறைப்படி பாடமுடியாதவர்களைக்கூட குரலெடுத்து நாவசைத்துப் பாடத்தூண்டும் ஒரு தனி வலிமை இசைப்பாக்களுக்கு இருப்பதைப் பார்க்கிறோம். இன்னும் சொல்வதாயின், கருத்தில்லாப் பாடல்கள்கூட இனிய இசையோடு அமைந்து விடுமாயின் அந்த இசை, தகுதி இல்லா அந்தப் பாடலைக்கூட வாழ வைக்கிறது" எனக் கருத்துரைக்கும் ஆ.கா.அ. அப்துல்ஸமது, "அத்தகைய பாடல்களைக் கேட்கும்போதெல்லாம் பொருள் செறிந்த இஸ்லாமியக் கருத்துக்கள் மேவிய இசைப் பாடல்களை நம் கவிஞர்கள் ஆக்கித் தரக்கூடாதா என்ற ஏக்கம் என்னுள் எழுவதுண்டு" எனத் தம் ஏக்கத்தையும் வெளியிடுகிறார்.

இக்கருத்தை ஆ.கா.அ. அப்துல்ஸமது கவிஞரிடம் தெரிவித்தார். கவிஞரும் மறுநாளே அச்சிடப்பட்டுள்ள 46 இசைப்பாடல்களை ஸமது சாகிபுவிற்கு அனுப்பி-யிருக்கிறார். இதைப் படித்துப் பார்த்த பின்னும் ஸமது சாகிபு இந்நூல் குறித்த தம்முடைய கருத்தைப் பதிவு செய்கிறார்.

"பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு தலைப்புகளில் அவர்கள் எழுதிய இசைப் பாடல்களின் அருமையானதொரு தொகுப்பாக இது அமைந்திருக்கிறது. இதைப் படிக்கத் தொடங்கிய போது என்னை அறியாமலேயே நான் பாடிக்கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

திருக்குர்ஆனின் சாரம் எனப்படும் 'அல்ஹம்து' சூராவில் ஆரம்பித்து 'அந்நாஸ்' சூராவின் பொருள்

தரும் பாடலோடு இத்தொகுப்பு நூல் அமைந்திருக்கிறது. இடையே அல்லாஹ்வைப் பற்றியும் அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றியும் ஸலவாத்தின் சிறப்பு பற்றியும் நோன்பின் மாண்பு பற்றியும் பல்வேறு சந்தங்களில் பாடத்தக்க பாடல்கள் அமைந்துள்ளன.

சின்னஞ்சிறு குழந்தைகள் கூடி விரசமான சினிமாப் பாடல்களை வீடுகளிலும் வீதிகளிலும் முணுமுணுத்து தமிழக இஸ்லாமியப் பண்பாடுகளையே சிதைத்து வரும் இந்நாளில், கலைமாமணி இதில் தொகுத்துத் தந்துள்ள இஸ்லாமியப் பாடல்களை நம் சிறுவர், சிறுமிகள் ஏன், பெரியோரையும் கூடப் பாடச் செய்வித்தால் ஒழுக்கமும் உன்னதப் பண்புகளும் தமிழ் மக்களின் செவிகளில் எதிரொலிக்கும்'' என்பது அவர் கருத்தாகும்.

கவிஞரும் இந்நூல் குறித்தும் இந்நூலிலுள்ள பாடல்கள் குறித்தும் தம்முடைய கருத்தை நூன்முகத்தில் எடுத்துரைக்கிறார்.

''இந்த நூலின்கண் உள்ள பாடல்கள் அனைத்தும் இஸ்லாமியத் திங்கள் ஏடுகளில் அவ்வப்போது வெளிவந்தவையாகும்.''

ஏடுகள் பலவற்றைக் கண்ட பாடல்கள் என்பது போன்று ஆண்டுகள் பலவற்றையும் கண்டுள்ள பாடல்கள் இவை.

ஆம், 1974 ஆம் ஆண்டில் தொடங்கி 1983 ஆம் ஆண்டு வரை 'முஸ்லீம் முரசு', 'குர்ஆனின் குரல்' போன்ற ஏடுகளில் இப்பாடல்கள் வெளிவந்துள்ளன.

'நோன்புப் பாவை' எனும் தலைப்பின் கீழ் உள்ள பாடல்கள் 1973 ஆம் ஆண்டு 'பிறை' ஏட்டில் வெளிவந்தனவாகும்.

'பலரின் கண்களைக் குளமாக்கிய கண்ணொளி வேண்டல்' பாடலும் பிறையில் வெளிவந்ததுதான்'' எனக் குறிப்பிடும் கவிஞர், 'சூரத்துல் ஃபாத்திஹா', 'அல்ஃபலக் சூரா', 'அந்நாஸ் சூரா'க்களைக் கவிதைகளாக முதலிலும் முடிவிலுமாகப் பாதுகாப்புத் தேடும் வகையில் சேர்த்துள்ளேன்'' என்கிறார்.

"இஸ்லாமிய இசைப் பாடல்கள் குறித்தும் இஸ்லாமிய இசைப் பாடல்கள், சுருதிகள், கீர்த்தனைகள், பதங்கள், உருப்படிகள், வண்ணங்கள், திருப்புகழ் போன்ற ஆயிரமாயிரம் இசை நுணுக்கப் பாடல்களை யாத்தளித்த இஸ்லாமிய இசைத் தமிழ்ப் புலவர்கள் எண்ணிறந்தோர் உண்டு. இவர்களின் காலம் இன்றைக்கு இருநூறு முந்நூறு ஆண்டுகட்கு முந்தியதெனலாம்" என்றும், "இசைப் பாடகர்கள் நீண்ட நெடுங்காலமாகத் தமிழக இஸ்லாமியரிடையே இருந்துள்ளனர். அவர்களில் கல்லிடைக் குறிச்சி மொய்தீன், திருச்சி காதர் பாட்சா போன்றோர் என் காலத்தே வாழ்ந்து நிரந்தரமானவர்கள் ஆவார்கள். இவர்களின் இசை ஞானமும், குரல் வளமும், இனிமையும் கேட்போரைத் தன்வயமாக்க வல்லதெனலாம்" என்றும் குறிப்பிடும் கவிஞர், "இன்று வாழ்வோரில் நாகூர் எஸ்.எம்.ஏ. காதர், மேலக்காவேரி A.D. சுல்தான், இசைமுரசு நாகூர் அனிபா, இசைமணி யூசுப், மதுரை முகம்மது, நாகர்கோயில் உசேன் பாகவதர் போன்ற இசை வல்லாரும் குரல் வல்லார்களும் நாடறிந்தோராவர்" என்றும் கருத்துரைக்கிறார்.

''முந்திய இஸ்லாமிய இசைப் பாடலாசிரியர்களின் மரபு பேணி, இன்றுள்ள இசைமாமணிகள் ஏற்றுப் பாடும் வகையில் இப்பாடல்களை அமைத்துள்ளேன்'' எனவும் அவர் தெரிவிக்கிறார்.

இந்நூலின் முதல் பாடல் 'சூரத்துல் ஃபாத்திஹா!' எனும் தலைப்பில் அமைந்துள்ளது. தொடர்ந்து 'ஆசைப்பட்டேன் ஆண்டவனே அடைவதற்கே அருள்புரிவாய்!', 'எனக்கு வேண்டும் நின் கருணை, இயம்ப வேண்டும் உன்பெருமை!', 'ஆண்டவன் அருள் புரிவான் அவனையே நம்பிடும் அடியார் தமக்கு!' எனப் பல நிலைகளில் ஆண்டவனின் அருளை வேண்டுகிறார்.

பாடல்களின் தலைப்புகளைக் கருணை வேண்டும், சொல் மனமே, திருவின் திருவாய், எங்கும் நிறைந்தனன், அல்லா பெரியவன், ஆனந்த நிலை, அறிவின் சாகரம், நாயகமே, தூதரை வாழ்த்துவோம், நன்னபி திருப்புகழ், அற்புத நபி, நோன்புப் பாவை, பெண்ணறிவு மாலை, நெறிபட நிற்போம், அறிந்து வாழ்வோம், கருணைக்கடல், இறைவா போற்றி, கண்ணொளி வேண்டல் எனக் கவிஞர் அழகு மிளிர அமைத்துள்ளார்.

இறையருள் கிடைப்பதற்கான வழிகளைக் கவிஞர், 'தன்னலம் கருதாத் தன்மையில் வாழ்ந்தால் தரித்திரப் படுவோர்க்கு உதவிகள் புரிந்தால், அண்ணல் நபிவழி அடங்கியே நடந்தால், அனுதினம் தவறாது ஐவேளை தொழுதால் ஆண்டவன் அருள்புரிவான்' என எடுத்துக் காட்டுகிறார். 'அல்லா பெரியவன் அனைத்தையும் படைத்தவன் அவனையே நம்பிடு மானிடனே' என வேண்டுகோள் விடுக்கிறார். இங்ஙனம் இறைவனை நம்பி வாழ்ந்தால் 'தொல்லை நீங்கியே வாழலாம். மறுமையில் சொர்க்கம் கிடைத்திடும்' எனப் பாடும் கவிஞர் நல்வாழ்க்கை வாழ்வதற்கான வழிகளையும் 'ஆசையை அடக்கிடு ஈகையைப் பெருக்கிடு அன்புடன் நடந்திடு உயிர்களிடம்! ஏசுவோர் இடத்திலும் இரக்கமே காட்டிட என்றும் முயன்றிடு வாழ்க்கையிலே' எனவும் காட்டுகிறார். 'அவனின்றி எதுவுமில்லை' அதனால் இறைவனையும் நபிகள் நாயகம் காட்டிய வழியையும் பின்பற்றி வாழ வேண்டும் எனக் கூறும் கவிஞர், 'அல்லா என்று சொல்லச் சொல்ல ஆனந்தம் மேவிடுமே! நல்ல ஆற்றல் பெருகிடுமே! வாழ்வில் அல்லல் நீங்கிடுமே' எனப் பாடி 'அல்லா' எனும் இறைவனின் மகிமையை உணர்த்துகிறார்.

திருமறையான திருக்குர்ஆனை 'ஓத ஓதி ஞானம் பிறக்கும் உள்ளம் தனிலே சீலம் சுரக்கும்', 'அறிவின் சாகரம் அழகின் பூஷணம் அரிய நாயகன் இனிய தூதுவர்', 'ஹக்கன் திருத்தூதர் எங்கள் நபிநாதர்

மக்கள் குறை தீர்க்க வந்த வள்ளல் மஹ்மூதர்!, 'நாவினை அடக்கா மானுடன் நாளை நரகிடை விழநேரும்', 'என்பும் தீனுக் கெனஉழைத்த எழி லார் எங்கள் நாயகமே நன்மை மணக்கும் வாழ்வெல்லாம் நாளும் உமது பெயர் சொன்னால்' என்பன இந்நூல் நெடுகிலும் காணலாகும் அழகிய மணிமொழிகள்.

இறைவனின் திருநாமமும் நபிகளாரின் அரும்பெருங் குணநலன்களும் மனிதகுலம் நல்வழிபெற அவர்கள் காட்டிய சிறந்த வழிமுறைகளும் ஐம்பெருங்கடமைகளும் மக்கள் ஏற்றுப் போற்றி வாழவேண்டிய நல்வழிகளும் தள்ளி வாழவேண்டிய தீயவழிகளும் கவிஞரால் இஸ்லாமிய இசைப்பாடல்களில் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

திருப்பாவை, திருவெம்பாவை ஆகிய பாவைப் பாடல்கள் முறையே வைணவ சைவ சமயத்தாரால் மார்கழி மாதம் பாடத்தக்க வகையிலே பாடப்பட்டவையாகும். கவிஞர் நோன்பு மாதமான ரமலான் மாதத்தில் துயிலில் இருந்து எழுந்து நோன்பு நோற்க அழைக்கும் நோன்புப் பாவைப் பாடல்களைப் பாடியுள்ளார்.

"தூய ரமலானில் தோழியேயென் நற்தோழி
நேய முடனெழுவாய் நியமமுடன் சகர்செய்
ஆயத்த மாவோம் அண்டை அயலவரை
போயெழுப்பிச் சகர் செய்யப் புகன்றிடுவோம்
எம்பாவாய்!"

எனத் தம் பாவைப் பாடலைத் தொடங்கும் கவிஞர்,

"அன்னை கதீஜாவும் ஆயிஷா நாச்சியாரும்
மன்னுபுகழ் பாத்திமா மற்றுமுள நற்பெண்டீர்
உன்னதமாய் நோன்பிருந்த உயர்மாதம் இம்மாதம்
சொன்னயிவை நீயறிந்தும் துயிலுவதோ எம்பவாய்!"

என்று விழிப்புணர்வையூட்டுகிறார்.

"முப்பது நோன்பிருந்து முடித்தபின் புத்தாடை
தப்பாது நாமுடுத்திச் சார்ந்தில்லத் தாருடனே
ஒப்பில்லாப் பெருநாளை உவப்புடனே கொண்டாடி
எப்போதும் இறைநினைப்பில் இருந்திடுவோம்
எம்பாவாய்!"

என்று நிறைவு செய்கிறார். இந்தப் பாடல்களில் ரமலான் நோன்பின் மாண்பை உணர்த்திப் பயில்வோரை ஐம்பெருங்கடமைகளும் மூன்றாவது கட்டாயக் கடமையான நோன்பை நிறைவேற்றத் தூண்டுகிறார்.

இஸ்லாமிய மார்க்கத்தில் சிறந்து திகழ்ந்த ஆமினாத் தாயார், அன்னை கதீஜா, அன்னை பாத்திமா, ஆசியா, சுமையா, ரஹீமா, ஆயிஷா நாச்சியார் ஆகியோரையும் அவர்களின் வாழ்க்கையையும் எடுத்துக்காட்டி பூமியைப்போல் பொறுமை காட்ட வேண்டும்', 'அறச்செயலைப் பேணிடவே வேண்டும்' எனப் பெண்களுக்கு வழிகாட்டுகிறார். 'பெண்ணறிவு மாலை' எனும் ஒரு பாடலிலும் நல்ல பெண்களின் அடையாளங்களைக் காட்டும் கவிஞர் பெண்ணை, 'தெள்ளுதமிழ் மொழியைப் போல் இனிமை யானவள் என்றும் தீன்குலத்தின் மேன்மையோங்க வாழ்ந்து வருபவள்' என்றும் குறிப்பிடுகிறார்.

'என்னை மன்னிப்பாய்! யான் செய் குற்றம் யாவையும் பொறுப்பாய்' என இறைவனிடம் வேண்டும் கவிஞர் 1974ஆம் ஆண்டு பார்வையிழந்தபோது அவனிடம் கண்ணொளி வேண்டிப் பாடுகிறார். இது படிப்பாரைக் கசிந்துருக வைக்கிறது.

"கண்ணில்ஒளி தந்திடுவாய்
அல்லாஹூ அல்லாஹ்!
காணும்நிலை ஈந்தருள்வாய்
அல்லாஹூ அல்லாஹ்!
புண்ணியனே பூரணனே
அல்லாஹூ அல்லாஹ்!
போற்றியுன்னை வேண்டுகின்றேன்
அல்லாஹூ அல்லாஹ்!"

"என்னபிழை யான்புரிந்தேன்
அல்லாஹூ அல்லாஹ்!
ஏன் எனது கண்பறித்தாய்
அல்லாஹூ அல்லாஹ்!
முன்னோர்கள் செய்வினையோ
அல்லாஹூ அல்லாஹ்!
மூளுகின்ற என்விதியோ
அல்லாஹூ அல்லாஹ்!"

உன்புகழை நானெழுத
அல்லாஹூ அல்லாஹ்!
உற்றவழி செய்திடுவாய்
அல்லாஹூ அல்லாஹ்!
உன்மறையை நான்பயில
அல்லாஹூ அல்லாஹ்!
உதவியகண் போனதுவே
அல்லாஹூ அல்லாஹ்!"

என்று பலவாறு இறைவனிடம் கவிஞர் முறையிடுகிறார். அதற்குப் பின்பு கண்ணொளி பெற்றுக் கவிஞர் எழுதிக் குவித்த ஏந்தலாய் வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

இத்தகைய பல்வேறு பொருண்மைகளை உள்ளடக்கிய 'நீங்களும் பாடலாம் இஸ்லாமிய இசைப்பாடல்கள்' எனும் இந்நூலை இஸ்லாமிய மார்க்கத்தையும் இஸ்லாமிய வாழ்வியல் நெறிமுறைகளையும் இனிய தமிழில் எளிய நடையில் எல்லோர்க்கும் புரியும் வடிவில் எடுத்துரைக்கும் நோக்கில் கவிஞர் படைத்துள்ளார். படிப்பார் ஒவ்வொருவரையும் பாடல் இயற்றுவோராகவும் பாடகராகவும் ஆக்கும் வல்லமை மிக்க பாடல்களாக இந்நூற் பாடல்கள் திகழ்கின்றன.

கட்டுரையாளர், தமிழியல்துறைத் தலைவர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி